சங்கர நமச்சிவாயர்

அ. தாமோதரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சங்கர நமச்சிவாயர்

அ. தாமோதரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
II Main Road, C.P.T. Campus, Taramani, Chennai 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	caṅkara namaccivāyar
Author	:	Dr. A. Dhamotharan
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C. P. T. Campus, T.T.T.I. Post, Chennai - 600 113 Phone : 2254 2992
Publication No.	:	471
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2003
Paper used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 points
No. of Pages	:	xviii + 190
No. of Copies	:	1200
Price	:	Rs. 60/- (Rupees Sixty only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	A Study of a commentary on Nannul

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

தமிழ் ஆய்வுப்போக்கில் இலக்கண ஆய்வு குறைந்து வருகிறது. இலக்கண ஆய்வினும் உரைஆய்வு மேலும் அருகிவருகிறது. இந்நிலையில் நன்னூல் உரையாசிரியர்களுள் ஒருவரான சங்கர நமச்சிவாயரைப் பற்றிய மிக விரிவான ஓர் ஆய்வை மேற்கொண்ட பேராசிரியர் முனைவர் அ. தாமோதரன் அவர்கள் பாராட்டுக்குரியவராகிறார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராக 2000-2001இல் இருந்த காலக்கட்டத்தில் அவர் மேற்கொண்ட ஆய்வுத்திட்டத்தின் அடிப்படையில் இப்பணியை நிறைவுசெய்து அளித்திருக்கிறார்.

மூலநூல் எவ்வளவிற்கு இன்றியமையாததோ அவ்வளவிற்கு உரைகளும் இன்றியமையாதன. எனவேதான் உரைகளை உரைமூலங்கள் என்று வழங்குவர். இவ்வுரையாசிரியர்களும் புதிய நூல்களைப் படைக்கத்தக்கவகையில் இலக்கண, இலக்கியப் பல்துறைப் பெரும் புலமையாளர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் உருவாக்கிய உரைகள் ஒவ்வொன்றும் தனித்தனி இலக்கண நூல்களாகக் கருதத்தக்கன. இலக்கண நூல்களில் காணப்படும் விதிகள், வரையறைகள், விளக்கங்கள், விதிவிலக்குகள் போன்ற பல்வேறு கூறுகளை இவர்களுடைய உரைகளிலும் காணமுடியும். உரைகளை முழுமையாக ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வுரைகள் இலக்கண நூல்களாகக் கருதத்தகும் தகுதியுடையன என்பது நன்கு விளங்கும். இலக்கிய வரலாற்றில் சங்க காலம், நீதி இலக்கியக் காலம், காப்பியக் காலம், பக்தி இலக்கியக் காலம் என்று பொருண்மை அடிப்படையில் அவற்றை முறைப்படுத்தும் நிலையில், உரைக்கு எனத் தனித்த ஒரு காலப்பிரிவை நாம் வகைப்படுத்தியே ஆகவேண்டும்

உரை எனும் மரபு ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் தோன்றியது என்றும் அதற்கு முன்னர் உரைகளே இல்லை என்றும் அறுதியிட்டுக் கூற இயலாது. ஏனென்றால் இலக்கண உரைகளுள் குறிப்பாகத் தொல்காப்பியத்திற்கு முதல் உரையாகக் கருதப்படும் இளம்பூரணர் உரைக்கு முன்பே தொல்காப்பியத்திற்கு எழுத்து வடிவில் உரைகள் இருந்ததற்கான குறிப்புகள் நிரம்பக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாகிய முற்றுச்சொல் என்ற இலக்கணக் குறியீட்டுச் சொல்லிற்கு இளம்பூரணர் கூறும் விளக்கம் அவருக்கு முன்னாலும் எழுத்து வடிவில் உரை இருந்தது என்பதை

அறுதியிட்டுக் கூறுகிறது. இதனை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு என்னுடைய இளம்பூரணர் ஆய்வில் நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். இதனையே இந்நூலாசிரியரும் இளம்பூரணர்க்கு முன்னர் உரைகள் இருந்ததற்கான காரணங்களைக் கூறும்போது இந்நூலுள் வழிமொழிந்திருக்கிறார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் நிலைபேறு என்பது அந்நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகளை வைத்தே அமைந்துள்ளது என்பதை நன்கறியலாம். தொல்காப்பியமும், நன்னூலும், திருக்குறளும், பத்துப்பாட்டும், சிலப்பதிகாரமும் நிலைபேறு உடையனவாக இன்று விளங்குகின்றன என்றால் இவற்றை உரையாசிரியர்கள் பலர் தம் உரைத்திறத்தால் விளக்கப்படுத்திக் காட்டியமையே காரணம். இத்தகு உரைமரபும் உரைப்போக்கும் தமிழ் இலக்கிய இலக்கணங்களை வளப்படுத்தின என்று கூறினால் அது மிகையாகாது. அவ்வகையில் சங்கர நமச்சிவாயரைப் பற்றி மிக விரிவாகவும், விளக்கமாகவும் போதிய சான்றாதாரங்களுடன் ஓர் அரிய நூலைப் பேராசிரியர் அ. தாமோதரன் உருவாக்கித் தந்துள்ளார். இந்நூலில் இவர்தம் புலமைத்திறம் வெளிப்படும். இந்நூலை ஒருமுறை படிப்பவர் நன்னூலைப் பலமுறை படித்தவர்க்கு இணையாவர். இலக்கண ஆய்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு இவர் உருவாக்கித் தந்துள்ள இந்நூல் தமிழ் ஆய்வாளர்களுக்கு ஒரு பெரும் ஆய்வு விருந்தாக அமையும். இந்நூலுக்கு முன்பே நன்னூல் மூலமும் உரையும் கூழங்கைத்தம்பிரான் உரை, சங்கர நமச்சிவாயர் உரை ஆகிய இரண்டு நூல்களை இந்நிறுவனம் வழிப் பதிப்பித்திருக்கிறார். இவ்வகையில் சங்கர நமச்சிவாயர் எனும் இந்நூல் ஓர் ஆய்வு நூலாக வெளிவருகிறது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி என். லட்சுமிக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
01-01-2004

இயக்குநர்

ஆய்வுரை

முனைவர் இராம. சுந்தரம்
அறிவியல் தமிழ்த்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழ் இலக்கிய, இலக்கணப் படிப்பில் அவற்றின் உரைகளையும் இணைத்துப் படிக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்துவரும் இந்த நாளில் அ. தாமோதரனின் 'சங்கர நமச்சிவாயர்' குறித்த இந்த நூலின் வருகை வரவேற்கத் தக்கதாகும். இந்த நூலைப் படிப்பவர்கள் உரை நூல்களின் சிறப்பை உணர்ந்து, அவற்றைப் படிக்கவும் ஆராயவும் முற்படக் கூடும். மூலநூல்களின் கருத்துச்செறிவையும், அதோடு தொடர்புடைய பிற செய்திகளையும் அறிந்துகொள்வதில் உண்டாகும் இடர்ப்பாட்டினை உரைநூல்கள் நீக்குவதோடு இலக்கிய, இலக்கணக் கோட்பாடுகள், நூலும் உரையும் தோன்றிய காலத்தின் சமுதாயச் சூழல், மொழி வழக்கு முதலியவற்றை அறியவும் ஆராயவும் துணைசெய்கின்றன. தம் காலத்தில் வழக்கில் இருந்த சொற்கள், தொடர்களின் மூலம் நூலாசிரியர்கள் தெரிவிக்கும் கருத்துக்களைப் புரிந்துகொள்வதில் காலப்போக்கில் மயக்கம் ஏற்படுவதுண்டு. அந்த மயக்கத்தைப் போக்க உரையாசிரியர்கள் முயலுகின்றனர். சான்றாக ஒன்றிரண்டைக் காட்டலாம். தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியலில் இடம்பெறும் 'செந்தமிழ் நிலத்துச் சிவணிய வழக்கு' (நூ. 2), 'செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்' (நூ. 4), நன்னூல் பெயரியலில் (நூ. 16) இடம்பெறும் 'செந்தமிழ் நிலம்சேர் பன்னிருநிலம்', 'தமிழ் ஒழி நிலம்' ஆகியவற்றுக்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தின் மூலம் அந்தக் காலகட்டத்தில் நிலவிய தமிழ் வழங்கிய, வழங்காத நிலம், இயற்சொல், திசைச்சொல் பற்றிய கருத்துக்களை உணர முடிகிறது. செந்தமிழ் நிலம் சோழநாடா, பாண்டியநாடா என்ற விவாதத்தின் வெளிப்பாடாக உரையாசிரியர்களின் விளக்கம் அமைகிறது. சங்கர நமச்சிவாயர் செந்தமிழ் நிலம் 'மங்கலப் பாண்டி வளநாடு' (நன். 271) என்பார். இன்றும்கூட, தரமான தமிழ் (Standard Tamil) வழங்கும் பகுதி குறித்து ஒரு முடிவான கருத்து ஏற்படவில்லை. எனினும், மதுரை - திருச்சி - தஞ்சையை உள்ளடக்கிய பகுதியை இவ்வகைத் தமிழ் வழங்கும் பகுதியாக அடையாளப்படுத்துவதுண்டு. செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற வழக்குகளையும் சேனாவரையர், சங்கர நமச்சிவாயர் உரைகள்

வழி அறிய முடிகிறது. தமிழ்மொழியின் வரலாற்றுக்குத் தேவையான நல்ல தரவுகளை இந்த உரைகள் தருகின்றன.

'கூடிவரு வழக்கின் ஆடியல் பெயர்' (தொல். சொல். பெயரியல் 11) என்னும் தொடருக்குச் சேனாவரையர் தரும் விளக்கம் கவனிக்கத் தக்கது. விளையாட்டில் ஈடுபடும் இளைஞர்கள் குழுவாகப் பிரிந்து விளையாடும்போது பின்பற்றும் சில ஆட்டநெறிகளை இத்தொடர் குறிப்பதாகக் கருதி அவர் விளக்குவார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இக்கருத்தினரே. தெய்வச்சிலையார் இதற்கு வேறு பொருள் கூறுவார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் (நூ. 17) உள்ள தகுதி, வழக்கு என்ற இரண்டுக்கும் இளம்பூரணர் தரும் உரை குறிப்பிடத் தக்கது. நன்னூலார் இந்த உரையைத் தழுவி நூற்பா (பெயரியல் 10) அமைப்பார். உரைக் கருத்துக்களை எடுத்து நூலாசிரியர்கள் இலக்கண விதிகளை வரையறுப்பதுண்டு என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

இவ்வாறு, நூலாசிரியர்கள் சுருக்கியும் தொகுத்தும் சொல்வதை உரையாசிரியர்கள் விரித்தும் வகுத்தும் சொல்லுவதால் படிப்பவர் நெஞ்சில் நூலின் கருத்துக்களைப் பதியச் செய்கின்றனர். உரைகாரரின் கருத்துக்களைப் பிற்கால நூலாசிரியர்கள் ஏற்று, நூற்பாக்கள் வடிப்பதையும் காண்கிறோம். இக்காரணிகளால் உரைகளைப் படிக்கும் பழக்கம் மிகுதியாயிற்று; உரைகளும் பெருகலாயின. திருக்குறளுக்குப் பத்து உரைகளும் தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு ஆறு உரைகளும் உள்ளன. இவற்றுக்கான உரையாக்கம் இன்றும் தொடர்கிறது.

இலக்கிய, இலக்கண நூல்களுக்கு உரை எழுதும் மரபு இந்தியாவின் பிற பகுதிகளிலும் காணக் கூடியதாக உள்ளது. பண்டைக்காலச் சமஸ்கிருத நூல்கள் சிலவற்றுக்கு வியாக்கரணம், வியாக்கியானம், மகாபாஷ்யம் எழுந்தன. கவிராஜமார்க்கம் (கன்னடம்), லீலாதிலகம் (மலையாளம்) முதலிய நூல்களும் உரைகளைப் பெற்றன. தமிழிலும் தொல்காப்பியர் காலத்திலேயே உரைகள் வழக்கில் இருந்தன என்பது செய்யுளியல் (நூ. 164-166), மரபியல் (நூ. 102-105) நூற்பாக்களின் வழி அறிய முடிகிறது. 'உள்நின்று அகன்ற உரையொடு பொருந்தி' (தொல். செய். 164) என்ற தொடர் இந்த உரைமரபைச் சுட்டியதாகத் தெரிகிறது. இந்நூற்பாக்களில்

காணப்படும் சூத்திரம், பிண்டம், காண்டிகை முதலிய சொல் வழக்குகள் சமஸ்கிருதச் செல்வாக்கை உணர்த்துவதாகக் கருதத் தோன்றுகிறது.

தமிழில் தற்போது கிடைக்கும் உரைகளில் பழையது நக்கீரரின் இறையனார் களவியல் உரை என்பர். ஆனால், களவியல் உரைச்சான்று கொண்டு, களவியல் உரை எழுதப்பட்ட காலத்தே நெடுந்தொகை என்னும் அகநானூற்றுக்கு உரை ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று தாமோதரன் தெளிவுபடுத்துகிறார். யாப்பருங்கல விருத்தியுரை வழி, தொல்காப்பியச் செய்யுளியலுக்கு ஒரு உரையும் எழுத்ததிகாரத்துக்கு ஒரு விருத்தியுரையும் இளம்பூரணர் காலத்துக்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்கிற கருத்தையும் அவர் முன்வைக்கிறார். இளம்பூரணருக்கு முன்பே உரை இருந்திருக்க வேண்டும் என்பதை இளம்பூரணத்தில் காணும் சில வழக்குகளைக் கொண்டும் மேலே சுட்டிய யாப்பருங்கல விருத்தியுரையை மேற்கோள் காட்டியும் சா. கிருட்டினமூர்த்தி (இளம்பூரணர் உரை, 2002. பக். 15-17) உறுதிசெய்வார். இவற்றின் அடிப்படையில் தமிழ் உரை வரலாறு தொல்காப்பியர் காலத்தை ஒட்டித் தொடங்குவதாகக் கொள்ள வேண்டும் என இந்த நூல் கூறுவது மனங்கொள்ளத் தக்கது.

தொல்காப்பியர் காண்டிகை, உரை என இரண்டு உரை வகைகளைக் குறிப்பிடுவார். இறையனார் களவியலுரை கருத்துரை, கண்ணழித்தல் (பதவுரை), பொழிப்புரை, அகலவுரை என நான்கைக் குறிப்பிடும். இவையே அன்றி, பிற ஆசிரியர்கள் கூறும் உரைவகைகளையும் இந்நூலின் 'உரைவகைகள்' என்ற பகுதி விளக்கும். வீரசோழிய உரையும் உரை வகைகள் பற்றிச் சொல்லும் எனக் குறிப்பிடும் ஆசிரியர் அவற்றை எடுத்துக்காட்டவில்லை. அவை வருமாறு:- "தந்திரவுரையாவன சூத்திரந்தோற்றல், சொல் வகுத்தல், சொற்பொருள் உணர்த்தல், வினாதல், விடுத்தல், விசேடங்காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரியவசனங் காட்டல், அதிகாரவசனங் காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல், கருத்துரைத்தல் எனப் பதினான்கு (வீரசோழியம், பக். 271) என்ப." இவற்றுள் பல உரையின் வகைகளாக இல்லாது, உரையின் கூறுகளாக உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இந்த உரைவகைகளுள் காண்டிகை, விருத்தி என்ற இரண்டும் உரைகாரர் கவனத்தை ஈர்த்தன. நன்னூல்,

யாப்பருங்கலம் ஆகியவற்றுக்கு விருத்தியுரைகள் உள்ளன. தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்குத் தெய்வச்சிலையார், கல்லாடர் எழுதிய உரைகளும் 'விருத்தியுரை' என்று கூறப்படுகின்றன. கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட (1929) தெய்வச்சிலையார் உரையின் இறுதி வரி 'தெய்வச்சிலையார் எழுதின விருத்தி முடிந்தது' என உள்ளது. கழக வெளியீடான (1964) கல்லாடர் உரை 'கல்லாடனார் விருத்தி' என்று பதிக்கப்பட்டுள்ளது. ஆனால் உரை முடிவில் 'கல்லாடனார் உரை முற்றும்' எனக் காணப்படுகிறது. இதில் பதிப்புப் பிழை நேர்ந்திருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. சூத்திரத்தின் பொருள், எடுத்துக்காட்டு என்ற அளவோடு நில்லாது விளக்கம், பிறர் உரை ஏற்பு - மறுப்பு, ஒப்பீடு எனப் பல நிலைகளில் உரை கூறப்படுவதால் இவையும் விருத்தியுரை என்று அழைக்கப்பட்டன போலும்!

'உரை என்பது தனித்ததோர் இலக்கியவகை. அதற்கென ஒரு அமைப்பும் தனிப்பண்புகளும் நடையும் உள்ளன. இலக்கண உரைக்கும் இலக்கிய உரைக்கும் அவை பொதுவாக இருக்கும் என்று சொல்ல முடியாது' எனக் கூறிப் பொதுப் பண்புகளாக உள்ள சிலவற்றை எடுத்துக்காட்டினாலும் இரண்டும் வெவ்வேறு இயல்பின என்பார் தாமோதரன் (பக். 12-13). காரணம், இலக்கியப் படைப்பாளி தான் எடுத்துக்கொண்ட பொருளைக் கற்பனையும் உணர்ச்சியும் கலந்து நயம்பட உரைப்பான்; உள்ளுறை, இறைச்சி போன்றவை இடையிடையே கலக்கும்; சொல்ல நினைத்த கருத்தை ஒரு பாடலிலோ, பல பாடல்களிலோ எடுத்துச்சொல்லுவான். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, இலக்கிய உரையாசிரியன் உரை எழுத வேண்டும். நச்சினார்க்கினியரின் கலித்தொகை, பத்துப்பாட்டு உரைகளுக்கும் சீவக சிந்தாமணி உரைக்கும் வேறுபாடு உண்டு.. சீவக சிந்தாமணி உரையில் பொருள், இலக்கணக் குறிப்பு, விளக்கம் என்ற வகையில் சில பாடல்களுக்கும் இலக்கணக் குறிப்பு, பொருள் என்ற அளவில் சிலவற்றுக்கும் விளக்கம், இலக்கணக் குறிப்பு, பொருள் என்று சில பாடல்களுக்கும் பாடல்களின் இயல்பு நோக்கி உரை வரைவார். ஆங்காங்கே, இலக்கணச் சூத்திரங்களையும் இலக்கிய வரிகளையும் மேற்கோள் காட்டுவார். பத்துப்பாட்டில் வரிக்கு வரி பொருள் கூறுவது, சிற்சில இடங்களில் விளக்கம் தருவது, இலக்கண மேற்கோள் காட்டுவது என்ற முறையைக் கையாளுவார். தொல்காப்பிய உரையில் சூத்திரம் நுதலும் பொருள், கருத்து, உதாரணம், விளக்கம்

என இலக்கண உரைமரபைப் பேணி உரை வகுப்பார். இலக்கியம் பயன்படுத்திய மொழிக் கூறுகளைத் தொகைப்படுத்தியும் வகைப்படுத்தியும் விதிகள் வகுப்பது இலக்கணம். ஆகையால் அதற்கான உரையாடலிலும் ஒரு கட்டமைப்பு காணப்படுகிறது. இந்த வேறுபாடு காரணமாகவே இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் உரை எழுதியோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

இலக்கண உரைகள் கருத்துரை, பொருள், உதாரணம், விளக்கம் என அமையும். எல்லாச் சூத்திரங்களிலும் இவை இடம்பெறாவிட்டாலும் உரையின் பொதுப்பண்புகளாக இவை அமையும். விளக்கப் பகுதியில் உரையாசிரியர் தமது கருத்தை வலியுறுத்தும் வண்ணம் கூடுதல் செய்திகளைத் தருவது, உடன்பட்ட/ மாறுபட்ட கருத்துக்களை எடுத்துரைப்பது முதலியன அமையும். இவற்றை இந்நூலாசிரியர் உரிய தலைப்புகளின் கீழ் விரிவாகக் கூறுகிறார். இந்த உரைப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் மொழிநடை குறித்தும் ஆசிரியர் விளக்குகிறார்.

இலக்கணச் சூத்திரத்திலும் அதற்கான உரையிலும் பயன்படுத்தப்படும் மொழி அமைப்புக்கு ஒரு முறை உண்டு. அறிவியல் கருத்தாடல் (Scientific Discourse) போல இலக்கணக் கருத்தாடல் (Grammatical Discourse) என ஒன்று உண்டு. அறிவியல் ஒரு கருத்தமைவை (concept) வரையறை (definition) செய்யும்போது செயப்பாட்டுவினை மிகுதியும் பயன்படுத்தப்படும். விளக்கம் (description) தரும்போது இடம், காலம் பற்றிய சொற்களும் வாக்கிய இணைப்புச் சொற்களும் இடம்பெறும். சோதனை (experiment), அறிவுறுத்தல் (instruction) என வரும்போது ஏவல்வினைகள் இடம்பெறும். விளக்கத்தில் வரும் பத்திகளின் அமைப்புக் குறித்துக்கூடச் சில விதிகள் தரப்பட்டுள்ளன. அறிவியல் கருத்தாடலில் காணப்படும் இந்தப் பொதுப்பண்பை இலக்கண உரைகளிலும் நாம் காண்கிறோம். காரணம், இலக்கணமும் அறிவியல் தன்மை கொண்டு இயங்குவதுதான்.

சூத்திரங்களை இலக்கணத்தில் அமைக்கும்போது **'எழுத்தெனப் படுப'** என்பது போன்ற செயப்பாட்டுவினை இடம் பெறுதல், **'என்மனார் புலவர்'** எனப் பொதுப்படச் சுட்டுதல், **'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்'**, **'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'** என்பன போலப் பெயர்ப் பயனிலை மற்றும் வியங்கோள் வினைமுற்று முதலியவற்றை எடுத்தாளுதல் என

ஒரு பொதுத்தன்மை வாய்ந்த, பெயர் சுட்டாத (impersonal) வினை முடிபுகளைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். உரையாசிரியர்களும் உரை எழுதும்போது சில சொற்களையும் தொடர்களையும் மிகுதியாக எடுத்தாளக் காணலாம். ஆசிரியர் தாமோதரன் அவற்றை எடுத்துக்காட்டி விளக்குவார். சான்றுக்கு ஒரு சில.

சூத்திரம் எதைக் குறிக்கிறது என்பதைக் காட்டும் கருத்துரைப் பகுதியில், **'என் நுதலிற்றோ எனின்..... உணர்த்துதல் நுதலிற்று'** என்ற தொடரின் பயன்பாடு மிகுதி. சங்கர நமச்சிவாயர் இதனைப் பெரும்பாலும் கையாள்கிறார். சேனாவரையர் கருத்துரை தராது **'இதன் பொருள்'** என்று பொழிப்புரை மட்டும் உரைத்துச் செல்வார். பிற உரையாசிரியர்களும் இத்தொடரைச் சிறிய வேறுபாடுகளுடன் கையாளுவர். தெய்வச்சிலையார், **'என் நுதலிற்றோ எனின்..... உணர்த்துதல் நுதலிற்று'** எனச் சில இடங்களிலும் **'உணர்த்துதல் நுதலிற்று'** என்று சில இடங்களிலும் எழுதிச் செல்வார். கருத்துரையில் காணப்படும் மற்றொரு தொடர் **'நிறுத்த முறையானே'** என்பது. நூற்பாக்களின் வைப்புமுறையை இத்தொடர் குறிக்கிறது. இத்தொடரை எல்லா உரையாசிரியர்களுமே பயன்படுத்தியதாகத் தெரிகிறது. **'நிறுத்திய முறையானே', 'நிறுத்த முறையே'** எனச் சிறிது மாற்றிக் கூழங்கைத் தம்பிரான் தமது உரையில் (நன். 98, 132) பயன்படுத்துவார். நூலாசிரியன் நூற்பாக்களை முறைப்பட வைத்துள்ளான் என்பதை மாணாக்கருக்கு அறிவுறுத்துவது, மனப்பாடக் கல்விக்கு உதவுவது என ஒன்றிரண்டு காரணங்களை இத்தொடரின் பயன்பாட்டுக்கு ஆசிரியர் தாமோதரன் (பக். 72-75) எடுத்துக்காட்டுவார்.

பொழிப்புரை **'இதன் பொருள்'** (இ-ள்) என அமையும். சூத்திரத்தின் செய்யுள் நடையை உரைநடையில் தருவது பொழிப்புரை (பக். 76). சூத்திரங்களில் காணப்படும் இரண்டு, ஐந்து, பத்து, முப்பத்திரண்டு என்பன போன்ற தொகைக்குறிகளைத் **'தொகைக் குறிப்பு - ஒரு நூல் நடை'** என்ற பகுதியில் (பக். 78-81) அதன் தேவை, பயன் குறித்து விரிவாகக் கூறுகிறார். 'தொகைக்குறிப்பு ஒரு வகை நூல்நடை' என்று யாப்பருங்கல உரை கூறுவதை இங்குப் பதிவுசெய்கிறார்.

'உதாரணம் உரைக்கு உரமூட்டி அதன் தெளிவுக்கு ஒளியூட்டுவது' (பக். 91). எடுத்துக்காட்டு, இலக்கியம், ஞாபகம்,

இதிகாசம், காட்டு, வரலாறு, சான்று, மேற்கோள் முதலிய மாற்றுச் சொற்களும் இதற்கு இணையாகப் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணங்களைத் தருவதில் ஒரு முறை உண்டு. உதாரணம் வேண்டி நிற்கும் சூத்திரத்திற்கு அங்கேயே உதாரணம் தருவது ஒரு முறை. சூத்திரம் பொதுவாக இருந்து, அது சில சிறப்புச் சூத்திரங்களின் முன்னுரையாக அமையுமானால், உதாரணங்களை அந்தந்தச் சிறப்புச் சூத்திரங்களின் கீழே காட்டுவர். 'உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரங்களான் உணர்க', 'உதாரணம் முன்னர்க் காட்டுதும்' என்ற தொடர்களால் இவற்றை உணர்த்துவர். உதாரணம் கிடைக்காத நிலையில் 'வந்தவழிக் கண்டுகொள்க' என்பதும் உண்டு. செய்யுள் வழக்கு, உலக வழக்கு என இருவழக்குகளிலிருந்தும் உதாரணம் காட்டுவர். உதாரணம் / மேற்கோள் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை - வேற்றுமைகளையும் மேற்கோள் விளக்கம் என்ற பகுதி விளக்குகிறது. உதாரணப் பாடல்களைத் தரும்போது அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், யாப்பருங்கல விருத்திகாரர் முதலியோர் இடம் சுட்டுதல் உண்டு; தெய்வச் சிலையார், சங்கர நமச்சிவாயர் முதலியோர் பெரும்பாலும் இடவிளக்கம் தருவதில்லை என்கிற செய்தியும் (பக். 99) பதிவு செய்யப்படுகிறது.

அகலவுரை அல்லது விளக்கவுரையில் உரையாசிரியர் தாம் சொல்ல விரும்பிய கருத்துக்களைத் தெளிவாக்குவார். பிற உரையாசிரியர்களின் கருத்தோடு மாறுபடினும் சில ஐயங்களைப் போக்க வேண்டியிருப்பினும் வினாவிடை முறையில் அவற்றை அமைப்பார். 'என்னை எனின்', 'உரைத்தாரால் எனின்', 'வந்ததாலோ எனின்' என்று வினா எழுப்பி, விடை தந்து 'என்க', 'என்று உணர்க' என வியங்கோள் வினையில் முடிப்பது பெருவழக்கு (பக். 140). சேனாவரையர் 'அற்றன்று' என்பதையும் சில இடங்களில் சேர்ப்பார். 'அஃதேல், வானும் கோலும் ஏதுவாய வழி நோக்கப்படுவன பிறவாவான் செல்லும் எனின்; அற்றன்று; கண்ணுட் குத்தினான் என்ற வழிக் கண்ணே செயப்படுபொருளாதலும் பெறப்பட்டாற்போல... செல்லா வென்பது' (தொல். சொல், வேற்றுமை மயங்கியல், 10). 'அவர்க்கு அது கருத்து அன்று என்க', 'அது போலி உரை என்க', 'அது பொருந்தாது என்க' முதலிய சில தொடர்களும் பிற உரையாசிரியர்களின் கருத்தை மறுக்கும்போது பயன்படுத்தப்படும்.

அரும்பத விளக்கப் பகுதியில் 'ஊ - இறைச்சி' (நன். 126), 'பாயிரம் என்பது வரலாறு' (நன். 1), 'அணு என்றது ஒலியினது நுட்பத்தை' (நன். 58) என 'என்பது', 'என்றது' முதலிய சொற்களைப் பயன்படுத்தியும் பயன்படுத்தாமலும் பொருள் கூறுவதுண்டு. ஒரு பொருட் பன்மொழி வரும்போது 'ஒக்கும்', 'ஒரு பொருட்கிளவி' முதலியன இடம்பெறும்; 'கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும்' (நன். 460), 'ஏவல் வியங்கோள் என்பன ஒரு பொருட்கிளவி' (நன். 338) என்றவாறு விளக்கப்படும்.

கருத்துரை, பொழிப்புரை, உதாரணம், அகலவுரை என்ற முறையில் அவ்வவற்றுக்கான மொழிநடையோடு இலக்கண உரைகள் ஓர் ஒழுங்கோடும் சீரோடும் அமைந்திருப்பதைக் காணலாம். உரையாசிரியர்களின் தனித்தன்மை தலையெடுக்கும்போது மொழியாட்சியிலும் உரையமைப்பிலும் சில மாற்றங்கள் ஏற்படுவதும் உண்டு. இவற்றைத் தரவுகளாகக் கொண்டு இலக்கணக் கருத்தாடலை அறிவியல் கருத்தாடலோடு ஒப்பிட்டு ஆராயும்போது தெளிவும் விளக்கமும் கிடைக்கும்.

'சங்கர நமச்சிவாயர் வரலாறு' என்ற பகுதியில் அவரது பிறப்பு, வளர்ப்பு, கல்விநலன் பற்றியும் நன்னூலுக்கு அவர் உரை எழுத நேர்ந்த சூழல் பற்றியும் எழுதுவார். சங்கரரின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் மயிலைநாதர் உரையின் மீது கொண்டிருந்த வெறுப்பின் காரணமாகத் தம் மாணவரை நன்னூலுக்கு உரை எழுதப் பணித்தார் என வழங்கிவரும் பழங்கதையின் வன்மை மென்மைகளை ஆராய்ந்து, அது புனைகதையே அன்றி, உண்மை அன்று என்று நிறுவுகிறார். சங்கரரை ஆதரித்த வள்ளல் மருதப்பரின் வேண்டுதல், ஆசிரியரின் ஆதரவு, சங்கரரின் நன்னூல் ஈடுபாடு ஆகியவையே இந்த உரை தோன்றுதற்குக் காரணம் என்பார். 'நன்னூலார்க்குப் பின்னூலார்' என்று சுவாமிநாத தேசிகர் குறிப்பது இலக்கண விளக்கத்தின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகரையே அன்றி, மயிலைநாதரை அன்று என ஆதாரத்துடன் காட்டுவார். சங்கர நமச்சிவாயரின் உரையின் தோற்றம் குறித்த கதைக்கு இத்துடன் ஒரு முடிவும் (பக். 52) கட்டுகிறார்.

சங்கர நமச்சிவாயரின் விருத்தியுரைக்குச் சிவஞான முனிவரின் பங்களிப்பு சிலர் கருதுவது போலத் தலையாயது அன்று; சிற்சில திருத்தங்களே அவரால் செய்யப்பட்டன என்னும்

கருத்தைத் "தொகுத்துச் சொன்னால் சிவஞான முனிவர் நன்னூலுக்குப் புதிதாக உரை ஒன்றும் இயற்றவில்லை; புத்தம் புத்துரை என்பது தனித்ததோர் உரையும் அல்ல. சங்கர நமச்சிவாயர் உரையில் ஆங்காங்கே சில திருத்தங்களைச் செய்ததே அவர் நன்னூலுக்குச் செய்த பணி. நன்னூல் நூற்பாக்கள் மூன்று அல்லது நான்கிற்கு மட்டுமே அவர் புத்துரை வரைந்தார்.... சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு இயற்றியது விருத்தியுரை; முனிவர் செய்த திருத்தங்களால் அவ்வுரைக்கு அத்தகுதி ஏற்பட்டதாகக் கருதுவது பிழை" (பக். 62) என்பதன் மூலம் உறுதிப்படக் கூறுகிறார். இவர் பதிப்பித்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட 'நன்னூல் மூலமும் விருத்தியுரையும்' (1999) என்ற நூலில் சிவஞான முனிவர் செய்த திருத்தங்களை ஏழு பக்கங்களில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

சங்கரர் தமிழ் இலக்கிய, இலக்கணப் புலமையோடு வடமொழிப் பயிற்சியும் பெற்றிருந்தார் என்பதையும் ஆசிரியர் எடுத்துக்காட்டத் தவறவில்லை (பக். 166-168). சான்றாக, 'பிரகிருதி விகிருதி என்னும் ஆரிய மொழிகள் பகுதி விகுதி எனத் திரிந்துநின்றன' (நன். 133), 'இலக்கணம் கூறும் நூலுள் நிகண்டினையும் உடன் கூறாது, அதனை வேறு ஒரு நூலாகக் கூறுதல் தமிழுள்ளே அன்றி ஆரியம் முதலியவற்றுள்ளும் காண்க.' (நன். 460), 'இவ்வாறே வடநூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோகம் என்றும், காரண இடுகுறியை யோகரூடி என்றும் வழங்குவர்' (நன். 62) என்பவற்றைக் காட்டலாம்.

சங்கர நமச்சிவாயரின் விருத்தியுரையை இந்நூலாசிரியர் எழுத்தெண்ணிப் படித்து மயிலைநாதர் உரையோடு ஒப்பிட்டு நோக்கி, தேவையான இடங்களில் பிற இலக்கண உரைகளையும் கவனத்தில் கொண்டு, சங்கரரின் உரைத்திறனைச் சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார். உரைமரபுகளைப் பேணி, உரைக்கான மொழிநடையைக் கையாண்டு, பிற உரையாசிரியர்தம் கருத்துக்களில் கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளி, புலமை நலம் தோன்ற இவ்விருத்தியுரை அமைந்துள்ளதைப் பல சான்றுகளுடன் காட்டுவார். சங்கர நமச்சிவாயர் காட்டும் உதாரணங்கள் செய்யுள் வழக்கு, உலக வழக்கு தழுவியவை என்பதையும் சுட்டுவார். 51 நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதையும், அவற்றுள் குறள் (69), புறநானூறு (53), தொல்காப்பியம் (43), சீவக சிந்தாமணி (42) ஆகியவை முதன்மை

பெற்றிருப்பதையும் பின்னிணைப்பு வழி அறிய முடிகிறது. சங்கரர் தரும் அரும்பதவுரை அகராதியியலுக்கு நல்லதொரு கொடை என்பார். மீக்கூற்று, மீக்கோள், மீந்தோல் ஆகிய சொற்களுக்கான அரும்பதவுரையும் இலக்கணக் குறிப்பும் (நன். 178) குறிப்பிட்டுச் சொல்லத் தக்கனவற்றுள் ஒரு சில. 'இஃது இக்காலத்துப் பீந்தோல் என மரீஇயற்று' என மீந்தோலின் மாற்று வழக்கை - அவர் கால வழக்கை - குறிப்பிடும் சங்கரர், வடகிழக்கு, வடதிசை, வடமலை ஆகிய சொற்களுக்குக் கூறும் பொருள் சுவையானது. 'வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; வடதிசை என்பது வடக்காய திசை எனப் பண்புத்தொகை; வடமலை என்பது வடக்கின்கண் மலையென ஏழாம் வேற்றுமைத்தொகை' (நன். 186) என்பார்.

திணை என்பது குலத்தைக் குறிக்கும் (நன். 261) என்பார் சங்கரர். இளம்பூரணர், தெய்வச்சிலையார், மயிலைநாதர் முதலியோர் 'பொருள்' என்பர். களவியல் உரைகாரர் 'ஒழுகலாறு நடந்த இடத்தைக் குறிக்கும்' (நூ. 56) என்றும் 'ஒழுக்கமே திணை' என்றும் (நூ. 1) கூறுவார். ஒழுக்கம், நிலம் என்ற பொருள்களில்தான் இச்சொல். பண்டு வழங்கியதாகத் தெரிகிறது. குலம் / சாதி எனச் சங்கரர் பொருள் கூறுவது பொருத்தமாகப் படவில்லை. 'உயர்திணை' என்பது பண்புத்தொகை என்பது சங்கரர் கருத்து. தெய்வச்சிலையாரும் இக்கருத்தினரே. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் முதலியோர் இதை வினைத்தொகை என்பர். 'நல்வினை ஏதுவாகக் கருதுவார்க்கு இது வினைத்தொகையும் ஆகும்' என்று சமயம் சார்ந்து உரை காணும் ஒரு சாராரின் கருத்தைத் தெய்வச்சிலையார் சுட்டிக்காட்டுவார்.

பிற உரையாசிரியர்களின் கருத்துக்களைச் சங்கரர் மிகப் பக்குவமாக மறுத்துத் தம் கருத்தை நிலைநாட்டும் பாங்கு, உவமைகளை எடுத்தாளும் திறம், நயவுரை வரையும் ஆற்றல் ஆகியவற்றையும் ஆசிரியர் விளக்கமாக எடுத்துச் சொல்லுவார். 'எல்லோருக்கும் புரியத்தக்க உவமைகளை எடுத்தாள்வது நமச்சிவாயருக்கு ஆற்றுநீரைக் கைகளால் அள்ளிக் குடிப்பது போன்ற எளிய பணி' என்னும் ஆசிரியர், 'பாலன் விருத்தன் ஆனாற்போலக் குறிலினது விகாரமே நெடில்' (நன். 72), 'முதல் நூலுக்கு வழிநூலும் சார்புநூலும் ஒருவற்கு மைந்தனும் மருமானும்

போலும்' (நன். 8), 'வேறுபடாதது பிரகிருதி ஆம் அன்றி வேறுபட்டது பிரகிருதி ஆகாதேனும் தந்தையைக் குறிக்க மகன் எனப்பட்டான் ஒருவன் தன் மகனைக் குறிக்கத் தந்தை ஆனாற்போலப் பிறவினைப்படுத்த வரும் இவ்விகுதிகளும் மேல் வரும் அன், ஆன் முதலிய விகுதிகளைக் குறிக்கப் பகுதியாம்' (நன். 139) என்பவற்றைக் காட்டிக் குடும்ப உறவுத் தொடர்பான உவமையைப் பாராட்டுவார்.

நன்னூலை விரும்பிப் படிக்கும் வண்ணம் நல்லதொரு விருத்தியுரையைத் தந்த நமச்சிவாயர் சில சூத்திரங்களுக்குத் தரும் உரையும் உதாரணமும் ஏற்புடையவைதானா என்கிற ஐயம் எழுகிறது. 'செயப்படு பொருளைச் செய்தது போல' எனத் தொடங்கும் சூத்திரத்துக்கான (நன். 400) இவரது உரையையும் உதாரணத்தையும் இதற்கு ஒரு சான்றாகக் காட்டலாம். 'இல்லம் மெழுகிற்று, திண்ணை மெழுகிற்று' எனப் பிற உரையாசிரியர்கள் காட்டும் உதாரணங்களை ஏற்காத இவர் 'இம்மாடு யான் கொண்டது' என்பதைக் காட்டுவார். இது பொருத்தமாகப் படவில்லை. பிற உரையாசிரியர்களின் உரையும் உதாரணமுமே தக்கனவாகத் தெரிகின்றன. இன்றும்கூட முள் குத்திற்று, நிலைப்படி இடித்தது போன்றவற்றை இயல்பான பேச்சு வழக்கில் கேட்கிறோம். இந்தப் பின்புலத்தில் சங்கரரின் உரையும் உதாரணமும் மறுஆய்வுக்கு உரியனவாகும்.

சங்கர நமச்சிவாயர் பற்றி இந்த நூலைப் படித்துக் கொண்டிருக்கும்போது பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடின. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1950களின் பிற்பகுதியில் நூலாசிரியர் தாமோதரனுடன் சேர்ந்து சேனாவரையத்தையும் நெய்தற்கலிக்கான நச்சினார்க்கினியர் உரையையும் படித்தும் விவாதித்தும் பயன் கொண்ட பழைய இனிய நினைவுகள் அவை. எதையும் கறாராகப் பார்க்க வேண்டும் என்பார். அந்தக் கறார் பார்வை - விழிப்புணர்வு - நமச்சிவாயர் உரைப் பதிப்பிலும் அதை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நூலிலும் தெள்ளத் தெளிவாகத் தென்படக் காணலாம். இலக்கணப் பதிப்பிலும், ஆய்விலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட தாமோதரன், 'பிரயோக விவேகம்' நூலைப் படித்துப் பல குறிப்புகள் எழுதியிருந்ததும் நினைவுக்கு வருகிறது. எழுத்தெண்ணிப் படிக்கும் இயல்பினரான இவர் தரும் புள்ளிவிவரம் நம்மை வியக்க வைக்கிறது. நமச்சிவாயர் உரையில் 70 இடங்களில் மறுப்புரைகள்; 80 இடங்களில் பிறவுமன்ன

என்ற தொடர்; 40 இடங்களில் அரும்பதவுரை; 35 இடங்களில் 'நிறுத்த முறையானே' என்ற தொடர்; 200க்கு மேற்பட்ட இடங்களில் நயவுரை; 120 சூத்திரங்களுக்கு உதாரணம் இன்மை என்ற இந்தப் புள்ளிவிவரம் நமச்சிவாயரை 'எண்ணி எண்ணிப்' படித்ததன் விளைவு.

இதே போல, சிவஞான முனிவர் இந்தப் பேருரையில் எங்கெல்லாம் சொற்களைச் சேர்த்தார், திருத்தினார், பிறர் உரையை இணைத்தார் என்பதையும் விருத்தியுரைப் பதிப்பில் தொகுத்துத் தந்துள்ளார். சங்கர நமச்சிவாயரது புலமையின் வெளிப்பாடான விருத்தியுரையைச் சிவஞான முனிவர் உரையாகப் பாவித்து எழுதுவதும் கூறுவதும் பெருந்தவறு என்பதை ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். இத்தவறான கருத்தால் சங்கரரின் புகழ் வெளிப்படவில்லை என்கிற ஆதங்கம் ஆசிரியருக்கு உள்ளது போலும்! அதை நிறைவு செய்யும் வகையில் ஆங்காங்கே 'புகழ்ச்சி அணி' பொலியச் சங்கரரைக் குறித்து அவர் எழுதக் காணலாம். பிற அறிஞர்தம் கருத்துக்களை மறுக்கும் பகுதி 'சிறிது' சூடாக உள்ளது. சங்கரர்போலச் 'சாந்தமாக' இருக்கலாமோ என்று தோன்றுகிறது. தாமோதரனின் முயற்சியால் வெளிவந்த கூழங்கைத் தம்பிரான் உரை, நமச்சிவாயர் விருத்தியுரை ஆகியவற்றோடு சங்கர நமச்சிவாயர் குறித்த இந்த நூலையும் சேர்த்துப் படித்த போது தமிழின் உரைவள ஆய்வை ஊக்கப்படுத்த வேண்டும் எனத் தோன்றியது. இந்த நூலின் பின்னிணைப்புகளும் பயன் உள்ளவை. எளிய, இனிய, தெள்ளிய நடையில் இந்த நூலை ஆக்கியுள்ள தாமோதரன் மேற்கொண்டு செய்ய வேண்டிய ஆய்வுகளையும் பட்டியலிடுகிறார். இலக்கண உரைநடையில் உரையாசிரியர் காட்டும் உதாரணங்கள், உவமைகள், கையாளும் உரைமரபுத் தொடர்கள் முதலாய பொருண்மை குறித்த மேலாய்வு தேவை என்பார். இலக்கிய, இலக்கண உரைகளை ஒப்பிட்டு ஆராய்வதும் இன்றைய முதன்மையான பணியாகும். இந்த ஆய்வுகள் மூலம் உரையின் அமைப்பு, உரைமரபு, உரையின் மொழி போன்றவை வெளிப்படுவதோடு தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிப் போக்குகள், தமிழக வரலாற்று நிகழ்வுகள் முதலியனவும் தெளிவுபடும். இந்நூலைப் படிப்பவர்களில் ஒரு சிலரேனும் இத்திசை நோக்கிப் பயணம் செய்யக்கூடும் என நம்பலாம்.

14-04-2003
தஞ்சாவூர்

இராம. சுந்தரம்

பொருளடக்கம்

அணிந்துரை	.....	iii
ஆய்வுரை	.....	v
முன்னுரை	.....	1
குறுக்க விளக்கங்கள்	.....	6
உரை வரலாற்றின் தொடக்கம்	.....	9
சங்கர நமச்சிவாயர் வரலாறு	.....	33
சங்கர நமச்சிவாயர் உரைத்திறன்	.....	63
முடிவுரை	.....	169
சங்கர நமச்சிவாயர் உரை மேற்கோள் இடவிளக்கம்	.....	173
பின்னிணைப்புகள்	.....	179
துணைநூல் பட்டியல்	.....	188

காணிக்கை

இலக்கண உரைகளில்
என்னை ஈடுபடுத்திய
ஆசிரியப் பெருந்தகை
வ. அய். சுப்பிரமணியம்
அவர்களுக்கு

முன்னுரை

பொன்மதிற் சனகைப் பல்கலைச்செல்வர் பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் தமிழிலக்கண வரலாற்றில் ஒரு மைல்கல். பெயருக்கு ஏற்ப அது ஒரு நல்ல இலக்கணம். நன்னூல் என்ற பெயரைக் கேட்ட உடன் கேட்டவர் நெஞ்சில் ஒரு நல்லுணர்வைத் தோற்றுவிக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. நன்னூல் எளிமையும் தெளிவும் கொண்ட புதுநூல். அதன் சொல்லமைதி, பொருளாழம், வைப்புமுறை முதலிய சிறப்பியல்புகள் இலக்கண ஆர்வலர்களின் கருத்தை ஈர்த்தன. அடியளவு குறைந்த நன்னூல் நூற்பாக்களின் தொடைநயமும் ஒலிநயமும் மனப்பாடக் கல்விக்கு ஏற்ற வகையில் இருந்தன.

"இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை" (நூ. 100),

"பகாஅப் பதங்களே பகுதி" (நூ. 134),

"பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே" (நூ. 241),

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை" (நூ. 261),

"எழுவாய் உருபு திரிபில் பெயரே" (நூ. 295),

"உவம உருபிலது உவமத் தொகையே" (நூ. 366)

என்பன போன்ற கருத்தாழம் நிறைந்த வரையறைகள் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் எளிதாக இருந்தன. அதனால் தமிழுலகு நன்னூலை விரைந்து ஏற்றுக்கொண்டது. மாணவர்கள் அதனை விரும்பிக் கற்றனர்; ஆசிரியர்கள் ஆர்வத்தோடு கற்பித்தனர். உரையாசிரியர்கள் அந்த இலக்கணத்துக்கு உரைவிளக்கம் வழங்கினர்; தாம் இயற்றிய உரைகளைச் சிலர் ஏடுகளில் எழுதி உதவினர்.

காலந்தோறும் நன்னூலுக்கு உரைகள் தோன்றினாலும் அவற்றுள் தரமான உரைகள் இரண்டு மட்டுமே. ஒன்று பதினான்காம் நூற்றாண்டில் மயிலைநாதர் எழுதிய உரை;

மற்றொன்று பதினேழாம் நூற்றாண்டில் சங்கர நமச்சிவாயர் இயற்றியது. மயிலைநாதர் உரை சுருக்கமானது. கவிதைநயம் கொண்ட அவருடைய உரைநடை படித்துச் சுவைக்கத் தக்கது. அவர் எடுத்துக்காட்டியுள்ள மேற்கோள்களும் உதாரணப் பாடல்களும் அவருடைய இலக்கண இலக்கியப் புலமையைப் புலப்படுத்துகின்றன. மயிலைநாதர் உரையைக் காட்டிலும் சங்கர நமச்சிவாயர் உரை விரிவானது; சிறந்தது. மூலநூலின் உட்பொருளை முழுமையாக விளக்க வல்ல கருத்துரை, பொழிப்புரை, அகலவுரை எல்லாம் அவர் உரையில் சீர்மையும் செப்பமும் பெற்றிருந்தன. அவருடைய உரை பயிற்சிக்கு வந்த பின்னர் மயிலைநாதர் உரையின் செல்வாக்கு படிப்படியாக மங்கிக் குறைந்துவிட்டது. இந்த உரைகள் இரண்டினையும் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் சிறப்பாகப் பதிப்பித்தார். முதன்முதலாக 1918இல் மயிலைநாதர் உரையையும் பின்னர் 1925இல் சங்கர நமச்சிவாயர் உரையையும் பல சுவடிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து அவர் வெளியிட்டார். சங்கர நமச்சிவாயர் உரைக்கு அவர் வெளியிட்ட இரண்டாம் பதிப்பு (1935) இலக்கணப் பதிப்புகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. சாமிநாதையர் காலத்துக்குப் பிறகு இந்த இரண்டு உரைகளுக்கும் வெளிவந்துள்ள பதிப்புகளில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் சங்கர நமச்சிவாயர் உரையில் சில திருத்தங்களைச் செய்து அந்த உரையைப் புதுக்கினார். புத்தம் புத்துரை என்று அவர் பெயரால் அது வழங்கலாயிற்று. அந்த உரையை ஆறுமுக நாவலர் முதன்முதலாக 1851இல் வெளியிட்டார். அதற்குப் பின்னர்ப் புத்தம் புத்துரைக்குப் பல்வேறு பதிப்புகள் (அ. தாமோதரன், 1999. பக். 58-70) வெளிவந்தன. அவற்றுள் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் (1957) பதிப்பித்ததே தரமான பதிப்பு. இந்த நல்ல பதிப்பிலும் சில குறைபாடுகள் நேர்ந்துவிட்டன. அவற்றை முற்றாக நீக்கிப் புத்தம் புத்துரைக்கு ஒரு செம்பதிப்பை வெளியிடும் நற்பணியில் நான் ஈடுபட்டிருந்தபோது சங்கர நமச்சிவாயர் உரையைப் பல முறை ஆழ்ந்து படிக்கும் இன்றியமையாமை எனக்கு ஏற்பட்டது. ஒவ்வொரு முறை படிக்கும்போதும் சங்கர நமச்சிவாயரின் உரைத்திறன் என்னை மலைக்கச் செய்தது. நான் பதிப்பித்த

புத்தம் புத்துரையின் முன்னுரையிலும் (அ. தாமோதரன், 1999. பக். 27-36) அவருடைய உரைத்திறனைச் சுருக்கமாகவே எழுதி உதவ முடிந்தது. இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்ற பழைய உரையாசிரியர்களைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களைப் போலச் சங்கர நமச்சிவாயரைப் பற்றி ஒரு தனிநூல் எழுதும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்னை வருகைதரு பேராசிரியராகப் பணியாற்ற அழைத்தது. சங்கர நமச்சிவாயர் என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதும் எண்ணத்துடன் அந்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன் விளைவே இச்சிறுநூல். அளவு சிறிது என்றாலும் நூலின் உள்ளடக்கம் உரமானது என்ற உணர்வு நூலை ஊன்றிப் படிப்பவர்க்குத் தோன்றும்.

நூலின் முதல் இயல் உரை வரலாற்றின் தொடக்கம் குறித்து விரிவாக ஆராய்கிறது. இறையனார் அகப்பொருள் உரை பண்பட்ட உரைநெறிகளைப் பயன்படுத்தியுள்ளது. அணிநூல், அவிநயம் போன்ற மறைந்துபோன இலக்கண நூல்களுக்கும் இளம்பூரணர் உரைக்கு முன்னர்த் தொல்காப்பியத்துக்கும் இருந்த உரைகளை யாப்பருங்கல விருத்தியுரை எடுத்தாண்டுள்ளது. உரை வகைகளுக்குத் தெளிவான வரையறை நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் உள்ளன. அந்த நூற்பாக்களின் மொழிநடை முன்னோர் கொண்டிருந்த உரைக் கோட்பாடுகளைக் குறித்துள்ளது. இத்தகைய பல காரணங்களால் தமிழ்மொழியின் உரை வரலாறு தொல்காப்பியர் காலத்துக்கு முந்தியது என்பது இந்த இயலில் தக்க சான்றுகளோடு விளக்கப்பட்டுள்ளது.

சங்கர நமச்சிவாயரின் வரலாறு, அவர் நன்னூலுக்கு உரை இயற்றிய காலச்சூழல், அந்த உரையைச் சிவஞான முனிவர் திருத்திப் புத்தம் புத்துரை உருவாக்கிய வரலாறு, அந்த உரையின் உள்ளடக்கம் ஆகியவை அடுத்த இயலில் ஆராயப்பட்டுள்ளன. மயிலைநாதர் சமணர் என்பதால் அவர் இயற்றி உதவிய நன்னூல் உரையின்மீது சாமிநாத தேசிகர் காழ்ப்புணர்வு கொண்டிருந்தார்; அதனால் 'நன்னூலுக்குச் சிறந்ததோர் உரை நீர் செய்திடுக' எனத் தமது மாணவர் சங்கர நமச்சிவாயரை அவர் பணித்தார் என்னும் கருத்துகள் மறுக்கப்பட்டுள்ளன. அதுபோலவே சிவஞான முனிவர் செய்த திருத்தங்களால் சங்கர நமச்சிவாயர் உரையின் தரம் உயர்ந்தது

என்ற கருத்தும் அழுத்தமாக மறுக்கப்பட்டுள்ளது. நன்னூல் விருத்தியுரையைப் பொறுத்த வரையில் சிவஞான முனிவரின் பங்களிப்பு பாராட்டும் வகையில் அமையவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சங்கர நமச்சிவாயர் இயற்றிய நன்னூல் விருத்தியுரையின் அமைப்பு, அதன் சிறப்பு, உரைநலன் முதலியன மூன்றாவது இயலில் ஆராயப்பட்டுள்ளன. பழைய உரைமரபைத் தழுவித் தமது விருத்தியுரையைக் கருத்துரை, பொழிப்புரை, உதாரணம், அகலவுரை என்று அவர் செய்துள்ள நால்வகைப் பாகுபாடுகள் விளக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் நூற்பாக்களின் உட்பொருள், அவற்றின் முறைவைப்பு, அவற்றில் அமைந்துள்ள தொகைக்குறிப்பு, அவற்றின் விளக்கத்துக்குத் தகுந்த நல்ல உதாரணங்கள், அருஞ்சொற்பொருள், வரையறை விளக்கம், வினாவிடை முறை, சொல்லாற்றல், பொருள்நயம், மறுப்புரை, உவமைகள் முதலிய விருத்தியுரைப் பண்புகளை அவர் திறம்படக் கையாண்டுள்ள சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பழம்பெரும் உரையாசிரியர்களின் உரைநெறிகளோடு சங்கர நமச்சிவாயரின் உரைநெறிகளை ஒப்பிட்டுக் காட்டி, உரைமரபின் தடையற்ற தொடர்ச்சியும் வளர்ச்சியும் குறிப்பிடப்பட்டுள்ளன. விருத்தியுரையின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்தும் சங்கர நமச்சிவாயரின் உரைத்திறன் ஒவ்வொரு தலைப்பிலும் மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த மூன்று இயல்களிலும் கூறப்பட்டுள்ள முக்கியக் கருத்துகள் முடிவுரையில் சுருக்கமாகத் தொகுக்கப் பட்டுள்ளன. சங்கர நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ள மேற்கோள்களின் இடவிளக்கமும் அதோடு தொடர்புடைய பின்னிணைப்புகளும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இனி என் நன்றியுரை. இந்தப் பணியில் எனக்கு உதவியவர்களை நன்றியோடு நினைவுகூர வேண்டும். ஆராய்ச்சி நெறிமுறைகளை எனக்குக் கற்பித்தவர் பேராசிரியர் திரு வ. அய். சுப்பிரமணியம், திருவனந்தபுரம்; இந்த நூலின் பகுதிகள் சிலவற்றைப் படித்துக் கருத்துரை கூறிய பேராசிரிய நண்பர்கள் திரு செ. வை. சண்முகம், அண்ணாமலைநகர்; திரு இரா. சாரங்கபாணி, அண்ணாமலைநகர்; திரு இராம. சுந்தரம், தஞ்சாவூர்; திரு பா. ரா. சுப்பிரமணியன், சென்னை; திரு வ. ஜெயதேவன், சென்னை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு வருகைதரு பேராசிரியராக என்னை அன்புடன் அழைத்தவர் அந்த நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் திரு ச. சு. இராமர் இளங்கோ, சென்னை; அதற்கு மகிழ்ச்சியோடு ஒப்புதல் அளித்தவர் முன்னாள் துணைவேந்தர் திரு பொன். கோதண்டராமன், சென்னை.

ஆய்வுப் பணியில் ஏற்பட்ட தாமதத்தைப் புரிந்து கொண்டதோடு நூலுக்கு அணிந்துரை வழங்கி, நூலை விரைந்து வெளியிட்டு உதவியவர் நிறுவன இயக்குநர் திரு சா. கிருட்டின மூர்த்தி, சென்னை.

நூலை ஒரு முறை ஊன்றிப் படித்து, அதற்கு ஒரு ஆய்வுரை எழுதி உதவியவர் பேராசிரியர் இராம. சுந்தரம், தஞ்சாவூர்.

அமைதியாகப் பணியாற்றுவதற்குத் தகுந்த சூழ்நிலையைக் கொடுப்பவள் என் வாழ்க்கைத் துணைவி திருமதி சின்னாயாள்; என் செயல்களுக்கு எல்லாம் துணை நின்று என்னை வழிநடத்துபவன் எல்லாம் வல்ல இறைவன்.

ஏற்றுக்கொண்ட பணி முற்றுப்பெறும் இந்த நல்ல நேரத்தில் இவர்கள் எல்லோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இறைவனுக்கு என் வழிபாடு.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கணினித் துறையினர் இந்த நூலை நன்றாக வடிவமைத்துள்ளார்கள். அவர்களுக்கு என் நிறைநெஞ்சப் பாராட்டுகள். இதன் மெய்ப்புகளைத் திருத்தும் பணியை நானே விரும்பி ஏற்றுக்கொண்டேன். அதனால் நூலில் நேர்ந்துவிட்ட ஓரிரு பிழைகளுக்கு நானே பொறுப்பு.

"கற்றனைத்து ஊறும் அறிவு"

திருமூலஸ்தானம் அ. தாமோதரன்
தை - ஜனவரி 2003

குறுக்க விளக்கங்கள்

நூற்பெயர் முதலியன

அகத்.	அகத்திணையியல்
அகம்.	அகநானூறு
அவி.	அவிநயம்
ஆ. த. சொ.	ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம்
இடை	இடையியல்
இல. கொ.	இலக்கணக் கொத்து
இல. சூறா.	இலக்கண விளக்கச் சூறாவளி
இல. விள.	இலக்கண விளக்கம்
இளம்.	இளம்பூரணர்
இறை.	இறையனார் அகப்பொருள்
இனிய.	இனியவை நாற்பது
உயிர்.	உயிர்மயங்கியல்
உரி.	உரியியல்
உரிச். நிக.	உரிச்சொல் நிகண்டு
உருபு.	உருபியல்
உவம.	உவமவியல்
கட. வாழ்.	கடவுள் வாழ்த்து
களவு.	களவியல்
கிளவி.	கிளவியாக்கம்
குற்றிய.	குற்றியலுகரப் புணரியல்
குறள்.	திருக்குறள்
குறுந்.	குறுந்தொகை
சிலப்.	சிலப்பதிகாரம்
சிற. பாயி.	சிறப்புப் பாயிரம்

சீவக.	சீவக சிந்தாமணி
செய்யுள்.	செய்யுளியல்
சேனா.	சேனாவரையர்
தண்டி.	தண்டியலங்காரம்
த. பே.	தமிழ்ப் பேரகராதி
தமிழ். விள.	தமிழ்நெறி விளக்கம்
திவா.	திவாகரம்
தே.	தேவாரம்
தொகை.	தொகைமரபு
தொல்.	தொல்காப்பியம்
தொல். விரு.	தொல்காப்பியச் சூத்திர விருத்தி
நம்பி.	நம்பி அகப்பொருள்
நன்.	நன்னூல்
நாலடி.	நாலடியார்
நான்மணி.	நான்மணிக்கடிகை
நூன்.	நூன்மரபு
நேமி.	நேமிநாதம்
பழ.	பழமொழி நானூறு
பாயி.	பாயிரம்
பிங்.	பிங்கல நிகண்டு
பி. வி.	பிரயோக விவேகம்
பிற.	பிறப்பியல்
புணர்.	புணரியல்
பு. வெ.	புறப்பொருள் வெண்பாமாலை
புள்ளி.	புள்ளிமயங்கியல்
புறத்.	புறத்திணையியல்

புறம்.	புறநானூறு
பெயர்.	பெயரியல்
பொ. பாயி.	பொதுப் பாயிரம்
மதுரைக்.	மதுரைக்காஞ்சி
மயிலை.	மயிலைநாதர்
மரபு.	மரபியல்
மலைபடு.	மலைபடுகடாம்
முத்.	முத்தொள்ளாயிரம்
முருகு.	திருமுருகாற்றுப்படை
மெய்ப்பாடு.	மெய்ப்பாட்டியல்
மொழி.	மொழிமரபு
யா.	யாப்பருங்கலம்
யா. வி.	யாப்பருங்கல விருத்தி
விளி.	விளிமரபு
வினை.	வினையியல்
வேற்.	வேற்றுமையியல்
வேற். மய.	வேற்றுமைமயங்கியல்

பிற குறியீடுகள்

உ-ம்.	உதாரணம்
நூ.	நூற்பா
பக்.	பக்கம்
ப-ர்.	பதிப்பாசிரியர்
வி. மே.	இடம் விளங்கா மேற்கோள்

உரை வரலாற்றின் தொடக்கம்

உரைவளம்

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்" (பழமொழி நானூறு 5)

செந்தமிழ் மொழியின் செவ்வியல் பண்புகளில் அதன் உரைவளம் ஒன்று. உரைவளம் என்பது இங்கு உரைகளின் செழுமைப்பண்பை மட்டும் குறிக்கவில்லை. செழுமைப்பண்போடு அவற்றின் வகைப் பரப்பையும் அது குறிக்கிறது. நற்றிணை தவிர்ந்த சங்க இலக்கிய நூல்கள் அனைத்துக்கும் பழைய உரைகள் எழுந்தன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு முதலியவற்றுக்கும் காப்பியங்களில் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, நீலகேசி ஆகிய நூல்களுக்கும் உரைகள் உள்ளன. இலக்கண நூல்களில் தொல்காப்பியம் தொடங்கி முத்துவீரியம் வரை உள்ள பெரும்பாலான நூல்களுக்கும் உரைகள் இருப்பது நாம் பெற்ற பேறு. சமய நூல்களில் நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருக்கோவையார், சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்ற நூல்களுக்கும் உரைகள் உள்ளன.

சில நூல்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள் தோன்றின. திருமுருகாற்றுப்படைக்கு இரண்டு; சிலப்பதிகாரத்துக்கு இரண்டு; நாலடியாருக்கு மூன்று; திருவாய்மொழிக்கு ஐந்து; திருக்குறளுக்குப் பத்து உரைகள். இலக்கண நூல்களில் தொல்காப்பியத்துக்கு இரண்டு; நன்னூலுக்கு மூன்று; தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு மூன்று; சொல்லதிகாரத்துக்கு ஆறு என்று பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் உரைகள் தோன்றிப் பெருகின. இவற்றுள் சிலவற்றின் பெயர்களே தெரிகின்றன; உரைகள் கிடைக்கவில்லை. திருக்குறள் உரைகளில் சில பெயர்கள் மட்டுமே நமக்குத் தெரியும். குறுந்தொகையின்

பழைய உரைக்குத் தடயமே இல்லை. இவை தவிர இறையனார் களவியல் உரை, யாப்பருங்கல விருத்தியுரை, இளம்பூரணர் உரை, மயிலைநாதர் உரை முதலியவற்றில் குறிக்கப்பட்டுள்ள உரைகள் எல்லாம் மறைந்துபோயின. கிடைத்துள்ள பழைய உரைகளிலும் குறை உரைகள் பல. அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், தொல்காப்பியச் சொல்லதிகாரம், பொருளதிகாரம் முதலியவற்றின் பழைய உரைகள் எல்லாம் நமக்கு முழுநிலையில் கிடைக்கவில்லை. அவற்றின் சிற்சில பகுதிகளையே நாம் பெற்றுள்ளோம். தமிழ்மொழியின் உரை வரலாற்றுக்கு இது மாபெரும் இழப்பு. ஆயினும் நமக்குக் கிடைத்துள்ள பழைய உரைகளின் செழுமை வளம் குறைவானது அல்ல.

உரைகளின் தோற்றம், வளர்ச்சி, உரையின் உருவாக்கம், உரைமரபுகள், அவற்றின் வகைப்பாடு முதலியவற்றை ஆராய்ந்து அறிவதற்குப் போதிய தரவுகளை இந்த உரைவளம் வழங்குவது ஒரு ஆறுதல். தமிழ்மொழியின் உரைநடை, இலக்கிய ஆராய்ச்சி, விமர்சனக் கலை, நடையியல் முதலிய துறைகளுக்கு உதவும் குறிப்புகள் ஒரு சில இந்த உரைவளத்தில் புதைந்துள்ளன. மொழி, இலக்கியம், இலக்கணம், சமுதாயம் முதலியவற்றின் வரலாறுகளுக்கும் இலக்கிய இலக்கணக் கோட்பாடுகளுக்கும் தமிழ்மொழியின் உரைவளம் பயனுள்ள தரவுகளை வழங்குகிறது. இலக்கண இலக்கிய உரைகளில் இத்தரவுகள் சிதறிக் கிடக்கின்றன. அதனால் எல்லா ஆய்வுகளையும் இவற்றிலிருந்தே தொடங்க வேண்டும் என்பது இதற்குப் பொருள் அல்ல. அளவு மிகமிகக் குறைவு என்றாலும் ஆய்வுக்குப் பயன்படும் குறிப்புகளும் சான்றுகளும் இந்தப் பேருரைகளில் உள்ளன; மூலநூல்களைக் காட்டிலும் உரைநூல்கள் வழங்கும் தரவுகள் மிகுதி என்பது இதற்குப் பொருள். இது உண்மையும் ஆகும்.

உரைவகைகள்

உரைவளம் போலவே உரைவகைகளும் தமிழில் செழித்து வளர்ந்துள்ளன. வளர்ந்த மொழிகள் பலவற்றில் மூலபாடம், உரை என்னும் இலக்கியப் பாகுபாடே இல்லை. இது இந்திய மண்ணுக்கே உரியது. மூலபாடம், உரைப்பாடம் என்ற பாகுபாடு தொன்மையானது; இரண்டாயிரம் ஆண்டுக்கும் முற்பட்டது. இவ்வாறு சொல்வது எவ்வகையிலும் மிகைப்படுத்துவது ஆகாது. நூல், உரை என்னும் கலைச்சொற்கள், நூல் எது? உரை எது?

என்னும் வரையறைகள், உரையின் வகைகள், அதன் கூறுபாடுகள் முதலியவற்றை விளக்கிச் சொல்வதற்குத் தொல்காப்பியத்தில் பொருள் நிறைந்த நூற்பாக்கள் உள்ளன. களவியல் உரை, யாப்பருங்கல விருத்தி, இளம்பூரணர் உரை முதலிய பழைய உரைகள் உரைவகைகளைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளன. அவற்றுக்கும் முன்னரே தமிழில் தோன்றிய இலக்கிய இலக்கண உரைகளைப் பற்றிய பல குறிப்புகள் அந்த உரைகளில் பதிவாகியுள்ளன.

காண்டிகை, உரை என்னும் இருவகை உரைகளைத் தொல்காப்பியம் குறித்துள்ளது. களவியல் உரையில் கருத்துரை, கண்ணழித்தல் (பதவுரை), பொழிப்புரை, அகலவுரை என்று நால்வகைக் கூறுபாடுகள் கூறப்பட்டுள்ளன. பதவுரை என்பது பதப்பொருள் உரைத்தல் என்றும் பொழிப்புரை என்பது தொகுத்துரை என்றும் அகலவுரை என்பது விரித்துரை, விருத்தியுரை என்றும் சொல்லப்படும். பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை என்னும் மூவகை உரைகளை யாப்பருங்கல விருத்தி குறிப்பிட்டுள்ளது. விருத்தியுரை என்னும் குறியீடு பெரும்பாலும் இலக்கண உரைகளுக்கே சொல்லப்படுகிறது. பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சம் என்று உரைவகை நான்கு என்பார் (தொல். சிற. பாயி.) இளம்பூரணர். இக்கருத்து "பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம்" என்று நாலடியாரிலும் (319) பேசப்படுகிறது. நன்னூல் பாயிரப் பகுதியில் காண்டிகை, விருத்தி என்று இருவகை உரைகளே குறிக்கப்பட்டுள்ளன. இவை தவிரவும் குறிப்புரை, அரும்பத உரை, சிற்றுரை, பேருரை (மாபாடியம்) என்னும் வகைகளும் அப்பண்புகளைக் கொண்ட உரைநூல்களும் தமிழில் உண்டு. இவ்வாறு பத்துக்கும் மேற்பட்ட உரைவகைகள் இருந்தாலும் இலக்கணத் துறையினர்க்கு நன்றாகத் தெரிந்தவை காண்டிகையுரை, விருத்தியுரை என்ற இரண்டு மட்டுமே எனலாம்.

உரைவகைகளோடு அவற்றின் கூறுபாடுகளும் இலக்கணப் புலவர்களால் விளக்கப்பட்டன. தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்களும் யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பிய உரைகள், வீரசோழிய உரை முதலிய உரைநூல்களும் உரைவகைகளுக்கு இலக்கணம் வகுத்தன; அவற்றின் கூறுபாடுகளுக்குத் தொகை கூறின; உரைகளின் வகைப்பாட்டுக்கு உதவும் குறிப்புகளை

வழங்கின. இவை அனைத்தும் உரைவகைகளின் பரப்பைப் புலப்படுத்தும். களவியல் முதல் நூற்பாவின் உரையில் நக்கீரர், கருத்து என்னையோ எனின் என்றும் பதப்பொருள் இன்னது என்றும் பொழிப்புத் திரட்டல் என்றும் அகலவுரை இன்னது என்றும் தனித்தனியே வேறுபடுத்தித், தாம் கூறிய உரைக் கூறுபாடுகள் நான்கையும் (கருத்துரை, கண்ணழித்தல், பொழிப்புரை, அகலவுரை) விளக்கியுள்ளார். குறிப்புரை, அரும்பதவுரை, காண்டிகையுரை, விருத்தியுரை என்பவற்றை அறிந்துகொள்வதற்கு அவ்வகையில் அமைந்த உரைநூல்கள் உள்ளன. இவ்வாறு உரைவகைகளுக்கு இலக்கணமும் இலக்கியமும் தமிழ்மொழியில் பரந்துகிடக்கின்றன. இவை எல்லாம் நமது உரை இலக்கியங்களின் சிறப்பியல்புகள்.

நோக்குநூல்கள்

இலக்கண இலக்கிய உரைகளைப் பற்றிக் கூறும் நூல்கள் சில சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்துள்ளன. அவற்றுள் நச்சினார்க்கினியர் (மு. அண்ணாமலை, 1956), இலக்கண வரலாறு (சோம. இளவரசு, 1963), உரையாசிரியர்கள் (மு. வை. அரவிந்தன், 1968), உரைமரபுகள் (இரா. மோகனும் பிறரும், 1985), இலக்கண வரலாறு (இரா. இளங்குமரன், 1988), தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் (மு. அருணாசலம், 1970-1977) முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை தவிர இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் போன்ற உரையாசிரியர்களைப் பற்றித் தனித்தனி நூல்களும் ஆய்வேடுகளும் கட்டுரைகளும் கணிசமாக வெளிவந்துள்ளன. உரையாசிரியர்களின் வரலாறு, உரைத்திறன், அவர்கள் கடைப்பிடித்துள்ள நெறிமுறைகள் முதலியன இவற்றில் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளன.

இலக்கண இலக்கிய உரைகள்

உரை என்பது தனித்ததோர் இலக்கிய வகை. அதற்கென ஒரு அமைப்பும் தனிப்பண்புகளும் நடையும் உள்ளன. இலக்கண உரைக்கும் இலக்கிய உரைக்கும் அவை பொதுவாக இருக்கும் என்று துணிந்து சொல்ல முடியாது; கூடாது. அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுதல், இலக்கணக் குறிப்பு வரைதல், மேற்கோள் காட்டுதல், உவமை விளக்கம் தருதல் போன்ற பொதுக் கூறுபாடுகளில் இலக்கண இலக்கிய

உரையாசிரியர்களிடையே ஒருமைப்பாடு இருப்பது இயல்பு. யாப்பருங்கல உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் தமது உரைகளில் மறைந்துபோன தமிழ் நூல்களின் நூற்பாக்களையும் செய்யுள்களையும் எடுத்துக்காட்டிப் பதிவுசெய்வார்கள். தமக்கு முன்னர் வழங்கிவந்த உரைகளை மறுத்துக் கூறுவதில் சேனாவரையருக்கும் பரிமேலழகருக்கும் சில ஒற்றுமைகள் காணப்படும். தொல்காப்பியத்துக்கும் பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய இலக்கியங்களுக்கும் உரை இயற்றிய நச்சினார்க்கினியரின் உரைநெறிகளில் சில பொதுவாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆயினும் இலக்கண உரை வேறு; இலக்கிய உரை வேறு. அவற்றுக்கு ஏற்றவாறு உரையின் அமைப்பு, நெறிமுறைகள், மொழிநடை முதலியன நிச்சயம் வேறுபட்டிருக்கும். இலக்கணத்துக்கும் இலக்கியத்துக்கும் ஒரே உரையாசிரியர் உரை இயற்றும் வழக்கம் அருகிக் காணப்படுவதற்கு இந்த வேறுபாடு ஒரு காரணமாக இருக்கலாம்.

உரை வரலாற்றின் தொடக்கம்

நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர் போன்ற ஒரு சில உரையாசிரியர்கள் பழைய உரையின் பகுதிகளைத் தமது உரைகளில் உயிரும் மெய்யும் மாறாமல் எடுத்து இணைத்துக் கொண்டார்கள். உரையாசிரியர்களைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களில் இத்தகைய தலைப்பு விரிவாக ஆராயப்படவில்லை. உரை ஆராய்ச்சியில் இதுபோலத் தெளிவாக ஆராயப்படாத இன்னொரு தலைப்பு உரை வரலாற்றின் தொடக்கம் பற்றியது. ஒரு நூலுக்கு முதன்முதல் எப்போது உரை எழுதப்பட்டிருக்கும்? எந்த உரை முதல் உரையாக இருக்கக் கூடும்? உரை வரலாறு தமிழில் எப்போது தொடங்கியிருக்கக் கூடும்? என்பன மேலே குறிப்பிட்ட நூல்களில் விரிவாக ஆராயப்படவில்லை. "உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு." (தொல். மரபு. 98), "உதாரணம் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும்." (தொல். மரபு. 101) என்று பேராசிரியர் கூறியவற்றையும் "உரை நடந்துவந்தவாறு சொல்லுதும்." (இறை. 1) என்று களவியல் உரையாசிரியர் நக்கீரர் சொல்லிய கதையையும் இறுகப் பற்றிக்கொண்டு உரை இல்லாத காலம், வாய்மொழி உரை வழங்கிய காலம், செவிச்செல்வமாக உரை விளங்கிய காலம்

என்று பலரும் பொதுநிலையில் குறிப்பிட்டார்கள். தலைப்பின் புறப்பகுதியிலேயே அவர்கள் நின்றுவிட்டார்கள்; உட்பகுதியை ஊன்றிப் பார்க்கவில்லை. சிலர் தெளிவாகச் சொல்ல நினைத்துப் பிழைபடக் கூறிவிட்டார்கள்.

உரை வரலாறு - ஒரு பிழைக்கருத்து

உரையாசிரியர்களைத் தமிழியலுக்கு நன்றாக அறிமுகப் படுத்திய மு. வை. அரவிந்தன் "இறையனார் அகப்பொருள் உரையே தமிழ்மொழியில் தோன்றிய முதல் உரை நூலாகும்." (1968. பக். 49) என்று முதலில் எழுதினார். இலக்கிய வரலாற்று ஆசிரியர் மு. அருணாசலம் "முதல் இலக்கண உரை எட்டாம் நூற்றாண்டில் இறையனார் களவியலுக்கு நக்கீரர் என்ற புலவர் எழுதியதாக வழங்கும் உரை" (தமிழ் இலக்கிய வரலாறு- ஒன்பதாம் நூற்றாண்டு, 1975. பக். 344) என்றும் பிறிதோர் இடத்தில் "தமிழில் எழுந்த உரைகளின் மரபில் இறையனார் அகப்பொருள் உரையே முதன்முதலில் தோன்றிய உரையாகும்." (இளம்பூரணர், 1981. பக். 1) என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரே வேறு ஒரு தொகுதியில் "முதன்முதலாக ஏற்பட்ட உரைநடை நூல் நக்கீரருடைய இந்த உரைநூல்" (பத்தாம் நூற்றாண்டு, 1972. பக். 237) என்றும் "நக்கீரர் உரையே தமிழில் முதன்முதலாகத் தோன்றிய உரைநடை" (பத்தாம் நூற்றாண்டு, 1972. பக். 258) என்றும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தை எழுதியுள்ளார். வேறு சில நூல்களிலும் இக்கருத்து பிரதிபலிக்கிறது. களவியல் உரை "தமிழில் தோன்றிய முதல் உரைநடை நூல்" (இராம. சுந்தரம், 1978. பக். 93), "உரை கண்ட முதல் நூல்" (செ. வை. சண்முகம், 1994. பக். 30) என்பன இதற்கு நல்ல உதாரணங்கள். இவர்கள் எல்லோரும் எண்ணியது அதாவது எழுத நினைத்த கருத்து வேறு; ஆனால் எழுதியது வேறு. இவர்கள் எழுத நினைத்த கருத்து எண்ணியவாறே எழுத்து வடிவில் அமையவில்லை; சிறிது மாறிவிட்டது. இறையனார் அகப்பொருளுக்கு எழுந்த நக்கீரர் உரையே இன்று நமக்குக் கிடைத்துள்ள உரைநூல்களில் காலத்தால் முந்தியது; அதுவே நமக்குக் கிடைத்துள்ள உரைநடை நூல்களில் முதலாவது என்று சொல்வதே அவர்கள் எண்ணமாக இருந்திருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் இறையனார் அகப்பொருள் உரை தமிழில் தோன்றிய முதல் உரையாக இருக்காது; இருக்கவும் முடியாது.

முதல் உரை

முதல் உரை இவ்வளவு நல்ல கட்டமைப்பும் விளக்கத் திறனும் உடையதாக உருவாவது அரிது. அதன் மொழிநடை கற்பவர் உள்ளத்தை ஈர்க்கக் கூடியது; உணர்வைத் தட்டி எழுப்பக் கூடியது. இத்தகைய எடுப்பான நடை முதல் உரையில் அமைவதும் அரிது. இதனால் எல்லாம் நான் சொல்ல விரும்புவது இதுதான். உரைநெறிகள் செழித்து வளர்ந்த உரைப் பாரம்பரியம் ஒன்று அகப்பொருள் உரையாசிரியருக்கு முன்பே தமிழில் இருந்திருக்க வேண்டும். அந்த மரபை முறையாகக் கற்றுத் தேர்ந்த பின்னர் இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் உரை இயற்றியிருக்க வேண்டும். உரையரங்கத்தில் தெய்வாம்சத்தின் அனுக்கிரகம் பெற்ற உரை என்பதால் அதற்கு இச்சிறப்புப் பண்புகள் இயல்பாக உண்டாயின என்பது பொருந்தாது.

களவியல் உரை

களவியல் உரையின் அமைப்பு, அதன்கண் காணப்படும் உரைமரபுத் தொடர்கள், கலைச்சொற்கள், சொற்பொருள் விளக்கம், அதன் மொழிநடை முதலியவற்றை ஊன்றி நோக்கினால் அது முதல் உரை அல்ல என்பது இன்னும் தெளிவாக விளங்கும். மதுரை ஆலவாயிற் பெருமானடிகளால் செய்யப்பட்டது களவியல். இறைவன் அருளிய நூலுக்குப் பாயிரம் வழங்கும் தகுதி யாருக்கு உண்டு? அதனால் அதற்குப் பாயிரம் பாட யாரும் துணியவில்லை. அது இல்லாமல் இருப்பதே இறைவன் நூலுக்குச் சிறப்பு என்று கருதப்பட்டிருக்கலாம். ஆயினும் "எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க வேண்டும்" (இறை. 1) என்னும் மரபை எடுத்துக்காட்டி நக்கீரர் ஒரு விரிவான பாயிரப் பகுதியோடு தமது உரையைத் தொடங்கியுள்ளார். அந்த மரபுக்கு,

> **"ஆயிர முகத்தான் அகன்றது ஆயினும்**
> **பாயிரம் இல்லது பனுவல் அன்றே"**

என்னும் பழைய நூற்பா ஒன்றை அவர் ஆதாரச் சான்றாகக் காட்டுவார். இந்தத் தொடக்க உரையே தமிழ் உரைமரபின் தொன்றுதொட்ட தோற்றத்தையும் தொடர்ச்சியையும் புலப்படுத்தும்.

நக்கீரரின் உரைநெறிகள்

பாயிரத்தின் பயன், அதன் வகை, முச்சங்க வரலாறு, களவியலும் அதன் உரையும் தோன்றிய கதை, நூல் உரைக்கும் முறை, நூலின் வகை, அதன் இலக்கணம் என்று அந்தப் பாயிரத்தின் வழியாக நக்கீரர் ஒரு தகவல் களஞ்சியத்தையே நமக்குத் திறந்துவிட்டுள்ளார். முதல் நூற்பாவுக்கு உரை கூறும் முன்னர்க் கருத்துரை, பதவுரை (கண்ணழித்தல்), பொழிப்புரை, அகலவுரை என்னும் உரைக் கூறுபாடுகளை விளக்கி, அதன் பின்னர் அந்நூற்பாவுக்கு முறையே நான்கு வகை உரைகளையும் வகுத்துக் கூறியுள்ளார். கருத்துரையை "என்னையோ எனின்" அல்லது "என் நுதலிற்றோ எனின்" என்று தொடங்கி "உணர்த்துதல் நுதலிற்று." என்றும் பதவுரையை "இதன் பொருள்" என்று தொடங்கி "என்றவாறு." என்றும் முடிப்பது அவர் முறை. களவியல் நூற்பாக்கள் அறுபதுக்கும் அவர் இம்முறையைக் கடைப்பிடித்துள்ளார். எல்லா நூற்பாக்களுக்கும் பொழிப்புரையும் அகலவுரையும் இல்லாததால் இது போன்ற முறை ஒன்றும் அவற்றில் அமையவில்லை. இந்த வாய்பாடும் சொல்லாட்சியும் ஒரு நெடிய உரைமரபின் தொடர்நிலையை நன்கு உணர்த்தும். ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்க்காடு என்னும் சூத்திர நிலைகள் (நூ. 4), தந்திர உத்தி, உரையிற் கோடல், நிறுத்த முறை (நூ. 27, 36), அருத்தாபத்தி, இலேசு (நூ. 33), எடுத்தோத்து, இரட்டுற மொழிதல், புறனடை (நூ. 59), புனருத்தம், வாய்பாடு (நூ. 2), மிகை வாய்பாடு (நூ. 28) முதலிய உரைமரபுச் சொற்கள் களவியல் உரையில் வந்துள்ளன. கருத்தன், ஏதுக்கருத்தன், கருவிக்கருத்தன், கருமக்கருத்தன் (நூ. 18), ஒரு பொருட் பன்மொழி (நூ. 20), ஒரு பொருட்கிளவி (நூ. 31), பொருள்கோள் (நூ. 56) என்று தொல்காப்பியத்தில் இல்லாத கலைச்சொற்களையும் தமது உரையில் நக்கீரர் பயன்படுத்தியுள்ளார்.

"மதி என்பது அறிவு" (நூ. 6), "காமம் என்பது வேட்கை" (நூ. 20), "மரபு எனினும் இலக்கணம் எனினும் இயல்பு எனினும் ஒக்கும்" (நூ. 26) என்று சொற்பொருள் கூறுதல், நூற்பாக்களின் வைப்புமுறையை (நூ. 6) விளக்குதல், "ஒரு பொருளை வேறுபட்ட வாய்பாட்டால் பல்காற் சொல்லுவது புனருத்தம்" என்று வரையறை (நூ. 2) கூறுதல், "என்று என்பது

எண்ணுதற்கு உரியதோர் வாய்பாடு; ஆங்க என்பது அசைச் சொல்; இரண்டு என்பது தொகை; உம்மை முற்றும்மை" (நூ. 39) என்று இலக்கணக் குறிப்பு வரைதல் முதலியவற்றை ஆழ்ந்து நோக்குவோர்க்குக் களவியலின் பண்பட்ட உரை அமைப்பு விளங்கும். வினாவிடை கூறி விளக்குதல், உதாரணம், மேற்கோள், உவமை முதலியவற்றை எடுத்துக்காட்டுதல், மறுப்புரை, மாற்றுரை கூறுதல் போன்ற உரைநெறிகள் பற்பல அகலவுரையில் அமைந்துள்ளதால் இந்த உரையின் தரமும் மேம்பாடும் புலப்படும்.

களவியல் உரையின் மொழிநடை

அடுத்ததாகக் களவியல் உரையின் மொழிநடைக்கும் ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். அதன் முதல் நூற்பாவின் அகலவுரையில் "ஐந்திணை என்பதன் முன்னர்க் களவு என்னும் சொல் எத்திறத்தால் வந்தது? ஒரு சொல்முன் ஒரு சொல் வருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் என மூன்றனுள் ஒன்றுபற்றி அன்றே வருவது? அவற்றுள் இஃது எவ்வகையான் வந்ததோ எனின் தொகைநிலை வகையான் வந்தது என்பது. தொகைதாம் பல. அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோ எனின் வேற்றுமைத்தொகையான் வந்தது என்பது. அவ்வேற்றுமைத் தொகைதாம் பல. அவற்றுள் இஃது எவ்வேற்றுமைத்தொகையோ எனின் ஏழாம் வேற்றுமைத்தொகை என்பது. ஏழாம் வேற்றுமை உருபுதாம் பல. அவற்றுள் யாது தொக்கது எனின் உள் என்பது தொக்கது." என்று வினாவிடையாகக் கூறுவார். இலக்கணக் கருத்துகளை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கிச் சொல்ல நக்கீரர் தேர்ந்தெடுத்துள்ள மொழிநடை இலக்கண உரைகளுக்கே உரியது. மாணாக்கர் உணரும் வகையில் ஆசிரியர் ஒரு கருத்தை உணர்த்துவதற்கு இது கைகண்ட நடை. உரையின் அமைப்பு, அதன்கண் உள்ள உரைமரபுத் தொடர்கள், கலைச்சொற்கள் முதலியவற்றோடு மொழிநடையையும் ஒருங்கு வைத்துப் பார்க்கும்போது களவியல் உரை தமிழில் தோன்றிய முதல் உரையாக இருக்க முடியாது. இந்த மொழிநடை நமக்கு இன்னொன்றையும் உணர்த்துகிறது. மாணவர்க்கு ஆசிரியர் கற்பித்த பாடம் வாய்மொழியாக வழங்கி நிலைபெற்ற பின்னர் ஏட்டில் எழுதப்பட்டிருக்கலாம். எனவே கற்பித்தலே உரையின் முன்வரைவு. வினாவிடை விளக்கத்தில் கையாளப்படும் மொழிநடை அதன் ஒரு கூறு எனலாம்.

அகநானூற்றின் பழைய உரை

களவியல் உரையில் உள்ள ஒரு அகச்சான்று இவற்றுக்கு எல்லாம் மகுடம் வைத்ததுபோலத் திகழ்கிறது. "அவ்வியல்பு அல்லது" (இறை. 4) என்னும் நூற்பாவின் உரையில் (ச. பவானந்தம் பிள்ளை பதிப்பு, 1916. பக். 80) அகநானூற்றுக்கு அக்காலத்தில் வழங்கிய உரையைப் பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அப்பகுதியில் "தலைமகன் உலாப்போயின இடத்துப் பரத்தையர்மாட்டுப் பிரிந்தான் என்று கருதி ஒரு சிவப்பு உண்டாம். அச்சிவப்பு நீக்கி வாயில்கள் கூட்டவே கூடும் என்பது. அஃதே எனின் இஃதன்றே நெடுந்தொகைப் பாட்டினுள் "கூர்முள் முள்ளி" (அகம். 26) கூட்டாமல் கூடிற்று எனின் அதுவும் கூட்டவே கூடிற்று என்பது. ஆயின் எவ்வாயிலான் கூடினானோ எனின் ஆற்றாமை வாயிலான் கூடினான். கூடினவாறு அதன் உரையகத்துக் கண்டுகொள்க." என்று அந்த அகச்சான்று அமைந்துள்ளது. இப்பதிப்பு வழங்கும் குறிப்பு உண்மை என்றால் களவியல் உரைக்கு முன்னரே அகநானூற்றுக்கு ஒரு உரை இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஆகவே களவியல் உரை தமிழில் எழுந்த முதல் உரை அல்ல என்பது முடிந்த முடிபு. உரை வரலாற்றின் இடைப் பகுதியில் அதாவது ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டில் இந்த நூலும் உரையும் தோன்றியிருக்கலாம்.

யாப்பருங்கல விருத்தி வழங்கும் சான்றுகள்

களவியல் உரை முதல் உரை அல்ல என்றால் தமிழில் எந்த உரை முதலில் தோன்றியது? என்ற கேள்வி எழுவது இயல்பு. இந்த வினாவுக்கு விடை கூறும் முன்பாக அதற்குக் கிடைக்கும் சான்றுகளைப் பார்க்கலாம். களவியலுக்குப் பின்னர்த் தோன்றிய உரைகளில், நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ள பழைய உரை யாப்பருங்கல விருத்தியே. இதற்கு முன்னர்த் தோன்றியதாகக் கருதப்படும் (மு. அருணாசலம், இலக்கிய வரலாறு ஒன்பதாம் நூற்றாண்டு, 1975. பக். 345) தமிழ்நெறி விளக்க நூலும் உரையும் முதல் இறுதி இல்லாதன. எனவே யாப்பருங்கல விருத்தியே உரை வரலாற்றுக்குப் பயன்படும் தகவல்களை நமக்கு வழங்க முடியும். முதலில் அவற்றை முறையாகப் பார்ப்போம்.

யாப்பருங்கல உரையாசிரியர் ஏறக்குறைய முப்பது இலக்கண நூல்களைத் தமது உரையில் எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலக் காரிகை தவிர மற்றவை அனைத்தும் மறைந்து போயின. அணியியல், அவிநயம், காக்கைபாடினியம், சங்கயாப்பு, செயிற்றியம், நற்றத்தம், வாய்ப்பியம் முதலிய நூல்கள் எல்லாம் தொல்காப்பியத்துக்குப் பின்னர்த் தோன்றியன. இந்த நூல்கள் ஒருவேளை ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் இறையனார் அகப்பொருள் காலத்தை ஒட்டித் தோன்றியிருக்கும் என்று ஊகிக்கலாம்; அறுதியிட்டுக் கூறப் போதிய சான்றுகள் இல்லை. மறைந்துபோன இந்த இலக்கண நூல்களில் சிலவற்றுக்கு உரைகளும் இருந்திருக்கின்றன. அவற்றுள் ஒரு சில யாப்பருங்கல விருத்தி ஆசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இலக்கண நூற்பாக்களை எடுத்துக்காட்டுவது போலவே அவற்றின் உரைகளையும் அந்த உரைகளில் காட்டப்பட்டுள்ள உதாரணப் பாடல்களையும் அவர் எடுத்தாண்டுள்ளார். உரை வரலாற்றில் இந்த முறை ஒரு முன்மாதிரி எனலாம். அவற்றுக்குச் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

அணியியல் உரை

"செப்பல் இசையன" (யா. 57) என்னும் நூற்பாவின் உரையில் "**வைகலும் வைகல் வரக்கண்டும்**" (நாலடி. 39) என்னும் வெண்பாவை விருத்தி ஆசிரியர் எடுத்துக்காட்டி "இஃது அகவல் வெண்பா என்று அணியியல் உடையார் காட்டிய பாட்டு." என்று குறிப்பிட்டுள்ளார். உதாரணப் பாடல்கள் பொதுவாக உரைகளில்தானே எடுத்தாளப்படும்? அதனால் அணியியலுக்கு ஒரு உரை இருந்தது என்று நாம் கருதலாம். இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற்கு யாப்பருங்கல விருத்தியில் இன்னொரு நல்ல சான்று கிடைக்கிறது. "குறளடி சிந்தடி" (யா. 23) என்னும் நூற்பாவின் பொழிப்புரையில் விருத்தி ஆசிரியர் சொல் வருவித்துப் பொருள் கூறியுள்ளார். அவ்வாறு சொல் வருவித்துப் பொருள் கூறுவது உரைநெறி என்றும் விளக்கியுள்ளார். அவர் வருவித்த சொற்களுள் ஆசிரியர் என்பது ஒன்று. மூலத்தில் இல்லாத இந்தச் சொல்லுக்கு "இது ஆற்றலாற் போந்த பொருள்" என்று உரை கூறியதோடு

அமையாமல், அதற்குச் சான்றாக மற்றொரு உரையைக் காட்டியுள்ளார். அவர் காட்டிய உரை மேற்கோள் "அணியியல் உடையாரும்,

இயன்ற செய்யுட்கு இயைந்த பொருளை
உயர்ந்த நடையால் உணரக் கூறலும்
அருங்கல மொழியால் அரிதுபடக் காட்டலும்
ஒருங்கிரண்டு என்ப உயர்நடைப் பொருளே

என்னும் சூத்திரத்துள் ஒருங்கிரண்டு என்புழி ஆற்றலாற் போந்த பொருளை என்ப என்னும் முற்றுச்சொல்லோடு புலவர் என்னும் பெயர் கூட்டிப் பொருள் உரைத்தார் ஆகலின் இதுவும் அவ்வாறே கொள்க." (யா. வி. 23) என்று அமைந்துள்ளது. ஆகவே அணியியல் என்னும் நூலும் உரையும் யாப்பருங்கல விருத்திக்கு முன்னர் வழக்கில் இருந்துள்ளன. இவ்வாறே "அவிநயனார் காட்டிய பாட்டு." (யா. வி. 57, 93, 95), "கையனார் காட்டிய பாட்டு." (யா. வி. 37), "பிறவும் சங்க யாப்பிற் கண்டுகொள்க." (யா. வி. 28) என்றும் பெயர் சுட்டாமல் "ஒரு சார் ஆசிரியர் காட்டும் பாட்டு." (யா. வி. 93, 95), "எல்லா ஆசிரியரும் காட்டுவர்." (யா. வி. 95) என்றும் தமது உரையில் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த எடுத்துக்காட்டுகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் தகவல்கள் இரண்டு. அணியியல், அவிநயம் போன்ற பழைய இலக்கண நூல்களுக்கு உரைகள் இருந்தன என்பது ஒன்று. அந்த உரைகளில் காட்டப்பட்டிருந்த உதாரணப் பாடல்களை யாப்பருங்கல உரையாசிரியர் தமது உரையில் எடுத்தாண்டுள்ளார் என்பது இரண்டு. இன்னும் ஒரு படி மேலே போகலாம்.

யாப்பருங்கல விருத்தியும் செய்யுளியலும்

யாப்பருங்கல உரையாசிரியர் தமது உரையில் "இது செய்யுளியல் உடையார் காட்டியது." (யா. வி. 36), "இதனைச் செந்தொடையே என்று வழங்கினார் செய்யுளியல் உடையார்." (யா. வி. 53), "செய்யுளியல் உடையார் காட்டிய பாட்டு." (யா. வி. 57), "இப்பாட்டுக்களும் செய்யுளியலுள் காட்டின என்று கொள்க." (யா. வி. 93) என்று பல இடங்களில் செய்யுளியலைக் குறிப்பிட்டுள்ளார். இந்த இடங்களில் எல்லாம் உதாரணப் பாடல்களே குறிக்கப்பட்டுள்ளன. அதனால் அவர் குறித்தது செய்யுளியல் என்னும் நூல் மட்டும் அல்ல. அதன் உரையில் காட்டப்பட்டிருந்த உதாரணப் பாடல்களும் என்பது

விளங்கும். அங்ஙனம் ஆயின் செய்யுளியல் என்று அவர் குறித்தது தனிநூலா? அல்லது ஒரு நூலின் பகுதியா? என்று கேட்கத் தோன்றும். இந்த நல்ல கேள்விக்கு யாப்பருங்கல விருத்தியே பொருத்தமான விடையை நமக்கு வழங்கிவிடுகிறது. அந்த விடை வஞ்சித்தளையின் வகையைக் கூறும் நூற்பாவின் உரையில் (யா. வி. 21) அமைந்துள்ளது. அவ்வுரைப் பகுதியில்,

> **இருவகை உகரமொடு இயைந்தவை வரினே**
> **நேர்பும் நிரைபும் ஆகும் என்ப** (தொல். செய்யுள். 4)

என்பது நேர்க்கீழ்க் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் வந்தது; நுங்கு நுங்கினார் என்றாற்போல ஒருங்கு வரின் நேர்பசையாய் நிரைக்கீழ்க் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் வந்தது; நுழைந்து புக்காரே என்றாற்போல ஒருங்கு வரின் நிரைபசையாம் என்பது அன்று; நேர்க்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நேர்பசையாம். நிரையசைக்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நிரைபசையாம் என்றார் செய்யுளியல் உடையார்; அதுபோலக் கொள்க." என்று உரை வரைந்துள்ளார்.

இவ்வாறே சொற்சீரை விளக்கும் பகுதியில் "சொற்சீர்" என்பது,

> **கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து**
> **முட்டடி இன்றிக் குறைவுசீர்த்து ஆகியும்**
> **ஒழியசை ஆகியும் வழியசை புணர்ந்தும்**
> **சொற்சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே**

(தொல். செய்யுள் 119) என்று செய்யுளியல் உடையார் ஓதிய பெற்றியால் வருவன எனக் கொள்க." (யா. வி. 29) என்று யாப்பருங்கல உரையாசிரியர் உரை கூறியுள்ளார். விருத்தி ஆசிரியர் இந்த உரைப் பகுதிகளில் எடுத்துக்காட்டியவை இரண்டும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாக்கள். இவற்றை வேறு ஒரு முறையில் அவர் அழைத்திருந்தாலும் அவர் கருதியது தொல்காப்பியச் செய்யுளியலே ஆகும். இந்த முடிபுக்குத் தகுந்த காரணங்கள் உண்டு. மேலே எடுத்துக்காட்டிய இரண்டு நூற்பாக்களைத் தவிரச் செய்யுளியல் உடையார் ஓதிய நூற்பாக்கள் என்று வேறு எதுவும் யாப்பருங்கல விருத்தியில் எடுத்தாளப்படவில்லை. அது ஒரு காரணம். இரண்டாவது காரணம் செய்யுளியலின் வழக்குப் பயிற்சி. இதுபற்றிச் சிறிது விளக்கிச் சொல்ல வேண்டும்.

செய்யுளியலும் யாப்பதிகாரமும்

களவியல் உரை தோன்றுவதற்கு முன்பே யாப்பிலக்கண நூல்கள் தோன்றியிருந்தன. இந்த வளர்ச்சியை நக்கீரர் "தமிழ்தான் நான்கு வகைப்படும் எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என." (இறை. 1) என்று குறிப்பிட்டுள்ளார். களப்பிரர் என்னும் அந்நியரின் ஆட்சிக் காலத்தில் பொருளதிகாரத்தின் பயிற்சி குன்றியிருந்தது என்று களவியல் உரையால் நாம் அறிகிறோம். ஆயினும் தமிழ் மக்கள் கொண்டிருந்த அகப்பொருள் கூறுபாடுகளைப் பிரதிபலிக்காத செய்யுளியல் வழக்கில் இருந்திருக்கலாம். அதுவும் தனித்ததொரு நூல்போல வழங்கியிருக்கலாம். இருநூறுக்கும் மேற்பட்ட செய்யுளியல் நூற்பாக்களின் எண்ணிக்கையும் அதன் பொருளும் அதற்கு அத்தகுதியை அளித்திருக்கும் என்பது ஏற்கக் கூடியதே. களவியல் உரை ''எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம் என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டு அன்றே! பொருளதிகாரம் பெறேம் எனின் இவை பெற்றும் பெற்றிலேம்" (இறை. 1) என்பது அதனால் போலும். அதாவது பொருளதிகாரத்தின் பெரும்பகுதி பயிற்சி குன்றியிருந்த காலத்திலும் செய்யுளியல் வழக்கில் இருந்திருக்கக் கூடும். களவியல் உரையாசிரியர் யாப்பதிகாரம் என்று குறித்தது அநேகமாக அதுவாக இருக்கும். செய்யுளியல் முதல் நூற்பாவின் உரையில் "இதனை யாப்பதிகாரமென வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறு வேண்டுமென மறுக்க." (தொல். செய்யுள். 1) என்று பேராசிரியர் மறுத்துரைப்பது களவியல் உரையைக் கருதியது போலும்! எப்படி இருந்தாலும் தொல்காப்பியச் செய்யுளியல் தனிநூலாக யாப்பதிகாரம் என்றும் வழங்கியிருக்கலாம் என்பது கொள்ளத் தக்கது. செய்யுளியல் உடையார் என்னும் வழக்காறு ஏற்பட இதுவும் ஒரு காரணமாகும். எனவே செய்யுளியல் உடையார் என்னும் பொதுக் குறியீடு செய்யுளியல் மூலம், உரை ஆகிய இரண்டையும் இணைத்துக் குறிப்பிடுவதற்குப் பயன்பட்டிருக்க வேண்டும். யாப்பருங்கல விருத்தியை மூலநூலோடு ஒருசேர இணைத்து, மயிலைநாதர் "இவை

மயக்க நிரனிறை என்று யாப்பருங்கலம் உடையார் காட்டினார்." (நன். 413) எனக் குறிப்பிட்டுள்ளது இந்த நெடிய வழக்காற்றை உறுதிப்படுத்தும். இது உண்மை என்றால், செய்யுளியல் உடையார் காட்டியவை என்று யாப்பருங்கல உரையாசிரியர் எடுத்தாண்டுள்ள மேற்கோள் பாடல்கள் தொல்காப்பிய உரை ஒன்றிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டவை என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

இளம்பூரணருக்கு முந்திய தொல்காப்பிய உரைகள்

யாப்பருங்கல உரையாசிரியர் இளம்பூரணருக்கு முந்தியவர். அதனால் அவர் பயன்படுத்திய தொல்காப்பியச் செய்யுளியல் உரை இளம்பூரணருக்கு ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வழங்கியதாக இருக்க வேண்டும். அப்படி என்றால் இளம்பூரணர் உரைக்கு முன்பே தொல்காப்பியத்துக்குப் பழைய உரை இருந்ததா? அதற்குச் சான்று உண்டா? என்று கேட்கத் தோன்றும். ஆமாம், இருந்தது என்பதே அந்தக் கேள்விகளுக்கு விடை. சான்றுகளை இனி முறையாகப் பார்க்கலாம்.

இளம்பூரணர் "ஒரு சார் ஆசிரியர் உரை" (தொல். கிளவி. 18, 44, 57), "என்பாரும் உளர்." (தொல். கிளவி. 33; விளி. 16), "உரைப்பாரும் உளர்." (தொல். எச்ச. 53) என்று தமது உரையில் பிற உரைகளைச் சுட்டிச் செல்வார். இவை எல்லாம் வாய்மொழியாக வழங்கிய உரைகளே என்று சிலர் (மு. வை. அரவிந்தன், 1968. பக். 96; மு. அருணாசலம், 1981. பக். 48; இரா. இளங்குமரன், 1988. பக். 65) சாதிப்பார்கள். ஆனால் உண்மை இதற்கு நேர்மாறானது. இளம்பூரணருக்கு முன்பே தொல்காப்பியத்துக்கு எழுத்து வடிவில் ஆன உரைகள் இருந்திருக்கின்றன. இம்முடிபை மெய்ப்பிக்க மேலும் சில சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று இளம்பூரணரே வழங்குவது; மற்றவை யாப்பருங்கல உரையாசிரியர் வழங்குவன.

இளம்பூரணர் வழங்கும் சான்று

முற்றுச்சொல்லைப் பற்றிக் கூறும் "இறப்பின் நிகழ்வின்" (தொல். எச்ச. 31) என்னும் நூற்பாவின் உரையில் "முற்றுச்சொல் என்றது செய்கையும் பாலும் காலமும் செயப்படுபொருளும் தோன்றிநிற்றலின் முற்றுச்சொல் என்பாரும், மற்றோர் சொல் நோக்காது முடிந்துநிற்றலின் முற்றுச்சொல் என்பாரும், எக்கால் அவை தம் எச்சம் பெற்றுநின்றன அக்கால் பின் யாதும்

நோக்காவாய்ச் செப்பு மூயிற்றுப்போல அமைந்து மாறுதலின் முற்றுச்சொல் என்பாரும் என இப்பகுதியர் ஆசிரியர்" என்று பிற ஆசிரியர் கருத்துகளை இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துகள் பிற நூலாசிரியர்கள் கூறியன அல்ல; பிற உரையாசிரியர்கள் உரைத்தனவே ஆகும். செப்பு மூயிற்றுப்போல என்று இதன்கண் அமைந்துள்ள உவமை இதனைத் தெளிவாகப் புலப்படுத்தும். காரணம் வெளிப்படை. இலக்கண நூற்பாக்களில் பொதுவாக உவமைகள் இருப்பதில்லை. பாயிரவியல் நூற்பாக்கள் (நன். 38, 55), பொருளதிகார நூற்பாக்கள் (செய்யுள். 162, 163) ஆகியவற்றில் உவமைகள் ஒன்றிரண்டு இருந்தாலும் எழுத்ததிகார, சொல்லதிகார நூற்பாக்களில் உவமை அமைந்திருப்பது அரிது. உவமையை எடுத்துக்காட்டி விளக்குவது உரையாசிரியர்கள் கடைப்பிடிக்கும் வழக்கம். எனவே இளம்பூரணர் முற்றுச்சொல்பற்றி எடுத்துக் காட்டிய கருத்துகள் (தொல். எச்ச. 31) தொல்காப்பியத்துக்கு வழங்கிய பழைய உரைகளில் இருந்தவை; இளம்பூரணருக்கு முந்தியவை என்பது தெளிவு.

தொல்காப்பிய விருத்தி

இனி, யாப்பருங்கல விருத்தி வழங்கும் சான்றுகளை ஆராயலாம். அவற்றுள் ஒன்று செய்யுளியல் தொடர்பானது. அதுபற்றி முன்னரே விரிவாகப் பார்த்தோம். அதனால் அடுத்த சான்றுக்குப் போகலாம். செய்யுட்கண் சீர்கள் வரும் முறையை "விரவியும் அருகியும்" (யா. 15) என்னும் நூற்பா விளக்கும். அந்த நூற்பாவுக்கு "இயற்சீரும் உரிச்சீரும் விரவியும் வரும்; பொதுச்சீர் அருகியும் வரும். இயற்சீரும் உரிச்சீரும் வேறு வேறாகியும் வரும்; நிரையீறாகிய நாலசைப் பொதுச்சீர் வஞ்சியுள்ளே வரும்; வஞ்சியுரிச் சீர் வெண்பாவினுள் வரப்பெறா. நேரீற்றியற் சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவுள்ளும் வஞ்சிப்பாவின் இறுதியும் வரப்பெறா என்று இவ்வாறு கூறிற்றிலரேனும் உரையிற் கோடல் என்னும் தந்திர உத்தியானும் பிற நூல் முடிந்தது தான் உடம்படுதல் என்பதனாலும் இவ்வாறு உரைக்கப்பட்டது." (யா. வி. 15) என்று விருத்தியுரை ஆசிரியர் விரிவாக உரை கூறியுள்ளார். எந்தெந்தச் சீர் எந்தெந்தப் பாக்களில் வரும்; வராது என்று நூற்பா குறிப்பிடவில்லை. ஆயினும் விருத்தியின் ஆசிரியர் உத்திமுறைகளை எடுத்துக்காட்டி அதற்குத் தெளிவாக உரை வகுத்துள்ளார்.

தாம் மட்டும் இம்முறையில் உரை வகுக்கவில்லை; தமக்கு முன்னரும் இவ்வாறு உரை வகுக்கப்பட்டுள்ளது. அதுபோல இவ்வுரையைக் கொள்க என்று அவர் ஒரு முன்னுதாரணம் காட்டியுள்ளார். அது பின் வருமாறு அமைந்துள்ளது. "**அரையளவு குறுகல் மகரம் உடைத்தே**" எனத் தொல்காப்பியத்துள் (நூன். 13) இன்ன இடத்துக் குறுகும் என்று யாப்புறுத்துக் கூறிலரேனும் உரையிற்கோடல் என்னும் உத்தியைப் பற்றி வகரத்தின் பின் மகரம் குறுகும் என்று விருத்தியுள் விளங்கக் கூறினார். அதுபோலக் கொள்க." (யா. வி. 15) என்பது அந்த முன்னுதாரணம். இந்த மேற்கோளிலிருந்து தொல்காப்பிய எழுத்ததிகாரத்துக்கு ஒரு உரை இருந்தது என்பதும் அது ஒரு விருத்தியுரை என்பதும் தெளிவாகின்றன. 'செய்யுளியல் உடையார் காட்டிய பாட்டு' என்னும் வழக்கினால் அதற்கும் பழைய உரை இருந்திருக்கிறது. அதாவது ஓரிரு அதிகாரங்களுக்கு அல்லது நூல் முழுமைக்கும் யாப்பருங்கல விருத்திக்கு முன்பே தொல்காப்பியத்துக்கு உரை இருந்தது என்பது உண்மை. இம்முடிபை இளம்பூரணர் உரைக்கு முன்னரே தொல்காப்பியத்துக்கு ஒரு விருத்தியுரை "எழுதப்பட்டு இருந்ததோ என்று ஐயுற வேண்டி வருகிறது" என்று மு. அருணாசலம் (இளம்பூரணர், 1981. பக். 47) அரைமனத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

நினைவுக்குரிய சில முடிபுகள்

இதுவரை நாம் ஆராய்ந்த கருத்துகளை ஒரு முறை நினைவுபடுத்திக்கொள்வோம். இறையனார் அகப்பொருள் உரை தமிழில் தோன்றிய முதல் உரை அல்ல. தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர் வரைந்ததும் முதல் உரை அல்ல. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே தொல்காப்பியத்துக்கு ஒரு விருத்தியுரை வழங்கியிருக்கிறது. அதுபோலவே அணிநூல், அவிநயம் முதலிய மறைந்துபோன நூல்களுக்கும் உரைகள் இருந்திருக்கின்றன. இறையனார் அகப்பொருள் உரையின் அமைப்பு, அகநானூற்றின் பழைய உரையைப் பற்றி அந்த உரை வழங்கும் குறிப்பு, பழைய உரைகளின் உதாரணப் பாடல்களை யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் எடுத்தாளும் உரைநெறி, தொல்காப்பியத்தின் பழைய உரைகளைப் பற்றி இளம்பூரணர் உரை வழங்கும் அகச்சான்றுகள், தொல்காப்பிய விருத்தியுரையைக் குறித்து யாப்பருங்கல விருத்தி வழங்கும் சான்று முதலியவற்றால்

மேற்கண்ட முடிபுகள் உறுதிப்படுகின்றன. கி. பி. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளிலேயே சில இலக்கண உரைகள் இருந்தன என்பதை உரைகளைப் பற்றித் தொல்காப்பியம் கூறும் நூற்பாக்களோடு இயைத்து நோக்கினால் தமிழ் உரை வரலாறு இன்னும் முன்னோக்கிச் செல்லும். அது அடுத்த நிலை.

நூல் - சூத்திரம் - உரை

தொல்காப்பிய நூற்பாக்களில் நூலைப் பற்றி மூன்றும் (செய்யுள். 159; மரபு. 100, 101) சூத்திரத்தைப் பற்றி இரண்டும் (செய்யுள். 162; மரபு. 102) உரைவகைகளைப் பற்றி நான்கும் (மரபு. 103, 104, 105, 106) நமது தலைப்புக்கு நேரடித் தொடர்புடையன. சூத்திரத்துக்கு வரையறை கூறும் நூற்பாவில் **"சொல்லும் காலை உரைஅகத்து அடக்கி"** (தொல். மரபு. 102:3) என்ற தொடரும் நூலைப் பற்றிக் கூறும் நூற்பாக்களில், **"உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து"** (தொல். செய்யுள். 159), **"ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை"** (தொல். மரபு. 100), **"உரையெடுத்து அதன்முன் யாப்பினும் சூத்திரம், புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்"** (தொல். மரபு. 101) என்ற தொடர்களும் உரைபற்றிப் பேசுகின்றன. இளம்பூரணரும் பேராசிரியரும் இவற்றுக்கு வெவ்வேறு உரை கூறியுள்ளனர். நமக்கு முக்கியம் அவை அல்ல. நூலையும் சூத்திரத்தையும் பற்றிக் கூறும் நூற்பாக்களில் உரைத் தொடர்பான கருத்துகள் இணைத்துப் பேசப்பட்டுள்ளன என்பதே நமக்கு முக்கியம். இலக்கணம் எப்போதும் மூலமும் உரையும் கொண்டது என்னும் உட்பொருளை இத்தொடர்களினால் உணர்த்துவதே நூலாசிரியரின் நோக்கம். **"உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து"** என்ற தொடரை ஆழ்ந்து நோக்கினால் ஒரு செப்பமான நூல் (இலக்கணம்) உரையை உள்ளடக்கியதாக இருப்பது சிறப்பு; விரும்பத் தக்கது என்பது விளங்காமல் போகாது. **"ஒத்த சூத்திரம்"** (தொல். மரபு. 100) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் சூத்திரம், காண்டிகை, உரை என்னும் மூன்றோடு குற்றமின்மை, உத்தி ஆகிய இரண்டையும் கூட்டி நூலின் இலக்கணம் ஐந்து என்று இக்கருத்துகள் எல்லாம் திரட்டித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

காண்டிகையும் உரையும்

இனி உரையைப் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்துகளைப் பார்க்கலாம். மரபியலில்,

"பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகை ஆகும்"

"விட்டகல்வு இன்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தல் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித்து அதுவே"

"சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி அமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே"

"மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்"

என்னும் நான்கு நூற்பாக்களில் (தொல். மரபு. 103-106) உரைகளின் வகையும் இயல்பும் சொல்லப்பட்டுள்ளன. மூலநூற்பாவில் உள்ளவாறே அதன் கருத்தை மறைக்காமல் விளக்குவது காண்டிகையின் இலக்கணம். சூத்திரப் பொருளிலிருந்து பெரிதும் அகலாமல், பொருள்முடிபுக்காக ஏதுநடையாலும் எடுத்துக்காட்டாலும் நூலாசிரியன் கருதிய பொருளை விளக்குவது காண்டிகையுரையின் இயல்பு. சூத்திரத்தின் பொருளோடு அதற்கு இன்றியமையாதன எல்லாம் கூட்டிப் பொருந்தும் வகையில் உரைப்பது உரையின் இலக்கணம். வினாவும் விடையும் உடையதாகித் தன் உரையாலும் முதல்நூலாலும் ஐயப்பாட்டையும் வியப்பையும் நீக்கி, மெய்ப்பொருள் ஒன்றினைத் துணிந்து உரைப்பது உரையின் இயல்பு. மேலே எடுத்துக்காட்டிய நான்கு நூற்பாக்களின் திரண்ட கருத்துகள் இவை. இளம்பூரணரும் பேராசிரியரும் எழுதியுள்ள உரைகளில் இவற்றுக்கு முழு விளக்கத்தைக் காணலாம்.

இலக்கணம் இயம்பல்

இந்நூற்பாக்களில் உரைகளை வகைப்படுத்தி, அவற்றுக்குத் தனித்தனிக் குறியீடு தந்து இலக்கணம் கூறப்பட்டுள்ளது; அவற்றின் உள்ளுறுப்புகளைப் பாகுபாடு செய்து, கலைச்சொற்களைப் பயன்படுத்தி உரை என்னும் இலக்கியவகை தெளிவாக விளக்கப் பட்டுள்ளது. ஒரு இலக்கணப் புலவன் இவ்வாறு ஒரு கருத்தை முறையாக உருவாக்கி, அதனை முழுமையாக விரிவாக்கம் செய்வதற்குத் தரமான தரவுகள் போதிய அளவுக்கு இருக்க வேண்டும். அக்காலத்தில் நிலவிய உரைநூல்கள் இத்தரவுகளைத் தொல்காப்பியப் புலவருக்கு வழங்கின. அந்த உரைநூல்களை - அவை ஒன்றிரண்டாகக்கூட இருந்திருக்கலாம்- தொல்காப்பியர் நுணுகி நோக்கித் தரவுகளை இனங்கண்டு தொகுத்து, அவற்றைத் தமது நுண்மாண் நுழைபுலத் திறத்தால் ஆராய்ந்து வகைப்படுத்தியுள்ளார். அதனால்தான் உரையின் இலக்கணம் இவ்வளவு துல்லியமாகத் தொல்காப்பியத்தில் உருப்பெற்றுள்ளது. இலக்கண உருவாக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு **“இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்”** (நன். 141) என்பதுதானே?

தொல்காப்பியத்துக்கு முந்திய நூல்மரபு

தொல்காப்பிய நூற்பாக்களில் **“என்ப”**, **“என்மனார்”**, **“என்மனார் புலவர்”**, **“மொழிப”**, **“மொழிமனார்”**, **“மொழிமனார் புலவர்”**, **“நூல்நவில் புலவர்”**, **“தொன்மொழிப் புலவர்”**, **“நுணங்குமொழிப் புலவர்”** முதலிய சொற்களும் தொடர்களும் எங்கும் பரந்துகிடக்கின்றன. தொல்காப்பியத்துக்கு முன்னர்த் தமிழ்மொழியில் இருந்த இலக்கண நூல்களின் பரப்பையும் தமிழ்மொழியின் நூல்மரபையும் இவை புலப்படுத்தும். தொல்காப்பியம் ஒரு வழிநூல் என்பதை உறுதிப்படுத்தும். இத்தகைய சொற்களும் தொடர்களும் நூற்றுக் கணக்கில் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. அதனால் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பொருளையும் எடுத்துச் சொல்லும் நூல்கள் தொல்காப்பியத்துக்கு முன்பே தோன்றி வளர்ந்திருந்தன என்று கருதலாம். என்றாலும் அந்த முன்னைத் தமிழ் இலக்கணங்களின் பெயர்களில் எதுவும் தொல்காப்பியத்தில் குறிக்கப்படவில்லை. தொல்காப்பியருக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்ட நக்கீரரும்

(இறை. 1), நச்சினார்க்கினியரும் (தொல். சிற. பாயி.) அகத்தியம், மாபுராணம் போன்ற முந்துநூல்கள் தொடர்பாகக் கூறும் தகவல்களில் நம்பகத்தன்மை குறைவு. தொல்காப்பியத்துக்கு முன்னர்த் தமிழ்மொழியில் வழங்கிய இலக்கண நூல்களுக்குச் சான்றுகள் உள்ளன; நூல்கள் இல்லை; ஒன்றுகூடக் கிடைக்க வில்லை; மறைந்துபோயின. ஆனால் ஒரு காலத்தில் அவை இருந்தன; தமிழ்ச் சமுதாயத்தில் வழங்கின; தமிழ்ப் புலவர்கள் கைகளில் தவழ்ந்தன என்பது வெற்றுரகம் அல்ல; உண்மை.

> "முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
> புலந்தொகுத் தோனே"

என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலும்

> "ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"

என்று பன்னிருபடலப் பாயிரத்திலும் புகழப்பட்டதற்கு ஏற்பத் தொல்காப்பியர் அந்த முன்னைத் தமிழ் நூல்களைக் கற்றிருக்கிறார்; பாடம் கேட்டிருக்கிறார்; அவற்றின் ஒட்ப நுட்பங்களை உணர்ந்திருக்கிறார். அதனால்தான் அந்நூல்களின் ஆசிரியர்களை **"நூல்நவில் புலவர்"** (தொல். செய்யுள். 148), **"தொன்மொழிப் புலவர்"** (தொல். செய்யுள். 230), **"நுணங்குமொழிப் புலவர்"** (தொல். மரபு. 100) என்று அவர் போற்றியுள்ளார்; அவர்களுடைய புலமையை மதித்துள்ளார். அந்நூல்களின் கோட்பாடுகளைத் தமது நூலில் உரிய இடங்களில் அவர் எடுத்தாண்டுள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள என்ப, என்மனார், மொழிப, மொழிமனார் போன்ற சொற்கள் அந்நூல்களைக் குறிக்கும் சுவடுகள்; விளக்கும் சான்றுகள். சுவடுகள் உண்மைக்கு வழிகோலும்; சான்றுகள் உண்மையை மெய்ப்பிக்கும். தொல்காப்பியத்தை விடவும் தமிழ்மொழியின் நூல்மரபு தொன்மையானது என்பதே அந்த உண்மை.

தொல்காப்பியத்துக்கு முந்திய உரைமரபு

நூல்மரபு தொடர்பாக நாம் பார்த்த பொதுக் கருத்துசுள் உரைமரபுக்கும் பொருந்தும். தொல்காப்பியர் கண்டு கேட்டுக் கற்றுணர்ந்த முன்னைத் தமிழ் இலக்கண நூல்களில் உரையுடன்

கூடிய சிலவும் இருந்திருக்கக் கூடும். உரை பற்றிய அவருடைய சிந்தனைக்கு அந்த உரை நூல்கள் நல்ல தரவுகளை வழங்கியிருக்கும். அது மட்டும் அல்ல. அவர் காலத்துக்கு முன்பே உரையின் இயல்பு குறித்துப் புலவர்களிடையே ஒரு தெளிவான கருத்து நிலவிற்று என்று எண்ணத் தோன்றுகிறது. உரையை விளக்கிக் கூறும் **"மறுதலைக் கடாஅ மாற்றமும்"** (தொல். மரபு. 106) என்னும் நூற்பாவின் சொல்லமைதி இதனை உறுதிப்படுத்துகிறது. அந்நூற்பாவின் ஈற்றடி **"துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்"** என்று முடிகிறது. அதனால் உரை இலக்கணத்தைக் கூறும் அந்த நூற்பாவின் மூலக்கருத்து தொல்காப்பியருடையது அல்ல; அது அக்காலப் புலவர் பெருமக்கள் அல்லது தனிப்பட்ட ஒரு புலவர் வழங்கிய கருத்தாக இருக்க வேண்டும். அது யாருடையதாக இருந்தாலும் இருக்கட்டும். அந்நூற்பாவின் கருத்து தொல்காப்பியரால் உருவாக்கப்படவில்லை; அது அவருக்கு முன்பே அவருடைய முன்னோரால் உருவாக்கப்பட்டுவிட்டது. அதன் சிறப்பை உணர்ந்து, திட்பநுட்பம் செறிந்த நூற்பா யாப்பில் அதற்குத் தொல்காப்பியர் வடிவமைப்புக் கொடுத்தார். தொல்காப்பியர் நடையில் சொன்னால், அந்நூற்பா பிறன் கோட் கூறல்; தன் கோட் கூறல் அல்ல.

உரையைப் பற்றிய அக்கருத்து பண்டைக் காலத்தில் வாய்மொழியாக வழங்கிவந்ததா? அல்லது ஓலைச் சுவடியில் எழுத்துருவம் பெற்று நூலாக வழங்கிவந்ததா? என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆயினும் **"என்மனார் புலவர்"** என்னும் சொல்லாற்றலைக் கொண்டு அக்கருத்து ஒரு நூலிலிருந்து மேற்கோளாக எடுத்தாளப்பட்டது என்று சொல்லலாம். எவ்வாறு இருந்தாலும் உரை இலக்கணம், அதன் வகை, உள்ளூறுப்பு, இயல்பு, மொழிநடை பற்றிய கருத்துகள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழில் வளர்ந்து முதிர்ந்திருந்தன. இந்த வளர்ச்சியைப் புலப்படுத்தும் உரைநூல்கள் அக்காலத்தில் இருந்தன. உரை என்னும் இலக்கியவகைக்கு இலக்கணம் உருவாக அந்த நூல்களில் இருந்த தரவுகளே அடித்தளம். அந்த அடித்தளத்திலிருந்து எழுந்த இலக்கணம் இருக்கிறது; அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்த உரைநூல்கள் இல்லை; முற்றாக மறைந்துபோயின. இத்தகைய நிலைமையை

"இலக்கணம் உண்மையின் இலக்கியம் காணாம் ஆயினும் அமையும்." என்று பேராசிரியர் (தொல். செய்யுள். 183) உணர்ந்து குறிப்பிட்டுள்ளார். எனவே தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இலக்கண நூல்களும் உரைகளும் இருந்துள்ளன எனத் தெளியலாம். தொல்காப்பியர் **"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்"** (தொல். மரபு. 96) என்றாலும் அவரும் அகத்தியருக்கு மாணவரே. அவரிடம் தொல்காப்பியர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றவர் என்பது மரபுவழிச் செய்தி. பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள் முதலிய நூல்களின் சிறப்புப் பாயிரங்கள் இதனைப் பறைசாற்றுகின்றன. இன்னும் சில கருத்துகளையும் நாம் இங்கே எண்ணிப்பார்க்கலாம்.

இலக்கண உரைகளின் தோற்றம்

நமக்குக் கிடைத்துள்ள இலக்கணங்கள் எல்லாவற்றுக்கும் உரைகள் உள்ளன. மாறன் அகப்பொருள், பாப்பாவினம் போன்ற பிற்கால நூல்களுக்கும் கூட இலக்கணக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, நேமிநாதம் போன்ற சிலவற்றைத் தவிர மற்ற இலக்கணங்களுக்கு நூல் தோன்றிய காலத்தை ஒட்டியே உரைகள் எழுந்துள்ளன. இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், நன்னூல் போன்ற நூல்களுக்கும் அவற்றின் உரைகளுக்கும் இடையே உள்ள கால இடைவெளி மிகவும் குறைவு. இவ்வாறு இலக்கண நூல்களைத் தொட்டடுத்து உரைகள் தோன்றுவது ஒரு மரபாக இருந்திருக்கலாம்.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், மாறனலங்காரம் போன்ற நூல்களுக்கு நூலாசிரியர்களின் மாணவர்களே உரை வரைந்துள்ளனர்.

நம்பியகப்பொருள், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து முதலிய நூல்களுக்கு எல்லாம் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவரே.

தமிழிலக்கண வரலாறு வழங்கும் இத்தகைய தகவல்களிலிருந்து நமக்கு ஒரு நல்ல குறிப்பு கிடைக்கிறது. இந்த மரபு அதாவது,

> இலக்கண நூல்கள் அனைத்துக்கும் உரைகள் இருப்பது, நூல் தோன்றிய காலத்தை ஒட்டி உரை தோன்றுவது, நூலாசிரியரின் மாணவராக உரையாசிரியர் விளங்குவது, நூலாசிரியரே தமது நூலுக்கு உரை இயற்றுவது

என்னும் இந்த மரபு தொல்காப்பியத்துக்கு முந்தைய இலக்கண வரலாற்றின் தொடர்ச்சியாக இருக்கக் கூடும் என்பதே ஆகும். இது பொருந்தும் என்றால் தொல்காப்பியத்துக்கு முன்னர் வழங்கிய நூல்களுக்கு அக்காலத்தில் உரைகள் இருந்திருக்கும் என்று கருதுவதும் பொருந்தும்.

முடிபு

முடிவாகச் சொன்னால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே நமது உரை வரலாறு உருவாகிவிட்டது. அதன் தொடக்கம் தொல்காப்பியத்துக்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்காவது முந்தியதாக இருக்க வேண்டும்.

சங்கர நமச்சிவாயர் வரலாறு

புதுநூல்

தமிழிலக்கண வரலாற்றில் பல்கலைக் குரிசில் பவணந்தி முனிவருக்குத் தனித்ததோர் இடம் உண்டு. அவர் இயற்றிய நன்னூலே தொல்காப்பியத்துக்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் இலக்கணங்களுள் தலைசிறந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த (அ. தாமோதரன் 1999. பக். 12-13) இந்தப் புதுநூலைப் புலவருலகம் விரும்பி ஏற்றுக்கொண்டது. நன்னூலின் நடைத்தெளிவும் அளவுச்சுருக்கமும் இலக்கண மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டின. நூலின் அமைப்பும் நூற்பாக்களின் செறிவும் மனப்பாடக் கல்விமுறைக்கு ஏற்றவாறு இருந்தன. அதனால் புலவர்கள் இந்த நூலை ஆழ்ந்து கற்றனர்; தொல்காப்பியப் பேரிலக்கணத்தோடு இதனை ஒப்பிட்டு ஆராய்ந்தனர்; இலக்கண ஆர்வலர்களுக்கு இதனைக் கற்பித்தனர். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் பயன்படும் நோக்கத்தில் இந்த நூலுக்குச் சிலர் உரை சொல்லவும் எழுதவும் தொடங்கினர். மயிலைநாதர் உரையில் (1918) காணப்படும் "உரைப்பாரும் உளர்" (நூ. 60), "என்பாரும் உளர்" (நூ. 161), "சொல்லுவாரும் உளர்" (நூ. 271), "முடிப்பாரும் உளர்" (நூ. 238) என்னும் உரை வாசகங்கள் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும்.

நன்னூலின் உரைவளம்

தொல்காப்பியமும் நன்னூலும் உரைவளம் கொண்ட நூல்கள் என்றாலும் அவை இரண்டிற்கும் ஒரு வேறுபாடு உண்டு. தொல்காப்பியம் தோன்றி ஓரிரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே அதற்கு உரை காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் நன்னூலின் உரை வரலாறு முற்றிலும் மாறுபட்டது. நன்னூல் தோன்றி, நன்றாகப் பயிற்சிக்கு வரும் முன்பே அதற்கு உரை இயற்றும் முயற்சி தொடங்கிவிட்டது.

பவணந்தி முனிவரின் காலத்தை ஒட்டி வாழ்ந்த மயிலைநாதர் இந்நூலுக்கு நல்ல உரை ஒன்றை வழங்கினார். அவருக்கு முன்பே புலவர் பெருமக்கள் நன்னூலுக்கு விளக்கம் கூற முற்பட்டுவிட்டனர். என்றாலும் எழுத்து வடிவில் நன்னூலுக்குக் கிடைத்துள்ள உரைகளில் மயிலைநாதர் உரையே பழமையானது. அவருடைய உரைக்குப் பின்னர் ஆண்டிப்புலவர் என்பவர் **உரையறி நன்னூல்** என்ற பெயரில் (சோம. இளவரசு. 1963. பக். 143) பதினாறாம் நூற்றாண்டில் ஒரு உரை இயற்றியதாகத் தெரிகிறது. செய்யுள் வடிவில் அமைந்த அந்த உரை இன்று நமக்குக் கிடைக்கவில்லை. "**செம்மை சிறுமை**" (நன். 135) என்னும் நூற்பாவின் உரையாகக் கருதப்படும் ஒரே ஒரு ஆசிரிய விருத்தம் மட்டும் அவருடைய உரையை நினைவூட்டி நிற்கிறது. இதனைத் தொடர்ந்து பதினேழாம் நூற்றாண்டில் சங்கர நமச்சிவாயர் (சில இடங்களில் நமச்சிவாயர் என்றும் குறிப்பிடப்படும்.) இயற்றிய விருத்தியுரை தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு தழுவல் உரையும் ஒரு திருத்த உரையும் நன்னூலுக்கு எழுந்தன. மயிலைநாதர் உரையை எளிமைப்படுத்திக் கூழங்கைத் தம்பிரான் இயற்றிய காண்டிகையுரை முதலாவது; சங்கர நமச்சிவாயர் செய்த விருத்தியுரையைச் சிற்சில இடங்களில் கூட்டியும் குறைத்தும் சிவஞான முனிவர் திருத்திப் புதுக்கியது இரண்டாவது. இதற்குப் புத்தம் புத்துரை என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

பழைய உரைகளைச் சுருக்கி எளிமைப்படுத்திப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விசாகப் பெருமாளையர் (1834), இராமாநுசக் கவிராயர் (1847), ஆறுமுக நாவலர் (1889), சடகோப ராமாநுஜாசாரியர் (1892) முதலியோர் உருவாக்கிய காண்டிகையுரைகள் (அ. தாமோதரன், 1999. பக். 49-52) வெளிவந்தன. இதுபோலவே இருபதாம் நூற்றாண்டிலும் தேர்வு நோக்கில் நன்னூலுக்கு மிகப் பல உரைகள் வெளிவந்தன. இவ்வாறு காலந்தோறும் கணக்கற்ற உரைகள் நன்னூலுக்குத் தோன்றியிருந்தாலும் அவற்றுள் தரமான உரைகள் இரண்டு மட்டுமே. ஒன்று மயிலைநாதர் உரை; மற்றது சங்கர நமச்சிவாயர் உரை. இந்த இரண்டு உரைகளுக்குப் பின்னர் நன்னூலுக்கு எழுந்த உரைகள் அனைத்தும் இவற்றைப் பின்பற்றியும் தழுவியும் நகலெடுத்தும் எழுதப்பட்டவையே. இலக்கண ஆய்வாளர்கள் எல்லோருக்கும் இந்த உண்மை நன்றாகத் தெரியும்.

மயிலைநாதர் உரை

நமக்குக் கிடைத்துள்ள நன்னூல் உரைகளில் மயிலைநாதர் உரையே காலத்தால் முந்தியது. அதனால் இது பழைய உரை என்ற பெயராலும் அழைக்கப்பட்டது. மயிலைநாதர் நன்னூலுக்கு எழுதிய உரை இளம்பூரணர் உரையைப் போலச் சுருக்கமானது. நூற்பாவின் சொல்லமைதிக்கு ஏற்ப இவர் எழுதியுள்ள பொழிப்புரை தெளிவானது. நயவுரை, ஒப்புரை, வினாவிடைப் பகுதிகள் போன்றவை இவர் உரையில் அளவாகவே காணப்படுகின்றன. நூற்பாவின் கருத்தை விளக்குவதற்குத் தேவையான இலக்கிய உதாரணங்களை எடுத்துக்காட்டுவதில் மயிலைநாதர் வல்லவர். இதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டு "அறிவருள் ஆசை" என்னும் நூற்பாவின் (451) உரை. இந்த நூற்பாவில் கூறப்படும் உடம்பொடு கூடிய உயிர்க்குணங்கள் முப்பத்திரண்டிற்கும் மயிலைநாதர் காட்டியுள்ள இலக்கிய மேற்கோள்கள் கற்பவர் நெஞ்சில் நிலைத்துநிற்பன. தொடை நயமுள்ள தொடர்கள் நிறைந்த இவரது உரைநடை கற்பவர்க்கு விருந்து. இத்தகைய சிறப்பியல்புகளால் இந்த உரை ஏறத்தாழ முந்நூறு ஆண்டு செல்வாக்கோடு திகழ்ந்தது.

சங்கர நமச்சிவாயர் உரை

மயிலைநாதர் உரைக்குப் பின்னர்த் தோன்றிய சங்கர நமச்சிவாயர் உரை விரிவானது; விருத்தியுரைக்கு இலக்கணமாகக் கருதப்படுவது. இந்த விரிவுரை பயிற்சிக்கு வந்த பின்னர் மயிலைநாதர் உரையின் செல்வாக்கு நாளடைவில் குறையலாயிற்று. இதற்கு மாறாக நமச்சிவாயர் உரையின் பயிற்சி பெருகலாயிற்று. இந்த மாற்றத்துக்குச் சமயக் காழ்ப்பு, ஆதீன ஆதரவு போன்ற போலிக் காரணங்கள் புனைந்து கூறப்பட்டாலும் உண்மைக் காரணம் சங்கர நமச்சிவாயர் உரையின் சிறப்பியல்பே. இதற்குச் சில சான்றுகளைக் காணலாம்.

''அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா'' என்னும் நூற்பாவுக்கு "அல்வழிக்கண் ஆவும் மாவும் ஆகிய இருபெயரும் மியா என்னும் உரையசையும் முற்றுவினையும் ஆன இவ்வாகார ஈற்றின் முன் வல்லினம் இயல்பாய் முடியும்" என்பது மயிலைநாதர் (நூ. 170) வரைந்துள்ள பொழிப்புரை. இந்த நூற்பாவுக்கு "அல்வழிக்கண் ஆவும் மாவும் ஆகிய இருபெயரும் மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும் ஆகாரவீற்று

அஃறிணைப்பன்மை எதிர்மறை முற்றுவினையும் நிற்க, இவற்றின் முன் வரும் வல்லினம் மிகா" என்பது நமச்சிவாயரின் (நூ. 171) பொழிப்புரை. இவ்விரு உரையாசிரியர்களும் மியா, முற்று என்ற சொற்களை விளக்கியுள்ள முறையே இங்கு நாம் கவனிக்க வேண்டியது. மயிலைநாதர் "மியா என்னும் உரையசை" என்று விளக்குவார். "மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்" என்று சங்கர நமச்சிவாயர் விளக்குவார். இதுபோலவே "முற்று" என்பதற்கு "முற்றுவினை" என்று மயிலைநாதர் விளக்கம் தருவார். அதே சொல்லுக்கு "ஆகாரவீற்று அஃறிணைப்பன்மை எதிர்மறை முற்றுவினை" என்று நமச்சிவாயர் தெளிவாக விளக்குவார். இந்த உரைகளை ஒப்பிட்டு நோக்கினால் நமச்சிவாயர் உரையின் சிறப்பியல்பு எல்லோருக்கும் எளிதில் விளங்கும்.

சங்கர நமச்சிவாயரின் உரைச்சிறப்பை அறிய இன்னொரு சான்று "பவ்வீ நீமீ" (நன். 178) என்னும் நூற்பாவின் உரை. கருத்துரை, பொழிப்புரை, காட்டு என்று மூன்று பகுதிகளாக இந்நூற்பாவுக்கு மயிலைநாதர் (நூ. 177) உரை வகுத்துள்ளார். இம்மூன்றுடன் நீ என்னும் பொதுப்பெயரின் முன் வல்லினம் இயல்பாதல் பொதுவிதியால் அமையாதோ என்று தடை எழுப்பி, அதனால் அமையாது என்று நமச்சிவாயர் விடை கூறி விளக்குவார். அது மட்டும் அல்ல. உதாரணப் பகுதியிலும் இந்த இருஉரைகளும் வேறு வேறாக அமைந்துள்ளன. மீ என்னும் சொல்லுக்கு உதாரணங்களாக மீக்கோள், மீந்தோல் என்ற தொகைச்சொற்களை உரையாசிரியர்கள் இருவரும் எடுத்துக்காட்டியுள்ளனர். ஆயினும் இவற்றுக்குச் சொற்பொருள் விளக்கமோ இலக்கணக் குறிப்போ மயிலைநாதர் உரையில் தரப்படவில்லை. ஆனால் சங்கர நமச்சிவாயர் இச்சொற்களுக்குக் கொடுத்துள்ள விளக்கம் இலக்கண மாணவர்களுக்கு என்றென்றும் பயன்படும். "மீக்கோள் என்பது மேற்போர்வை. அது யாக்கையின்மேல் கொள்ளுதலை உடைய போர்வை எனப் பொருள் தந்து நிற்றலின் ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டு மீ என்றது இடப்பொருளோடு ஏழாம் வேற்றுமை உருபின் பொருள்பட நின்றதேனும் கண்ணாதி உருபு வேண்டாமையின் வேற்றுமைத்தொகை ஆயிற்று. மீந்தோல் என்பது மேற்றோல். அது மேலாய தோல் எனப் பொருள் தந்து நிற்றலின்

பண்புத்தொகை. இஃது இக்காலத்துப் பீந்தோல் என மரீஇயிற்று." என்பது அவருடைய விளக்கம். இவ்வாறு சங்கர நமச்சிவாயர் அந்த உதாரணங்களுக்கு வரைந்துள்ள சொற்பொருள், பொருளியைபு, இலக்கணக் குறிப்பு, சொல்லின் வழக்காறு முதலிய செய்திகளில் ஒரு முழுநிலை விளக்கத்தைக் காண முடிகிறது.

சங்கர நமச்சிவாயர் உதாரணங்களை விளக்கும் முறைக்கு மேலும் ஒரு சான்றைக் காணலாம். "திசையொடு திசையும்" (நன். 186) என்னும் நூற்பாவின் உரையில் வடகிழக்கு, வடதிசை, வடமலை என்ற உதாரணங்களை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றுக்கு "வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதோர் கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. வடதிசை என்பது வடக்காய திசை எனப் பண்புத்தொகை. வடமலை என்பது வடக்கின்கண் மலை என ஏழாம் வேற்றுமைத்தொகை." என்று இலக்கண விளக்கம் தருவது சங்கர நமச்சிவாயரின் உரைத்திறன். அதனால் நன்னூலைக் கற்றவர்கள் இரண்டு உரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, மயிலைநாதர் உரையைக் காட்டிலும் நமச்சிவாயர் உரை உயர்ந்தது என்பதை உணர்ந்துகொண்டனர். எனவே அவருடைய உரையின் செல்வாக்குக்குக் காரணம் சமயப்பற்றோ அல்லது காழ்ப்போ அல்ல. அவர் உரையின் சிறப்பியல்பே அதன் பயிற்சிக்கும் பரவலுக்கும் காரணம் என்பது தெளிவு. இத்தகைய நல்லுரை ஒன்றை நன்னூலுக்கு வழங்கிய உரையாசிரியரின் வரலாறு அறிய வேண்டிய ஒன்று.

சங்கர நமச்சிவாயர் வரலாறு

நன்னூல் விருத்தியுரையைத் தவிர நமச்சிவாயர் வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் மூன்று. ஒன்று அவர் இயற்றிய உரைப் பாயிரம். இரண்டாவது சிறப்புப் பாயிர உரையின் இறுதியில் அமைந்துள்ள மூன்று விருத்தப் பாக்கள். இவற்றை இயற்றியவரைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியவில்லை. மூன்றாவதாக உ. வே. சாமிநாதையர் (1935. பக். xxvii) முயன்று தொகுத்த செவிவழிச் செய்திகள். இவற்றை ஆதாரமாகக் கொண்டு நன்னூல் பதிப்புகளிலும் இலக்கண வரலாறுகளிலும் இவருடைய வரலாற்றைப் பலரும் எழுதியுள்ளனர்.

சங்கர நமச்சிவாயர் திருநெல்வேலியில் பிறந்தவர். அவ்வூரில் அவர் வாழ்ந்த பகுதி தடிவீரையன் கோயில்தெரு என்று நம்பப்படுகிறது. அவர் சைவ வேளாள மரபினர். அவரது இயற்பெயர் சங்கர நமச்சிவாயப் பிள்ளை. அவர் பெற்ற புலமைச் சிறப்பால் சங்கர நமச்சிவாயப் புலவர் என்று பின்னாளில் அழைக்கப்பட்டார். அவருக்கு முத்துக்குமரப் பிள்ளை என்று ஒரு மகன் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இலக்கண விளக்கத்தை இயற்றிய வைத்தியநாத தேசிகர், இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சாமிநாத தேசிகர் போன்ற பெரும் புலவர்கள் அக்காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்தனர். இளைஞராக இருந்த சங்கர நமச்சிவாயருக்கு இவர்களோடு உண்டான தொடர்பினால் தமிழார்வம் ஏற்பட்டது. இதற்கு நல்லாசியாகச் சாமிநாத தேசிகரின் அருட்பார்வை அவருக்குக் கிடைத்தது. அதனால் அவரையே தமது ஆசானாக நமச்சிவாயர் வரித்துக்கொண்டார். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் தொல்காப்பிய உரைகளையும் அவரிடம் முறையாகப் பாடம் கேட்டுப் புலமை பெற்றார். தேசிகர் நன்னூலை மதித்துப் போற்றியவர். அதனால் அவரிடம் நன்னூல் பாடம்கேட்பது அவருடைய மாணவர்களுக்கு அரியதொரு வாய்ப்பாக இருந்திருக்கக் கூடும். அந்த நல்வாய்ப்பை நமச்சிவாயர் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு நன்னூலை நன்கு ஆராய்ந்து நோக்கும் திறனைப் பெற்றிருப்பார் என்று கருதுவது தவறு ஆகாது. அன்றியும் தாம் இயற்றிய இலக்கணக் கொத்தை மூலமும் உரையுமாகத் தேசிகர் செய்தார். அதனால் உரைமரபுகளையும் உத்திகளையும் அவரிடம் கற்றுத் தெளியும் சாத்தியக்கூறு சங்கர நமச்சிவாயருக்கு இயல்பாக அமைந்துவிட்டது.

காலச்சூழல்

பதினேழாம் நூற்றாண்டில் இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து என்று ஒன்றன் பின் ஒன்றாக மூன்று இலக்கண நூல்கள் மூலமும் உரையுமாகத் தோன்றி இலக்கணக் கல்வியை ஊக்குவித்தன. இந்த நூல்களுக்கு முன்னர்த் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குக் கல்லாடர், தெய்வச்சிலையார், பழையவுரைகாரர் ஆகியோரும் மாறனலங்காரத்துக்கு அதன் உரையாசிரியராகிய காரிரத்தின கவிராயரும் பதினாறாம் நூற்றாண்டில் இலக்கண உரைமரபுக்கு

உரமூட்டி வளர்த்திருந்தனர். இவ்வாறு நூல்மரபிலும் உரை மரபிலும் நிகழ்ந்திருந்த வளர்ச்சியின் தாக்கம் சங்கர நமச்சிவாயர் உள்ளத்தில் பதிந்திருக்கும். அதனால் இலக்கணத் துறையில் அவரது நாட்டம் சென்றதில் வியப்பு இல்லை. எனவே அத்துறையில் ஈடுபட்டுப் பயனுள்ள பணி ஒன்றைச் செய்யும் ஆர்வம் அவருக்கு அரும்பியிருக்கும்.

ஊக்கமும் உதவியும்

> "முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்
> நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும்
> இணையோ" (இல. கொ. 8 உரை)

என்னும் துணிபுடைய ஆசிரியரிடம் இயற்றமிழைக் கற்ற காலத்தில் நன்னூலைப் பற்றியும் அதன் பழையவுரையைப் பற்றியும் ஆசிரியர் கூறிய அரிய கருத்துரைகளால் நன்னூலின்மீது நமச்சிவாயருக்கு ஈடுபாடு வளர்ந்திருக்கலாம். அதனால் மயிலைநாதர் உரையைக் காட்டிலும் விரிவான உரையை நன்னூலுக்குத் தம்மால் எழுத முடியும் என்ற வேட்கை தோன்றி அதைச் செயற்படுத்தலானார். அதற்குச் சாமிநாத தேசிகரின் வழிகாட்டல் அவருக்குக் கிடைத்திருக்கும். நன்னூலுக்கு உரை இயற்றும் பணியில் அவர் ஈடுபட்டிருப்பதைப் புலவர்களின் வழியாக அறிந்த ஊற்றுமலை ஜமீன் மருதப்பத் தேவர்,

> "நன்னூற்கு உரைநீ நவையறச் செய்து
> பன்னூற் புலவர்முன் பகர்தி"

என்று (பாயிர உரை) அவரைக் கேட்டுக்கொண்டார். அதோடு நன்னூலுக்கு உரை இயற்றி அரங்கேற்றும் வரையில் நாள்தோறும் ஒரு படி பாலும் திங்கள்தோறும் நாலு கோட்டை நெல்லும் ஜமீன்தார் அரண்மனையிலிருந்து அவருக்கு வழங்கப்பட்டதாகச் செவிவழிச் செய்தி ஒன்று (உ. வே. சாமிநாதையர், 1935. பக். xxix) தெரிவிக்கிறதாம்.

இவ்வாறு நூல்மரபும் உரைமரபும் தழைத்து வளர்ந்த காலச்சூழலும் வைத்தியநாத தேசிகர் போன்ற புலவர்களின் தொடர்பும் நல்லாசிரியரின் வழிகாட்டலும் கொடையுள்ளம் கொண்ட புரவலரின் அரவணைப்பும் நமச்சிவாயருக்கு ஒருங்கே அமைந்தன. அன்றியும் சொல்லமைதியும் பொருளாழமும் உடைய நன்னூல் மூலபாடம் இருந்தது; அதன் கருத்தை எளிதாகப்

புரிந்துகொள்வதற்குப் பழைய உரை ஒன்றும் இருந்தது. அனைத்துக்கும் மேலாக ஒரு இலக்கண நூலுக்கு அகலவுரை எழுதும் அறிவுத்திறனும் ஆள்வினையும் நமச்சிவாயருக்கு இருந்தன. அதனால் அவர் எண்ணம் எண்ணியாங்கு ஈடேறியது; அவருடைய நன்முயற்சி முழுப்பயனை நல்கிற்று; நன்னூல் விளக்கம் பெற்றது; இலக்கணம் கற்போருக்கு ஒரு விருத்தியுரை கிடைத்தது; உரை வரலாறு தொடர்ந்தது.

உரைப் பாயிரம் வழங்கும் தகவல்கள்

சங்கர நமச்சிவாயர் இயற்றிய உரைப் பாயிரமும் சிறப்புப் பாயிர உரையின் இறுதியில் உள்ள விருத்தப் பாக்களும் அவருடைய வரலாற்றை அறிய உதவுவன என்பது முன்பே சுட்டப்பட்டது. அவை வழங்கும் செய்திகளைக் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம். **"அடக்கம் அமரருள் உய்க்கும்", "பணியுமாம் என்றும் பெருமை"** என்னும் குறட்பாக்களை (121, 978) அறிந்தவர் நமச்சிவாயர். அதனால் தமது பணிவை அவர்,

> "மலர்தலை உலகிற் பலநூல் ஆய்ந்து
> செய்வதும் தவிர்வதும் பெறுவதும் உறுவதும்
> உய்வதும் அறியேன்"

என்று முதலில் தெரிவித்துக்கொள்கிறார்.

> "தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
> தான்தற் புகழ்தல் தகுதி அன்றே"

என்னும் நூற்பாவுக்கு (நன். 52) உரை வரைந்த உரையாசிரியர் ஆதலின்,

> "நன்னா வலர்முக நகைநா ணாமே
> என்னால் இயன்றவை இயற்றுமிந் நூலுள்"

என்னும் அடிகளால் தம்முடைய புலமைப் பணிவை அவர் புலப்படுத்துகிறார். தற்புகழ்ச்சியும் புலமைச் செருக்கும் இல்லாமல் **"என்னால் இயன்றவை இயற்றும்"** என்று கூறும் தன்னடக்கப் பண்பு அவருடைய புலமைக்குப் பொலிவு சேர்க்கிறது. தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தமக்குக் கசடறக் கற்பித்த ஆசிரியரை,

> "நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறும்
> தன்னடித் தாமரை தந்தெனை ஆண்ட
> கருணையங் கடலையென் கண்ணைவிட்டு அகலாச்

சுவாமி நாத குரவனை அனுதினம்
மனமொழி மெய்களிற் றொழுது”

என்று நெஞ்சார நினைவுகூர்ந்து தம்முடைய குருபக்தியை அவர் தெளிவுபடுத்துகிறார். மாணவரிடம் ஆசிரியர் காட்டும் அன்புக்கும் ஆசிரியரிடம் மாணவர் கொண்ட மதிப்புக்கும் இந்த வரிகள் கல்வெட்டுச் சான்றுகளாக என்றும் நிலைத்து நிற்கும். இறுதியாக, இந்த உரைப் பாயிரத்தில் அவர் இன்னொரு தகவலையும் தெளிவாகக் குறித்துள்ளார்.

“பொன்மலை எனஇப் புவிபுகழ் பெருமை
மன்னிய ஊற்று மலைமரு தப்பன்
முத்தமிழ்ப் புலமையு முறையரசு உரிமையும்
இத்தலத்து எய்திய இறைமகன் ஆதலின்
நன்னூற்கு உரைநீ நவையறச் செய்து
பன்னூற் புலவர்முன் பகர்தியென்று இயம்பலின்”

என்ற இப்பகுதியில் ஊற்றுமலை மருதப்பனின் வேண்டுகோளுக்கு இணங்கி நன்னூலுக்குத் தாம் உரை இயற்றியதாகச் சங்கர நமச்சிவாயர் தமிழுலகுக்குத் தெளிவாக அறிவித்துள்ளார். உரைச் சிறப்புப் பாயிரமாக அமைந்துள்ள விருத்தப் பாக்களும் இத்தகவலை உறுதி செய்கின்றன. முதற்பாவில்,

“நன்னூலுட் கருத்துலகோர் அறியவுரை
செய்கவென நரேந்திர சிங்கம்
தென்னூற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான்”

என்றும் மூன்றாவது செய்யுளில்,

“நன்னூற்கு விரித்துரைசெய் தான்திகந்
தத்தளவு நடத்தும் கீர்த்தித்
தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமச்சி வாயன் தானே”

என்றும் இத்தகவல் சுட்டப்படுகிறது. எனவே நன்னூலுக்கு உரை இயற்றுமாறு ஊற்றுமலை மருதப்பன் சங்கர நமச்சிவாயரை வேண்டிக்கொண்டான். அதனால் அவர் இந்த விருத்தியுரையை இயற்றினார் என்பது தெளிவாகிறது.

மேலும், திருக்குறள் போன்ற ஞானநூல்களுக்கும் உரை இயற்ற வல்ல நமச்சிவாயர் நன்னூலுக்கு உரை வகுத்தது வியப்புக்கு உரியது அல்ல என்றும் அகத்தியம், தொல்காப்பியம்

முதலிய முன்னூல்களை ஆராய்ந்த செந்தமிழ்ப் புலவன், நெல்லைப் பதியினான், சைவ சிகாமணி, சங்கர நமச்சிவாயன் என்னும் இயற்பெயர் பெற்றவன் என்றும் நம் உரையாசிரியரை இந்த விருத்தப் பாக்கள் புகழ்ந்து பேசுகின்றன. இந்த இடத்தில் வேறு சில செய்திகளையும் குறிப்பிட வேண்டும்.

கற்பிதத் தகவல்கள்

வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கத்தின் செல்வாக்கைக் குறைத்துத் தாழ்வுபடுத்தும் நோக்கத்தில் நன்னூலுக்குப் புதிய உரை எழுதுமாறு திருவாவடுதுறை ஆதீனத்தார் சங்கர நமச்சிவாயரைத் தூண்டினர் என்று சி. வை. தாமோதரம் பிள்ளை (இலக்கண விளக்கம், 1889. பதிப்புரை பக். 7) கூறியுள்ளார். சாமிநாதையர் மற்றொரு செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். மயிலைநாதர் உரை நன்னூலுக்கு ஏற்றது அல்ல என்ற கருத்தினை உடைய சாமிநாத தேசிகர் "நன்னூலுக்குச் சிறந்ததோர் உரை நீர் செய்திடுக" என்று தம் மாணவரைப் பணித்தார் என்று உ. வே. சாமிநாதையர் (1935. பக். xxviii) எழுதியுள்ளார். பழம்பெரும் பதிப்பாசிரியர்களாகிய இவர்கள் இருவரும் இந்தத் தகவல்களுக்கு எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. செவிவழிச் செய்தி என்றுகூட அவர்கள் குறிப்பிடவில்லை என்பது சுட்டத் தக்கது. சங்கர நமச்சிவாயர் எழுதிய உரைப் பாயிரத்திலோ உரைச் சிறப்புப் பாயிர விருத்தப் பாக்களிலோ இச்செய்திகளுக்கு ஆதாரம் எதுவும் காணப்படவில்லை என்பதே உண்மை. இவற்றோடு தொடர்புள்ள இன்னொரு கருத்து பின்னர் விரிவாக ஆராயப்படும்.

நமச்சிவாயரின் பண்புகள்

தொகுத்துச் சொன்னால் தமிழ் இலக்கிய இலக்கணங்களைச் சாமிநாத தேசிகரிடம் கற்றுத் துறைபோகிய சங்கர நமச்சிவாயர் புலமைப் பணிவும் குருபக்தியும் நன்றியுணர்வும் கொண்ட உரையாசிரியர். "**பன்னூற் செந்தமிழ்ப் புலவன்**" என்ற தொடரால் அவருடைய கல்விச் சிறப்பும் ''**எந்நூற்கும் தமிழ்க்கடலுள் இனிஇயற்றும் நூற்கும் வகைஇதனால் காட்டி**'' என்ற தொடரால் அவருடைய உரைத்திறனும் சமகாலப் புலவர்களால் மதித்துப் போற்றப்பட்டன என்பது புலப்படும்.

நமச்சிவாயர் உரை - சாமிநாதையர் கருத்து

சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு உரை இயற்றிய வரலாற்றை உ. வே. சாமிநாதையர் வேறு ஒரு வகையாக விவரித்துள்ளார். நமச்சிவாயர் உரையின் முதற் பதிப்பில் உரையாசிரியர் வரலாறு என்ற தலைப்பில் "நன்னூற் சூத்திரங்களில் விருப்பும் மயிலைநாதர் உரை அந்நூலுக்கு ஏற்ற உரை அன்று என்பதுபற்றி அதன்பால் வெறுப்பும் உள்ள தம் ஆசிரியர் சாமிநாத தேசிகர், "நன்னூலுக்குச் சிறந்ததோர் உரை நீர் செய்திடுக" என்று பணித்தமையானும் கல்வி கேள்விகளில் சிறப்புற்று, "முத்தமிழ்ப் புலமையும் முறையரசு உரிமையும் இத்தலத் தெய்திய இறைமகன்" என்று பாராட்டப்படும் ஊற்றுமலை மருதப்பத் தேவருடைய வேண்டுகோளாலும் இந்நூலுக்கு மிக அழகிதாகிய ஓர் உரையை இவர் இயற்றுவாராயினார். சாமிநாத தேசிகருக்கு அக்கருத்துக்கள் உண்மை, 'சேற்று நிலத்திற் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவும் சேறானாற்போல நன்னூற் சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குற்றப்பட்டது என்க;

> "முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்
> நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும்
> இணையோ என்னும் துணிவே மன்னுக"
> முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினும்

என்றலும் ஒன்று (இல. கொ. சூ. 8 உரை). 'அவனருளால்' (பக். 2) என்பவற்றாலும் மருதப்பத் தேவர் விரும்பினமை, 'நன்னூலுட் கருத்துலகோ ரறியவுரை செய்கவென" (பக். 4) என்பது முதலிய மூன்று அருமைச் செய்யுட்களாலும் விளங்கும்" என்று உ. வே. சாமிநாதையர் (1925. பக். 20) குறிப்பிட்டுள்ளார்.

உ. வே. சா. கருத்துகளின் வன்மை மென்மைகள்

இந்தப் பகுதியில் உ. வே. சாமிநாதையர் குறித்துள்ள செய்திகளை முதலில் வரிசைப்படுத்திக்கொள்ளலாம்.

1. சாமிநாத தேசிகர் நன்னூலை நன்கு மதிப்பவர். இதற்குச் சான்று "முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்" என்னும் இலக்கணக் கொத்து உரை மேற்கோள்.
2. மயிலைநாதர் உரை நன்னூலுக்கு ஏற்ற உரை அல்ல. இதற்குச் சான்று "சேற்று நிலத்திற் கவிழ்ந்த பால்

தேன் நெய் முதலியன" என்று தொடங்கும் இலக்கணக் கொத்தின் உரைப்பகுதி.

3. மயிலைநாதர் உரையின்மேல் சாமிநாத தேசிகர் வெறுப்புக்கொண்டிருந்தார். இதற்குச் சான்று "சேற்று நிலத்திற் கவிழ்ந்த" என்று மேலே எடுத்துக்காட்டிய உரைப்பகுதியின் கடுநடை.

4, நன்னூலுக்கு உரை இயற்றுமாறு சாமிநாத தேசிகர் சங்கர நமச்சிவாயப் புலவருக்குக் கட்டளையிட்டார். சாமிநாதையர் காட்டியுள்ள மேற்கோள் பகுதியில் இச்செய்திக்குச் சான்று இல்லை. எனவே இது அவரே கற்பித்துக்கொண்ட ஊகம் என்று சொல்லலாம்.

5. ஊற்றுமலை மருதப்பத் தேவரின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு உரை இயற்றினார். இதற்குச் சான்று "நன்னூலுட் கருத்துலகோர் அறியவுரை செய்கவென" என்னும் செய்யுள்பகுதி.

இனி, இந்தச் செய்திகளின் வன்மை மென்மைகளைச் சற்று விரிவாகக் காணலாம்.

சாமிநாதையர் கொண்டிருந்த ஐந்து கருத்துகளில் சாமிநாத தேசிகர் நன்னூலை மதித்துப் போற்றியவர் என்ற முதலாவது கருத்தும் ஊற்றுமலை மருதப்பத் தேவரின் வேண்டுகோளுக்கு இணங்கி நமச்சிவாயர் நன்னூலுக்கு உரை இயற்றினார் என்ற ஐந்தாவது கருத்தும் முற்றிலும் உண்மை. நன்னூலுக்கு உரை இயற்றுமாறு சாமிநாத தேசிகர் நமச்சிவாயரைப் பணித்தார் என்ற நான்காவது கருத்து ஆதாரமற்ற ஊகம். தமது மாணவர் மேற்கொண்ட பணி இனிது நிறைவேற ஆசிரியர் தேசிகர் நமச்சிவாயருக்கு ஆசியுரை வழங்கியிருக்கலாம்; இடையிடையே ஊக்கமொழி கூறியிருக்கக் கூடும் என்று ஊகிக்கலாம். இவை நடக்கக் கூடியன; நம்பக் கூடியன. ஆனால் ஒரு இலக்கண நூலுக்கு விருத்தியுரை வகுக்கும் பெரும்பணியைச் செய்யுமாறு– அதுவும் வழக்கில் இருந்த மயிலைநாதர் உரையினும் சிறந்ததோர் உரையைச் செய்யுமாறு – கட்டளை இட்டிருப்பார் என்பது நம்பக் கூடியதாக இல்லை. இனி, எஞ்சியுள்ள கருத்துகளையும் பார்க்கலாம்.

மயிலைநாதர் உரை நன்னூலுக்கு ஏற்றது அல்ல என்னும் இரண்டாவது கருத்துக்கும் சாமிநாத தேசிகர் மயிலைநாதர் உரையின்மேல் வெறுப்புக்கொண்டிருந்தார் என்னும் மூன்றாவது கருத்துக்கும் சாமிநாதையர் சான்றாகக் காட்டியுள்ள உரைப்பகுதி ஒன்றே. கடுமையான நடையில் இந்த மறுப்புரையை எழுதியவர் சாமிநாத தேசிகர். இந்தச் சான்று சரியானதுதான். ஆனால் இந்த மறுப்புரை மயிலைநாதர் உரையைக் குறித்து எழுதப்பட்டதா என்பது ஐயத்துக்கு உரியது; ஆராய்தற்கு உரியது. சாமிநாதையர் கொண்ட முடிபை ஆழமாக ஆராய்ந்து நோக்காமல் கோபாலையர் (1971. பக். 97) முதலிய பலரும் அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஒருவர் கூறும் கருத்தை ஆராய்ந்து மதிப்பிடாமல் அவருடைய ஆளுமைக்கு அளவு கடந்த மதிப்புக் கொடுப்பதால் நிகழ்ந்துவிடும் தவறு இது. இத்தகைய போக்கு ஆராய்ச்சிக்கு வளம் சேர்க்காது; ஆய்வாளர்களுக்கும் பெருமை அளிக்காது.

சாமிநாத தேசிகரின் மறுப்புரை

சாமிநாதையர் எடுத்துக்காட்டிய மறுப்புரை உண்மையில் எந்த உரையைக் குறித்து அதாவது யார் எழுதிய உரையைக் குறித்து எழுதப்பட்டது என்பதை நாம் முதலில் முடிவுசெய்ய வேண்டும். இதனை முடிவுசெய்வதற்கு மறுப்புரைப் பகுதியை முழுமையாகப் பார்க்க வேண்டும். இலக்கணக் கொத்தில் (நூ. 8 உரை) உபலக்கணம் என்ற கருத்தை விளக்க வந்த சாமிநாத தேசிகர் இந்த மறுப்புரையைக் கீழ்வருமாறு எழுதியுள்ளார். "உபலக்கணமாவது அஇ உம்முதல் தனிவரின் சுட்டே (நன். 66) என்புழி முதல் கூடி வரின் சுட்டே என்றும் பொருள் கொள்ளுதல். இவ்விலக்கணம் நோக்காது தனித்து நிற்பின் சுட்டோ கூடி நிற்பின் சுட்டு அன்றோ என்று கருதி நன்னூலார்க்குப் பின்னூலார் இச்சூத்திரத்திற்கு அளவிறந்த குற்றம் கூறினர்." இது அந்த மறுப்புரையின் முற்பகுதி. இதன் பிற்பகுதியில் "முதல் வரின் சுட்டே, தனிவரின் சுட்டே எனப் பொருள்கோள் இலக்கணமும் நோக்கிலர். அதுபற்றித் தமக்கு என ஒன்று இலரும் அதுவே. உரைப்பார் உரைப்பவைக்கு எல்லாம் யாம் என் செய்வோம் என்க. சேற்றுநிலத்தில் கவிழ்ந்த பால், தேன், நெய் முதலியனவும் சேறானாற்போல நன்னூல் சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குற்றப்பட்டது என்க.

முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்
நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்
இணையோ என்னும் துணிவே மன்னுக"

என்று தமது மறுப்பை மிக அழுத்தமாகத் தேசிகர் பதிவு செய்துள்ளார்.

தேசிகர் மறுப்புரையின் இலக்கு

சாமிநாதையர் தமது முடிபுக்கு ஏற்ப அந்த மறுப்புரையின் பிற்பகுதியை மட்டுமே எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால் அவர் கருத்துக்கு மாறான, ஆராய்தற்கு உரிய தொடர்கள் முற்பகுதியில் உள்ளன. அவற்றுள், ''நன்னூலார்க்குப் பின்னூலார் இச்சூத்திரத்திற்கு (நன். 66) அளவிறந்த குற்றம் கூறினர்." என்னும் முதலாவது தொடர் பொருள் நிறைந்தது. இந்தத் தொடரில் 'பின்னூலார்' என்பது ஒரு நூலாசிரியரைக் குறிக்கிறது. இது ஒரு உரையாசிரியரைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது; கூடாது. 'இச்சூத்திரத்திற்கு' என்ற தொடர் குற்றத்துக்கு இலக்கானது ஒரு சூத்திரம் என்பதைத் தெளிவாகச் சுட்டுகிறது. இதற்கு மாறாகக் குற்றத்துக்கு உள்ளானது ஒரு உரை என்று கொள்வது ஒரு சிறிதும் ஒவ்வாது. 'அளவிறந்த குற்றம்' என்பது ஒன்றுக்கு மேற்பட்ட காரணம் காட்டி அப்பகுதிக்குக் குற்றம் கூறுதல் என்று பொருள்படும். மயிலைநாதர் நூலாசிரியர் அல்லர். ''**அஇ உம்முதல் தனிவரின் சுட்டே**'' என்னும் நூற்பாவின் உரையில் அச்சூத்திரத்துக்கு அவர் எந்தக் குற்றமும் கூறவில்லை. இதனை உறுதிப்படுத்திக்கொள்ள அந்நூற்பாவுக்கு மயிலைநாதர் வரைந்துள்ள உரையைப் பார்க்கலாம்.

"**அஇ உம்முதல்**" என்று தொடங்கும் அந்த நூற்பாவுக்கு "அவ்வுயிர்க்கே இன்னும் ஒரு வகையாற் பெயரிடுதல் நுதலிற்று." என்னும் கருத்துரையும் "அஇஉ என்னும் இம்மூன்றும் மொழி முதற்கண்ணே தனித்து நிற்பின் சுட்டு என்னும் குறியவாம்" என்ற பொழிப்புரையும் அவற்றை அடுத்து, "அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் எனக் கண்டுகொள்க." என்ற உதாரணப் பகுதியும் மயிலைநாதர் உரையில் (நூ. 65) காணப்படுகின்றன. இவை தவிர மறுப்புரை, தடைவிடை போன்ற வேறு எதுவும் இச்சூத்திரத்துக்கு அவர் எழுதவில்லை.

தேசிகர் குறிப்பிடும் அளவிறந்த குற்றம் அவர் உரையில் இல்லை. எனவே சாமிநாத தேசிகர் எழுதியுள்ள மறுப்புரை மயிலைநாதரைக் கருதியது ஆகாது. இது தெள்ளத் தெளிவு. அப்படி என்றால் யாரைக் கருத்தில் கொண்டு தேசிகர் இந்த மறுப்புரையை எழுதியிருப்பார் என்பது நமது அடுத்த கேள்வி.

இலக்கண விளக்கத்தைப் பதிப்பித்த தி. வே. கோபாலையருக்கும் (1971) இந்தக் கேள்வி தோன்றியிருக்கிறது. இலக்கண விளக்கம் ஆறாவது நூற்பாவின் விளக்கப்பகுதியில் "மயிலைநாதர் அ, இ, உ என்னும் இம்மூன்றும் மொழி முதற்கண்ணே தனித்து நிற்பின் சுட்டு என்னும் குறியவாம் என்று கூறிப் புறச்சுட்டிற்கே எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார். அதனைக் கண்டு, இந்நூற்பாக் கருத்தினை அவர் உள்ளவாறு உணராமையை உட்கொண்டு, இலக்கணக் கொத்து நூலார் குறிப்பிடும் செய்திகள் பின்வருமாறு" என்று அவர் சுட்டிக்காட்டி மேலே எடுத்துக்காட்டிய இலக்கணக் கொத்தின் எட்டாம் சூத்திர உரையின் ஒரு பகுதியைக் கொடுத்துள்ளார். அவர் இந்த முடிபுக்கு வர அடிப்படைக் காரணம் நமச்சிவாயர் வரலாற்றில் சாமிநாதையர் (1925. பக். 20) எழுதியிருந்த கருத்தின் தாக்கம் எனலாம். ஆனால் கோபாலையர் தமது நிலைப்பாட்டைப் பின்னர் மாற்றிக்கொண்டார் என்று தோன்றுகிறது. இலக்கண விளக்கப் பதிப்புக்குப் பிறகு இலக்கணக் கொத்தைப் பதிப்பித்த போது (1973) அவர் இந்த முடிபைக் கொண்டிருக்கவில்லை. கொண்டிருந்தால் சாமிநாத தேசிகர் உபலக்கணத்தை விளக்கும் உரைப்பகுதியில் (இல. கொ. நூ. 8) வரைந்துள்ள மறுப்புரை மயிலைநாதர் உரையைக் கருதியது என்று அவர் மீண்டும் குறிப்பிட்டிருப்பார். ஆனால் அப்பகுதிக்கு எழுதிய விளக்க உரையில் (இல. கொ. 1973. பக். 109) அவர் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. அதனால் தேசிகரின் மறுப்புரை யாரைக் கருதியது என்ற கேள்வி விடை காணாமலே நிலைத்துவிட்டது.

நன்னூலார்க்குப் பின்னூலார்

இந்தக் கேள்விக்கு விடை காணத் தேசிகர் மறுப்புரையில் உள்ள **"நன்னூலார்க்குப் பின்னூலார்"** என்ற தொடரே உதவ முடியும். நன்னூலுக்குப் பிறகு தோன்றிய இலக்கண நூல்களில்

இலக்கண விளக்கமே மதிக்கப்படுவது. இந்த நூலை இயற்றியவர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர். அவரே தமது நூலுக்கு உரையும் வரைந்துள்ளார். உயிரெழுத்துக்களின் பெயர் வேறுபாடுகளைக் கூறும் நூற்பாவின் உரையில் "மொழி முதற்கண் தனித்து வரின் என்றாரும் உளராலோ எனின் "சுட்டு வகரம்" (நன். 235) எனவும் **"சுட்டின்முன் ஆய்தம்"** (நன். 251) எனவும் உறுப்பாய் வருவனவற்றையும் சுட்டு என்று அவர்தாமே ஆளுதலானும் ஆசிரியர் தொல்காப்பியனாரும் **"அஇ உஅம் மூன்றும் சுட்டு"** (தொல். நூன். 31) எனப் பொதுப்படக் கூறிச் **"சுட்டு முதல் உகரம்"** (தொல். உருபு. 4) எனவும் **"சுட்டுமுதல் ஆகிய ஐயென் இறுதி"** (தொல். உருபு. 5) எனவும் பிறாண்டும் உறுப்பாய் வருவனவற்றையும் **"சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்"** (தொல். உயிர். 3) எனவும் **"சுட்டின் இயற்கை"** (தொல். உயிர். 36) எனவும் பிறாண்டும் சார்ந்து வருவனவற்றையும் சுட்டு என்று ஆளுதலானும் அவர்க்கு அது கருத்து அன்று என்க." என்று வைத்தியநாத தேசிகர் (இல. விள. 6) ஒரு நீண்ட மறுப்புரை வரைந்துள்ளார்.

இம்மறுப்புரையில் வைத்தியநாத தேசிகர் நன்னூல் நூற்பாக்கள் இரண்டை (நன். 235, 251) எடுத்துக்காட்டி உறுப்பாய் வருவனவற்றையும் சுட்டு என்று அவர்தாமே **ஆளுதலானும்** என்று சுட்டுவதால் நாம் அறிய வேண்டிய செய்திகள் மூன்று. மறுப்புரை வரைந்தவர் வைத்தியநாத தேசிகர்; மறுக்கப்பட்டது **"அஇ உம்முதல் தனிவரின் சுட்டே"** என்னும் நன்னூல் சூத்திரம்; மறுக்கப்பட்டவர் அச்சூத்திரத்தை இயற்றிய பவணந்தி முனிவர். நன்னூலார் அகச்சுட்டைப் பிற இடங்களில் (நூ. 235, 251) ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தாலும் தொல்காப்பியர் உருபியலிலும் (நூ. 4, 5) உயிர்மயங்கியலிலும் (நூ. 3, 36) அகச்சுட்டு, புறச்சுட்டு என்னும் இரண்டையும் ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தாலும் **"முதல் தனிவரின் சுட்டே"** (நன். 66) என்று பவணந்தி முனிவர் சூத்திரம் செய்தது பொருந்தாது என்பது வைத்தியநாத தேசிகரின் கருதுகோள். அதனால் தமது நூலில் **"அஇ உஇவை மொழிமுதல் வரின்சுட்டு"** (இல. விள. 6) என்று தனி என்னும் சொல் இல்லாமல் அவர் நூற்பாவை மாற்றி அமைத்துக்கொண்டார்.

எனவே நன்னூல் சூத்திரத்துக்கு அளவிறந்த குற்றம் கூறியவரும் நன்னூலார்க்குப் பின்னூலாரும் வைத்தியநாத தேசிகரே ஆவார். **'பின்னூலார்'** என்ற சொல்லாட்சி இப்பொருளில் இலக்கணக் கொத்தில் இன்னொரு இடத்திலும் (நூ. 9 உரை) பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேசிகரின் இலக்கு இலக்கண விளக்கம்

"அஇ உம்முதல் தனிவரின் சுட்டே" என்னும் நன்னூல் சூத்திரம் முதல்கூடி வரின் சுட்டு, தனித்து வரின் சுட்டு என்று கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளவும் **"முதல் தனிவரின் சுட்டே"** என்ற தொடர் முதல் வரின் சுட்டே, தனி வரின் சுட்டே என்று பொருள்கோள் இலக்கணத்தால் பொருள்கொள்ளவும் இடம்தரும். இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்காமல் **"மொழி முதற்கண் தனித்து வரின் சுட்டு"** என்று தமது மறுப்புரையில் உரை செய்த வைத்தியநாத தேசிகரையே இலக்கணக் கொத்தின் ஆசிரியர் கடுமையாகச் சாடுகிறார். சேற்றுநிலத்தில் கவிழ்ந்த பால், தேன், நெய் முதலியனவும் சேறு ஆனாற்போல என்ற உவமையை அவர் அறிந்தே பயன்படுத்துகிறார். இதற்கு முத்தாய்ப்பாக அமைவதே,

> **"முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்**
> **நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும்**
> **இணையோ"**

என்று சாமிநாத தேசிகர் இயற்றியுள்ள உரைச் சூத்திரம். அகச்சுட்டையும் புறச்சுட்டையும் உள்ளடக்கும் வகையில் **"முதல் தனிவரின் சுட்டே"** என்னும் நன்னூல் நூற்பாவின் சொல்லமைதி இருப்பதால் **"முதல் வரின் சுட்டு"** (இல. விள. 6) என்று வைத்தியநாத தேசிகர் நூற்பாவை மாற்றிக்கொள்ளத் தேவை இல்லை. அவ்வாறு அவர் மாற்றி அமைத்தாலும் நன்னூல் நூற்பாவை விட இலக்கண விளக்க நூற்பா எவ்வகையிலும் மேம்பட்டது ஆகாது என்பது இந்த உரை நூற்பாவின் உட்கோள். இவற்றை எல்லாம் ஒருசேர நோக்கினால் சாமிநாத தேசிகரின் மறுப்புரை இலக்கண விளக்கத்தைக் கருதி எழுதப்பட்டது என்பது உறுதி; உண்மை. இதற்கு மாறாக இந்த மறுப்புரை மயிலைநாதரைக் குறிப்பதாகச்

சாமிநாதையரும் பிறரும் எண்ணியதும் எழுதியதும் உண்மைக்குப் புறம்பானவை.

இலக்கண விளக்கச் சூறாவளி

நன்னூல் சூத்திரத்துக்குக் குற்றம் கூறியவர் வைத்தியநாத தேசிகர் என்பதற்கு மறுக்க இயலா இன்னொரு சான்றையும் காட்டலாம். இலக்கண விளக்கத்துக்குக் கண்டன உரை எழுதிய சிவஞான முனிவர் "நன்னூலார் மொழிமுதற்கண் சுட்டுப் பொருள் உணர்த்தி வரினல்லது சுட்டெழுத்து ஆகாது என்பார் "**தனிவரிற் சுட்டு**" (நன். 66) என்றார். தாமும் அவ்வாறு கூறாது எவ்வாறு வரினும் சுட்டெழுத்தாம் என்று பொருள்பட வாளா "**மொழி முதல் வரிற்சுட்டு**" (இல. விள. 6) என்றதுவும் அன்றி, அவர் (பவணந்தி முனிவர்) கருத்து அறியாது குற்றமும் கூறினார்." என்று இலக்கண விளக்கச் சூறாவளியில் (பக். 91) எழுதியுள்ளார். இப்பகுதியில் நன்னூல் நூற்பாவையும் இலக்கண விளக்க நூற்பாவையும் ஒப்பிட்டுக் காட்டிப் பவணந்தி முனிவர் கூறியதன் கருத்தினைப் புரிந்துகொள்ளாமல் நன்னூல் சூத்திரத்துக்கு வைத்தியநாத தேசிகர் குற்றமும் கூறினார் என்று சிவஞான முனிவர் சுட்டிக்காட்டியுள்ளார். சாமிநாத தேசிகர் எழுதிய மறுப்புரை வைத்தியநாத தேசிகரையே குறிக்கும் என்பதற்கு முனிவரின் கண்டன உரையைக் காட்டிலும் நல்ல சான்று இருக்க முடியாது அல்லவா?

சாமிநாத தேசிகரும் மயிலைநாதர் உரையும்

நன்னூலுக்குச் சைனர் உரை ஒன்று உண்டு; அது பயனற்றது என்பதும் மயிலைநாதர் உரை நன்னூலுக்குத் தகுதியான உரை அல்ல என்பதால் சாமிநாத தேசிகர் அந்த உரையின்மீது வெறுப்புக்கொண்டிருந்தார் என்பதும் ஆதீன வட்டத்தில் வழங்கிய கட்டுக்கதைகளாக இருக்க வேண்டும் என்பது முன்பே சொல்லப்பட்டது. சமயப் பூசல் காரணமாக எழுந்திருக்கக் கூடிய இவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் எந்த இலக்கண நூலிலும் காணப்படவில்லை. சைனர் உரை என்று சாமிநாத தேசிகர் தமது நூலில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. சைனர் உரை என்பது மயிலைநாதர் உரையே ஆகும். சைனர் உரை வேறு; மயிலைநாதர் உரை வேறு

என்று நிறுவுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. மயிலைநாதர் உரையின்மீது சாமிநாத தேசிகர் வெறுப்புக்கொண்டிருந்தார் என்று மெய்ப்பிக்கவும் சான்றுகள் இல்லை. மயிலைநாதர் உரையை அவர் தமது நூலில் எங்கும் மறுக்கவில்லை. உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. மயிலைநாதர் உரையை அவர் தமது நூலில் இரண்டு இடங்களில் ஏற்று மதித்துள்ளார். முற்று எச்சமாதலை விளக்கும் பகுதியில் "ஏனை மூன்றும் நன்னூலில் **'வினைமுற் றேவினை யெச்ச மாகலும்'** (நன். 350) என்னும் சூத்திரத்தில் **காட்டிய உதாரணங்களால்** அறிக." என்று சாமிநாத தேசிகர் (இல. கொ. 82 உரை) குறிப்பிட்டுள்ளார். வேறு ஒரு இடத்தில் தேசிகர் இன்னும் தெளிவாகக் குறித்துள்ளார். **"ஒருதொடர் பலதொடர்"** (இல. கொ. 124) என்னும் நூற்பாவின் உரையில், ஒன்றுக்கு மேற்பட்ட வினைமுற்றுகள் ஒரு தொடரில் வந்தால் அவற்றைச் செயவென் எச்சமாக மாற்றி இறுதியில் நிற்கும் வினைமுற்றோடு முடிக்க என்று உதாரணத்தோடு தேசிகர் விளக்குவார். விளக்கிவிட்டு "இக்கருத்து, **'வினைமுற் றேவினை யெச்ச மாகலும்'** (நன். 350) என்னும் சூத்திரத்துள், **'கானவ ரிரிய'** (சீவக. 452) என்னும் செய்யுளில் காண்க." என்று சாமிநாத தேசிகர் நெறிப்படுத்துகிறார்.

மேலே எடுத்துக்காட்டிய இரு உரைப் பகுதிகளிலும் 'உதாரணங்களால் அறிக' என்றும், 'கானவ ரிரிய என்னும் செய்யுளில் காண்க' என்றும் சாமிநாத தேசிகர் குறித்துள்ளதால் அவர் மேற்கோள் காட்டுவது நன்னூல் மூலம் அல்ல; உரையே என்பது தெளிவு. தேசிகர் காலத்துக்கு முன் நன்னூலுக்கு இருந்தது மயிலைநாதர் உரை ஒன்றே. அதனால் அவர் எடுத்துக்காட்டியது மயிலைநாதர் உரையே என்பது திண்ணம். தேசிகரைப் போலவே அவருடைய மாணவரும் இப்பாடலை எடுத்துக்காட்டுகிறார். **"வினைமுற் றேவினை யெச்ச மாகலும்"** (நன். 351) என்ற நூற்பாவின் உரையில் **"கானவ ரிரிய"** உட்பட மயிலைநாதர் காட்டிய முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய உதாரணங்களை நமச்சிவாயர் தமது உரையில் எடுத்து அமைத்துக்கொண்டார். இவ்வாறு ஆசிரியரும் மாணவரும் மயிலைநாதர் உரையை அங்கீகரித்துத் தழுவிக்கொண்டதில்

ஒரு நுண்ணிய கருத்து அடங்கியுள்ளது. "கானவ ரிரிய" என்று தொடங்கும் செய்யுள் சீவக சிந்தாமணிப் (452) பாடல். அது ஒரு ஜைனக் காப்பியம். மயிலைநாதர் ஜைனர்; பவணந்தி முனிவரும் ஒரு ஜைனர். சைவ சிகாமணிகளாக வாழ்ந்த தேசிகரும் நமச்சிவாயரும் ஜைனர் எழுதிய இலக்கணத்தையும் உரையையும் உதாரணப் பாடலையும் மதித்துப் போற்றியது கவனத்துக்கு உரியது. இந்தச் செயல்பாடு அவர்களின் சமயப்பொறையை மட்டும் காட்டவில்லை; அறிவுத்திறனை இனம்கண்டு, தரம்கண்டு மதிக்கும் அவர்களுடைய புலமைப்பண்பையும் காட்டுகிறது. ஆகவே புலமையை மதிக்கும்போது சமயம் குறுக்கே நிற்பதில்லை. இந்த நல்ல மரபுக்குச் சாமிநாத தேசிகரும் சங்கர நமச்சிவாயரும் கடைப்பிடித்த உரைநெறியே உகந்த முன்மாதிரி எனலாம்.

இவற்றை எல்லாம் தொடர்புபடுத்தி நோக்கினால் சாமிநாத தேசிகர் எழுதிய மறுப்புரை வைத்தியநாத தேசிகரைக் கருதியது; மயிலைநாதர் உரையைக் கருதியது அல்ல. மயிலைநாதர் உரையின் மீது சாமிநாத தேசிகருக்கு வெறுப்புணர்வு இருந்தது என்பது புனைகதை. மயிலைநாதர் உரையைத் தேசிகர் மதித்துள்ளார் என்பதற்கு இலக்கணக் கொத்தில் நல்ல சான்றுகள் உண்டு. எனவே நன்னூலுக்கு உரை இயற்றுமாறு நமச்சிவாயரைச் சாமிநாத தேசிகர் பணித்தார் என்பதும் பொருந்தாது.

புத்தம் புத்துரை

சங்கர நமச்சிவாயரின் உரை வரலாற்றில் புத்தம் புத்துரை பற்றியும் ஆராய வேண்டும். நன்னூல் பதிப்புகளிலும் இலக்கண வரலாறுகளிலும் இந்த உரை பலவாறு புகழப்பட்டுள்ளது. முதன்முதல் உ. வே. சாமிநாதையர் "இது சங்கர நமச்சிவாயர் உரையைப் பெரும்பாலும் தழுவிச் சிலசில பகுதிகளை மாற்றி, அரிய வடமொழி தென்மொழி விதிகளை உரிய இடங்களிற் சேர்த்து, திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சிவஞான யோகிகளால் விரிவாக இயற்றப்பெற்றது." (1925. முகவுரை பக். 2) என்று இவ்வுரையைப் புகழ்ந்து எழுதினார். அவரைத் தொடர்ந்து "இவ்வுரையே புலமைக்குப் பெருந்துணையாய், புலவர் புலத்தை அளக்கும் அளவுகோலாய், திருக்குறள், திருக்கோவையார்,

சங்க இலக்கியங்கள், மெய்கண்ட நூலுரைகள் (ஆகிய) இவற்றைப் படித்துய்ய உதவும் உறுதுணையாய் அமைந்தது." என்று தண்டபாணி தேசிகர் (1957. முகவுரை பக். 8) குறிப்பிட்டார். இவர்களைப் பின்பற்றிச் "சிவஞான முனிவர் தமிழ் இலக்கண உலகிற்குச் செய்த பெருந்தொண்டுகளில் ஒன்று நன்னூலுக்கு விருத்தியுரை இயற்றியதேயாம்." என்று அரவிந்தன் (1995. பக். 538) பாராட்டிக் கூறினார். புத்தம் புத்துரையின் அமைப்பு முறையை ஆராய்ந்து நோக்குவோர்க்கும் சங்கர நமச்சிவாயர் உரையோடு புத்தம் புத்துரையை வரிவரியாக ஒப்பிடுவோர்க்கும் இந்தப் புகழ்மொழிகள் பொய்மொழிகள் என்று நன்றாகத் தெரியும்.

சிவஞான முனிவர்

சிவஞான முனிவர் பதினெட்டாம் நூற்றாண்டினர்; விக்கிரம சிங்கபுரத்தில் சைவ வேளாள மரபில் தோன்றியவர்; இளமையிலேயே தீக்கை பெற்றவர். சிவஞானம் என்ற தீக்கைப் பெயரே பிற்காலத்தில் சிவஞான முனிவர் என்று அவருக்கு வழங்கலாயிற்று. திருவாவடுதுறை ஆதீனத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்த முனிவர் மாணவர் புடை சூழ வாழ்ந்த நல்லாசிரியர். தமிழோடு வடமொழியையும் விரும்பிக் கற்ற முனிவர் பல நூல்களைப் படைத்தார்; பல நூல்களுக்கு உரை எழுதினார்; சிலவற்றை மொழிபெயர்த்தார். ஏறக்குறைய முப்பது நூல்கள் அவர் பெயரால் வழங்குகின்றன. அவற்றுள் தொல்காப்பியச் சூத்திர விருத்தியும் சிவஞான மாபாடியமும் அவருடைய புலமைக்குச் சான்றுகளாக நிலைத்து நிற்கும். வாழ்நாள் முழுதும் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் ஆற்றிய முனிவர் கி. பி. 1785இல் திருவாவடுதுறையில் இயற்கை எய்தினார் என்று நம்பப்படுகிறது.

முனிவரின் இலக்கணப் பணி

தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல் புத்தம் புத்துரை என்பன முனிவர் பெயரால் வழங்கும் இலக்கண நூல்கள். இம்மூன்றும் மூன்று வகையின. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், முதற் சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் முனிவர் இயற்றிய பேருரையே

தொல்காப்பியச் சூத்திர விருத்தி. இதே முறையில் தொல்காப்பிய நூல் முழுமைக்கும் விரிவான உரை ஒன்றை எழுதும் எண்ணம் அவருக்கு இருந்திருக்க முடியாது. இலக்கணத்தைக் கற்போரும் கற்பிப்போரும் தொல்காப்பிய நூற்பாக்களை எவ்வாறு கற்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுவதே அந்த நூல் இயற்றியதன் நோக்கமாக இருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் சிவஞான முனிவரின் நுண்மாண் நுழைபுலத்தை இந்நூல் என்றென்றும் பறைசாற்றும். இதற்கு முற்றிலும் மாறுபட்ட சிறுநூல் இலக்கண விளக்கச் சூறாவளி; வெறும் கண்டனக் குறிப்புகளின் திரட்டு. ஆதீனங்களுக்குள் நிலவிய பூசல் காரணமாக வலிந்தும் நலிந்தும் எழுதப்பட்ட மறுப்புரை. பழைய உரையாசிரியர்கள் போற்றி வளர்த்த உரைநெறிக்கு முற்றிலும் மாறான இக்கண்டன நூல் முனிவரின் பெருமையைக் காட்டவில்லை; கூட்டவும் இல்லை. இவ்விரண்டு நூல்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது விருத்தியுரைத் திருத்தம். சங்கர நமச்சிவாயர் இயற்றிய நன்னூல் விருத்தியுரையில் முனிவர் சில பகுதிகளைத் திருத்தினார்; சில பகுதிகளில் புதிய விளக்கங்களைச் சேர்த்தார். இதுவே புத்தம் புத்துரை என்று வழங்கப்பட்டது. இந்த உரையின் அமைப்பு, திருத்தங்களின் இயல்பு முதலியவற்றைக் கொஞ்சம் கூர்ந்து பார்க்கலாம்.

புத்துரையின் உருவாக்கமும் உள்ளடக்கமும்

சிவஞான முனிவர் திருத்தி அமைத்த புத்தம் புத்துரை தனித்த உரை அல்ல; திருத்தி எழுதிய உரைவிளக்கப் பகுதிகள் அனைத்துக்கும் அவரே ஆசிரியரும் அல்லர். ஒரு உரையாசிரியர் இயற்றிய உரையில் சிற்சில விளக்கக் குறிப்புகளை ஆங்காங்கே சேர்த்துப் புத்துரை ஒன்றை உருவாக்குவது தமிழ் உரைமரபும் அல்ல. என்றாலும் இந்த உரையைத் தனித்ததோர் உரையாகக் கொள்வதற்கு அவர் சார்ந்திருந்த ஆதீனத்தின் பின்னணியே காரணம் என்று தோன்றுகிறது. தம்முடைய மாணவர்களுக்கு நன்னூலைக் கற்பித்த காலத்தில் சங்கர நமச்சிவாயர் உரையேட்டில் சிவஞான முனிவர் சில திருத்தங்களைச் செய்திருக்கக் கூடும்; ஒப்பீட்டு நோக்கில் சில கருத்துகளைச் சேர்த்திருக்கவும் கூடும். அதுவே ஆதீன வட்டத்தில் புத்தம்

புத்துரை என்று வழங்கியிருக்கக் கூடும். இவ்வாறன்றி வேறு ஒரு உரையாசிரியர் செய்த உரையில் சில விளக்கக் குறிப்புகளை எழுதிச் சேர்த்துவிட்டு அவ்வுரை முழுவதையும் தம்முடைய பெயரால் வழங்கச் செய்யும் நோக்கம் சிவஞான முனிவருக்கு இருந்திருக்க முடியாது. அதுவும் இலக்கண விளக்கச் சூறாவளி போன்றதொரு கண்டன நூலை இயற்றிய சிவஞான முனிவருக்கு அந்த நோக்கம் இருந்திருக்குமா என்று ஐயுறத் தோன்றுகிறது; ஆராயத் தோன்றுகிறது.

சங்கர நமச்சிவாயர் உரையில் சிவஞான முனிவர் செய்த திருத்தப் பணியைச் சாமிநாதையரும் (1925. முகவுரை பக். 2) தண்டபாணி தேசிகரும் (1957. முகவுரை பக். 8) வலிந்து நியாயப்படுத்த முயன்றுள்ளனர். சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு இயற்றிய உரை அவருடைய அறிவாற்றலின் விளைவு; அவருடைய அறிவுடைமை; அறிவால் ஆக்கிய உடைமை. அவர் உரையில் திருத்தங்களைச் செய்யவும் அதற்கு வேறு பெயரிட்டு அழைக்கவும் யாருக்கும் உரிமை கிடையாது. மூலபாடத்துக்கு இணையாக உரைப்பாடத்தையும் பேணிப் போற்றுவது தமிழ்மரபு. எனவே ஒரு உரைப்பாடத்தைக் கூட்டிக் குறைப்பதும் திருத்துவதும் மூலபாடத் திறனாய்வுக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டன. என்றாலும் சிவஞான முனிவர் செய்த திருத்தப் பணியைச் சாமிநாதையரும் தண்டபாணி தேசிகரும் சற்றும் மறுக்காமல் ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் திருவாவடுதுறை ஆதீனத்தோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பே எனலாம். இந்த உண்மையை ஆய்வாளர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இனி, முனிவர் திருத்தி உருவாக்கிய புத்துரையின் உள்ளடக்கத்தைப் பார்க்கலாம்.

சிவஞான முனிவர் நன்னூல் முழுமைக்கும் உரை எழுதவில்லை என்பது முன்பே சொல்லப்பட்டது. சங்கர நமச்சிவாயர் இயற்றிய விருத்தியுரையில் சிவஞான முனிவர் சில பகுதிகளைக் குறைத்தார்; சில பகுதிகளைக் கூட்டினார்; சில பகுதிகளைக் குறைத்தும் கூட்டியும் மாற்றினார். மிகச் சில நூற்பாக்களுக்கே (நன். 10, 50, 125, 293) முனிவர் புத்துரை வரைந்தார். அவையும் கூட எல்லாப் பதிப்புகளிலும்

ஒரே மாதிரியாகப் பதிவாகவில்லை. காட்டாகத் "**தொகுத்தல் விரித்தல்**" (நன். 50) என்னும் நூற்பாவுக்கு முனிவர் செய்த புத்துரை ஆறுமுக நாவலர் பதிப்புகளில் இடம்பெறவில்லை. நமச்சிவாயர் உரையில் முனிவர் செய்துள்ள திருத்தங்களின் இயல்பை அண்மையில் வெளிவந்துள்ள நன்னூல் விருத்தியுரை (அ. தாமோதரன், 1999. பக். 541-547) தரும் பட்டியல் வகைப்படுத்திக் காட்டுகிறது. முனிவர் கூட்டி எழுதிய பகுதிகளில் பெரும்பாலானவை சொல்லளவுத் திருத்தங்களே. காட்டாக "**உருபின் முடிபவை**" (நன். 238) என்னும் நூற்பாவின் உரையில் முனிவர் சேர்த்தது "பிறவும் அன்ன." என்பது மட்டுமே. இதுபோலவே "அடக்கி" (நூ. 262), "இவன், உவன்" (நூ. 276), "தாரிமெனென்" (நூ. 331), "உணர்த்துதல்" (நூ. 348), "உயர்திணை" (நூ. 352), "முதலிய" (நூ. 393), "போ போ போ" (நூ. 395), "அவ்விரட்டிப்பில்" (நூ. 396), "அவற்றை" (நூ. 399) என்று பல திருத்தங்கள் சொல்லளவில் நின்றுவிட்டன.

கருத்துரைப் பகுதிகளில் சிவஞான முனிவர் கூட்டி எழுதிய திருத்தங்கள் எல்லாம் இன்றியமையாதன என்று சொல்ல முடியாது. இதற்கு ஓரிரு உதாரணங்களைக் காட்டலாம். "**சுவைப்புளி முன்னின**" (நன். 175) என்னும் நூற்பாவுக்கு "எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று." என்று சங்கர நமச்சிவாயர் கருத்துரை எழுதினார். அவ்வுரையை "**இயல்பினும் விதியினும்**" (நன். 165) என்னும் சூத்திரத்தான் எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று." என்று சிவஞான முனிவர் திருத்தினார். "**அகமுனர்ச் செவிகை**" (நன். 222) என்னும் நூற்பாவுக்கு "அகம் என்னும் சொற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று." என்று நமச்சிவாயர் எழுதிய கருத்துரையை, "அகம் என்னும் சொற்கு '**வன்மைக் கினமாத் திரிபவும்**' (நூ. 219) என எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று." என்று முனிவர் திருத்தியுள்ளார். முனிவர் வழங்கும் இந்த ஒப்பீட்டுக் குறிப்பு நமச்சிவாயர் பொழிப்புரையில் "வன்மைக்கு இனமாத் திரிதலே அன்றி" என்ற தொடரால் விளக்கப்பட்டுள்ளது. இதுபோலவே "**பலசில எனுமிவை**" (நன். 170) என்னும் நூற்பாவின் கருத்துரையில் முனிவர் வரைந்துள்ள ஒப்பீட்டுக் குறிப்பும்

சங்கர நமச்சிவாயர் உரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் இந்த நூற்பாக்களின் கருத்துரைகளைச் சிவஞான முனிவர் திருத்தியது தேவைதானா என்று கேட்கத் தோன்றுகிறது.

சில நூற்பாக்களில் நமச்சிவாயர் உரையைக் குறைத்து நீக்கியதே முனிவரின் திருத்தமாக உள்ளது. உதாரணமாகத் **"தான்தாம் நாம்முதல்"** (நன். 247) என்னும் நூற்பாவின் உரையில் "இச்சூத்திரத்து நான்காறு இரட்டல என்ற ஒன்றும் எய்தியது விலக்கல்." என்னும் உரைப்பகுதி நீக்கப்பட்டுள்ளது. இதுபோலவே தத்தம் பகாப்பதங்கள் என்ற சூத்திரத் தொடருக்கு நமச்சிவாயர் (நூ. 134) எழுதியுள்ள நயவுரை முற்றும் விடப்பட்டுள்ளது. வேறு சில இடங்களில் (நூ. 269, 307, 326, 327, 328, 329) சொல்லளவில் மட்டுமே நமச்சிவாயர் உரை நீக்கப்பட்டுள்ளது. இந்த விடுபாடுகள் எல்லாம் முனிவர் செய்த திருத்தங்களா அல்லது ஏடு பெயர்த்து எழுதியோரால் நேர்ந்துவிட்ட பாட வேறுபாடுகளா என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சிவஞான முனிவர் தமது கைப்படத் திருத்தி எழுதிய நன்னூல் விருத்தியுரை ஏடு திருவாவடுதுறை ஆதீன நூல் நிலையத்தில் (ச. தண்டபாணி தேசிகர், 1957. முகவுரை பக். 9) இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஏட்டைச் சங்கர நமச்சிவாயர் உரை ஏடுகளுடன் ஒப்பிட்டு ஆராய வேண்டும். அப்போதுதான் சிவஞான முனிவர் செய்ததாகக் கருதப்படும் சொல்லளவுத் திருத்தங்களின் உண்மைநிலை தெரிய வரும்.

சிவஞான முனிவர் செய்த விரிவான திருத்தங்களில் பலவும் தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய உரைகள், இலக்கணக் கொத்து போன்ற நூல்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டவை. நன்னூல் சிறப்புப் பாயிரம், எழுத்ததிகாரத் தோற்றுவாய், எழுத்துக்களின் கிடக்கைமுறை (நன். 73) முதலியவற்றுக்கு முனிவர் வரைந்துள்ள விளக்கங்கள் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் உள்ளவை. **"அவற்றுள், ஒன்றே இருதிணை"** (நன். 284) என்னும் நூற்பாவின் உரையில் முனிவர் தரும் விளக்கம் இலக்கண விளக்கச் சூறாவளியில் (பக். 116-117) உள்ளது. அவையல்

கிளவிக்கும் பண்படியாகத் தோன்றிய வினைக் குறிப்புச் சொற்களுக்கும் அவர் கொடுத்துள்ள விளக்கங்கள் நச்சினார்க்கினியர் (தொல். எச்ச. 46, 47) வரைந்தவை. பெயரியலிலும் வினையியலிலும் பல நூற்பாக்களுக்குச் சிவஞான முனிவர் விரிவாக எழுதியுள்ள திருத்தப் பகுதிகள் இலக்கணக் கொத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டவை. இவ்வாறு பிற உரைகளிலிருந்து பல பகுதிகளை எழுத்து மாறாமல் எடுத்து இடைச்செருகிப் புத்துரை ஒன்றை உருவாக்குவது தமிழ் உரைமரபுக்குப் பொருந்தாது; உரைநெறிகளுக்கு ஒவ்வாது. மூலபாடத் திறனாய்வுக்கும் அது முரண்பட்டது.

நமச்சிவாயரும் இலக்கணக் கொத்தும்

சங்கர நமச்சிவாயர் சாமிநாத தேசிகரின் மாணவர். தமது குருபக்தியை அவர்,

> **"சுவாமி நாத குரவனை அனுதினம்**
> **மனமொழி மெய்களிற் றொழுது"**

என்னும் உரைப் பாயிர அடிகளால் புலப்படுத்தியுள்ளார். அதோடு தம்முடைய ஆசிரியரின் கருத்துகள் சிலவற்றைத் தமது உரையில் தழுவிக்கொள்ளவும் அவர் தவறவில்லை. காட்டாகச் **"செய்யிய என்னும்"** நூற்பாவின் உரையில் (நன். 167) பல்வகைப் பெயரின் எச்சம் முற்று என்ற தொடருக்குப் "பல்வகை என்றதனான் வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சம், முற்று" என்று அவர் விளக்கம் கூறுவார். அதனை அடுத்து "வினையடி நான்காவன: இயல்பாகிய வினையடி ஒன்றும் ஏனைப் பெயர், இடை, உரியடியாகப் பிறந்த வினையடி மூன்றும் ஆம்." என்று நமச்சிவாயர் விருத்தியுரை கூறுவார். இவ்வுரை,

> **"பெயர்வினை இடையுரி நான்கடி யானும்**
> **பிறக்கும் வினையெனப் பேசுவர் புலவர்"**

என்னும் இலக்கணக் கொத்து நூற்பாவைத் (68) தழுவியது.

இதுபோலவே வினையெச்சங்களின் முடிபைப் பற்றிப் பேசும் நூற்பாவின் (நன். 344) உரையில் "இவ்வினையெச்சங்கள் நடந்து வந்தான், மழை பெய்ய நெல் விளைந்தது எனக்

காரணப் பொருட்டாயும் நெல் விளைய மழை பெய்தது எனக் காரியப் பொருட்டாயும் உண்ண வந்தான் எனக் காரணம், காரியம் என்னும் இருபொருட்டாயும்,

"கடிக்கமல முகங்காட்ட........
கருநெய்தல் கண்காட்டும்"

(தே. மேகராகக் குறிஞ்சி 1:3-4) எனக் காரண காரியம் இரண்டும் இன்றியும் உழுது பயன் கொண்டான் வேந்தன் எனத் தலைமை பற்றியும் உழுது பயன் கொண்டான் வறியன் அஃது இன்மை பற்றியும் வருதல் காண்க." என்று நமச்சிவாயர் வரைந்துள்ள விருத்தியுரை சாமிநாத தேசிகரின் (இல. கொ. 84:7-8) உரையைக் கருத்தில் கொண்டு எழுதியது. இவ்வாறு தம் ஆசிரியரின் பிற கருத்துகளைத் தமது உரையில் எடுத்துக் கூறித் தழுவிக்கொள்ள வேண்டும் என்று நமச்சிவாயர் எண்ணியிருந்தால் அவற்றை உரிய இடங்களில் அவரே எழுதிச் சேர்த்திருப்பார். அவர் செய்யாதிருக்கவும் அவருடைய விருத்தியுரையில் (நன். 292, 295, 296, 297, 298, 299, 300, 301, 302, 317, 322, 339, 340, 351) இலக்கணக் கொத்து நூற்பாக்களையும் உரைப் பகுதிகளையும் சிவஞான முனிவர் இடைமடுத்து எழுதியது எவ்வகையிலும் பொருந்தாது. வலிவற்ற காரணங்களைக் காட்டிப் பிறர் (க. ப. அறவாணன், 1977. பக். 167; க. விநாயகம், 1991. பக். 69) சிவஞான முனிவர் செய்கைக்கு அமைதி கூற முயல்வார்கள். காரணம் எதுவாக இருந்தாலும் முனிவர் கடைப்பிடித்த முறை உரைமரபுக்கும் புலமை நேர்மைக்கும் பொருந்தாது.

முனிவர் கூட்டி எழுதிய பகுதிகள்

புத்தம் புத்துரையில் சிவஞான முனிவர் கூட்டி எழுதிய விளக்கங்களில் தொல்காப்பிய உரைப் பகுதிகளும் உண்டு என்பது முன்பே சொல்லப்பட்டது. காட்டாக உயிர்மெய் வரும் முறையைக் கூறும் நூற்பாவின் (நன். 89) உரையில் "உருவு திரிதல் புள்ளி பெறுவன புள்ளி பெற்றும் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்றும் கோடு பெறுவன கோடு பெற்றும் புள்ளியும் கோடும் உடன் பெறுவன உடன் பெற்றும் வருவனவாம். அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதுவர்." என்பது முனிவர் கூட்டி எழுதிய புத்துரை.

இந்த விளக்கம் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளிலிருந்து (தொல். நூன். 17) முனிவரால் எடுத்து எழுதப்பட்டது என்பது வெளிப்படை. இன்னும், சொல்லதிகாரத் தோற்றுவாயில் "சொல் என்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருள்தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவி ஆம் ஓசை" என்றும் "பொருள் தன்மையாவது ஒரு பொருட்குக் கேடு பிறந்தாலும் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பல வகைப்பட்ட பொருள்தோறும் நிற்கும்." என்றும் சிவஞான முனிவர் தரும் விளக்கம் நச்சினார்க்கினியர் (தொல். கிளவி. 1) உரையிலிருந்து எடுத்துக்கொண்டது. இவையே அன்றி வழக்கு பற்றிய நூற்பாவின் உரையிலும் (நன். 267), குறிப்புவினையின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் உரையிலும் (நன். 321) முனிவர் எழுதியுள்ள புத்துரை நச்சினார்க்கினியர் (தொல். எச்ச. 46, 47; வினை. 16, 17) உரையை உட்கொண்டது. இவற்றை எல்லாம் ஆய்வாளர்கள் (க. ப. அறவாணன், 1977. பக். 166; க. விநாயகம், 1991. பக். 49, 51) சிவஞான முனிவர் உரையாகக் கொள்வது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது.

இலக்கணக் கொத்து, தொல்காப்பிய உரைகள் போன்றவற்றிலிருந்து எடுத்தெழுதிய பகுதிகள் புத்தம் புத்துரையில் மலிந்துள்ளன என்று சுட்டிக்காட்டுவதால் திருத்தப் பகுதிகளில் முனிவருடைய விளக்கங்களே இல்லை என்பது பொருள் அல்ல. எழுத்துக்களின் கிடக்கை முறை (நன். 73), வினைக்குறிப்புப் பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் உள்ள வேறுபாடு (நன். 132), ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடு (நன். 290) முதலிய நல்ல சில விளக்கங்கள் அவருடையன. ஆயினும் இக்கருத்துகள் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் முன்பே ஒரு முறை சிவஞான முனிவரால் விளக்கப்பட்டுவிட்டன என்பதும் உண்மை. இங்கு இன்னொரு கருத்தையும் நான் குறிப்பிட வேண்டும்.

முனிவரின் விளக்கம் சுருக்கமும் தெளிவும் கொண்டது; படிப்பவர் நெஞ்சில் பட்டென்று பதிந்துவிடக் கூடியது. உச்சரிப்பைப் பற்றியும் இன் என்னும் இடைநிலையைப் பற்றியும் சிவஞான முனிவர் தரும் விளக்கங்கள் இதற்கு நல்ல உதாரணங்கள். சொற்களை உச்சரிக்கும் முறைக்குப்

பொதுவிதியாக “எல்லாச் சொற்களையும் கூறுங்கால் பொருள் சிறக்கும் இடத்து எழுத்தினை எடுத்தும் அயலெழுத்தினை நலிந்தும் ஏனை எழுத்துக்களைப் படுத்தும் கூறுக.” (நன். 132) என்றும் இன் என்னும் இறந்தகால இடைநிலையைப் பற்றி “இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடைக் குறைந்தும் போனது என முதல் குறைந்தும் வரும்.” (நன். 142) என்றும் முனிவர் மேனிலை விளக்கம் தருவார். மற்ற உரையாசிரியர்கள் இக்கருத்துகளைத் தொட்டிருந்தாலும் (**உச்சரிப்புக்கு:** இளம்பூரணர் தொல். வினை. 21; சேனாவரையர் தொல். வேற். 9; நச்சினார்க்கினியர் தொல். வேற். 9, வினை. 22, 26, 27, 38, எச்ச. 54; சுப்பிரமணிய தீக்கிதர் பி. வி. 40; வைத்தியநாத தேசிகர் இல. விள. 44, 235, 253; சாமிநாத தேசிகர் இல. கொ. 126; **இன்னிடைநிலைக்கு:** சேனாவரையர், நச்சினார்க்கினியர் தொல். வினை. 20; மயிலைநாதர் நன். 256; வைத்தியநாத தேசிகர் இல. விள. 47, 234) முனிவரின் விளக்கத்தில் உள்ள தெளிவும் செறிவும் மற்ற உரைகளில் இல்லை என்பதே உண்மை. இத்தகைய விளக்கங்கள் ஒரு சில முனிவரின் திருத்தக் குறிப்புகளில் இருந்தாலும் அவற்றைச் சங்கர நமச்சிவாயரின் உரையில் அவர் இடைச்செருகி எழுதியிருக்கவே கூடாது.

புத்தம் புத்துரை - பழைய மதிப்பீடு

சங்கர நமச்சிவாயர் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த சாமிநாதையர் “வடநூற் கடலையும் தென்றமிழ்க் கடலையும் நிலைகண்டு உணர்ந்த ஸ்ரீ சிவஞான யோகிகள் இருமொழிக்கண்ணும் தாம் ஆராய்ந்தறிந்த அரிய விதிகளை அமைத்தற்குத் தக்க இடம் என்று இவர் உரையைக் கொள்வார் ஆயின் சங்கர நமச்சிவாயருடைய உரையின் பெருமையைக் கூற வல்லவன் யானோ?” (1925. முகவுரை பக். 22) என்று தமக்கே உரிய முறையில் முடிவுரை கூறுகிறார். இந்த முடிபைப் பலரும் (ச. தண்டபாணி தேசிகர், 1957. பக். 23; க. ப. அறவாணன், 1977. பக். 160; கி. நாச்சிமுத்து, 1986. பக். 72; க. விநாயகம், 1991. பக். 18) ஆராயாமல் எடுத்தெழுதி வருகிறார்கள். அப்படிப்பட்ட அரிய விதிகளைச் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரையில் சிவஞான முனிவர் புதிதாக

அமைத்துவிடவும் இல்லை. அவற்றால் சங்கர நமச்சிவாயர் உரைக்குப் பெருமை கூடிவிடவும் இல்லை. உண்மையில் அரிய, புதிய இலக்கண விதிகளை எழுத விரும்புவோர் தனியாக நூல் எழுதுவதே முறை. அதற்கான திறமையும் புலமையும் முனிவர்க்கு உண்டு. அவ்வாறு செய்யாமல் சங்கர நமச்சிவாயர் உரையைத் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் சிதைத்தும் முனிவர் திருத்திப் புதுக்கியது அவருடைய பெருமைக்குப் பொருந்தவில்லை. இந்த உண்மையை ஆய்வாளர்களில் பலர் விளங்கிக்கொள்ளவும் இல்லை; விளக்கிச் சொல்லவும் இல்லை.

புத்தம் புத்துரை – மறுமதிப்பீடு

தொகுத்துச் சொன்னால் சிவஞான முனிவர் நன்னூலுக்குப் புதிதாக உரை ஒன்றும் இயற்றவில்லை; புத்தம் புத்துரை என்பது தனித்ததோர் உரையும் அல்ல. சங்கர நமச்சிவாயர் உரையில் ஆங்காங்கே சில திருத்தங்களைச் செய்ததே அவர் நன்னூலுக்குச் செய்த பணி. நன்னூல் நூற்பாக்கள் மூன்று அல்லது நான்குக்கு மட்டுமே அவர் புத்துரை வரைந்தார். அந்த உரையும் விவாதத்துக்கு அப்பாற்பட்டதாக அமையவில்லை. அவர் செய்த மற்ற திருத்தங்களில் பெரும்பகுதி சொல்லளவில் அமைந்துவிட்டது. அவர் விரிவாக எழுதிய விளக்கங்கள் அனைத்தும் அவரே எழுதியன அல்ல; பிறர் உரைகளிலிருந்து அவர் எடுத்தெழுதியவை அவற்றில் கணிசமாக உள்ளன. புத்தம் புத்துரைக்காக அவர் புதிதாக எழுதியது குறைவு; தம்முடைய முந்தைய இலக்கண உரை நூல்களிலிருந்து எடுத்துக்கொண்டது மிகுதி. சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு இயற்றியது விருத்தியுரை; முனிவர் செய்த திருத்தங்களால் அவ்வுரைக்கு அத்தகுதி ஏற்பட்டதாகக் கருதுவது பிழை. உண்மை இவ்வாறு இருக்கவும் சிவஞான முனிவரை நன்னூல் உரையாசிரியர்களுள் ஒருவர் என்றும் புத்தம் புத்துரையைத் தனித்ததோர் உரை என்றும் சொல்வது வெறும் கற்பிதம். சிவஞான முனிவர் தமது கைப்படத் திருத்திய சங்கர நமச்சிவாயர் உரையேட்டை மூலபாடத் திறனாய்வு நோக்கில் மேலும் ஆராய்ந்தால் நன்னூலுக்கு முனிவர் செய்த உரைப்பணியைத் துல்லியமாக மதிப்பிட முடியும். அதற்கு ஆதீன நூல்நிலையக் கதவு திறக்குமா? திறக்கும் வரையில் காத்திருப்போம்.

சங்கர நமச்சிவாயரின் உரைத்திறன்

விருத்தியுரையின் பகுதிகள்

சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு இயற்றியது விருத்தியுரை. **“நன்னூற்கு விரித்துரை செய்தான்”** என்னும் தொடர் இதனைக் குறிப்பாக உணர்த்துகிறது. விருத்தியுரை என்னும் பெயர் பெரும்பாலும் இலக்கண உரைகளுக்கே வழங்கிவருகிறது. பொதுவாக இலக்கிய உரைகளை இப்பெயரால் வழங்குவதில்லை. விதிவிலக்காக நீலகேசி உரையை மட்டும் ‘நீலகேசி விருத்தி’ என்று சொல்வதன் உட்கருத்து ஆராய்தற்கு உரியது. இந்த உரைவகை தமிழில் மிகமிகக் குறைவு. யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குக் கல்லாடர் எழுதிய விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி என்ற நான்கே இவ்வகையில் அமைந்தவை. இவற்றுள் கல்லாடர் விருத்தியுரை நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்துக்கும் முதற்சூத்திரத்துக்கும் சிவஞான முனிவர் எழுதிய விருத்தியுரை விரிவானது; ஆயினும் அதுவும் ஒரு வகையில் குறையுரையே. இவை தவிரத் தக்கயாகப் பரணி (16) உரையில் **‘வயிரமேக விருத்தி’** என்று ஒரு இலக்கண நூல் குறிக்கப்பட்டுள்ளது. நூலின் பெயர் மட்டுமே தெரிகிறது; அந்த விருத்தியுரை பற்றிய வேறு எந்த விவரமும் நமக்குக் கிடைக்கவில்லை. இறையனார் களவியலுக்கு நக்கீரர் இயற்றிய உரையும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையர், தெய்வச்சிலையார் இயற்றிய உரைகளும் விரிவானவை. ஆயினும் அவற்றை விருத்தியுரை என்று நாம் அழைப்பதில்லை. எனவே யாப்பருங்கல விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை என்னும் இரண்டே நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ள விருத்தியுரைகள். இவை இரண்டிற்கும் இடையே உள்ள கால இடைவெளி ஐந்நூறு ஆண்டுக்கும் மேற்பட்டது என்பது நினைவில் இருக்க வேண்டும். நமச்சிவாயர் இயற்றிய

விருத்தியுரையைக் கருத்துரை, பொழிப்புரை, உதாரணம், அகலவுரை என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றில் முதல் மூன்று பகுதிகளைக் கருத்து, தொகுத்துரை, உதாரணம் என்று உரையின் பொது இலக்கணம் (நன். 21) குறிக்கும். அகலவுரைக்கு நக்கீரர் "சூத்திரத்துட் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரை எல்லாம் அகலவுரை" (இறை. 1) என்று வரையறை கூறுவார். பவணந்தி முனிவர்,

> "சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
> இன்றி யமையா யாவையும் விளங்க"

(நன். 23) வகுப்பது விருத்தியுரை என்பார். இவை நான்கும் நன்னூல் விருத்தியுரையில் எவ்வாறு அமைந்துள்ளன? அவற்றில் நமச்சிவாயரின் உரைத்திறன் எவ்வாறு வெளிப்படுகிறது? என்று இப்பகுதியில் தனித்தனியே பார்க்கலாம்.

கருத்துரை

நூற்பாவின் கருத்தை நுட்பமாகப் புலப்படுத்துவது கருத்துரை. புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள கொளுச் சூத்திரத்தோடு இது ஓரளவு ஒப்புமை உடையது. உரையின் தொடக்கத்தில் "என்பது சூத்திரம். என் நுதலிற்றோ எனின் (சுருக்கமாக எ-ன்) பாயிரத்திற்கு வரும் காரணக் குறிகள் உணர்த்துதல் நுதலிற்று." (நன். 1) என்று ஒரு வாய்பாடு போலக் கருத்துரை அமைந்துள்ளது. "என்பது சூத்திரம்." என்னும் அதன் முற்பகுதி மூலநூற்பாவை உரையிலிருந்து தனியே வேறுபடுத்திக் காட்டுகிறது. இலக்கண நூல்கள் பனையோலைகளில் கையெழுத்துச் சுவடிகளாக வழங்கிவந்த காலத்தில் இது சூத்திரம்; இது உரை என்று வேறுபடுத்தி அறிய இக்குறிப்பு கற்பவர்க்கு மிகவும் பயன்பட்டிருக்கும். கருத்துரையின் பிற்பகுதி "என் நுதலிற்றோ எனின்" என்று வினாவாகத் தொடங்கி "உணர்த்துதல் நுதலிற்று." என்று விடையாக முடியும். நுதலுதல் என்றால் கருதுதல் என்று பொருள். இந்த வடிவமைப்பு நக்கீரர் காலத்திலேயே நிலைபெற்றுவிட்டது. இந்த அமைப்பு சூத்திரத்தின் கருத்தைக் கற்பித்தல் முறையிலேயே விளக்குவது. கருத்துரையின்

சொல்லாட்சியும் நடையும் இதனைப் புலப்படுத்தும். இவ்வாறு கூறுவதால் இலக்கண உரைகளில் எல்லாம் கருத்துரைப் பகுதி இருக்கும் என்றோ அதன் அமைப்பு இதே வடிவில் இருக்கும் என்றோ கருதிக்கொள்ளக் கூடாது. சேனாவரையர் கருத்துரை எழுதுவதில்லை. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோர் கருத்துரை வரைந்துள்ளனர். ஆயினும் அவர்கள் எல்லா நூற்பாக்களுக்கும் முற்றாக எழுதவில்லை; எழுதிய கருத்துரைகளின் அமைப்பு ஒரே சீராக அமையவும் இல்லை. சங்கர நமச்சிவாயர் சிறப்புப் பாயிரம் உட்பட அனைத்து நூற்பாக்களுக்கும் கருத்துரை எழுதியுள்ளார்; பெரும்பகுதி ஒரே சீராகவும் அமைந்துள்ளது. அதன் அமைப்பில் காணப்படும் சிறுவேறுபாடுகள் நடைநயத்துக்காகவும் உரைச்சுருக்கத்துக்காகவும் அறிந்தே செய்யப்பட்டன என்று தோன்றுகிறது.

கருத்துரையின் உள்ளடக்கம்

கருத்துரையின் அமைப்பில் உள்ள சிறுவேறுபாடுகளை முதலில் பார்க்கலாம். முன்பே காட்டியது போல "எ-ன், வியங்கோள் முற்று உணர்த்துதல் நுதலிற்று." (நன். 338) என்றே கருத்துரைகளின் பெரும்பகுதி விருத்தியுரையில் அமைந்துள்ளது. சில இடங்களில் உணர்த்துதல் என்பதற்குப் பதிலாக "இடம் வகுத்தல்" (நன். 75), "ஐயம் அறுத்தல்" (நன். 150), "எய்தாதது எய்துவித்தல்" (நன். 169) என்பன போன்ற தொழிற்பெயர்கள் கருத்துரைகளில் காணப்படுகின்றன. இவற்றின் பின்னர் உணர்த்துதல் என்னும் தொழிற்பெயரையும் அவர் சேர்த்து எழுதுவதில்லை. அதனால் நடைநயம் குறையும் என்று அவர் கருதியிருக்கக் கூடும். இன்னொரு வேறுபாடு "இதுவும் அது." என்று கருத்துரையை இரண்டே வார்த்தைகளில் சுருக்கிக் குறிப்பிடுவது. எழுத்தின் பெயர்களைக் கூறும் நூற்பாக்களின் (நன். 64-70) கருத்துரைப் பகுதிகள் இதற்கு ஏற்ற உதாரணங்கள். "அம்முதல் ஈராறு ஆவி" (நன். 63) என்னும் நூற்பாவுக்கு "எ-ன், ஒரு சார் எழுத்தினது பெயர் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று." என்பது நமச்சிவாயரின் கருத்துரை. இந்நூற்பாவைத் தொடர்ந்து வரும் ஏழு நூற்பாக்களும் குறில், நெடில், சுட்டு என்றவாறு எழுத்தின் பெயர்களையே கூறுகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும்

கருத்துரை எழுதினால் "அம்முதல் ஈராறு ஆவி" (நன். 63) என்னும் நூற்பாவுக்கு எழுதியுள்ள கருத்துரையையே சிறிது மாற்றி மீண்டும் மீண்டும் எழுத வேண்டும். அது கற்பவர்க்குச் சலிப்பைத் தரும். அதைத் தவிர்ப்பதற்கும் உரை சுருங்குவதற்கும் ஏற்றவாறு அந்த ஏழு நூற்பாக்களுக்கும் (நன். 64-70), "இதுவும் அது." என்று நமச்சிவாயர் கருத்துரை எழுதுவார். இதுபோல ஒரே வகை விதிகளைக் குறிக்கும் நூற்பாக்களுக்கும் (நன். 148-149; 156, 189-193) "இதுவும் அது." என்று அவர் கருத்துரை வரைவதுண்டு. இவ்வாறு காரணம் கருதி அவர் செய்துள்ள சிறுவேறுபாடுகளால் கருத்துரையின் விளக்கம் குறையவில்லை; அதன் பொது அமைப்பும் மாறிவிடவில்லை.

கருத்துரையின் பொருளடக்கத்தில் பொருள் விளக்கம், விதிகளின் வகை, நூற்பாக்களின் வைப்புமுறை முதலியன அடங்கியுள்ளன. கருத்துரைப் பகுதியில் "எ-ன், பலர்பாற்கு உரிய பெயர் உணர்த்துதல் நுதலிற்று." (நன். 278), "எ-ன், வேற்றுமைகள்தம் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று." (நன். 385) என்று நூற்பா நுதலும் பொருள்களை நமச்சிவாயர் விளக்கிவிடுவார். மற்றும் சில இடங்களில் சூத்திரத்தின் பொருளை இனம்காட்டும் "இத்துணைத்து" (நன். 57), "இன்னது" (நன். 58), "இலக்கணம்" (நன். 295) என்பன போன்ற கொளுச்சொற்களால் அவர் விளக்குவார். இந்த முறையினால் பொழிப்புரையைப் படிப்பதற்கு முன்பே சூத்திரத்தின் கருத்து ஓரளவு விளங்கிவிடும். நமச்சிவாயர் ஒவ்வொரு சூத்திரத்துக்கும் கருத்துரை எழுதியதன் நோக்கம் இதுவாக இருக்கலாம்.

கருத்துரையில் விதிகளின் இயல்பையும் நூற்பாக்களின் இயைபையும் நமச்சிவாயர் எடுத்துக்காட்டுவார். அதற்கு "எகர வினாமுச் சுட்டின்" (நன். 163) என்னும் நூற்பாவின் கருத்துரை ஒப்பற்ற உதாரணம். அந்நூற்பாவின் கருத்தை "எ-ன், இஈ ஐவழி (நன். 162) என்னும் சூத்திரத்தானும் எண்மூ எழுத்தீற்று (நன். 158) என்னும் சூத்திரத்தானும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று." என்று இரண்டு நூற்பாக்களை மேற்கோள் காட்டி அவர் விளக்குவார். "இஈ ஐவழி" என்னும் நூற்பாவால் எய்தியது உடம்படுமெய்; "எண்மூ எழுத்தீற்று" என்னும் நூற்பாவால்

எய்தியது இயல்பாதல். இவ்விரு விதிகளையும் விலக்கி எகரவினா, முச்சுட்டு ஆகிய இடைச்சொற்கள்முன் உயிரும் யகரமும் வந்தால் வகரம் மிகும்; பிற மெய்கள் வந்தால் அம்மெய்யெழுத்துகள் மிகும்; செய்யுட்கண் சுட்டு நீண்டால் யகரம் மிகும் என்று இந்நூற்பா (நன். 163) கூறுவது பிறிதுவிதி. முந்தைய நூற்பாக்களால் எய்திய விதிகளோடு இந்த விதியைக் கருத்துரையில் இயைத்துக் காட்டுவது கற்பவர் நினைவுக்கு உரியது. இவ்வாறு விதி (நன். 344), பொதுவிதி (நன். 74), சிறப்புவிதி (நன். 147), புறனடை (நன். 88), இயல் புறனடை (நன். 239, 460), அதிகாரப் புறனடை (நன். 257, 461), நூல் புறனடை (நன். 462) என்று விதிகளின் இயல்பை நமச்சிவாயர் கருத்துரைகளில் தெளிவுபடுத்துவார்.

நூற்பாக்களின் வைப்புமுறையைக் கருத்துரையில் குறிப்பிடுவதும் உரைநெறி. நமச்சிவாயர் இந்நெறியைப் பல இடங்களில் கடைப்பிடித்துள்ளார். நிறுத்த முறை என்னும் உரைமரபுத் தொடரால் நூற்பாக்களின் வைப்புமுறையை அவர் சிறப்பாகப் புலப்படுத்துவார். அத்தொடரின் பன்முகப் பயன்பாடு இத்தலைப்பைத் தொடர்ந்து விரிவாக ஆராயப்படுவதால் இங்கு ஒரு தலைப்பில் உள்ள நூற்பாக்களின் வைப்புமுறையை அத்தொடர் விளக்குவதைப் பார்க்கலாம்.

முதல் வேற்றுமையைக் கூறும் நூற்பாவுக்கு "எ-ன், நிறுத்த முறையானே பெயர் வேற்றுமையது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று." (நன். 295) என்று நமச்சிவாயர் கருத்துரை எழுதுவார். இங்கு நிறுத்த முறை என்பது "பெயரே ஐஆல்" (நன். 292) என்று ஆசிரியர் பெயர் வேற்றுமையை முதலாவதாக வைத்துக் கூறிய முறையைக் குறிக்கிறது. இவ்வாறே மற்றும் சில கருத்துரைகளிலும் (நன். 331, 363, 412) வைப்புமுறையை அவர் விளக்குவார். இது தவிர மேல் (நன். 15), முன்னர் (நன். 382), முற் கூறிய (நன். 380), மேற் கூறிய (நன். 324), மேற் கூறிப் போந்த (நன். 325) போன்ற சொற்களும் தொடர்களும் பொருள் வைப்புமுறையை விளக்குவதற்குப் பயன்படுகின்றன. "பொதுவியல்பு ஆறையும்" (நன். 323) என்னும் நூற்பாவின் கருத்துரையில் உள்ள "மேற் கூறிய முற்று ஆமாறு" என்ற தொடர் இச்சூத்திரத்தை

அதற்கு முந்திய சூத்திரத்தோடு (நன். 322) தொடர்புபடுத்துகிறது; அவற்றின் வைப்புமுறையை விளக்குகிறது. இது போன்ற தொடர்களை இன்னும் சில கருத்துரைகளிலும் (நன். 15, 21, 129, 152, 382) காணலாம். கருத்துரை இலக்கண உரையின் தலைவாசல். அது நன்னூல் விருத்தியுரையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பொருள் விளக்கம், நூற்பாக்களின் இயல்பு, வைப்புமுறை ஆகியவற்றைக் கருத்துரைப் பகுதியில் நமச்சிவாயர் எடுத்துச்சொல்வது உரைத்திறனுக்கு நல்ல சான்று. மேலே குறிப்பிட்டதுபோல நிறுத்த முறை என்னும் இந்த உரைமரபுத் தொடரைச் சற்றே விரிவாக இனி ஆராயலாம்.

நன்னூலின் பொருளடைவு

தொல்காப்பியத்துக்குப் பின்னர்த் தமிழில் தோன்றிய நன்னூல் உள்ளிட்ட பெரும்பாலான இலக்கணங்கள் அதன் வழிநூல்களே. வழிநூலின் ஆசிரியர் **"முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி"**த் (தொல். சிற. பாயி.) தமது நூலின் அமைப்பைத் திட்டமிட வேண்டும். ஒரு நூலின் அமைப்புத் திட்டம் முறையாக அமைந்தால்தான் அதன் உருவாக்கம் சிறக்கும்; அதன் கட்டமைப்பு மேம்படும். பவணந்தி முனிவர் இந்த நூல்மரபை உணர்ந்த இலக்கண மேதை. அதனால் தமது நூலின் பொருளமைதி, அதிகாரம், இயல், நூற்பா ஆகியவற்றின் வைப்புமுறை, விதிகளின் தொடரியைபு, கருத்துகளின் ஒழுங்கு, வரிசை முதலியவற்றை அவரால் நிரல்படத் தொகுத்துக் கூற முடிந்தது. தொல்காப்பியத்தையும் இளம்பூரணர் உரையையும் கற்றுத் தெளிந்த பவணந்தி முனிவருக்கு இந்த நூலாக்கத் திறன் வாய்த்திருந்ததில் வியப்பு எதுவும் இல்லை.

நூலின் தொடக்கத்தில் அதன் அமைப்பைத் தொகுத்துக் கூறுவது நூல்மரபு. **"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு"** என்று யாப்பருங்கலமும் (நூ. 1) **"எழுத்தசைசீர், பந்தம் அடிதொடை பாவினம் கூறுவன்"** என்று யாப்பருங்கலக் காரிகையும் (பாயி.) நூலின் அமைப்பையும் பொருள்களின் வரிசைமுறையையும் தொடக்க நூற்பாக்களில் தொகுத்துக் கூறுகின்றன. பவணந்தி முனிவர் இந்த நூல்மரபை அறிந்தவர். அதனால் அவரும் தம்முடைய நூல் நுதலும் பொருள்களைச்

சில நூற்பாக்களில் தொகுத்துக் கூறியுள்ளார். பாயிரப் பகுதியில் **"நூலே நுவல்வோன்"** (நன். 3) என்னும் நூற்பாவில் பொதுப் பாயிரக் கருத்துகள் வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. **"நூலின் இயல்பே"** (நன். 4) எனத் தொடங்கும் அடுத்த நூற்பாவில் பாயிர வகை, நூல்களின் வகை, நாற்பொருட் பயன், எழுவகை மதம், குற்றம் பத்து, அழகு பத்து, எண்ணான்கு உத்தி, ஓத்து, படலம், சூத்திரம், காண்டிகை, விருத்தி என்று நூலின் இயல்பு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டு நூற்பாக்களில் பொதுப் பாயிரக் கருத்துகளின் வைப்புமுறை நிரல்பட விளக்கப்பட்டுள்ளது. இதுபோலவே,

> **"எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை**
> **முதல்ஈறு இடைநிலை போலி என்றா**
> **பதம் புணர்பு எனப்பன் னிருபாற்று அதுவே"**

(நன். 57) என்னும் நூற்பா எழுத்ததிகாரப் பொருள்களைத் தொகுத்துள்ளது. எண் முதலாகப் போலி ஈறாக உள்ள பத்தும் எழுத்தியலிலும் பதவியலில் பதமும் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் மூன்று இயல்களிலும் புணர்பு என்னும் புணர்ச்சியும் கூறப்பட்டுள்ளன. **"ஓத்துமுறை வைப்பு"** (நன். 14) என்னும் உத்தியின்படி இந்த வைப்புமுறை அமைந்துள்ளது என்று நமச்சிவாயர் (நன். 58) இதனை விளக்கியுள்ளார்.

எழுத்ததிகாரத்தின் பொருள்களை ஒரே நூற்பாவில் அடக்கிக் கூறியதுபோல் சொல்லதிகாரத்தின் பொருளடைவைப் பவணந்தி முனிவர் தொகுத்துக் கூறவில்லை. ஆனால்,

> **"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
> **இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
> **மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
> **வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"**

(நன். 259) என்னும் சொல்லின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவிலும்,

> **"அதுவே**
> **இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை**
> **எனஇரண்டு ஆகும் இடைஉரி அடுத்து**
> **நான்குமாம் திசைவட சொல்அணு காவழி"**

(நன். 270) என்னும் சொல்லின் பாகுபாடு உணர்த்தும் நூற்பாவிலும் சொல்லதிகாரத்தின் பொருள்களை ஓரளவு தொகுத்துக் கூறுவார்.

எழுத்ததிகாரத்துக்குக் கூறியதுபோல ஆசிரியர் சொல்லதிகாரப் பொருளடைவை முறையாகக் கூறாததை நமச்சிவாயர் உணர்ந்து, சில நூற்பாக்களின் கருத்துரைகளில் அதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். மொழியின் வகை (நன். 260), திணை (நன். 261), பால் (நன். 262), இடம் (நன். 265), வழக்கு (நன். 267), செய்யுள் (நன். 268), வெளிப்படை, குறிப்பு (நன். 269) ஆகியவற்றைக் கூறும் நூற்பாக்களின் கருத்துரைகளில் நிறுத்த முறை என்னும் உரைமரபுத் தொடரால் பெயரியலின் தொடக்கப் பகுதி நூற்பாக்களின் வைப்புமுறையை அவர் விளக்கியுள்ளார். இதுபோலவே திசைச்சொல்லைக் கூறும் நூற்பாவின் கருத்துரையில் "நிறுத்த முறையானே இயற்சொல், திரிசொல் என்றவற்றின் பின் நின்ற அவ்வியல்பின ஆய பெயர் வினை இடை உரிகளை இவ்வியலுள் **இடுகுறி காரணம்** (நன். 275) என்னும் சூத்திரம் தொட்டு இவ்வதிகாரத்து ஐந்தியலானும் உணர்த்த நிறீஇ'' (நன். 273) என்றும் பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் கருத்துரையில் "இவ்வதிகாரத்து ஐந்து இயலானும் உணர்த்த நிறீஇய பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கனுள் பெயர் இலக்கணம் உணர்த்துவான் தொடங்கி அதன் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று." (நன். 275) என்றும் அவர் சொல்லதிகார வைப்புமுறையை விளக்கியுள்ளார்.

இதே முறையில் வினையின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் (நன். 320) கருத்துரையில் "**பெயர்வினை என இரண்டு ஆகும்** (நன். 270) என நிறுத்த முறையானே வினைச்சொல் இலக்கணம் உணர்த்துவான் தொடங்கி" என்றும் இடைச்சொல்லின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் கருத்துரையில் "**இடைஉரி அடுத்து நான்குமாம்** (நன். 270) என நிறுத்த முறையானே இடைச்சொல் இலக்கணம் இவ்வியலான் உணர்த்துவான் தொடங்கி" (நன். 420) என்றும் உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் கருத்துரையில் "நிறுத்த முறையானே உரிச்சொல் இலக்கணம்

இவ்வியலான் உணர்த்துவான் தொடங்கி" (நன். 442) என்றும் அவர் உரை வரைந்துள்ளார். இந்த நூற்பாக்கள் மூன்றையும் (நன். 320, 420, 442) **"அதுவே, இயற்சொல்"** (நன். 270) என்னும் நூற்பாவோடு இயைத்துக் காட்டிப் பவணந்தி முனிவரின் வைப்புமுறையை நமச்சிவாயர் விளக்கும் திறன் விருத்தியுரைக்குச் சிறப்பு. பொதுவியலின் வைப்புமுறைக்கு நேரிய விளக்கம் கூறினாலும் (நன். 352) நிறுத்த முறை என்னும் மரபுத்தொடரை அவர் பயன்படுத்தாத நுட்பம் அறியத் தக்கது. சொல்லதிகாரப் பொருளடைவைப் பவணந்தி முனிவர் ஒரே நூற்பாவில் முறையாகக் கூறவில்லை. என்றாலும் அதன் பொருளடைவு பல நூற்பாக்களில் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. நமச்சிவாயர் இந்த உண்மையை நிறுத்த முறையானே என்ற தொடரால் வெவ்வேறு நூற்பாக்களின் கருத்துரைகளில் எடுத்துக்காட்டியுள்ளார்.

நிறுத்த முறை

நிறுத்த முறை என்பது ஒரு உரைமரபுத் தொடர். நக்கீரர் (இறை. 3), யாப்பருங்கல உரையாசிரியர் (யா. வி. 13), இளம்பூரணர் (தொல். நூன். 30), சேனாவரையர் (தொல். கிளவி. 1), மயிலைநாதர் (நன். 61), நச்சினார்க்கினியர் (தொல். நூன். 30) முதலிய உரையாசிரியர்கள் பலரும் இந்த மரபுத் தொடரைப் பயன்படுத்தியுள்ளனர். நிறுத்திய முறை அல்லது வைத்த முறை என்பது இத்தொடருக்குப் பொருள். பாரித்த முறை என்று யாப்பருங்கல உரையாசிரியரும் (நூ. 11) வைத்த முறை என்று மயிலைநாதரும் (நன். 90) முறை என்று நச்சினார்க்கினியரும் (தொல். எச்ச. 17) இதனைக் குறிப்பதுண்டு. நன்னூல் விருத்தியுரையில் ஏறக்குறைய முப்பத்தைந்து இடங்களில் இத்தொடரை நமச்சிவாயர் பயன்படுத்தியுள்ளார். உரையாசிரியர்களில் வேறு யாரும் இவ்வளவு மிகுதியாக இத்தொடரைப் பயன்படுத்தவில்லை எனலாம்.

நிறுத்த முறையின் பயன்பாடு

நன்னூலில் "முறையின் வைப்பு" (நன். 13) என்னும் நூலழகு அமைந்துள்ள பாங்கினைப் புலப்படுத்தும் நோக்கமே இத்தொடரின் பயன்பாட்டுக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

பவணந்தி முனிவர் எழுத்ததிகாரத்தின் பகுதிகளைத் தொகுத்துக் கூறியதை "மொழிமுதற் காரணமாம்" (நன். 58) என்னும் நூற்பாவின் கருத்துரையில் "பன்னிருபாற் றதுவே (நன். 57) என்றவற்றுள் எழுத்தினது அகத்திலக்கணமாகிய பத்தையும் ஓர் இயலாகவும் அதன் புறத்திலக்கணமாகிய பதம், புணர்பு என்னும் இரண்டனுள் அவ்வெழுத்தான் ஆகும் பதத்தை ஓர் இயலாகவும் அப்பதம் புணரும் புணர்ப்பை மூன்று இயலாகவும் ஒத்துமுறை வைப்பு என்னும் உத்தியான் வைக்கப் புகுந்து, முதற்கண் வைத்த எழுத்தியலில் எழுத்தினது எண்ணினை நிறுத்த முறையான் உணர்த்துவான் தொடங்கி" என்று நமச்சிவாயர் வகைப்படுத்தி விளக்கியுள்ளார். நிறுத்த முறை என்று இந்நூற்பாவில் கூறியது போலவே பெயர் (நன். 62), முறை (நன். 73), பிறப்பு (நன். 74), உருவம் (நன். 98), மாத்திரை (நன். 99), முதல் (நன். 102), ஈறு (நன். 107), இடைநிலை (நன். 110), போலி (நன். 122) பற்றிய நூற்பாக்களின் கருத்துரைகளிலும் இந்த மரபுத்தொடரை நமச்சிவாயர் குறித்துள்ளார். எழுத்தின் புறத்திலக்கணமாகிய பதம் ஓர் இயலாகவும் பதம் புணரும் புணர்ச்சி மூன்று இயல்களாகவும் வைக்கப்பட்டன என்று உரை எழுதியதற்கு (நன். 58) ஏற்பப் பதவியல், உயிரீற்றுப் புணரியல் ஆகியவற்றின் முதல் நூற்பாக்களின் கருத்துரைகளிலும் (நன். 128, 151) நிறுத்த முறை என்ற மரபுத்தொடரை அவர் பயன்படுத்தியுள்ளார். ஆனால் மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் ஆகியவற்றின் முதல் நூற்பாக்களின் உரைகளில் அவர் இந்தத் தொடரைப் பயன்படுத்தவில்லை. அது அவரது உரைத்திறன். நூல் நுதலும் பொருள்களையும் நூற்பாக்களையும் ஆசிரியர் அமைத்துள்ள வைப்புமுறையை நிறுத்த முறை என்னும் மரபுத்தொடரால் உரையாசிரியர் வலியுறுத்துவதற்குச் சில காரணங்கள் உண்டு.

நூற்பாக்களின் வைப்புமுறை நூலாசிரியரால் அறிந்தே வைக்கப்பட்டது என்பதை மாணவர்க்கு அறிவுறுத்துவது தலையாய காரணம். எண், பெயர், முறை முதலியவற்றின் பொருளடைவைக் கற்பவர் அடிமனத்தில் வரிசைமுறையில் பதிய வைப்பது இரண்டாவது காரணம். இதனைச் சிறிது விளக்க வேண்டும். எழுத்தின் உருவத்தைக் கூறும் நூற்பாவும் (நன். 98) அதன் மாத்திரையைக் கூறும் நூற்பாவும் (நன். 99)

அடுத்தடுத்து முறைப்பட அமைந்துள்ளன. எழுத்திலக்கணத்தின் பொருளடைவைக் கூறும் நூற்பாவிலும் (நன். 58) உருவம், மாத்திரை என்று அடுத்தடுத்து இருப்பதால் இந்த வரிசை முறையை மனத்தில் பதிய வைத்துக்கொள்வது எளிது. ஆனால் எழுத்திலக்கணத்தின் பொருள்கள் பத்தும் பத்து நூற்பாக்களில் ஒன்றை அடுத்து ஒன்றாகத் தொடர்ந்து அமையவில்லை. எழுத்தின் பெயரைக் கூறும் சூத்திரத்துக்கும் (நன். 63) அதன் முறையைக் கூறும் சூத்திரத்துக்கும் (நன். 73) இடையே ஒன்பது சூத்திரங்கள் உள்ளன. அதுபோலவே எழுத்தின் பிறப்பைக் கூறும் சூத்திரத்துக்கும் (நன். 74) அதன் உருவத்தைக் கூறும் சூத்திரத்துக்கும் (நன். 98) இடையே இருபத்துமூன்று சூத்திரங்கள் உள்ளன. இவ்வாறு ஒரு தலைப்பின்கீழ் வரும் சூத்திரங்கள் அனைத்தையும் வரிசைமுறையில் அடைவுசெய்து மனத்தில் பதிவுசெய்துகொள்வது எளிது அல்ல. எழுத்தின் பெயரைக் கூறும் சூத்திரங்களின் இறுதிச் சூத்திரத்தை (நன். 72) அடுத்து வரும் நூற்பாவின் (நன். 73) கருத்துரையில் "நிறுத்த முறையானே முறை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று." என்பதைப் படிக்கும்போதே எழுத்தின்பெயர் என்னும் தலைப்பு நிறைவுற்றுவிட்டது; முறை என்னும் அடுத்த தலைப்பு தொடங்கிவிட்டது என்பது தெற்றென விளங்கும். ஒரே வரியில் சொன்னால் நிறுத்த முறை என்னும் மரபுத்தொடர் இரண்டு தலைப்புகளைப் பிரிக்கும் எல்லைக்கோடாக இங்கே செயல்படுகிறது. தலைப்புகளைப் பிரித்துக் காட்டுவதற்கு மயிலைநாதர் நிறுத்த முறையானே என்று எழுதுவதோடு நூற்பாவின் உரைமுடிவில் "முறை முற்றும்." (நன். 72), "உருவம் முற்றும்." (நன். 97) என்று எழுதுவதும் அவரது உரைநெறி.

இந்த மரபுத்தொடரின் பயன்பாட்டுக்கு இன்னொரு காரணம் மனப்பாடக் கல்விமுறை. இலக்கணம் என்பது மூலமும் உரையும். மூலபாடத்தை மனப்பாடம் செய்வதுபோல உரைப்பாடத்தையும் மனனம் செய்வது தொல்மரபு. இவ்வாறு மனனப் பயிற்சி செய்வோர்க்கு எழுத்தின் அகத்திலக்கணப் பகுதிகள் பத்தையும் வரிசைமுறை பிறழாமல் மனனம் செய்வதற்கு,

"எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதலீறு இடைநிலை போலி என்றா"

(நன். 57) என்ற இரண்டு வரிகள் போதும். ஆனால் எண்ணின் பகுதிக்கு ஏழு நூற்பா, பெயர்ப் பகுதிக்குப் பத்து நூற்பா, பிறப்புப் பகுதிக்கு இருபத்து நான்கு, இடைநிலைப் பகுதிக்குப் பன்னிரண்டு, போலிக்குப் பத்து என்று நூற்பாக்களை விரல் விட்டு எண்ணி மனத்தில் நிறுத்திக்கொள்ள அந்த இருவரிகள் போதா. மூலத்தையும் உரையையும் ஒருவர் மனப்பாடம் செய்திருந்தால் நிறுத்த முறையானே என்ற தொடர் நினைவுக்கு வந்தவுடன் இது ஒரு புதிய பொருட்பகுதியின் தொடக்கம் என்பது சட்டென விளங்கிவிடும். ஆகவே ஒரு பகுதிக்குரிய நூற்பாவை இன்னொரு பகுதியில் சேர்க்காமலும் வரிசைமுறை பிறழாமலும் நினைவில் வைத்துக்கொள்வதற்கு இந்த உரைமரபுத் தொடர் ஒரு குறியீடாகச் செயல்படுகிறது.

சங்கர நமச்சிவாயர் இந்த மரபுத்தொடரை வேறு ஒரு வகையிலும் பயன்படுத்தியுள்ளார். தொகைநிலைத் தொடர்மொழி தொகாநிலைத் தொடர்மொழிகளை விளக்கும் நூற்பாவில் **"வேற்றுமை முதலிய பொருளின்"** (நன். 361) என்று பவணந்தி முனிவர் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரை முதலாவதாக வைத்துள்ளார். அடுத்த நூற்பா தொகைநிலைத் தொடர்மொழிகளை வகைப்படுத்துகிறது. அதற்கு அடுத்த நூற்பா வேற்றுமைத் தொகையை விளக்குகிறது. இந்த நூற்பாவுக்கு "நிறுத்த முறையானே வேற்றுமைத்தொகை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று." (நன். 363) என்று நமச்சிவாயர் கருத்துரை எழுதியுள்ளார். சொல்லதிகாரத்தின் பொருளடைவைக் குறிப்பதற்காக அவர் இந்த மரபுத்தொடரை இங்கே பயன்படுத்தவில்லை. தொகைநிலைத் தொடர் என்னும் தலைப்பில் உள்ள நூற்பாக்களின் வைப்புமுறையைக் குறிக்கவே இந்தத் தொடர் இங்கே பயன்பட்டுள்ளது. இதுபோலவே பொருள்கோள் என்னும் தலைப்பில் அமைந்துள்ள நூற்பாக்களின் வைப்புமுறையை விளக்குவதற்கும் நிறுத்த முறையானே என்ற தொடரை நமச்சிவாயர் (நன். 412) பயன்படுத்தியுள்ளார். ஆகவே ஒரு பொருள் தலைப்பை விளக்கமாகக் கூறும் நூற்பாக்களின் வைப்புமுறையை

எடுத்துக்காட்டும் நோக்கத்துக்காகவும் இந்த மரபுத்தொடரை அவர் பயன்படுத்துவது பெறப்படுகிறது.

வேற்றுமைத்தொகையைக் கூறும் நூற்பாவின் கருத்துரையில் (நூ. 363) நமச்சிவாயர் நிறுத்த முறை என்னும் மரபுத்தொடரைப் பயன்படுத்தியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தொகைகள் ஆறு என்பது தொல்காப்பியருக்கும் (தொல். எச்ச. 16) பவணந்தி முனிவருக்கும் (நன். 362) உடன்பாடு. ஆனால் அவற்றின் வரிசைமுறையில் அவர்கள் இருவரும் மாறுபட்டுள்ளனர். வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பது தொல்காப்பியரின் வரிசைமுறை; வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பது பவணந்தி முனிவரின் வரிசைமுறை. இந்த வரிசைமுறைகளில் உள்ள நுண்ணிய வேறுபாட்டை எடுத்துக்காட்டும் நோக்கத்தில் இந்த மரபுத்தொடரை அந்நூற்பாவின் கருத்துரையில் (நன். 363) நமச்சிவாயர் எழுதியுள்ளார் என்பது பொருந்தக் கூடியதே. இலக்கண உரைகளில் பயின்று வரும் இந்த உரைமரபுத் தொடரின் பயன்பாட்டுக்கு வேறு சில காரணங்களும் இருக்கும். பழைய உரைகளில் இத்தொடர் பயன்படும் இடங்கள் அனைத்தையும் திரட்டி ஒப்பிட்டு ஆராய்ந்தால் அதற்குரிய மற்ற காரணங்களையும் கண்டறிந்து விளக்க முடியும் என்பது உறுதி.

பொழிப்புரை

கருத்துரைக்கு அடுத்து அமைவது பொழிப்புரை. சிறப்புப் பாயிரம் நீங்கலாக மற்ற நூற்பாக்கள் எல்லாவற்றுக்கும் நமச்சிவாயர் பொழிப்புரை வரைந்துள்ளார். சிறப்புப் பாயிரத்தின் அடியளவு கருதி அதற்கு மட்டும் அவர் பதவுரை வரைந்திருக்கக் கூடும். பொருளதிகாரத்தில் இளம்பூரணர் சில நூற்பாக்களுக்கு உரை எழுதாமல் “இது சூத்திரத்தால் பொருள் விளங்கும்” (தொல். கற்பு. 16, 17) என்று கூறுவார். நன்னூல் பாயிரப் பகுதிக்கு மயிலைநாதர் மிகவும் சுருக்கமாகவே உரை எழுதியுள்ளார். அவ்வாறு தாம் எழுதியதற்கு “இப்பாயிரச் சூத்திரங்களை விரித்து எழுதின் பரக்கும் என்பதனானும்

பெரும்பாலும் தாமே பொருள் விளங்கிக் கிடத்தலானும் உரை விரித்து எழுதிற்றிலம்; இவற்றை விளங்க விரித்து உரைத்துக்கொள்க." என்று மயிலைநாதர் (நன். 54) காரணம் கூறியுள்ளார். இந்த உரைநெறியை நமச்சிவாயர் பின்பற்றவில்லை. அவர் நன்னூல் சூத்திரங்கள் அனைத்துக்கும் பொழிப்புரை வரைந்துள்ளார்.

பொழிப்புரையின் அமைப்பு

சூத்திரத்தின் செய்யுள் நடையை மாற்றி உரைநடையில் உரைப்பதே பொழிப்புரை. நமச்சிவாயர் வரைந்துள்ள பொழிப்புரை இதற்கு இலக்கியமாகத் திகழ்கிறது. பொழிப்புரை வரைவதில் சுருக்கம், விளக்கம், நூற்பாவின் கிடக்கைமுறை, மொழிநடை, தொகைக்குறிப்பு முதலியவற்றை அவர் கருத்தில் கொண்டுள்ளார். விருத்தியுரையில் உள்ள பொழிப்புரையைப் படித்தவர்களுக்கு இந்த உண்மை விளங்கும். என்றாலும் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

> **"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
> **அஃகிய இஉ ஐஔ மஃகான்**
> **தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்"** (நன். 60)

என்னும் நூற்பாவுக்கு "இப்பத்தும் சார்பெழுத்தாம்" என்று அவர் சுருக்கமாகப் பொழிப்புரை வரைந்துள்ளார்.

> **"சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே"** (நன். 251)

என்னும் ஒரு வரி நூற்பாவுக்கு "அஃது, இஃது, உஃது என வரும் மூன்று சுட்டுப்பெயர்களோடு உருபுகள் புணரும் இடத்து இடையே அன் சாரியை வரின் மொழிமுதல் சுட்டெழுத்துக்கள் மூன்றின் முன் நின்ற ஆய்தம் கெடும்" என்று அவர் சிறிது விளக்கமாக உரை எழுதுவார்.

> **"பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த**
> **நான்முகன் தொழுதுநன்கு இயம்புவன் எழுத்தே"**
> (நன். 56)

என்னும் நூற்பாவுக்குப் "பூக்கள் மலிந்த அசோகமரத்தினது அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு

திருமுகங்களை உடைய கடவுளை வணங்கி நன்றாகச் சொல்லுவன் எழுத்திலக்கணத்தை'' என்று நூற்பாவின் கிடக்கைமுறையிலேயே பொழிப்புரையும் அமைந்துள்ளது. இறைவணக்கம் என்னும் பொருளமைதிக்கு ஏற்றவாறு, **"எழுந்தருளியிருந்த... திருமுகங்கள்"** என்று பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

> "எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நன். 388)

என்னும் சூத்திரத்தின் சொல்லமைதிக்கு ஏற்ற மொழிநடையில் "யாதொரு பொருளை யாதொரு சொல்லான் யாதொரு நெறியான் அறிவுடையோர் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லான் அந்நெறியான் சொல்லுதல் மரபாம்" என்று வரைந்துள்ள பொழிப்புரையை ஒரு முறைக்குப் பல முறையாகப் படித்துச் சுவைக்கலாம்.

தொகைக்குறிப்பு

நூலாசிரியர்,

> "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" (நன். 59),
>
> "ஆறும் தருவது வினையே" (நன். 320),
>
> "வினைபெயர் குறிப்பிசை எண்பண்பு ஆறினும்" (நன். 424)

என்று மூலநூற்பாக்களில் முப்பது, ஆறு என்னும் தொகைக்குறிப்புச் சொற்களைக் குறிப்பிடுவது நூல்மரபு. இந்த நூற்பாக்களின் பொழிப்புரைகளில் "உயிரும் உடம்பும் ஆகும் முப்பது எழுத்தும் முதலெழுத்தாம்" (நூ. 59), "அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச்சொல்" (நூ. 320), "வினைப்பொருள் முதலிய ஆறுபொருளினும் வரும்" (நூ. 424) என்று நூலாசிரியர் குறிப்பிட்ட தொகைக்குறிப்பு மொழிகளைப் பொழிப்புரையில் நமச்சிவாயரும் தவறாமல் குறிப்பிடுவார். இது உரைநெறி. இவ்வாறன்றி,

> "விழைவே காலம் ஒழியிசை தில்லே" (நன். 431),
>
> "வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே" (நன். 433),
>
> "கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே" (நன். 435)

என்று தொகைக்குறிப்புச் சொற்கள் இல்லாமல் அமைந்துள்ள நூற்பாக்களும் நன்னூலில் கணிசமாக உண்டு. இத்தகைய நூற்பாக்களுக்கும் "இம்மூன்று பொருளையும் தரும்" (நூ. 431, 435), "இவ்விரண்டு பொருளையும் தரும்" (நூ. 433) என்று தொகைமொழிகளை வருவித்து அவர் உரை கூறுவார். இந்நெறிபற்றி இங்கே கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டும்.

தொகைக்குறிப்பு - ஒரு நூல்நடை

இலக்கணக் கருத்துகளை ஐயத்துக்கு இடமின்றி, இத்தனை என்று அறுதியிட்டுக் கூறும்போது அவற்றின் தொகையைக் குறிப்பிடுவது நூலாசிரியர்கள் கடைப்பிடிக்கும் வழக்கம். இதற்கு,

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப" (தொல். நூன். 1)

"உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" (நன். 59)

"அஇஉ எஒ என்னும்
அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப" (தொல். நூன். 3)

"அஇ உஎ ஒக்குறில் ஐந்தே" (நன். 64)

என்பன போன்ற நூற்பாக்கள் நல்ல உதாரணங்கள். தொகை (தொல். இடை. 42) என்னும் பல பொருள் ஒரு சொல்லைத் தொல்காப்பியர் (இடை. 39) தொகுதி என்றும் குறிப்பிடுவார். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் தொகைச்சொல் பெற்ற நூற்பாக்கள் நூற்றுக் கணக்கில் காணப்படுகின்றன. இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலம் போன்ற சிறப்புவகை இலக்கணங்களிலும் இத்தகைய நூற்பாக்களுக்குக் குறைவு இல்லை. இந்த நூல்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் தொகையைக் குறிக்க வரும் எண்ணுப்பெயர்களையும் விளக்கத் தவறவில்லை. காட்டாக **"ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே"** (இறை. 3) என்ற தொடரின் உரைப் பகுதியில் "ஆங்க என்பது அசைச்சொல்; இரண்டு என்பது தொகை;" என்று நக்கீரர் பதவிளக்கம் தருவார். மற்றொரு நூற்பாவில்

"ஆங்கவ் வாறே அவ்வயிற் பிரிவே" (இறை. 35) என்ற தொடருக்கு "ஆங்கு அசைச்சொல்; ஆறு அவற்றது தொகை;" என்று அவர் பதவுரை கூறுவார். இது போன்ற குறிப்பு வேறு சில நூற்பாக்களின் (இறை. 39, 56) பதவுரைகளிலும் காணப்படுகிறது. உழிஞைத் திணையை "அதுவே தானும் இருநால் வகைத்தே" (தொல். புறத். 9) என்று தொகை கொடுத்து வரையறுத்த தொல்காப்பியர் அதன் துறைகளைத் தொகுத்துக் கூறும் அடுத்த நூற்பாவில் "சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே" (தொல். புறத். 10) என்று மீண்டும் தொகை கொடுத்துள்ளார். கூறியது கூறலாகத் தோன்றும் இப்பகுதிக்குப் "பதினெட்டு, இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்தும் தொகை கூறினார். இது கூறியது கூறல் அன்று; தொகை." என்று இளம்பூரணர் (தொல். புறத். 10) அமைதி கூறுவார். ஆயினும் இந்த உரைக் குறிப்புகள் எல்லாம் தொகைச் சொற்களின் வழக்காற்றைத் துல்லியமாக விளக்கவில்லை.

யாப்பருங்கல விருத்தியில் இந்தத் தொகை வழக்காறு பற்றி நல்லதொரு விளக்கம் காணப்படுகிறது.

"வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனப்
பண்பாய்ந்து உரைத்த பாநான்கு ஆகும்" (யா. 55)

என்னும் நூற்பாவின் உரையில் "நான்கு என்றது என்னை? அவ்வெண்ணேகாரத்தால் எண்ணப்பட்ட நான்கும் என்பது பெறலாம் அன்றோ எனின் ஆம். ஆயினும் அது நூல்நடை எனக் கொள்க.

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன்று என்ப மன்னைச் சொல்லே (தொல். இடை. 4)

ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற்கு உற்றுழி பொருட்பிணி பரத்தையென்று
ஆங்கவ் வாறே அவ்வயிற் பிரிவே (இறை. 35)

எனப் பிறரும் சொன்னார் ஆகலின்." என்று முன்மாதிரிச் சான்றுகளைக் காட்டி அச்சொல் விருத்தியுரை ஆசிரியரால் விளக்கப்பட்டுள்ளது. இளம்பூரணர் (தொல். நூன். 1; புறத். 10), மயிலைநாதர் (நன். 60) போன்ற உரையாசிரியர்களும்

தொகை, வகை, விரிபற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அது நூல்நடை என்று யாப்பருங்கல உரையாசிரியரைப் போல அவர்கள் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

பவணந்தி முனிவர் குறிப்புச் சொல்லையும் வெளிப்படைச் சொல்லையும் விளக்கும் நூற்பாவில் "முதல்தொகை குறிப்போடு" (நன். 269) என்னும் தொடரால் குறிப்புச் சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். சங்கர நமச்சிவாயர் "முதல் குறிப்புச் சொல், தொகைக்குறிப்புச் சொல், பல ஆற்றானும் வரும் குறிப்புச்சொல்" என்று மூன்றாகப் பிரித்து அதற்கு உரை கூறுவார். இத்தொடருக்கு இன்னும் சற்று விரிவாக "முதல் நிற்கும் எழுத்து மாத்திரமும் மொழி மாத்திரமும் காட்டி நிற்கும் மொழிகளும் பொருள் தொகையைத் தோற்றி நிற்கும் மொழிகளும் குறிப்பாய் வரும் மொழிகளுடன்" (நன். 268) என்று மயிலைநாதர் பொருள் கூறுவார். இம்மூன்றில் தொகைக்குறிப்புச் சொல் என்பதே நமது தலைப்புடன் நேரடித் தொடர்புள்ளது. அதற்கு,

> "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட" (புறம். 2:13-14)

> "ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
> வென்று களங்கொண்ட வேல்வேந்தே - சென்றுலாம்
> ஆழ்கடல்சூழ் வையகத்துள் ஐந்துவென்று ஆறகற்றி
> ஏழ்கடிந்து இன்புற்று இரு" (பு. வெ. 225)

என்னும் செய்யுள்களை அவர்கள் இருவரும் உதாரணங்களாகக் காட்டுவர். தொல்காப்பியம் (பெயர். 3), நன்னூல் (நூ. 269), இலக்கண விளக்கம் (நூ. 170) ஆகிய நூல்களும் அவற்றின் உரைகளும் குறிப்புமொழியைக் குறித்துக் கூறும் கருத்துகளில் ஒருமைப்பாடு இல்லை. மேலும் இந்நூற்பாவில் குறிக்கப்படும் தொகைக்குறிப்புக்கும் நூல்நடையாகக் கொள்ளப்படும் தொகைக்குறிப்புக்கும் நுண்ணிய வேறுபாடு உண்டு என்பதை மட்டும் சுட்டிக்காட்டிவிட்டு மீண்டும் நமது தலைப்புக்கு வருவோம்.

நமச்சிவாயர் "இருபான் மூன்றாம் ஈற்ற" (நன். 137), "ஒற்றுயிர் முதலீற்று உருபுகள்" (நன். 242), "சொல்லொழிபு

ஒன்பதும்" (நன். 360) என்ற தொடர்களை விளக்கும் இடங்களில் இத்தொகைபற்றிக் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் அவர் உரை இவ்வகைத் தொகைக்குரிய நேரடி விளக்கம் என்று சொல்ல முடியாது. உதாரணமாக "ஏவற்பொருளும் பகுதிப்பொருளும் தந்து நிற்கும் நட, வா முதலிய வாய்பாடுகளை எண்ணித் தொகுத்த இருபான்மூன்றாம் ஈற்ற என்னும் தொகை செய்யென் ஏவல் என்னும் பயனிலையோடும் செய்யென் வினைப் பகாப்பதம் என்னும் பயனிலையோடும் தனித்தனி முடிந்தன." (நன். 137) என்று அவர் அதன் வினைமுடிபையே கூறியுள்ளார். இன்னொரு நூற்பாவின் உரையிலும் (நன். 242) **"ஒற்றுயிர் முதலீற்று உருபுகள்"** என்ற தொடருக்கு நயவுரை கூறுகிறாரே தவிர **"நாற்பதாம் உருபே"** (நன். 240) என்பதன்கண் உள்ள தொகைக்குறிப்புக்குப் போதிய விளக்கம் தரவில்லை. மற்றொரு நூற்பாவின் உரையிலும் (நன். 360) சொல்லெச்சமே விளக்கப்படுகிறது; இவை எல்லாம் தொகைச்சொல்லுக்கு விளக்கம் அல்ல. எனவே யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் விளக்கியதுபோலப் **"பன்னீர் எழுத்தும் உயிர்"** (தொல். நூன். 8), **"பதினெண் எழுத்தும் மெய்"** (தொல். நூன். 9), **"ஈராறு ஆவி"**, **"மெய்ம்மூ ஆறு"** (நன். 63) என்று தொகைச்சொல்லோடு சூத்திரம் இயற்றுவது நூல்நடை என்று பிற உரையாசிரியர்கள் யாரும் விளக்கவில்லை.

நூலாசிரியர்கள் அறிந்து கையாண்ட இந்த நூல்நடையை உரையாசிரியர்களும் பொன்போலப் போற்றிக் காத்துவந்தனர். உதாரணமாக நன்னூல் மூலத்தில் இந்தத் தொகைவழக்கு ஏறக்குறைய நூற்றுமுப்பது நூற்பாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சங்கர நமச்சிவாயர் உரையிலோ இவ்வழக்கு முந்நூறுக்கு மேற்பட்ட இடங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இவ்வாறு நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் கையாண்ட நூல்நடை தொன்னெறி மரபு என்பது வெளிப்படை. இந்த மரபை அவர்கள் பேணிக் காத்ததற்குப் பழமை பாராட்டுவது ஒரு காரணமாக இருக்கக் கூடும். ஆனால் அது ஒன்று மட்டுமே இதற்குக் காரணம் அல்ல. வேறு காரணங்களும் உண்டு. அவற்றுள் சிறப்பான சிலவற்றைக் காணலாம்.

தொகைக்குறிப்பின் பயன்பாடு

உத்தி எனப்படும் நூற்புணர்ப்பைக் கொண்டிருப்பது நூலின் (நன். 4) இயல்பு. இலக்கண நூல்கள் தலைமைபற்றிக் கூறும் (தொல். மரபு. 112; யா. வி. 95; நன். 14) உத்திகள் முப்பத்திரண்டு. அவற்றுள் 'தொகுத்துச் சுட்டல்', 'வகுத்துக் காட்டல்' என்பனவும் அடங்கும். "எண்பெயர் முறைபிறப்பு" (நன். 57) என எழுத்திலக்கணத்தின் பன்னிரண்டு பகுதிகளைக் கூறும் நூற்பா தொகுத்துச் சுட்டலுக்கு நல்ல எடுத்துக்காட்டு. எண், பெயர், முறை, பிறப்பு முதலிய எழுத்திலக்கணப் பாகுபாடுகளைத் தொகுத்துக் கூறி அதன் இறுதியில் "எனப்பன் னிருபாற்று அதுவே" என்று பவணந்தி முனிவர் அவற்றின் தொகை பன்னிரண்டு என்பதையும் உடன் உணர்த்துவார். இந்நூற்பாவுக்கு "இப்பன்னிரு பகுதியினையும் உடைத்து அவ்வெழுத்திலக்கணம்" என்று மிகச் சுருக்கமாகச் சங்கர நமச்சிவாயர் பொழிப்புரை எழுதினார். எழுதியதோடு "இச்சூத்திரம் தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி; மேல் வருவன எல்லாம் வகுத்துக் காட்டல்" என்று அவர் விளக்கவுரையும் வரைவார். "மேல் வருவன எல்லாம்" என்ற தொடரினால் எழுத்ததிகார நூற்பாக்கள் அனைத்தையும் அவர் உள்ளடக்கிக் கூறுகிறார் என்பது அறிய வேண்டிய ஒன்று.

எழுத்திலக்கணத்தின் பகுதிகளுள் ஒன்று பெயர். எழுத்துகளுக்குப் பெயர் கூற வந்த பவணந்தி முனிவர்,

> "அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்
> மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்" (நன். 63)

என்று அவற்றின் தொகையைச் சுட்டிக் கூறுவார். இவ்வாறே "குறில் ஐந்தே" (நன். 64), "வல்லினம்... ஆறே" (நன். 68), "மெல்லினம்... ஆறே" (நன். 69), "இடையினம்... ஆறே" (நன். 70) என்று உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகியவற்றின் உட்பிரிவுகளுக்கும் ஆசிரியர் தொகையைச் சுட்டிச் சொல்வார். ஆயினும் குறில் ஐந்து என்றதுபோல நெடிலுக்கு (நன். 65) நூலாசிரியர் தொகையைக் குறிப்பிடவில்லை. ஆனால் உரையாசிரியர்கள் ஏழு என்னும் தொகையை முற்றும்மையோடு சேர்த்துக் கூட்டி "இவ்வேழும் நெட்டெழுத்தாம்" என்று

குறிப்பிட்டுள்ளனர். பவணந்தி முனிவர் "நாலாறும் ஈறே" (நன். 107), **"பகாப் பதம்பகு பதமென, இருபா லாகி இயலும் என்ப"** (நன். 128), **"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம், மூன்றும்"** (நன். 154) என்று வேறு பல நூற்பாக்களிலும் உட்பிரிவுகளுக்குத் தொகை கொடுத்துக் கூறுவார். இவை போன்ற தொகைச் சூத்திரங்களும் வகைச் சூத்திரங்களும் நன்னூலில் எங்கும் விரவிக் கிடக்கின்றன. எழுத்தெண்ணிப் படிக்க வேண்டிய பாடம் இலக்கணம். அதனால்தான் உரையாசிரியர்களும் தொகைக்குறிப்புகளைத் திரும்பக் கூறி விளக்கியுள்ளனர். தொகை வகைகளின் உட்பிரிவுகளைக் குறிக்கும் நூற்பாக்களில் உள்ள தொகைக்குறிப்புகளைக் கூடப் பேராசிரியர் (தொல். மரபு. 110), மயிலைநாதர் (நன். 60) போன்ற உரையாசிரியர்கள் பாகுபாடு செய்ய முற்பட்டுள்ளனர். இவற்றுக்கு எல்லாம் "தொகை என்பது தொகையுள் தொகையும் தொகையுள் வகையும் தொகையுள் விரியும், வகையுள் தொகையும் வகையுள் வகையும் வகையுள் விரியும், விரியுள் தொகையும் விரியுள் வகையும் விரியுள் விரியும் என ஒன்பது வகைப்படும்." (தொல். நூன். 1) என்று பாகுபாடு செய்த இளம்பூரணர் உரையே அடிப்படை என்று தோன்றுகிறது. எவ்வாறு ஆயினும் இலக்கண நூல்களில் பயின்று வரும் தொகைக்குறிப்புக்குத் தந்திரவுத்தி ஒரு காரணம் எனலாம்.

இலக்கணக் கோட்பாடுகளில் நூலாசிரியர்களுக்குள் முரண்பாடு இருப்பது இயல்பு. அவற்றைப் பற்றித் தமது நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமாகக் கூற நேரும்போது தொகைக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துவது ஆசிரியர்களின் வழக்கம். காட்டாகக் காலம் இல்லை என்பார் ஒரு சாரார். காலம் ஒன்று என்பாரும் காலம் இரண்டு என்பாரும் (நன். 381 மயிலைநாதர்) என்று ஆசிரியர் பல திறத்தினர். இதுபோலவே சார்பெழுத்து, வேற்றுமை, பொருள்கோள், ஏகார ஓகார இடைச்சொற்களின் பொருள் ஆகியவற்றின் தொகைகளிலும் ஆசிரியர் தம்முள் மாறுபடுவர். இந்த மாறுபாடுகளை நூலாசிரியர் முற்றாகக் களைந்து தம் துணிபு இது என்று அறுதியிட்டுக் கூற வேண்டும். இது "இருவர் **மாறுகோள் ஒருதலை துணிவு"** (நன். 11) என்னும் எழுவகை

மதங்களில் ஒன்று. இவ்வாறு தமது கோட்பாட்டை அறுதியிட்டுக் கூறும் நோக்கத்தில்தான்,

"வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" (நன். 291),

"இறப்புஎதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே" (நன். 382)

"பொருள்கோள் எட்டே" (நன். 411)

என்று தொகைக்குறிப்புச் சொல்லோடு தேற்ற ஏகாரமும் கொடுத்துப் பவணந்தி முனிவர் நூற்பாக்களை இயற்றியுள்ளார். இவ்வாறு ஒரு சில முரண்பாடுகளை எடுத்துக்காட்டியதனால் இலக்கண ஆசிரியர்களுக்குள் ஒருமைப்பாடே இல்லை என்று தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. எண்ணற்ற கோட்பாடுகளில் - விகாரம் மூன்று, முறைப்பெயர் இரண்டு, இருதிணை, ஐம்பால், தொகை ஆறு, எச்சம் பத்து போன்ற கோட்பாடுகளில் - அவர்களுக்குள் ஒருமைப்பாடு உண்டு. இவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் ஆசிரியர்களுக்குள் நிலவிய காரணத்தால்தான் முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்று இலக்கண நூல்களைப் பாகுபடுத்திப் பார்க்க முடிந்தது. நமச்சிவாயர் நூல்களுக்கு இடையே உள்ள உறவை "முதல் நூற்கு வழிநூலும் சார்பு நூலும் ' ஒருவற்கு மைந்தனும் மருமானும் போலும்." (நன். 8) என்ற அழகான உவமையால் விளக்கியுள்ளார். இங்கு இன்னொரு கருத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நூலாசிரியர் ஒருவருக்கு ஒருவர் முரண்படுவதற்குப் பல்வேறு காரணங்கள்- மொழியின் வளர்ச்சி, அதன் மாற்றம், பிற மொழித் தாக்கம், ஆசிரியர்களின் மரபுவழி, அவர்களின் அறிவாற்றல், ஆய்வுத்திறன் போன்ற பல்வேறு காரணங்கள்- இருந்தாலும் பொறாமையும் பூசலும் கடுப்பும் காழ்ப்பும் அதற்குக் காரணங்களாகச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் அவ்வாறு சொல்வதற்குப் போதிய சான்றுகளைப் பழைய உரைகளில் காண முடியவில்லை. மறுப்புரை என்ற தலைப்பில் இக்கருத்து மீண்டும் விரிவாக ஆராயப்படும். நிலைத்த முரண்பாட்டுக்கும் விவாதத்துக்கும் உள்ளான கோட்பாடுகளைப் பற்றித் தமது நிலைப்பாடு இது; தமது துணிபு இது என்று சுட்டிக்காட்டும் காரணத்துக்காக மூன்று, எட்டு என்னும் தொகைச் சொற்களைப் பவணந்தி முனிவர் பயன்படுத்தியுள்ளார். நூலாசிரியரைப்

பின்பற்றி இந்த நூற்பாக்களின் பொழிப்புரைப் பகுதிகளில் தொகைக் குறிப்புகளைச் சங்கர நமச்சிவாயர் தவறாமல் சுட்டுவதற்கும் இதுவே காரணம்.

தமிழ்க் கல்விமுறையின் ஆணிவேர் மனப்பாடம் என்பது தெரிந்தது. இதனைச்,

"செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்து அமைத்து" (நன். 40),

"ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலிற் பிழைபாடு இலனே" (நன். 42),

"முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்" (நன். 43)

என்ற நூற்பாக்களும்,

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" (பெருந்தொகை 275)

என்ற பழம்பாடலும் உறுதிப்படுத்தும். நூல் பயிற்சிக்குப்,

"பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்" (நன். 41)

என்பன கைமேல் பலன் தரும் வழிமுறைகள். இலக்கணக் கருத்துகளைக் கற்றும் கேட்டும் கற்பனை செய்தும் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். 'ஔகான் ஒன்றே' (நன். 61), 'ஆய்தம் இரண்டு' (நன். 61), 'தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம் மூன்று' (நன். 154), 'பெயர்வினை இடைஉரி நான்கு' (நன். 131), 'நூலே நுவல்வோன் நுவலும் திறனே கொள்வோன் கோடற் கூற்றாம் ஐந்து' (நன். 3), 'பகுதி விகுதி இடைநிலை சாரியை, சந்தி விகாரம் ஆறினும்' (நன். 133) என்பன போன்ற இலக்கணக் கருத்துகளை விரல்விட்டு எண்ணி, நெட்டுரு செய்து, ஒப்பித்துப் பார்த்து அசைபோட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவை கற்பவர் நெஞ்சிலும் நினைவிலும் பதியும். இந்தச் செய்முறைப்பயிற்சிக்கும் மனனப்பழக்கத்துக்கும் 'முறை இரண்டு' (நன். 282), 'விகாரம் மூன்று' (நன். 154), 'நான்கு அளவை' (நன். 368), 'குறில் ஐந்து' (நன். 64), 'தொகை ஆறு' (நன். 362), 'பகாப்பதம் ஏழு' (நன். 130), 'பொருள்கோள் எட்டு' (நன். 411), 'சொல்லொழிபு ஒன்பது' (நன். 360), 'ஐயிரு

குற்றம்' (நன். 4) என்று இவ்வாறு இலக்கணக் கருத்தோடு இணைந்து வரும் தொகைக்குறிப்புச் சொற்கள் பேருதவி புரிவன என்பது சொல்லாமலே விளங்கும். எனவே இலக்கண ஆர்வலர்களின் அடிமனத்திலும் அறிவுணர்விலும் இலக்கணத்தை ஆழப் பதிய வைக்கும் காரணத்தாலேயே தொல்லாசிரியர்கள் இந்தத் தொகைக்குறிப்புகளை நூலிலும் உரையிலும் பயன்படுத்தினார்கள். இதனோடு தொடர்புள்ள இன்னொரு தகவலும் உண்டு.

ஒரு நூற்பாவில் கூறிய கருத்தை வேறு ஒரு நூற்பாவில் குறிப்பிடுவது ஆசிரிய மரபு. கருத்துத் தொடர்புக்கும் விதிகளின் இயைபுக்கும் இத்தகைய குறுக்குக்குறிப்பு இன்றியமையாதது. இம்முறை நூலாசிரியரிடமும் உரையாசிரியரிடமும் காணப்படுகிறது. இதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு,

"பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே" (நன். 132)

என்னும் பதவியல் நூற்பா. இந்நூற்பாவில் பொருள், இடம், காலம் முதலிய ஆறன் அடியாகப் பெயர்ச்சொற்கள் தோன்றும் என்று பவணந்தி முனிவர் கூறினார். மற்ற இயல்களில் இந்த ஆறனையும் ஒரு தொகுதியாகக் குறிப்பிடும் நூற்பாக்களில் எல்லாம் (நன். 290, 301, 321, 377, 401) "பொருள்முதல் ஆறு" என்றே அவர் எடுத்தாளுவார். சங்கர நமச்சிவாயர் இத்தொடரைச் சிறிது மாற்றிப் "பொருளாதி ஆறு" என்று தமது உரையில் பல இடங்களில் (நன். 167, 276, 278, 279, 280, 290, 301, 321, 323, 328, 377, 401, 420, 424) எடுத்தாண்டுள்ளார். இவ்வாறு தொகைக்குறிப்போடு கூடிய ஒரு தொடரை அவர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்குச் சுருங்கச் சொல்லல் என்னும் நூலழகு மட்டும் காரணம் அல்ல; பெயர்ச்சொற்கள் பொருள், இடம், காலம் முதலிய ஆறன் அடியாகத் தோன்றும் என்ற கருத்தை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி நினைவுபடுத்திக் கற்போர் உள்ளத்தில் அதனை நிலைபெறச் செய்தலும் காரணம் ஆகும். இதே கருத்தில்தான் இருதிணை, மூவிடம், நாற்கணம், ஐம்பால், அறுசுவை, எழுமதம், எண்ணிறை, ஒன்பது தொகாநிலை, பத்து எச்சம் என்று தொகைக் குறிப்போடு இணைத்து எழுதி இலக்கணத்தைக் கற்பவர் கருத்தில் உருவேற்றி வைத்தனர். இலக்கண ஆசிரியர்களுக்கு,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள். 398)

என்ற குறட்கோட்பாடு அறியாததாக இருக்க முடியாது. இக்குறட்பாவில் உள்ள "எழுமையும் ஏமாப்பு உடைத்து" என்ற தொடருக்குப் பரிமேலழகர் "வினைகள்போல உயிரின்கண் கிடந்து அது புக்குழிப் புகும் ஆகலின் எழுமையும் ஏமாப்பு உடைத்து என்றார்." என்று நயவுரை எழுதியுள்ளார். மனப்பாடப் பயிற்சியால் உள்ளத்துள் நிறைந்து, உறைந்து பல பிறவிகளுக்குப் பயன்படும் கல்வியின் பெருமையைப் பரிமேலழகரைக் காட்டிலும் சிறப்பாக வேறு யாரும் விளக்கிவிட முடியாது. இது இலக்கண உரையாசிரியர்களுக்குத் தெரியும்; நமக்குத்தான் தெரிவதில்லை; புரிவதில்லை. அதுவும் திருக்குறளுக்குப் புத்துரை கூறும் பலருக்குப் புரிவதே இல்லை.

நூல்வழியே உரைவழி

சங்கர நமச்சிவாயர் தொகைக்குறிப்புச் சொற்களுக்கு எழுதிய விளக்கம் (நன். 137, 242, 360) முன்பே எடுத்துக்காட்டப்பட்டது. தொகைச்சொற்கள் மூலபாடத்தில் இல்லாவிட்டாலும் கூட அவற்றைத் தம்முடைய பொழிப்புரையில் அவர் குறிப்பிடத் தவறமாட்டார். காட்டாக "**வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து**" (நன். 275) என்ற தொடருக்கு "எட்டு வேற்றுமையும் சார்தற்கு இடமாய் இருதிணை ஐம்பால் மூவிடத்து" என்றும் "**கயவொடு ரவ்வொற்று**" (நன். 338) என்ற தொடருக்குக் "க, ய என்னும் இரண்டு உயிர்மெய்யினையும் ரகரவொற்றினையும்" என்றும் "**உருபும் வினையும்**" (நன். 354) என்ற தொடருக்கு "எட்டு வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச்சொற்களும்" என்றும் அவர் பொழிப்புரை வரைவார். நூலாசிரியர் தொகைக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துவது நூல்நடை (யா. வி. 55) என்றால் உரையாசிரியர் தொகைக்குறிப்பைப் பயன்படுத்துவது உரையின் சொல்நடை எனலாம்; தவறு ஆகாது.

மூலபாடத்தில் இயல்பாகத் தொகைக்குறிப்பு இருக்க வேண்டிய இடத்தில் இல்லாவிட்டால் அதற்கு அமைதி கூறுவது உரைநெறி. அத்தகைய நூற்பா ஒன்றுக்குச் சங்கர நமச்சிவாயர்

இலக்கண விதி புலப்பட அமைதி கூறுவ்து அறிய வேண்டிய ஒன்று.

> "முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
> சினைமுதற் பெயர்ஒரு நான்கு முறைஇரண்டும்
> தன்மை நான்கு முன்னிலை ஐந்தும்
> எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர்" (நன். 282)

என்னும் நூற்பாவில் முதற்பெயர், சினைப்பெயர் முதலிய அறுவகைப் பெயர்களுக்கும் நான்கு, இரண்டு, ஐந்து என்று பவணந்தி முனிவர் தொகைச்சொற்களைக் கொடுத்துள்ளார். ஆனால் அடுத்து வரும் எல்லாம், தாம், தான், இன்னன என்பவற்றின் இறுதியில், மற்ற அறுவகைப் பெயர்களுக்கும் கொடுத்ததுபோல நான்கு என்று தொகை கொடுக்கவில்லை. ஒப்புமையும் சீர்மையும் கருதி இவற்றுக்கும் தொகை கொடுத்து,

> எல்லாம் தாம்தான் இன்னன நான்கும்
> இருதிணை உணர்த்தும் பொதுப்பெயர் என்ப

என மூலபாடம் அமைந்திருந்தால் இன்னும் பொருத்தம் என்று யாரேனும் கருதக் கூடும். விளங்கிய அறிவின் முனைவன், திருத்தகு தெய்வப்புலவன் என்று நூலாசிரியனைப் போற்றும் தமிழ்மரபுக்குப் பாடத்தை மாற்றுவது சற்றும் பொருந்தாது. அதனால் ஆசிரியன் ஆணைவழி நின்றே உரையாசிரியர்கள் உரை வகுத்தனர். ஆசிரியர் கருத்து ஈண்டு ஒவ்வாது; அவர் கூற்று பொருந்தாது என்று அவர்கள் சுட்டிக்காட்டுவதில்லை. அவ்வாறு சுட்டுவது உரைநெறி அல்ல; அது குறைநெறி. எனவே ஒவ்வாமை பொருந்தாமைகளுக்கும் அமைதி காண்பதே உரையாசிரியர்களின் தீரா வேட்கை; அவர்களது அறிவுத் தேட்டமும் அதுவே. இந்த உரைமரபில் ஊறித் திளைத்தவர் சங்கர நமச்சிவாயர். எனவே மேலே எடுத்துக்காட்டிய நூற்பாவின் (நன். 282) ஈற்றடியில் தொகைச்சொல் இல்லாமைக்கு அவர் பின்வருமாறு அமைதி கூறுவார்.

"எல்லாம் என்பது முதல் இன்னன என்பது ஈறாக நின்ற செவ்வெண்ணின் இறுதிக்கண் நான்கு என்னும் தொகையோடு உம்மை தொக்கன." என்று விளக்குவார். இந்த விளக்கம் தொல்காப்பிய (இடை. 39) நன்னூல் (நூ. 428)

விதிகளை உட்கொண்டது. பவணந்தி முனிவர் வகுத்த விதியை அவருடைய நூற்பாவுக்கே நமச்சிவாயர் பொருத்திக் காட்டி விளக்கும் உரைநுட்பம் உய்த்துணர்ந்து பின்பற்றக் கூடியது. அவ்வாறு உணர்ந்து, பின்பற்றி உச்சிமேல் கொண்ட பெருமை சிவஞான முனிவரையே சாரும். சங்கர நமச்சிவாயர் உரையைத் திருத்திய சிவஞான முனிவர் ஒரு சில நூற்பாக்களுக்குப் புத்துரை எழுதினார் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. அவற்றுள்,

"அறம்பொருள் இன்பம்வீடு அடைதல்நூற் பயனே"

என்னும் பாயிரவியல் நூற்பாவும் (நன். 10) ஒன்று. அதன் சிறப்புரைப் பகுதியில் "நான்கும் என்னும் செவ்வெண்ணின் தொகையோடு முற்றும்மை விகாரத்தால் தொக்கன." என்று அவர் எழுதியுள்ளார். இது சங்கர நமச்சிவாயர் (நன். 282) உரையைத் தழுவி எழுதப்பட்டது என்பது எளிதாக விளங்கும். எப்படி இருந்தாலும் மூலபாடத்தில் தொகை வகைகளைக் குறிக்க வரும் தொகைக்குறிப்புச் சொற்கள் தொக்கு நிற்கும் என்பதில் இருவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

தொகுத்துச் சொன்னால் தந்திரவுத்தி, தொகைவகை, ஆசிரிய மதம், மனப்பாடக் கல்விமுறை, குறுக்குக்குறிப்பு, சொல்நடை முதலிய காரணங்களுக்காக நூலாசிரியர்கள் தொகைக்குறிப்புச் சொற்களை மூலபாடத்தில் அமைத்துள்ளனர். இது ஒரு வகை நூல்நடை. இந்த நடையின் நற்பயனை உய்த்துணர்ந்து உரையாசிரியர்களும் இதனைத் தழுவிக்கொண்டனர். நூலாசிரியர் வழிதானே நல்ல உரையாசிரியரின் வழி? இந்த மரபுகளை ஆராய்ந்து அறிந்த சங்கர நமச்சிவாயர் அவற்றைத் தமது உரையில் திறம்படத் தழுவிக்கொண்டார்; நயம்பட விளக்கியுள்ளார். தொகைக்குறிப்புக்கு மேலே எடுத்துச்சொல்லிய காரணங்களைத் தவிர இடைச்செருகலைத் தவிர்த்தல், உரை வகுப்பதில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணல், பொருளியைபுக்காக ஒரு நூற்பாவுக்கு முன்னும் பின்னும் உள்ள நூற்பாக்களை அதனோடு தொடர்புபடுத்திக் காட்டல் போன்ற வேறு காரணங்களும் இருக்கக் கூடும். இலக்கண உரைகளை ஒப்பிட்டுப் பார்த்து இத்தலைப்பு இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டும். அப்போது இன்னும் சில காரணங்களைக் கண்டறிய முடியும்.

உதாரணப் பகுதி

விருத்தியுரையின் மற்றொரு பகுதி உதாரணம். உரை உறுப்புகளில் உதாரணம் முக்கியமானது. அது இல்லாமல் இலக்கண உரை இருக்க முடியாது. உதாரணம் (நன். 103), வரலாறு (நன். 175) என்னும் இருசொற்களையும் உதாரணப் பகுதியின் தொடக்கத்தில் நமச்சிவாயர் பயன்படுத்தியுள்ளார். ஏறக்குறைய முந்நூற்றிருபது நூற்பாக்களுக்கு அவர் உதாரணம் காட்டியுள்ளார். அவற்றில் வழக்கு உதாரணங்களும் செய்யுள் உதாரணங்களும் உள்ளன; அவரே தேடி எடுத்தவையும் பிறர் உரைகளிலிருந்து எடுத்துக்கொண்டவையும் உள்ளன. இக்கருத்துகளும் இவற்றோடு தொடர்புடைய பிறவும் இத்தலைப்பின் இறுதியில் விரிவாக ஆராயப்படுகின்றன. அதனால் அவர் உதாரணம் காட்டும் முறைகளில் சிலவற்றை இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்.

பொதுவாகப் பொழிப்புரையை அடுத்து உதாரணப் பகுதி அமைந்திருக்கும். ஙகரம் மொழிமுதற்கண் வருவதைக் கூறும் நூற்பாவின் பொழிப்புரையை அடுத்து "அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என வரும்." (நன். 106) என்று உதாரணப் பகுதி அமைந்துள்ளது. விருத்தியுரையில் இந்த அமைப்புமுறை பல இடங்களில் (நன். 96, 97, 102, 130, 153, 161) காணப்படுகிறது. இவ்வாறன்றிப் பொழிப்புரைக்கும் உதாரணங்களுக்கும் இடையில் சிறுவிளக்கம் அமைவதும் உண்டு. இதற்கு "இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின" (நன். 62) என்னும் நூற்பாவின் உரை சிறந்த எடுத்துக்காட்டு. இதன் பொழிப்புரையில் கூறிய இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்னும் கலைச்சொற்களுக்கு விளக்கம் கூறினால் உதாரணப் பகுதியில் குறிக்கப்படும் பெயர்ப்பாகுபாடு இன்னும் தெளிவாக விளங்கும். அதனால் பொழிப்புரையில் தோன்றும் ஐயங்களைப் போக்கி உதாரணங்களின் தெளிவுக்குப் பயன்படும் விளக்கக் குறிப்பை அவற்றின் நடுவே எழுதுவது நமச்சிவாயர் வழக்கம். இந்த முறையை இன்னும் பல நூற்பாக்களின் உரைகளிலும் (நன். 66, 93, 95, 122, 132, 139) காணலாம்.

உதாரணங்கள் உரையிலேயே ஒருங்கிணைத்துக் காட்டப்படுவதும் உண்டு. இந்த முறை இளம்பூரணர் (தொல்.

மெய். 24), பேராசிரியர் (தொல். மெய். 13), மயிலைநாதர் (நன். 107) போன்ற உரையாசிரியர்களிடமும் அருகிக் காணப்படுகிறது. இந்த முறையில் "மூவிடப்பெயர் ஏழோடும் ஆறு உருபும் புணரும் இடத்துத் தான், தாம், நாம் என்னும் மூன்று பெயரும் நெடுமுதல் குறுகி முறையே தன்னை, தம்மை, நம்மை என வரும். யான், யாம், நீ, நீர் என்னும் நான்கு பெயரும் முறையே என்னை, எம்மை, நின்னை, நும்மை என வரும். இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணரும் இடத்து, இடையே தனக்கு என அகரச்சாரியை வரும்." (நன். 247) என்று சங்கர நமச்சிவாயரும் பொழிப்புரையில் உதாரணங்களையும் சேர்த்து எழுதியுள்ளார். இவை உதாரணங்கள் என்பதை "ஒழிந்த உருபுகளோடும் இவ்வாறே ஒட்டுக." என்னும் குறிப்பு உணர்த்தும். இது போன்ற உதாரணக் குறிப்புகள் விருத்தியுரையில் கணிசமாக உண்டு. அவற்றுள் "அணையா என்ற ஆகாதனவற்றிற்கு உதாரணம் காட்டலாகாமை உணர்க." (நன். 119), "எகர ஈற்றிற்கு உதாரணம் காட்டிற்றிலம். அது வினாவிடைச் சொற்கண் அன்றி ஈறு ஆகாமையானும் அவ்வினாவிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி மேல் (நன். 163) கூறுதலானும் என்க." (நன். 158) என்பன அதிநுட்பம் வாய்ந்தன. பழைய உரையாசிரியர்கள் அனைவரும் உதாரணம் காட்டுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை ஒப்பற்ற உரைநெறியாகக் கடைப்பிடித்துள்ளனர். சங்கர நமச்சிவாயர் பழைய உரையாசிரியர்களைப் பின்பற்றி, அந்நெறியைத் தமது உரையில் கையாண்டுள்ள முறை ஒப்பீட்டு நோக்கில் இப்பகுதியில் ஆராயப்படுகிறது.

உதாரணம் ஒரு பொருட்கிளவி

உரைக்கு உரமூட்டி அதன் தெளிவுக்கு ஒளியூட்டுவது உதாரணம்; இலக்கண விதிகளை நினைவுப் புலத்தில் பதிவுசெய்ய உதவுவது உதாரணம்; இலக்கண உரைகளுக்கு இலக்கியச் சுவை அளிப்பது உதாரணம். இன்னும் உலகவழக்கு, செய்யுள்வழக்கு ஆகிய இரண்டிலும் உரையாசிரியரின் புலமையைப் புலப்படுத்தவும் அவருடைய மொழியியல் அறிவு, சமயநிலை போன்றவற்றைத் தீர்மானிக்கவும் அது உதவக் கூடும். உதாரணம் (தொல். சிற. பாயி. இளம்பூரணர்) என்னும்

சொல்லுக்கு இணையாக எடுத்துக்காட்டு (தொல். மரபு. 104), இலக்கியம், ஞாபகம், பிசி (திவா. 1845), இதிகாசம் (பிங். 1066), காட்டு (நன். 22), வரலாறு (நன். 65 மயிலைநாதர்), சான்று, மேற்கோள் (ஆ. த. சொ.) முதலிய மாற்றுச்சொற்கள் இலக்கண நூல்கள், உரைகள், நிகண்டுகள், அகராதிகள் முதலியவற்றில் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர அளவை நூல்களில் பயின்று வரும் பிரமாணம் என்ற சொல்லும் இப்பொருளில் (த. பே.) அருகி வழங்குவதுண்டு. ஆயினும் உதாரணம் என்ற சொல்லே இவற்றுள் பெருவழக்கு உடையது.

தெளிவுக்கு முதற்கருவி உதாரணம்

நூற்பாவையும் அதன் உரையையும் தெளிவுபடுத்துவதற்கு உதாரணம், சொற்பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்பு, பதசாரம், உவமை, வினாவிடை முதலிய பல கருவிகளை உரையாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் உதாரணமே முதற்கருவி; மற்றவை எல்லாம் துணைக்கருவிகளே. இதற்குப் பொருள் ஒவ்வொரு நூற்பாவின் உரையிலும் இக்கருவிகளுள் ஒன்றிரண்டு இருந்தாக வேண்டும் என்பது அல்ல. சில நூற்பாக்களின் உரைகளில் அவை எதுவும் இல்லாமலும் இருக்கும். காட்டாக **"உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே"** (நன். 59) என்னும் எழுத்தியல் நூற்பாவுக்குக் கருத்துரையும் பொழிப்புரையும் மட்டுமே உள்ளன. **"அண்ண நுனிநா"** (நன். 83) என்னும் நூற்பாவுக்கு அவை இரண்டும் இருந்தாலும் அதன் கருத்துரைப் பகுதி "இதுவும் அது." என்று சுருக்கக் குறியீடாக மட்டுமே அமைந்துள்ளது. இவற்றை விடச் சுருக்கமான உரைப்பகுதிகளும் சில நூற்பாக்களுக்கு உண்டு. இதற்கு **"ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்"** (நன். 65) என்னும் நூற்பாவின் உரை நல்ல எடுத்துக்காட்டு. இதன் உரைப்பகுதியில் "இதுவும் அது." என்னும் கருத்துரையைப் போலவே "இவ்வேழும் நெட்டெழுத்தாம் என்றவாறு." எனப் பொழிப்புரையும் சுருக்கமாக அமைந்துள்ளது. மூலத்தில் உள்ள நெட்டெழுத்து ஏழையும் திரும்ப எழுதித் தமது உரையை நமச்சிவாயர் வளர்த்த விரும்பவில்லை. மூலநூற்பாவின் பொருள்நிலை படிகம்போலத் தெளிவாக இருந்துவிட்டால் உரை சுருங்குவதுதானே இயல்பு! மேலே காட்டிய நூற்பாக்களின் உரைகள் இந்த முடிபை உறுதிப்படுத்தும்.

மேலும், சில சிறப்புவகை நூற்பாக்களின் உரைகளில் உதாரணங்கள் காட்டப்படுவதில்லை. பொதுப்பெயர்களின் தொகை (நன். 282), வேற்றுமைகளின் பெயர் (நன். 292), வினைச்சொற்களின் வகை (நன். 322), தொகைநிலைத் தொடர்களின் வகை (நன். 362), பொருள்கோள்களின் தொகை (நன். 411) போன்று பொதுநிலையில் தொகுத்துக் கூறப்படும் நூற்பாக்களின் உரைகளில் உதாரணங்கள் காட்டப்படவில்லை. காட்டாமைக்குக் காரணம் அந்நூற்பாக்களைத் தொடர்ந்து வரும் சிறப்புச் சூத்திரங்களின் உரைகளில் அவற்றுக்குப் பொருத்தமான உதாரணங்கள் போதிய அளவுக்குக் காட்டப்படுவதே ஆகும்.

விளக்கிச் சொன்னால் அறுவகைப் பெயர்களை வகுத்துக் கூறும் நூற்பாக்கள் (நன். 283, 285, 287), எட்டு வேற்றுமைகளையும் தனித்தனியே விளக்கும் நூற்பாக்கள் (நன். 295-302; 305-313), வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய வினைச்சொற்களை விரித்துக் கூறும் நூற்பாக்கள் (நன். 323-344), தொகைநிலைத் தொடர்கள் ஆறனையும் முறைப்படக் கூறும் நூற்பாக்கள் (நன். 363-370), எண்வகைப் பொருள்கோள்களை எடுத்துரைக்கும் நூற்பாக்கள் (நன். 412-419) ஆகியவற்றின் உரைப் பகுதிகளில் இடத்துக்குத் தக்கவாறு இருவகை வழக்குகளிலிருந்தும் ஏற்ற உதாரணங்களை அவர் எடுத்துக்காட்டியிருப்பதே அதற்குக் காரணம். இவ்வாறு சிறப்புச் சூத்திரங்களில் உதாரணங்கள் காட்டப்படும் என்பதை "முதற்பெயர் முதலாக முன்னிலைப் பெயர் ஈறாகக் கூறிய அறுவகைப் பெயர்கட்கும் உதாரணம் பின் வரும் தத்தம் வகைச் சூத்திரங்களுள் காண்க." (நன். 282) என்றும் "உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரங்களான் உணர்க." (நன். 322) என்றும் நமச்சிவாயர் முன்கூட்டியே உணர்த்திவிடுவார். இன்னும் "மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் மேல் வரும் சிறப்புச் சூத்திரத்திற் காண்க." (நன். 110), "தெரிநிலை வினையெச்சங்கட்கு உதாரணம் வரும் சூத்திரங்களான் உணர்க." (நன். 342), "இவ்வாறு வருதல் மேற்காட்டும் உதாரணங்களுள் காண்க." (நன். 442) என்பன போன்ற உதாரணக் குறிப்புகளை நமச்சிவாயர் ஆங்காங்கே எழுதிக் கற்போர்க்குத் தோன்றும் ஐயவினாக்களை உடனுக்குடன் அகற்றிவிடுவதும் உண்டு. அவர்

உரையில் ஏறக்குறைய நூற்றிருபது நூற்பாக்களுக்கு உதாரணங்கள் காட்டப்படாமைக்குக் காரணம் அவர் கடைப்பிடித்த இந்த உரைநெறியே எனலாம். இனி, நன்னூல் விருத்தியுரையில் அவர் எடுத்துக்காட்டியுள்ள உதாரணங்களைப் பார்க்கலாம்.

உதாரணங்களின் வகைகள்

மரபிலக்கணங்கள் பேச்சுவழக்கு, செய்யுள்வழக்கு ஆகிய இரண்டிற்கும் விதி கூறுவன. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்,

> "வடவேங்கடம் தென்குமரி
> ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகத்து
> வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்"

என்று இதனை வரையறுத்துக் கூறியுள்ளது. உரையாசிரியர்கள் இதனைக் கருத்தில் கொண்டு இருவகை வழக்கிலிருந்தும் உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளனர். இந்த உரைநெறி நமச்சிவாயர் உரையிலும் அமைந்துள்ளது. **"டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்"** (நன். 113) என்னும் நூற்பாவின் உரையில் "கட்கம், கட்சி, நுட்பம், கற்க, கற்சிறார், கற்ப" என்னும் உதாரணங்களை அவர் காட்டியுள்ளார். தனித்தனிச் சொற்களாக இருப்பதால் இவை பேச்சுவழக்குக்கே உரியன என்று நாம் தவறாகக் கருதிவிடக் கூடாது. கட்சி என்பது புறப்பொருள் வெண்பாமாலையிலும் (3) கற்க என்ற சொல் திருக்குறளிலும் (391) வருவதால் இருவகை வழக்குகளிலும் இவை வரும் என்று நாம் புரிந்துகொள்வது நல்லது. அடுத்ததாகச் செய்யுள் வழக்குக்கே உரிய விதிக்கு நமச்சிவாயர் காட்டியுள்ள உதாரணங்களைப் பார்க்கலாம்.

பவணந்தி முனிவர் செய்யுள் விகாரங்களை,

> "வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
> விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி"

(நன். 155) என்று கூறுவார். இந்த நூற்பாவின் உரையில் **"குறுத்தாட் பூதஞ் சுமந்த, அறக்கதிர் ஆழியெம் அண்ணலைத் தொழினே"** (யா. வி. 95). இது குறுந்தாள் எனற்பாலது

குறுத்தாள் என வலித்தவாறு. **"தண்டையின் இனக்கிளி கடிவோள், பண்டையள் அல்லள் மானோக் கினளே"** (யா. வி. 95). இது தட்டை எனற்பாலது தண்டை என மெலித்தவாறு. **"தீத்தொழிலே கன்றித் திரிதந்து எருவைபோல், போத்தறார் புல்லறிவி னார்"** (நாலடி. 351). இது பொத்தறார் எனற்பாலது போத்தறார் என நீட்டியவாறு. **"யானை, எருத்தத்து இருந்த இலங்கிலைவேல் தென்னன், திருத்தார்நன்று என்றேன் தியேன்"** (யா. வி. 62). இது தீயேன் எனற்பாலது தியேன் எனக் குறுக்கியவாறு. **"சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே"** (புறம். 109: 4). இது விளையுமே எனற்பாலது விளையும்மே என ஒற்று இல்வழி ஒற்றை விரித்தவாறு. இதனுள் சிறியவிலை எனற்பாலது சிறியிலை எனத் தொகுத்தவாறு.

> **"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
> **கற்றனைத்து ஊறும் அறிவு"** (குறள். 396)

இதுவும் தொட்டது, கற்றது எனற்பாலது தொட்டு, கற்று எனத் தொகுத்தவாறு; பிறவும் அன்ன." என்று சான்றோர் செய்யுட்களை நமச்சிவாயர் எடுத்துக்காட்டியுள்ளார். அதோடு அவற்றில் வலித்தல், மெலித்தல் முதலிய விகாரங்கள் ஆறும் வந்தவாறு எங்ஙனம் என்று மயிலைநாதரைத் தழுவி, உரிய வடிவங்களோடு ஒவ்வொன்றையும் அவர் பொருத்திக் காட்டியுள்ளார். இப்பகுதியில் நாம் கவனிக்க வேண்டியது **"பிறவும் அன்ன"** என்னும் உரைமரபுத் தொடர்.

பிறவும் அன்ன

இலக்கண உரைகளில் பயின்று வரும் உரைமரபுத் தொடர்களில் பிறவும் அன்ன என்பதும் ஒன்று. இடத்துக்கு ஏற்பப் பொருள்படும் இத்தொடர் உதாரணங்களை அடுத்து வரும்போது இவை போல்வன பிறவும் அத்தகையன என்று பொருள்படும். நமச்சிவாயர் "இவ்வாறு வருவன எல்லாம் அன்ன." (நன். 172), "வந்தான் சாத்தன் என வருவனவும் அன்ன." (நன். 357), "சுட்டின் பொருளவாய் வரும் பெயரொடு தொக்க ஒரு பொருட் பல பெயர்களும் அன்ன." (நன். 397) என்பனபோலச் சில இடங்களில் இதனை விரித்து எழுதுவதும் உண்டு.

எழுத்துச் சாரியைகளைக் கூறும் **“மெய்கள் அகரமும்”** (நன். 126) என்னும் நூற்பாவின் உரையில் “க, ங எனவும் ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும் ஐகான், ஔகான் எனவும் அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.” என்று நமச்சிவாயர் உதாரணம் காட்டிவிட்டு, அதனைத் தொடர்ந்து **‘பிறவும் அன்ன.’** என்று எழுதியுள்ளார். உதாரணப் பகுதியில் ஏழு எழுத்துகளை மட்டும் (மெய் 2, நெடில் 3, உயிர்க்குறில் 1, உயிர்மெய்க்குறில் 1) அவற்றுக்குரிய சாரியைகளோடு சேர்த்து எழுதி அவர் உதாரணம் காட்டியுள்ளார். எஞ்சியுள்ள எழுத்துகள் நாற்பத்தொன்றையும் (மெய் 16, நெடில் 4, உயிர்க்குறில் 4, உயிர்மெய்க்குறில் 17) அவற்றுக்குரிய சாரியைகளோடு பொருத்தி இவ்வாறே உதாரணம் அமைத்துக் கொள்க என்று குறிக்கவே அவர் பிறவும் அன்ன என்று இங்கு எழுதியுள்ளார். பழைய உரையாசிரியர்கள் பலரும் இத்தொடரைத் தமது உரைகளில் பயன்படுத்தியுள்ளார்கள். நமச்சிவாயர் உரையில் எண்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் இத்தொடர் காணப்படுகிறது. ஆகவே உதாரணங்களை அளவாகக் காட்டி உரைச் சுருக்கத்தைப் பேணிக் காப்பதையும் அவர் ஒரு உரைநெறியாகக் கருதியிருக்க வேண்டும். அவர் உரையில் இதற்குப் பல சான்றுகள் (நன். 67, 143, 144, 240, 247, 297, 299, 323, 424) கிடைக்கின்றன. காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம். பல, சில என்னும் இருசொற்களின் முன் (தம் முன் தாம் அல்லாத) பிற சொற்கள் வந்தால் பல கலை என அகரம் நிற்றலும் பல்கலை என அகரம் நீங்கலும் ஆகும் (நன். 170) என்பது விதி. இதனை விளக்குவதற்குப் பல சாலை, பல்சாலை, பல ஆயம், பல்லாயம் என்று பல என்ற சொல்லுக்கு மட்டும் அநேக உதாரணங்களைக் காட்டிவிட்டுச் “சில என்பதற்கும் இவ்வாறே கொள்க.” என்று நமச்சிவாயர் உரை எழுதுவார். உரைச் சுருக்கத்துக்காகக் கையாளப்பட்ட முறைதானே இது? எப்படி இருந்தாலும் **பிறவும் அன்ன** என்னும் உரைமரபுத் தொடர் வெறும் சம்பிரதாயத் தொடர் அல்ல.

செய்யுட்கே உரிய நூற்பாவின் உரையில் (நன். 155) சங்கர நமச்சிவாயர் உதாரணம் காட்டுவதைப் பார்த்தோம்.

வழக்குநடைக்கும் செய்யுளுக்கும் பொருந்தும் விதியைக் கூறும் நூற்பாவுக்கு அவர் உதாரணம் காட்டுவதையும் பார்க்கலாம்.

"பொருள்முதல் ஆறாம் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆமிரு வழக்கினும்" (நன். 401)

என்னும் நூற்பா இருவகை வழக்குகளிலும் மரபு வழாநிலைக்கும் மரபு வழுவமைதிக்கும் விதி கூறுகிறது. பொருளாதி ஆறனையும் குறிக்கும் சொற்கள் அடைமொழிகளாக நிற்க, அவற்றை அடுத்து வரும் மொழிகள் (அடைகொளிகள்) உலகவழக்கிலும் செய்யுள்வழக்கிலும் இனம் உள்ளனவும் இனம் இல்லனவும் ஆகும் என்பது இதன் பொருள். இனம் உள்ளவற்றுக்கு அடை கொடுத்தல் வழாநிலை; இனம் இல்லனவற்றுக்கு அடை கொடுத்தல் வழுவமைதி; இவை இருவகை வழக்குகளிலும் காணப்படும் என்பது இதன் கருத்து. இந்நூற்பாவின் உரையில் "நெய்க்குடம், குளநெல், கார்த்திகைவிளக்கு, பூமரம், செந்தாமரை, குறுங்கூலி எனவும் உப்பளம், ஊர்மன்று, நாளரும்பு, இலைமரம் செம்போத்து, தோய்தயிர் எனவும் வழக்கின்கண் இனம் உள்ளனவும் இனம் இல்லனவும் வந்தன. "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்" (குறள். 913), "கான்யாற்று அடைகரை" (இனிய. 5:3), "முந்நாட் பிறையின் முனியாது வளர்ந்தது" (வி. மே.), "கலவ மாமயில் எருத்திற் கடிமலர் அவிழ்ந்தன காயா" (சீவக. 1558:1), "சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்" (குறுந். 18:4), "ஆடுபாம்பு எனப்புடை அகன்ற அல்குன்மேல்" (சீவக. 1007:1) எனவும் "பொற்கோட்டு இமயமும் பொதியிலும் போன்றே" (புறம். 2:24), "வடவேங்கடம் தென்குமரி" (தொல். சிற. பாயி.), "வேனிற் கோங்கின் பூம்பொகுட்டு அன்ன" (புறம். 321:4), "சிறகர் வண்டு செவ்வழி பாட" (சீவக. 74:3),

"செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்திங்களுள் வெயில்வேண்டினும்" (புறம். 38:7-8)

"முழங்கு கடலோத மூழ்கிப் போக" (தொல். செய்யுள். 64 பேராசிரியர்) எனவும் செய்யுட்கண் இனம் உள்ளனவும் இல்லனவும் வந்தன." (நன். 401) என்று நமச்சிவாயர் உதாரணம் காட்டியுள்ளார். இருவகை வழக்குகளுக்கும் பொருந்தும் உதாரணங்களை அவர் தனித்தனியாகவும் முறையாகவும்

காட்டியுள்ளதால் மூலநூலின் கருத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறே ஓரெழுத்து ஒரு மொழி (நன். 129), தொடரெழுத்து ஒரு மொழி (நன். 130), பகாப்பதம் (நன். 131), பகுபதம் (நன். 132), கால இடைநிலைகள் (நன். 142-144), விடைமரபு (நன். 406) போன்றவற்றை விளக்குவதற்கு வழக்கிலிருந்தும் வினையெச்சங்களின் முடிக்கும் சொல் (நன். 344), வினைமுற்றின் புறனடை (நன். 351), அசைநிலை இடைச்சொற்கள் (நன். 437-441), பல குணம் தழுவியும் ஒரு குணம் தழுவியும் வரும் உரிச்சொற்கள் (நன். 457-459) முதலியவற்றை விளக்குவதற்குச் செய்யுள் வழக்கிலிருந்தும் நமச்சிவாயர் காட்டியுள்ள உதாரணங்கள் கருத்தில் பதிவன.

உதாரணக்குறிப்பு

இவ்வாறு அவர் உதாரணங்களைத் தாராளமாகக் காட்டியிருந்தாலும் சிலவற்றுக்கு அவை விடுபட்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. சிலவற்றுக்குத் தகுந்த உதாரணங்கள் கிடைக்காமலும் இருந்திருக்கலாம். இவற்றை எல்லாம் தழுவிக்கொள்ளும் நோக்கத்தில் “ஏனைய வந்த வழிக் காண்க.” (நன். 119), “விகற்பம் வந்த வழிக் காண்க.” (நன். 161), “காட்டாது ஒழிந்தன வந்த வழிக் காண்க.” (நன். 154, 331), “இன்னும் அமையாதன உளவேல் அவையும் கொள்க.” (நன். 224, 255), “பிறவும் ஏற்ற பெற்றி வருவன உளவேல் காண்க.” (நன். 178), “இலக்கியம் வந்த வழிக் காண்க.” (நன். 264) என்று நமச்சிவாயர் உதாரணக் குறிப்புகளை வரைந்துள்ளார். பொருத்தமான உதாரணங்களை உரிய இடங்களில் வழங்குவது உரைநெறி என்று உணர்த்துவதற்காகவே அவர் இக்குறிப்புகளை எழுதினார் என்று தோன்றுகிறது.

உதாரணம் காட்டும் முறைகள்

சங்கர நமச்சிவாயர் உதாரணம் காட்டும் முறையை மேலே எடுத்துக்காட்டிய உரைப்பகுதிகள் உணர்த்தும். பொதுவாக, உரையாசிரியர்கள் உரைத் தெளிவுக்காகவே உதாரணங்களையும் மேற்கோள்களையும் எடுத்துக்காட்டினார்கள். ஆயினும் அவற்றை எடுத்துக்காட்டுவதில் அவர்கள் கடைப்பிடித்துள்ள முறைகள் எல்லாம் பொதுவானவை அல்ல. அதாவது அந்த முறைகள்

எல்லாவற்றையும் உரையாசிரியர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகவும் ஒட்டுமொத்தமாகவும் கடைப்பிடிக்கவில்லை. அவர்களுடைய தனித்தன்மைகளைப் புலப்படுத்துவன பலவும் அவற்றில் உண்டு. இவற்றைக் குறித்து இங்கு ஒரு சில கருத்துகளைச் சொல்ல வேண்டும்.

யாப்பருங்கல உரையாசிரியர் காட்டியுள்ள உதாரணங்களும் மேற்கோள்களும் தமிழ்மொழியின் யாப்பிலக்கணச் செழுமையைப் புலப்படுத்தும். அதுபோல அடியார்க்கு நல்லார் காட்டியவை அக்கால இசைத்தமிழ், நாடகத்தமிழ் வளத்துக்கு அழியாச் சான்றுகள். யாப்பருங்கல விருத்தியின் ஆசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றவர்கள் தாம் காட்டும் உதாரணப் பாடல்கள் எந்தெந்த நூல்களைச் சார்ந்தன என்று குறிப்பிடுவர். சேனாவரையர், தெய்வச்சிலையார், சங்கர நமச்சிவாயர் போன்றோர் பெரும்பாலும் இடவிளக்கம் தருவதில்லை. தாம் எடுத்துக்காட்டிய இலக்கிய மேற்கோள்களில் ஒரே ஒரு குறட்பாவுக்கு மட்டுமே நமச்சிவாயர் (நன். 56) இடவிளக்கம் தந்துள்ளார்.

நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகப்பாட்டு (தொல். அகத். 41) என்று நூற்பெயர்களைக் குறிப்பதோடு களிற்றியானைநிரை, மணிமிடைபவளம் (தொல். அகத். 15), நித்திலக்கோவை (தொல். களவு. 23), பாலைக்கலி (தொல். அகத். 12), குறிஞ்சிக்கலி (தொல். அகத். 13), மருதக்கலி (தொல். அகத். 8), முல்லைக்கலி (தொல். அகத். 23), நெய்தற்கலி (தொல். அகத். 18) என்று நூலின் உட்பிரிவுகளையும் நச்சினார்க்கினியர் குறிப்பார். இளம்பூரணர் (தொல். களவு. 91, 109) போன்ற பிற உரையாசிரியர்களிடம் இந்த முறை குறைந்து காணப்படுகிறது. யாப்பருங்கல உரையாசிரியர் "இது செய்யுளியல் உடையார் காட்டிய பாட்டு." (யா. வி. 36, 57), "அணியியல் உடையார் காட்டிய பாட்டு." (யா. வி. 57) என்றும் மயிலைநாதர் "இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர் ஓதிய உரை." (நன். 359) என்றும் பிற ஆசிரியர்கள் எடுத்துக்காட்டியவற்றை ஏற்றுக்கொள்வதோடு அவர்களுடைய பெயர்களை மறக்காமல் கூறுவர். இந்த நேர்மைத்திறம் தமிழ் உரைமரபில் அத்தி பூத்தாற்போலச் சிலரிடமே அருகிக் காணப்படுகிறது.

பேராசிரியர் "நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசை அறுபத்தெட்டு" (தொல். செய்யுள். 130), "நூற்றைம்பது கலியுள்ளும் கலிவெண்பாட்டு எட்டு" (தொல். செய்யுள். 153), "நூற்றைம்பது கலியுள்ளும் அன்னதொரு கலிவெண்பாட்டு இன்மையின்" (தொல். செய்யுள். 154) என்று கலித்தொகைப் பாடல்களை அலகிட்டு ஆராய்ந்து, துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறுவார். இந்தக் கைவண்ணம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இந்த அரிய தரவுகளின் பெருமை அறிந்து, நச்சினார்க்கினியர் தமது செய்யுளியல் உரையில் (நூ. 130, 153, 154) இவற்றை எடுத்தெழுதித் தம்முடைய ஒப்புதலை வழங்கியுள்ளதும் ஒரு வகை உரைநெறியே ஆகும். யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் "பிறைநெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியனார்" (யா. வி. 8), "திரிபுரம் எரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்" (யா. வி. 41) என்றும் மயிலைநாதர் "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்" (நன். 130) என்றும் தாம் மேற்கோள் காட்டிய நூலாசிரியர்களை அழகான அடைமொழிகளால் குறிப்பிடுவர். இந்த வழக்கம் இவ்விரு உரையாசிரியர்களின் சிறப்பியல்பாகத் தோன்றுகிறது. மிகச் சில இடங்களில் "தொல்காப்பியனால் சொல்லப்பட்டது தொல்காப்பியம்." (தொல். வேற். மய. 33), "இரண்டனையும் பன்மை என்று வேண்டான் இவ்வாசிரியன்." (தொல். எச்ச. 21) என்று இளம்பூரணரும் "ஆசிரியப்பாவிற்கு அளவு கூறுகின்றான்." (தொல். செய்யுள். 157), "வழக்கு நோக்கிக் கூறினான்." (தொல். மரபு. 28) என்று பேராசிரியரும் தொல்காப்பியரைப் படர்க்கை ஒருமையில் குறிப்பிடுவார்கள். நமச்சிவாயர் அவர் பெயரை ஆசிரியர் தொல்காப்பியர் என்றே (நன். 91, 94, 124, 128, 158) குறிப்பிடுவார்.

உரையாசிரியர்கள் ஒரு கருத்துக்கு ஓரிரு உதாரணப் பாடல்களை எடுத்துக்காட்டுவதோடு அமைவதில்லை; ஒரு நூலையே அவர்கள் உதாரணமாகக் குறிப்பதும் உண்டு. காட்டாக ஆசிரியப் பாவின் அடியளவுக்கு நச்சினார்க்கினியர் "நீலமேனி வாலிழை" என்னும் அழகிய ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக்காட்டி: "இது சுருக்கத்திற்கு எல்லை. கூத்தராற்றுப் படை தலையளவிற்கு எல்லை; மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் ஒழிந்த பாட்டு ஏழும் பரிபாடலும் கலியும்

ஒழிந்த தொகை ஆறும் இடையளவிற்கு எல்லை." (தொல். செய்யுள். 157) என்று சில பல இலக்கியவகைகளையே உதாரணமாகக் குறிப்பிடுவார். இவை தவிர உதாரணப் பாடல்களைத் தாமே இயற்றிக்கொள்வது, செய்யுளை உரைநடையாக மாற்றிக்கொள்வது, பழம்பாடல்களைப் பொருத்தம் கருதித் திருத்திக்கொள்வது போன்று பற்பல முறைகளை உரையாசிரியர்கள் கடைப்பிடிப்பது எல்லோருக்கும் தெரியும்.

உதாரணமும் மேற்கோளும்

ஒரு உரையில் காணப்படும் உதாரணங்கள், மேற்கோள்கள் தொடர்பாகச் சில அடிப்படைக் கருத்துகளை நாம் முதலில் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அவற்றுள் முதலாவது உதாரணத்துக்கும் மேற்கோளுக்கும் உள்ள வேறுபாடு. இவை இரண்டும் ஒரு பொருட் பன்மொழிகளாக வழங்கினாலும் இவற்றுக்குள் நல்ல வேறுபாடு உண்டு. மேற்கோள்கள் உதாரணங்களாகப் பயன்படும். ஆயினும் உதாரணம் வேறு; மேற்கோள் வேறு. ஒரு நூலிலிருந்து இன்னொரு நூலின் உரையில் அல்லது அதே நூலின் வேறு ஒரு பகுதியின் உரையில் உதாரணங்களாக எடுத்தாளப்படும் அனைத்து நூற்பாக்களும் செய்யுள்களும் மேற்கோள்களே. ஆனால் அனைத்து மேற்கோள்களும் உதாரணங்கள் அல்ல. சில எடுத்துக்காட்டுகளால் இவற்றை இன்னும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டலாம்.

நான்காம் வேற்றுமையின் குகர உருபு செய்யுட்கண் அகரமாகத் திரியும். இவ்விதியை (நன். 318) விளக்குவதற்குக் **"கடிநிலை இன்றே ஆசிரியற்க"** என்னும் தொல்காப்பிய நூற்பாவின் (புள்ளி. 94) அடியை நமச்சிவாயர் உதாரணமாகக் காட்டியுள்ளார். மகர ஈற்று அஃறிணைப் பெயர்களின் ஈற்றுமகரம் னகரமாகத் திரியும் (நன். 122) என்பதை விளக்குவதற்கு,

> **"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
> **நல்விருந்து ஓம்புவான் இல்"**

என்னும் குறட்பாவை (84) அவர் உதாரணமாகக் காட்டியுள்ளார். **"உயிர்வரின் உக்குறள்"** (நன். 164) என்னும் நூற்பாவின்

சொல்லமைதியைக் கொண்டு குற்றியலுகரம் ஒரு சில இடங்களில் உடம்படுமெய் (நன். 162) பெறுதலும் உண்டு என்று நமச்சிவாயர் உரைவிளக்கம் வரைந்துள்ளார். அதற்குத் **"தன்முக மாகத் தானழைப் பதுவே"** (நன். 303), **"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்"** (நன். 300) என்னும் பெயரியல் நூற்பாக்களை அவர் உதாரணங்களாகக் காட்டியுள்ளார். இவை அனைத்தும் (தொல். புள்ளி. 94; குறள். 84; நன். 303, 300) உதாரணங்கள். அதே சமயம், ஒரு நூலிலிருந்து மற்றொரு நூலின் உரையிலும் ஒரே நூலின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதியின் உரையிலும் எடுத்தாளப்பட்டுள்ளதால் இவை எல்லாம் மேற்கோள்களும் ஆகும். அதாவது செயல்பாட்டினால் இவை உதாரணங்கள்; இடமாற்றத்தினால் மேற்கோள்கள். இனி, உதாரணங்களாகச் செயல்படாமல் மேற்கோள்களாக மட்டும் செயல்படுவன சிலவற்றைப் பார்க்கலாம்.

தெரிநிலை வினையின் பொது இலக்கணம் கூறும் நூற்பாவின் உரையில் (நன். 320) ஒப்பீட்டு நோக்கில் **"வினையெனப் படுவது"** (தொல். வினை. 1) என்னும் நூற்பாவை நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ளார். பொதுப் பாயிரத்தில் ஈவோன் தன்மை, ஈதல் இயல்பு, கொள்வோன் தன்மை, கோடல் மரபு ஆகியவற்றைச் சிலர் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர்) சேர்த்துக் கூறுவது பொருந்தாது என்பது நமச்சிவாயர் (நன். 3) துணிபு. எனவே அவர்கள் கருத்துக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். அந்த மறுப்புரைக்கு வன்மையும் அழுத்தமும் கொடுக்கும் நோக்கில்,

> **"பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
> **பேதை வினைமேற் கொளின்"**

என்னும் குறட்பாவை (836) அவர் எடுத்தாண்டுள்ளார். இன்னும் ஒன்று. இடைச்சொல்லின் இலக்கணம் கூறும் நூற்பாவுக்கு **"இடையுரி அடுத்து நான்குமாம்"** (நன். 270) என்னும் பெயரியல் நூற்பாவை எடுத்துக்காட்டி நமச்சிவாயர் (நன். 420) கருத்துரை எழுதியுள்ளார். பெயரியல் நூற்பாவில் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களையும் வைத்துள்ள வரிசைமுறைக்கு (நன். 270) இயையவே ஆசிரியர் இவ்வியலில்

இடைச்சொல்லை உணர்த்தத் தொடங்குகிறார் என்பது அவரது உரைவிளக்கம். அதனால் நன்னூலின் கட்டமைப்பு நிரல்பட அமைந்துள்ள அழகை அவர் மாணாக்கர்க்கு நினைவூட்ட நினைக்கிறார். அதற்கு ஏற்ற சான்றாகப் பெயரியல் நூற்பாவைக் கருத்துரையில் அவர் எடுத்தாண்டுள்ளார். மேலே காட்டிய இந்த உரைப் பகுதிகளில் ஒரு நூலைச் சார்ந்த பாக்கள் (தொல். வினை. 1; குறள். 836) இன்னொரு நூலின் உரையிலும் ஒரு நூலின் நூற்பா (நன். 270) அதே நூலின் கருத்துரையில் வேறு ஒரு பகுதியிலும் (நன். 420) எடுத்தாளப்பட்டுள்ளன. அதாவது இப்பாக்கள் மூன்றுக்கும் இடப்பெயர்ச்சி நிகழ்ந்துள்ளது. அதனால் இவை மூன்றும் மேற்கோள்கள்; ஐயம் இல்லை. இவற்றின் பயன்பாடு வேறு என்பதால் இவை மூன்றும் உதாரணங்கள் அல்ல; இதுவும் வெளிப்படை. இவ்வாறு உதாரணத்துக்கும் மேற்கோளுக்கும் நுண்ணிய வேறுபாடு இருந்தாலும் ஒரு உரையாசிரியரின் இலக்கியப் புலமையைக் கணிக்கவும் மதிப்பிடவும் இவை இரண்டுமே அடிப்படைத் தரவுகளாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் சங்கர நமச்சிவாயரின் இலக்கிய இலக்கணப் பயிற்சியைக் கண்டறியலாம்.

உரையாசிரியர்களின் புலமை

யாப்பருங்கல விருத்தியின் ஆசிரியர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், மயிலைநாதர், நச்சினார்க்கினியர் போன்ற பழம்பெரும் உரையாசிரியர்களின் உரைகளைப் படிக்கும்போது அவர்களுடைய இலக்கியப் புலமை யாரையும் மலைக்க வைக்கும். அவர்கள் எடுத்தாண்டுள்ள இலக்கிய மேற்கோள்களை ஆழ்ந்து கற்று அனுபவித்து உணர்ந்தோர்க்கு,

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரளவு இன்றே"

என்னும் குறுந்தொகைப் பாடல் (3) நினைவுக்கு வருவது இயல்பு. மேற்கோள் பாடல்கள் இலக்கண உரைகளுக்கு இலக்கியத் தோற்றத்தை ஓரளவு கொடுத்துவிடுவதால் அவற்றைப் படிக்கும்போது இலக்கண நெருடல் அவ்வளவாகத் தெரிவதில்லை. நயமிக்க இலக்கியப் பாடல்கள் இலக்கணப்

பாடத்தின் செறிவை நெகிழ்த்தி, உரைநூல்களைக் கற்போர்க்கு ஊக்கம் உண்டாக்கும். ஆகுபெயர் (நன். 290), பண்புத்தொகை (நன். 365), இரட்டைக்கிளவி (நன். 396), ஒரு பொருட் பன்மொழி (நன். 398) போன்ற இலக்கணக் கருத்துகளை நினைத்தவுடன் **"தாமரை புரையும் காமர் சேவடி"** (குறுந். கட. வாழ்.), **"அகரமுதல"** (குறள். 1), **"குறுகுறு நடந்தும் சிறுகை நீட்டியும்"** (புறம். 188:3), **"உயர்ந்தோங்கு பெருவரை"** (மலைபடு. 41) என்னும் இலக்கிய மேற்கோள்கள் முறையே நினைவில் தோன்றி மனப்பாடக் கல்வியின் முழுப்பயனை வழங்கிவிடும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே உரையாசிரியர்கள் ஆயிரக்கணக்கான இலக்கிய மேற்கோள்களைத் தமது உரைகளில் எடுத்தாண்டுள்ளனர். இந்த உரைமரபில் வந்தவர் சங்கர நமச்சிவாயர். அவருடைய இலக்கியப் பயிற்சி தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கு இணையானதாகத் தோன்றுகிறது.

சங்கர நமச்சிவாயர் தமது உரையில் எடுத்தாண்டுள்ள நூல்களின் நீண்ட பட்டியல் இதனைப் புலப்படுத்தும். எட்டுத்தொகை நூல்கள், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய பத்துப்பாட்டு நூல்கள், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், இனியவை நாற்பது முதலிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, சூளாமணி, யசோதர காவியம், பெருங்கதை, கம்பராமாயணம் போன்ற காவியங்கள், பெரிய புராணம், அரிச்சந்திர புராணம் போன்ற பழம்புராணங்கள், தேவாரம், திருவாசகம், இருபா இருபஃது, சிவஞான சித்தியார் முதலிய சமய நூல்கள், திவாகரம், சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு ஆகிய நிகண்டுகள், அகத்தியம், தொல்காப்பியம், அவிநயம், இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை முதலிய இலக்கண நூல்களும் பிறவுமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து மேற்கோள்கள் இவரது விருத்தியுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஒரு நல்ல உரையாசிரியருக்கு இத்தகைய நூற்பயிற்சி இன்றியமையாதது என்பதை நமச்சிவாயர் அறிந்தவர். ஆகவேதான் அவர் உரையில் சிறந்த மேற்கோள் பாடல்கள் எங்கும் நிறைந்துள்ளன.

“**அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்**” (நான்மணி. 100) என்னும் ஒரே பாடல் பல நூற்பாக்களிலும் (நன். 344, 412, 419) ஒரே நூலின் பல பாடல்கள் (சீவக. 53, 160, 775, 1253, 1444, 1661, 2789) ஒரு நூற்பாவின் உரையிலும் எடுத்தாளும் வழக்கம் இவ்வுரையில் பின்பற்றப்பட்டுள்ளது.

உதாரண விளக்கம்

உரையாசிரியர்கள் தாம் எடுத்துக்காட்டும் உதாரணப் பாடல்களுக்கு விளக்கம் தருவதும் (தொல். கிளவி. 22, 55 சேனாவரையர்) இலக்கணக் குறிப்பு வரைவதும் (தொல். எச்ச. 16 தெய்வச்சிலையார்) பொது நெறிமுறைகள். அவ்வாறே எச்சங்களின் வகையைக் கூறும் நூற்பாவின் உரையில் மயிலைநாதர் (நன். 359) பல குறட்பாக்களுக்கு விளக்கம் கூறிப் பொருத்திக் காட்டுவார். இந்த உரைநெறியைத் தழுவி இசையெச்சத்தை விளக்குவதற்கு “இணரெரி தோய்வன்ன” (குறள். 308) என்னும் குறட்பாவை நமச்சிவாயர் எடுத்துக்காட்டி அகலவுரை கூறுவதை (நன். 360) அனுபவித்துப் படிக்கலாம்.

உரைநெறிகளுள் ஒப்பியல்முறை ஒன்று. தொல்காப்பியரும் பவணந்தி முனிவரும் “பிறன்கோட் கூறல்” (தொல். மரபு. 112; நன். 14) என்னும் உத்தி வகையில் இதனைக் குறிப்பிடுவார்கள். யாப்பருங்கல உரையாசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் தொல்காப்பியத்துக்கு முன்னும் பின்னும் தோன்றிய அகத்தியம், அவிநயம் போன்ற நூல்களின் சூத்திரங்களை எடுத்துக்காட்டி இம்முறைக்குச் சிறப்பிடம் தருவார்கள். மற்றொரு நல்ல நோக்கத்துக்காக நன்னூல் உரையாசிரியர்களும் இம்முறையைக் கைக்கொண்டனர். தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் ஓரளவு மாறுபட்டிருந்ததால் அது தொல்காப்பியத்துக்கு எதிர்நூல் என்னும் ஒரு கருத்து அக்காலத்தில் நிலவியிருக்கக் கூடும். அந்தப் பிழைக்கருத்தை மாற்றுவதற்கே “இஃது எதிர்நூல் அல்ல.” (நன். 62) என்று மயிலைநாதரும் “அந்நூலோடு (தொல்காப்பியத்தோடு) இந்நூல் (நன்னூல்) மறுதலைப்பட்டது என்று கோடற்க.” (நன். 164) என்று நமச்சிவாயரும் மறுப்புரை எழுதினர். அவ்வாறு எழுதியது மட்டும் அல்ல. தொல்காப்பிய நன்னூல் ஒப்பியல் முறையையும் அவர்கள் இயலும் இடம் எல்லாம் கடைப்பிடித்தனர்.

உதாரணத்துக்காக ஒன்று. வினையின் பொது இலக்கணம் கூறும் வினையியல் முதல் நூற்பாவின் உரையில் மயிலைநாதர் "இதற்குக்,

> காலம் அறிதொழில் கருத்தனோடு இயையப்
> பால்வகை தோறும் படுமொழி வேறே

எனவும்

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையும் காலைக் காலமொடு தோன்றும்

எனவும் சொன்ன அவிநயனார் கருத்தும் தொல்காப்பியனார் கருத்தும் அறிந்துகொள்க." (நன். 319) என்று ஒப்பிட்டுக் காட்டுவார். மயிலைநாதரைத் தழுவி அந்நூற்பாக்கள் இரண்டையும் சங்கர நமச்சிவாயர் தமது உரையில் (நன். 320) எடுத்துக்காட்டுவது மயிலைநாதரை மதிப்பதற்காக மட்டும் அல்ல; அவரால் தொடங்கப்பட்ட தொல்காப்பிய நன்னூல் ஒப்பியல் முறையை ஒப்புக்கொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் ஆகும். இவ்வாறு இவ்விரு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவர் வேறு பல இடங்களிலும் (நன். 94, 124, 128, 158, 233, 265, 270, 274, 295, 300, 316, 360, 401) ஒப்பிட்டு ஆராய்வது அவர் உரைத்திறனைப் புலப்படுத்தும்.

உதாரணங்களைத் தெரிவுசெய்தல்

இலக்கண உரையாசிரியர்கள் பொருள் விளக்கத்துக்கும் உரைத்தெளிவுக்கும் உதாரணப் பாக்களை நூற்றுக் கணக்கில் எடுத்தாளுவது உரைமரபு என்பது முன்பே சொல்லப்பட்டது. என்றாலும் ஒரு உரையாசிரியர் எடுத்தாண்ட மேற்கோள்கள் அனைத்தும் அவரே மூலநூல் சுவடிகளை நேரில் படித்துப் பார்த்து எடுத்துக்காட்டியதாகக் கருதிவிடக் கூடாது. அதற்கு ஏற்றவாறு அனைத்து மூலநூல் சுவடிகளும் அக்காலச் சூழலில் ஒவ்வொருவர் கைவசத்திலும் இருந்திருக்குமா என்பதே கேள்விக்குறி. களவியல் உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தி ஆசிரியர், இளம்பூரணர் போன்ற பழைய உரையாசிரியர்களைத் தவிர மயிலைநாதர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் பலரும் தத்தமக்குத் தேவைப்படும் மேற்கோள்களைப் பழைய

உரைகளிலிருந்து உரிமையோடு வாரிக்கொண்டனர். மூலநூலுக்கு உரைபோல உரைக்கு உதாரணம் முக்கியம். உதாரணங்களால் உரைக்குத் தெளிவும் சுவையும் கூடுவதால் தம் விருப்பத்துக்கு ஏற்றபடி உரையாசிரியர்கள் அவற்றை மாற்றுவதில்லை. மாற்றுவதால் உரையின் தெளிவும் சுவையும் குறையும்; சில சமயம் அவை பிறழ உணரப்படும். இவற்றுக்கும் மேலாக இதற்கு இன்னொரு வலிவான காரணமும் உண்டு. தமிழ்மரபு செய்யுள்மரபு. அதற்கு ஏற்றது மனப்பாடக் கல்விமுறை. உதாரணங்களை மாற்றுவது இந்த முறைக்கு உதவாது; மரபு தொடராது. மூலமும் உரையும் மாறாமல் இருப்பதுபோல உதாரணமும் நிலைத்திருப்பது நல்லது. முடிவாகச் சொன்னால் உதாரணங்களை மாற்றுவது பயன் தருவதில்லை; பயன் தராத மாற்றம் போற்றப்படுவதும் இல்லை. ஆகவே ஒரு உரையாசிரியர் காட்டிய பொருத்தமான உதாரணங்களை வேறு ஒருவர் தமது உரையில் தழுவிக்கொள்வது நடைமுறை. இவ்வாறு ஒரு கருத்துக்குத் தொடர்ந்து ஒரே பாடல் உதாரணமாகக் காட்டப்படுவதால் இலக்கண மாணவர்களுக்கு "உண்ணாமை" எனத் தொடங்கும் குறட்பாவைப் படிக்கும்போது தாப்பிசைப் பொருள்கோள் நினைவுக்கு வரும். தாப்பிசைப் பொருள்கோளைக் கூறும் நூற்பாவைப் படிக்கும்போது, "உண்ணாமை" எனத் தொடங்கும் குறட்பா (255) அவர்களுக்கு நினைவுக்கு வந்துவிடும். இம்முறையில் ஒன்று மற்றொன்றை நினைவூட்டுவதால் இரண்டும் நெஞ்சில் நிலைத்துவிடும். இத்தகைய மாறா நிலை அடைந்த உதாரணங்கள் இலக்கணப் பயிற்சிக்கும் மனப்பாட முறைக்கும் பயன்படுவதால் இந்த உரைநெறி வழிவழியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த மரபுக்கு இன்னொரு காரணமும் உண்டு. சில இலக்கணக் கருத்துகளை விளக்குவதற்குப் பொருத்தமான உதாரணங்கள் கிடைப்பது எளிது அல்ல. 'புலி கொல் யானை' என்ற தொடர் இதற்கு ஏற்ற உதாரணம். "தடுமாறு தொழிற்பெயர்க்கு" (தொல். வேற். மய. 12) என்னும் நூற்பாவின் உரையில் இளம்பூரணர் இத்தொடரை முதன்முதலாக உதாரணமாகக் காட்டினார். அவருக்குப் பின் வந்த சொல்லதிகார உரையாசிரியர்கள் எல்லோரும் இத்தொடரையே எடுத்துக்காட்டினர். வேறு ஒரு உதாரணம் காட்ட அவர்கள் யாரும் எண்ணவில்லை.

இதுபோலவே உம்மைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்குத் 'தகரஞாழல்' என்று இளம்பூரணர் (தொல். எச்ச. 22) காட்டிய உதாரணம் ஒன்றே பலராலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இலக்கியத்தில் இத்தொகை அருகி வழங்குவதால் இளம்பூரணர் காட்டிய உதாரணத்தையே எல்லோரும் சிக்கெனப் பிடித்துக்கொண்டனர். ஆகவே ஒரு உரையாசிரியர் காட்டிய உதாரணங்களை இன்னொருவர் எடுத்தாளுவது ஒரு நடைமுறையாக நிலைத்துவிட்டது. பயிற்றுமுறைக்குப் பயனுள்ளது என்பதால் உரையாசிரியர்கள் பலரும் இம்முறையைப் பின்பற்றியுள்ளனர். சங்கர நமச்சிவாயர் மட்டும் இதற்கு விதிவிலக்காக விளங்க முடியுமா? எனவே அவரும் இந்த நடைமுறையைப் பின்பற்றினார்; கொஞ்சம் தாராளமாகவே பின்பற்றினார் எனலாம். அவர் உரையில் காணப்படும் மேற்கோள்கள் அனைத்தும் அவரே மூலநூல் சுவடிகளில் முயன்று தேடி எடுத்துக்காட்டியன அல்ல. மயிலைநாதர் உரையோடு நமச்சிவாயர் உரையை மேம்போக்காக ஒப்பிடுவோர்க்கும் இந்த உண்மை தெற்றெனத் தெரிந்துவிடும். ஆயினும் ஒரிரு உதாரணங்களைப் பார்க்கலாம்.

மேற்கோள் விளக்கம்

வினைமுற்று வினையெச்சம் ஆதலைக் கூறும் புறனடைச் சூத்திரத்தின் உரையில் (நன். 351) நமச்சிவாயர் காட்டியுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட உதாரணங்களும் மயிலைநாதர் உரையில் (நன். 350) உள்ளவை. அதுபோலவே செய்யுள் விகாரங்கள் (நன். 155, 156), வெளிப்படை, குறிப்பு மொழிகள் (நன். 269), வினையெச்சங்களின் முடிக்கும் சொல் (நன். 344), பொருளாதி ஆறாகிய அடைகளை அடுத்து வரும் மொழிகள் (நன். 401) ஆகியவற்றைக் கூறும் நூற்பாக்களின் உரைகளில் நமச்சிவாயர் காட்டியுள்ள இலக்கிய உதாரணங்களில் பெரும்பகுதி மயிலைநாதர் காட்டியதே. இன்னும் சொன்னால் இடையியல், உரியியல் நூற்பாக்களுக்கு நமச்சிவாயர் காட்டியுள்ள உதாரணச் செய்யுள்களில் ஏழெட்டு போக எஞ்சியவை எல்லாம் மயிலைநாதர் உரையிலிருந்து எடுத்துக்கொண்டவை. அவை மட்டும் அல்ல. கலித்தொகை, நற்றிணை, சீவக சிந்தாமணி முதலிய இலக்கியங்களிலிருந்து நமச்சிவாயர் உரையில்

காட்டப்பட்டுள்ள உதாரணப் பாடல்கள் அனைத்தும் மயிலைநாதர் உரையில் எடுத்தாளப்பட்டவை. இவையன்றி அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலியவற்றிலிருந்து மயிலைநாதர் எடுத்துக்காட்டிய மேற்கோள் பாடல்களை நமச்சிவாயர் பேரளவில் தமது உரையில் எடுத்து அமைத்துக்கொண்டார். ஆகவே சங்கர நமச்சிவாயர் உரையில் உள்ள மேற்கோள் பாடல்களின் அடிப்படையில் அவரது இலக்கியப் பயிற்சியை மதிப்பிடும்போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. அவருடைய இலக்கியப் பயிற்சிக்கு மயிலைநாதர் அளித்துள்ள பங்களிப்பை ஆய்வாளர்கள் மறத்தலாகாது. மறந்தால் ஆராய்ச்சியின் போக்கு மாறிவிடும்.

இந்த உரைமரபை உணராமல் நமச்சிவாயர் உரையில் உள்ள மேற்கோள்களை மட்டுமே தரவுகளாகக் கொண்டு, அவர் காலத்தில் வழங்கிய நூல்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஆராய முற்படக் கூடாது. அத்தகைய ஆய்வு தவறான முடிவுகளையே தரும். நமச்சிவாயர் பத்து அகத்தியச் சூத்திரங்களைத் தமது உரையில் (நன். 260, 265, 291, 295, 297, 300, 323, 327, 340, 342) எடுத்தாண்டுள்ளார். "இதனால் இவர் காலத்தில் அகத்தியம் என்ற பெயரில் ஓர் இலக்கண நூல் உலாவி இருக்கின்றது என்பதுவும் அவ்விலக்கண நூலை இவர் துறைபோகக் கற்றிருக்கிறார் என்பதுவும் புலனாகின்றன." என்று (க. ப. அறவாணன், 1977. பக். 128) சொல்வது தவறான முடிபு. அகத்தியம் என்னும் தொன்னூல் அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன்பே மறைந்துவிட்டதாகச் சிலப்பதிகார உரைப்பாயிரம் குறிப்பிட்டுள்ளது. இலக்கண உரைகளில் அகத்தியச் சூத்திரங்கள் என்ற பெயரில் மிகச் சில நூற்பாக்களே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு அழைக்கப்படும் அகத்தியச் சூத்திரங்கள் பதினேழினை மயிலைநாதர் (நன். 130, 258, 259, 272, 290, 294, 296, 299, 322, 326, 332, 339, 341, 354, 377, 381, 394) எடுத்தாண்டுள்ளார். இலக்கிய மேற்கோள்களை அவர் உரையிலிருந்து எடுத்துக்கொண்டது போலவே அகத்தியச் சூத்திரங்களையும் நமச்சிவாயர் உரிமையோடு தமது உரையில் எடுத்து அமைத்துக்கொண்டார். அவர் காட்டியுள்ள பத்து அகத்தியச் சூத்திரங்களில்

மயிலைநாதர் எடுத்துக்காட்டாத சூத்திரம் மருந்துக்குக்கூட ஒன்று இல்லை. எனவே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மறைந்துபோன அகத்தியத்தை நமச்சிவாயர் கண்டுபிடித்து, அந்த முத்தமிழ் இலக்கணத்தைத் துறைபோகக் கற்றுத் தமது உரையில் எடுத்துக்காட்டினார் என்பது ஏற்புடையது அல்ல. மேலும் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுப்பிரமணிய தீக்கிதர், வைத்தியநாத தேசிகர், சாமிநாத தேசிகர் போன்ற இலக்கணப் புலவர்கள் அகத்தியம் உயிர்த்தெழுந்தது குறித்து எதுவும் எழுதவில்லை. ஆகவே சங்கர நமச்சிவாயர் காலத்தில் அகத்தியம் புத்துயிர் பெற்றுத் தமிழ்த்தேரில் ஆரோகணித்து உலா வந்தது என்பது கட்டுக்கதை; கவைக்கு ஆகாது. இத்தகைய கதைகளை இலக்கண வரலாறு புறக்கணித்துவிடும்.

அகத்தியம்போல அவிநயமும் மறைந்துபோன இலக்கண நூல்களில் ஒன்று. அவிநயச் சூத்திரங்கள் பல யாப்பருங்கல விருத்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவிநய நூலையும் அதன் உரையையும் "புவி புகழ் புலமை அவினய நூலுள் தண்டலங்கிழவன் தகை வரு நேமி எண்திசை நிறைபெயர் இராசபவித்திரப் பல்லவதரையன் பகர்ச்சி" என்று மயிலைநாதர் (நன். 359) புகழ்ந்துள்ளார். அந்நூலின் நூற்பாக்கள் இரண்டினை நமச்சிவாயர் (நன். 128, 320) எடுத்துக்காட்டியுள்ளார். அதனால் அவர் "அவிநய நூலைப் பயின்றிருக்கிறார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன." என்று (க. ப. அறவாணன், 1977. பக். 128) பெரிதுபடுத்திக் கூறப்படுகிறது. இது முற்றிலும் பொருந்தாது என்பதை நமச்சிவாயர் மேற்கோள் காட்டியுள்ள முறையே தெரிவிக்கிறது. வினையியல் முதல் நூற்பாவின் உரை இறுதியில் "**காலம் அறிதொழில்**" என்னும் அவிநய நூற்பாவையும் "**வினையெனப் படுவது**" (தொல். வினை. 1) என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் மயிலைநாதர் (நன். 319) ஒப்பியல் நோக்கில் எடுத்துக்காட்டி, அவ்விரு நூலாசிரியர்களின் கருத்துகளையும் அறிந்துகொள்க என்பார். சங்கர நமச்சிவாயரும் அந்த நூற்பாக்கள் இரண்டினையும் அதே வரிசைமுறையில் வினையியல் முதல் சூத்திர உரையின் இறுதியில் (நன். 320) எடுத்துக்காட்டியுள்ளார். ஆகவே நமச்சிவாயர் அவிநயத்தைப் பயிலவும் இல்லை; அந்த நூலின் சுவடியிலிருந்து இந்த

நூற்பாவை அவர் எடுத்துக்காட்டவும் இல்லை. மயிலைநாதர் உரையின் அமைப்பையும் முறையையும் நமச்சிவாயர் முற்றாகத் தழுவி, அவர் உரையிலிருந்தே இந்நூற்பாவைத் தமது உரையில் எடுத்து அமைத்துக்கொண்டார். மேலும், அவர் (நன். 128) எடுத்தாண்டுள்ள **"தன்னை உணர்த்தின் எழுத்தாம்"** என்னும் மற்றொரு அவிநய நூற்பாவுக்கு இக்கருத்துரை இன்னும் பொருந்தும். உண்மையை மனம் திறந்து சொன்னால், அகத்தியத்தையோ அவிநயத்தையோ நமச்சிவாயர் பார்க்கவும் இல்லை; படிக்கவும் இல்லை. அவர் பார்த்தது மயிலைநாதர் உரை; அதன் விளைவே இந்த மேற்கோள்கள்.

உரையாசிரியர்கள் காட்டும் உதாரணங்கள் அரிய செய்திகளைப் புலப்படுத்துவன என்பது உண்மை. சங்கர நமச்சிவாயர் வரலாற்றில் "கண் தழைப்பான் கதிரவன் தொழுதார்" (நன். 345), "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது" (நன். 384), "மைந்தன் பிறந்தான்; அதனால் தந்தை உவக்கும்" (நன். 394), "கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின" (நன். 405) என்பவற்றால் சில அரிய செய்திகள் அறியப்படுகின்றன." என்று சாமிநாதையர் (1935. பக். 36) இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவை எல்லாம் நமச்சிவாயர் காலத் தமிழ்ச் சமுதாயப் பழக்க வழக்கங்கள் என்பது (க. ப. அறவாணன், 1977. பக். 149) பொருந்தாது. காரணம் இவற்றில் பலவும் இலக்கண உரைகளில் காலம் காலமாக எடுத்தாளப்படும் உதாரணங்கள் என்பதே ஆகும். நன்னூல் விருத்தியுரையில் நமச்சிவாயர் காட்டியுள்ள "கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின" (நன். 405), "அறம் செயின் சுவர்க்கம் புக்கான்" (நன். 384), "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது" (நூ. 384) என்ற உதாரணங்கள் இளம்பூரணரால் சொல்லதிகார உரையில் முறையே (தொல். கிளவி. 21; வினை. 43, 46) எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சொல்லதிகார உரையாசிரியர்கள் பலரும் மயிலைநாதரும் இவற்றைத் தமது உரைகளில் எடுத்தாண்டுள்ளது இலக்கணம் கற்போர் அறிந்தது. இளம்பூரணர் எடுத்துக்காட்டியுள்ளவற்றுள் "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது" என்னும் எடுத்துக்காட்டுக்குப்,

"பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப"

என்னும் கிள்ளிவளவன் பாடல் (புறம். 173:5-7) ஊற்றுக்கண் என்று சொல்லலாம். எனவே இந்த உதாரணத்தில் பொதிந்துள்ள நம்பிக்கை பழமையானது; இது புறநானூற்றுக் காலத்துக்கு முற்பட்டதாக இருந்தாலும் இருக்கலாம்.

இனி, "மைந்தன் பிறந்தான்; அதனால் தந்தை உவக்கும்" (நன். 394) என்னும் உதாரணம் **"கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து"** (மதுரைக். 600), **"நன்கலம் நன்மக்கள் பேறு"** (குறள். 60) என்னும் பழைய நம்பிக்கையின் பிரதிபலிப்பு. ஆகவே நமச்சிவாயர் காட்டியுள்ள இந்த உதாரணங்கள் அவரே தேடி எடுத்துக்காட்டியன என்றும் அவர் காலத்தில் நிலவிய பழக்க வழக்கங்களை அவை பிரதிபலிப்பன என்றும் விரைந்து முடிவுகட்டிவிடக் கூடாது. உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ள உதாரணங்களை எல்லாம் காலவரிசையில் முறையாகத் தொகுத்து ஆராய்ந்தாலன்றித் திறனாய்வு சிறக்காது. அவ்வாறு ஆராயாமல் சங்கர நமச்சிவாயர் போன்ற பிற்கால உரையாசிரியர் காட்டிய உதாரணங்களையும் மேற்கோள்களையும் தனியே பிரித்து எடுத்து, அவற்றைப் பொது உரைமரபுகளோடு ஒப்பிட்டு நோக்காமல் ஆராய்வது குருடர்கள் யானையைப் பார்த்த கதையாகவே முடியும்.

அகலவுரை

விருத்தியுரையின் சிறப்பியல்புகளை உள்ளடக்கியது அகலவுரை. சங்கர நமச்சிவாயரின் உரைத்திறனைத் தெற்றெனப் புலப்படுத்துவதும் அகலவுரையே. இலக்கண உரைகளில் அவருடைய உரை விரிவானது; மூலநூலின் உட்பொருளை முழுமையாக விளக்கக் கூடியது; தெளிவான நடையும் முறையான அமைப்பும் கொண்டது. சொற்பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்பு, வினாவிடைகள், நயவுரைப் பகுதிகள், அழகான உவமைகள், வடமொழி ஒப்பீடு முதலிய இன்றியமையாத இயல்புகள் பலவும் அகலவுரையில் அமைந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைச் சுருக்கமாகவும் சிலவற்றைத் தனித்தனியே பின்னர் விரிவாகவும் பார்க்கலாம்.

மூலபாடத்தில் உள்ள அருஞ்சொற்களுக்கு “அஃகுதல் சுருங்குதல், தனிநிலை ஆய்தம்” (நன். 60) என்றும் “துணிவாவது ஐயுறக் கிடந்துழி இதற்கு இதுவே பொருளென உரைத்தல்” (நன். 21) என்றும் நமச்சிவாயர் பதப்பொருள் எழுதுவார். உரையின் இடையிடையே “உயிர்மெய் என்னும் சொல் மாத்திரை வகையான் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகவும் ஒலி வகையான் உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படும்.” (நன். 109) என்றும் “பெறுவன என்னும் சொல் பெறுன எனத் தொகுத்தல் விகாரம்.” (நன். 166) என்றும் அவர் இலக்கணக் குறிப்புகளை வழங்குவார். இன்னும் சில இடங்களில் “ஆம் என்னும் பெயரெச்சம் ஒலி என்னும் பெயரோடு முடிந்தது.” (நன். 58), “எழுத்து என்பது சாதியொருமை ஆதலின் அனைத்து என்னும் ஒருமையோடு முடிந்தது.” (நன். 127) என்று அவர் தொடரியல் விளக்கம் கூறுவார். பகுதி, விகுதி என்பன பிரகிருதி, விகிருதி என்னும் ஆரிய மொழிகள் (நன். 133) என்று ஒப்பிட்டுக் கூறித் தமது வடமொழிப் பயிற்சியை அவர் புலப்படுத்துவார்.

“கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரை எல்லாம் அகலவுரை” (இறை. 1) என்பதற்கு ஏற்பத் தமது உரையில் “செய்யுட்குரிய பொருள்கோளை ஈண்டுக் கூறியது என்னை எனின் செய்யுட்குத் தொடர் என்னும் காரணக்குறி போந்தது மொழி தொடர்ந்ததால் அன்றே! அங்ஙனம் ஆதலின் இதுவும் தொடர்மொழி இலக்கணமேயாம் என்க.” (நன். 419) என்று வினா எழுப்பி அவரே விடை கூறுவார். நூற்பாக்களில் உள்ள சொற்களையும் தொடர்களையும் “எல்லா நூலும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூற வேண்டுதலின் பூமலி என்றும்” (நன். 56) “நம் செயல் அன்று என்பார் அடி தொழுது அறைகுவன் என்றும்” (நன். 258) அவர் தனியே எடுத்தெழுதி நயவுரை கூறுவார். நுட்பமான இலக்கணக் கருத்துகளை “அணு என்னும் ஒலிநுட்பத்தான் எழுத்து ஆனாற்போல எழுத்து என்னும் ஒலிநுட்பத்தான் மொழி” ஆகும் (நன். 128) என்று அவர் ஒரு கருத்துக்கு இன்னொரு கருத்தை உவமை கூறி விளக்குவார். இலக்கணக் கருத்துகள் நூற்பாக்களில் அமைந்துள்ள வைப்புமுறையை “மெய்களை முற் கூறினார் அவற்றிற்கு அகரச்சாரியை இன்றியமையாமையின்”

(நன். 126) என்றும் "நிகழ்காலம்போல வெள்ளிடைப் பொருளன்றி இறந்தகாலம், எதிர்காலம் இரண்டும் மறைபொருளாய் நிற்றலின் இறப்பு நிகழ்வு என்னாது இறப்பு எதிர்வு என்றார்." (நன். 383) என்றும் பொருந்தும் வகையில் வைப்புமுறையை அவர் புலப்படுத்துவார்.

கருத்து விளக்கம், பொருள் இயைபு போன்ற காரணங்களுக்காக மூலநூலின் நூற்பாக்களையும் தொடர்களையும் அகலவுரையில் நூற்றுக் கணக்கான இடங்களில் நமச்சிவாயர் எடுத்துக்காட்டுவார். உதாரணமாக **"ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே"** (நன். 358) என்னும் நூற்பாவைப் பல முறை (நன். 92, 303, 315, 320, 328, 356, 380) எடுத்தாளுவார். காலம் காட்டும் விகுதிகளைக் கூறும் நூற்பாவின் உரையில் (நன். 145) அதற்கு முன்னும் பின்னும் உள்ள பன்னிரண்டு நூற்பாக்களை (நன். 133, 144, 155, 156, 163, 165, 204, 227, 239, 247, 329, 426) மேற்கோள் காட்டி உரை வரைவார். நூலாசிரியர் கூறிய விதியுள் அடங்காதவற்றை "மன் என்ற மிகையானே சிறுபான்மை ஒவ்வா என்பதாம்." (நன். 242), "வழியே என்ற மிகையானே அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன் சாரியை வருதலும் தனிக்குறில்முன் ஒற்று, உயிர் வரின் இரட்டாமையும் கொள்க." (நன். 250) என்று நூற்பாவில் உள்ள மிகைச் சொற்களால் அமைப்பார். மொழியில் நிகழ்ந்துள்ள வளர்ச்சியை யார் என்பது ஆர் என்றும் எவன் என்பது என், என்னை என்றும் மருவி வழங்குவது (நன். 349, 350) புதியன புகுதல் என்பார். இன்னும் சற்றுத் தெளிவாக "மின் அவற்று ஏவல் என்றமையான் உண்ணும், தின்னும் நீர் என உம் ஈற்றவாய் வரும் பன்மை ஏவல் புதியன என்பதூஉம் அவை **"புதியன புகுதலும் வழுவல"** (நன். 462) என்பதனான் அமையும்." (நன். 337) என்று ஆசிரியர் கூறிய புறனடைவிதியால் அவர் அமைத்துக் காட்டுவார்.

மறுப்புரை

அகலவுரையின் ஒரு பகுதி மறுப்புரை. விருத்தியுரையில் ஏறக்குறைய எழுபது இடங்களில் சங்கர நமச்சிவாயர் மறுப்புரை வரைந்துள்ளார். மயிலைநாதர் உரையே அவரால் மிகுதியாக

மறுக்கப்பட்டது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்துகளும் ஒரு சில இடங்களில் (நன். 3, 110, 152, 158, 162, 164) மறுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவர் எந்த உரையாசிரியரையும் பெயர் சுட்டி மறுக்கவில்லை. பிறருடைய உரைகளை மறுக்கும்போது வெவ்வேறு உத்திமுறைகளை அவர் கையாளுவார். மூலபாடச் சான்று (நன். 358), மூலநூல் விதிகள் (நன். 254), நூற்பாக்களின் இயைபு (நன். 124), முதல்நூல் ஆணை (நன். 316), இலக்கிய வழக்கு (நன். 397), காரணங்களின் தொகுப்பு (நன். 398), அழகான உவமை (நன். 152), நகைச்சுவை நடை (நன். 399) முதலியவற்றைப் பயன்படுத்தி மறுப்பது அவரது சிறப்பியல்பு. என்றாலும் தம்முடைய ஆசிரியரைப் போலக் கடுநடையை அவர் எங்கும் கையாளவில்லை.

பொதுவாக அவரது மறுப்புரை "அது பொருந்தாது என்க." (நன். 109), "அது பாடம் அன்று." (நன். 209), "அது நூற்கருத்து அன்று என்க." (நன். 110), "அஃது உரை அன்று என்க." (நன். 271), "அது பொருள் அன்று என்க." (நன். 398), "அம்மலைவு அவர் காட்டும் உதாரணங்களுள் காண்க." (நன். 370), "அது காட்டு அன்று என்க." (நன். 379), "வேறு பொருள் கூறுவாரும் உளர். அது நிற்க." (நன். 360) என்று நயமான நடையில் அமைந்துள்ளது. சில இடங்களில் "இத்தொடக்கத்து வழாநிலைகளை இடவழுவமைதியாக உதாரணம் கூறுவார் கூற்றை எல்லாம் உய்த்துணர்ந்து களைக." (நன். 380), "அது மொழிமாற்றிற்கும் கொண்டுகூட்டிற்கும் வேற்றுமை உணரார் கூற்றாம் என்க." (நன். 413) என்று அவர் அழுத்தமாக மறுத்துரைப்பதும் உண்டு. பிறர் உரைகளில் காணப்படும் முரண்பாடுகளின் முழுப்பரிமாணமும் தெள்ளத் தெளியத் தோன்றுமாறு "அவர் கூற்றுத் தாய் மலடி என்றாற்போலும்." (நன். 152), "அன்றேல் வாழைபழம் கீரைகறி என்றாற் போலும்." (நன். 158), "அது யானை குடத்திலும் இல்லை; குழிசியிலும் இல்லை என்றது போலும் என்க." (நன். 399) என்று நகைச்சுவை தொனிக்கும் எளிய உவமைகளால் அவர் சுட்டிக்காட்டுவதும் உண்டு. உதாரணத்துக்காக அவர் வரைந்த மறுப்புரை ஒன்றைப் படிக்கலாம்.

உயர்திணை பண்புத்தொகை என்பது நமச்சிவாயர் (நன். 261) கருத்து. அது வினைத்தொகை என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியர் (தொல். கிளவி. 1), மயிலைநாதர் (நன். 260) முதலியோர் கருத்து. அது பொருந்தாது என்று காட்ட "உயர்திணையை உயர்ந்த திணையென இறந்தகால வினைத் தொகையாக விரிக்கின் மரம் நாடோறும் உயர்ந்தமை கருதி உயர்மரம் எனவும் கல்வியறிவு நாடோறும் உயர்ந்தமை கருதி அதனை உடையார்மேல் ஏற்றி உயர்மக்கள் எனவும் கூறும் வினைத்தொகைபோல உயர்திணை என்பதற்கு உயரும் புடைபெயர்ச்சிவினை காட்சிவகையானும் கருத்துவகையானும் இன்மையின் அது வினைத்தொகை அன்று எனவும் கொள்க." (நன். 261) என்று நமச்சிவாயர் தருக்கமுறையில் தெளிவாக மறுத்துரைப்பார். அவர் உரையில் இது போன்ற மறுப்புரைகள் நிறையவே (நன். 124, 194, 290, 347, 398) காணப்படுகின்றன.

மதம் அழகு உத்திகள்

எழுவகை மதங்களைத் தழுவிப் பத்து அழகும் முப்பத்திரண்டு உத்தியும் கொண்டதாக அமைவது நூலுக்குச் சிறப்பு (நன். 4) என்பது நூல்மரபு. நன்னூல் அவ்வாறு அமைந்துள்ள நூல் என்பதற்கு அவற்றைப் பல இடங்களில் நமச்சிவாயர் எடுத்துக்காட்டியுள்ளார். தாம் எடுத்துக்காட்ட இருப்பதை "இவ்வெழு வகை மதங்கட்கும் பதப்பொருளோடு உதாரணம் விளங்க இந்நூலுள் வந்துழி வந்துழிக் காட்டுதும்; ஆங்காங்கு உணர்க." (நன். 11) என்று அவர் முன்கூட்டியே கூறுவார். கூறியவாறே அவற்றை விளக்கிச் சொல்வார். தொல்காப்பியர் (தொல். மொழி. 3) குற்றியலுகரம் வரும் இடங்களைத் தொகுத்துக் கூறுவார்; அதோடு நுந்தை என்னும் முறைப்பெயர்க்கண் நிற்கும் உகரம் குற்றுகரம் (தொல். மொழி. 34) என்றும் அவர் கூறுவார். பவணந்தி முனிவர் (நன். 94) அவற்றை வகுத்துக் கூறுவார். அல்லாமலும் மொழிமுதல் குற்றியலுகரம் என்பது அவருக்கு உடன்பாடு அல்ல. இந்த வேறுபாடுகளை நமச்சிவாயர் உத்தியோடும் மதத்தோடும் இணைத்து "இது முன் மொழிந்து கோடல் என்னும் உத்தி; அவ்வாசிரியர் நுந்தை என்னும் முறைப்பெயர்க்கண் உகரத்தைக் குறுக்கம் என்றார். அஃது இவர்க்கு உடன்பாடு அன்மையின்

கூறாதொழிந்தார். இது மறுத்தல் என்னும் மதம்; ஏனைய உடன்படல்." (நன். 94) என்று எடுத்துரைப்பார். இன்னும் **"யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்"** (நன். 116) என்னும் நூற்பாவில் ஆசிரியர் பவணந்தி முனிவர் நிலைமொழி ஈற்றெழுத்துக்களைக் கூறியதுபோல வருமொழி முதற்கண் வரும் மெய்யெழுத்துகள் பத்தையும் பட்டியல் இடவில்லை. அவற்றைத் தொகுத்து ''மொழிமுதல் மெய்'' என்று குறிப்பிட்டுள்ளார். பவணந்தி முனிவர் இவ்வாறு கூறுவது "சுருங்கச் சொல்லல் என்னும் வனப்பு வகை" (நன். 116) என்று ஆசிரியரின் நூலாக்க முறையை அவர் பாராட்டுவார்.

முப்பத்திரண்டு உத்திகளில் (நன். 14) இரட்டுற மொழிதல் ஒன்று. அது நூற்பாவின் சொல்லமைதியைப் பற்றியது. அதாவது நூற்பாவின் சொல்நடை இரண்டு வகையில் பொருள்படுமாறு அமைந்திருப்பது. இதற்கு **"அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா"** (நன். 171) என்னும் நூற்பா தக்கதோர் எடுத்துக்காட்டு. அதன் உரையில் ஆ, மா என இரண்டு சொற்களாகவும் ஆமா என ஒரு சொல்லாகவும் கொண்டு நமச்சிவாயர் பொருள் கூறி உதாரணம் காட்டுவார். அந்நூற்பாவின் அகலவுரையில் "ஆமா என்ற துணையானே காட்டா எனவும் பொருள் தர, இரட்டுற மொழிந்தமையான் ஆமா குறிது, சிறிது, பெரிது என மிகாமையும்" கொள்க என்று அவர் தெளிவுபடுத்துவார். இந்த உரையையும் நடையையும் அவர் கருத்தில் கொண்டு **"ஆமா கோனவ் வணையவும் பெறுமே"** (நன். 248) என்னும் நூற்பாவுக்கும் இரட்டுற மொழிதலாக மாற்றுரை கூறுவது நமச்சிவாயரின் நினைவாற்றலுக்குச் சான்று.

கருத்துரைப் பகுதியில் நிறுத்த முறை என்னும் உரைமரபுத் தொடரையும் பொழிப்புரைப் பகுதியில் தொகைக்குறிப்பையும் உதாரணப் பகுதியில் உதாரணம் காட்டுதலையும் விரிவாக ஆராய்ந்தோம். அதுபோல அகலவுரைப் பகுதியில் அமைந்துள்ள சொற்பொருள் விளக்கம், வரையறை கூறுதல், வினாவிடை முறை, நயவுரை, உவமைகள், வடமொழி ஒப்புமை ஆகியவற்றின் சிறப்பியல்புகளைப் பழைய உரைகளோடு ஒப்பிட்டு இனி ஆராயலாம்.

அரும்பத விளக்கம்

மூலபாடத்தில் வரும் அரிய சொற்களுக்குப் பதப்பொருள் தருவது உரையாசிரியர்களின் வழக்கம். உரையின் பொது இலக்கணம் கூறும் நூற்பாக்களில் (யா. வி. பாயி; நன். 21, 22) குறிக்கப்படும் 'சொற்பொருள் உரைத்தல்', 'சொற்பொருள்', 'பதப்பொருள்' என்னும் தொடர்களும் 'கண்ணழித்தல்' (இறை. 1; தொல். சிற. பாயி. இளம்.) என்னும் உரைவகையும் அரும்பத விளக்கத்தின் இன்றியமையாமையை நன்கு புலப்படுத்தும். மொழியின் வளர்ச்சி மாற்றங்களையும் கற்போரின் தகுதி திறமைகளையும் கருத்தில் கொண்டு உரையாசிரியர்கள் அனைவரும் இந்த உரைநெறியைக் கடைப்பிடித்துள்ளனர். **'அரும்பத உரையாசிரியர்'** என்னும் பெயர் வழக்காறே இந்த நெறியின் சிறப்புக்குச் செப்புப்பட்டயமாக அமைந்துள்ளது. மூலபாடம், உரை, உதாரணம் என்ற வேறுபாடு இல்லாமல் உரையாசிரியர்கள் அனைவரும் உரையின் இடையிடையே அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதியுள்ளனர். அரும்பதங்களைத் தெரிவுசெய்வதிலும் அவற்றுக்குப் பொருள் தருவதிலும் அவர்களுக்குள் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகளுக்குத் தகுந்த காரணங்கள் இல்லாமல் இல்லை.

உரையாசிரியர்கள் வாழ்ந்த காலம், இடம், அவர்களுடைய இலக்கிய இலக்கணப் புலமை, நிகண்டுநூல் பயிற்சி, வட்டார வழக்கு, நாட்டுப்புற வழக்கு, உலகியல் அறிவு, சமுதாய உணர்வு ஆகியவற்றில் அவர்களுக்கு இருந்த பல்துறை அறிவு முதலியவற்றை அதற்குக் காரணங்களாகக் குறிப்பிடலாம். இவை அனைத்துக்கும் மேலாக உரைக் கோட்பாடு, உரை உருவாக்கம், உரைமரபு, பழைய உரைகளில் அவர்கள் பெற்றிருந்த மேதைமை முதலிய காரணங்களால் அருஞ்சொல் விளக்கத்தில் அவர்கள் மாறுபடுவதுண்டு. இது நடைமுறை வழக்கு. இதற்குச் சில உதாரணங்களைக் காணலாம்.

கொச்சகக் கலிப்பா என்பதற்கு விளக்கம் வரைந்த யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் "கொச்சகம்போல மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் கிடக்கும் உறுப்பிற்று ஆதலானும் கலியோசைக்குச் சிறப்பில்லாத நேரீற்று இயற்சீரை உட்கொண்டு நிற்றலானும் கொச்சகக் கலிப்பா என்பதூஉம்

காரணக்குறி. சிறப்பில்லதனை ஒரு சாரார் கொச்சை என்றும் கொச்சகம் என்றும் வழங்குவர் எனக் கொள்க." (யா. வி. 79) என்று எழுதியுள்ளார். அவர் கருத்தின்படி கொச்சகம் என்ற சொல் சிறப்பு இல்லாதது என்று பொருள்படும். ஆனால் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இச்சொல்லுக்கு வேறு பொருள் கூறியுள்ளனர். பேராசிரியர் "கொச்சகம் என்பது ஒப்பின் ஆகிய பெயர். என்னை? பல கோடுபட அடுக்கி உடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப. அதுபோலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும் தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டுக்களைக் கொச்சகம் என்றான் ஆகலின் என்பது. இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்கு உரிய உடையுறுப்பு ஆக்கியும் கொய்சகம் என்று சிதைத்தும் வழங்குப." (தொல். செய்யுள். 152) என்று விளக்கம் தந்துள்ளார். இதே பொருளைத் தமது நடையில் நச்சினார்க்கினியரும் (தொல். செய்யுள். 152) எடுத்து எழுதிக்கொண்டார். அடுத்து வரும் உதாரணம் திணை என்னும் சொல்லைப் பற்றியது.

இறையனார் அகப்பொருள் உரையில், "ஒழுக்கத்தினைத் திணை என்பாரும் நிலத்தினைத் திணை என்பாரும் என இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமே திணை எனப்படும்." (இறை. 1) என்று திணை என்னும் சொல்லுக்கு நக்கீரர் பொருள் கூறுவார். அவரே வேறு ஒரு நூற்பாவின் (இறை. 56) உரையில் திணை என்பது பல பொருள் ஒரு சொல்; அது நிலத்தினையும் குலத்தினையும் ஒழுக்கத்தினையும் குறிக்கும். இந்நூற்பாவில் அது ஆகுபெயராய் ஒழுகலாறு நடந்த இடத்தைக் குறித்து நின்றது என்று அச்சொல்லுக்கு மேனிலை விளக்கம் தருவார். இளம்பூரணரைத் தழுவித் திணை என்பதற்குப் பொருள் என்று மயிலைநாதரும் (நன். 260), திணை என்பது ஒழுக்கம்; அது ஆகுபெயராய்ப் பொருளை உணர்த்தும் என்று நச்சினார்க்கினியரும் (தொல். கிளவி. 1), திணை என்பது குலம் என்று சங்கர நமச்சிவாயரும் (நன். 261) பொருள் கூறுவர்.

நன்னூல் உரைகளிலிருந்து இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக்காட்டலாம். நாவல் என்ற சொல்லுக்குப் 'போர்க்கு அழைத்தல்' என்று மயிலைநாதரும் (நன். 100), 'உழவர்

நெல்லரி தொழுவரை விளித்தல்' என்று வைத்தியநாத தேசிகரும் (இல். விள. 25; இது உண்மையில் நன்னூல் சூத்திரம்.) 'நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்' என்று சங்கர நமச்சிவாயரும் (நன். 101) பொருள் கூறியுள்ளனர்.

சொற்பொருள் உரைக்கும் முறைகள்

சொற்பொருள் உரைப்பதில் அரியதொரு முறையை யாப்பருங்கல விருத்தியில், நேரிசை வெண்பா என்பது காரணக்குறி என்று விளக்கும் பகுதியில் (யா. வி. 58) காண முடிகிறது. நேர் என்ற சொல்லுக்குரிய பல பொருள்களையும் விருத்தி ஆசிரியர் தொகுத்து விளக்கும் திறன் நம்மை வியக்க வைக்கிறது. அவர் மொழியில் அப்பகுதி "நேர் என்பது மாறாதற்கண்ணும் ஒத்தற்கண்ணும் தனிமைக்கண்ணும் மிகுதிக்கண்ணும் நுட்பத்தின்கண்ணும் சமனாதற்கண்ணும் உடம்படுதற்கண்ணும் பாதிக்கண்ணும் தலைப்பாட்டின்கண்ணும் நிலைப்பாட்டின்கண்ணும் கொடைக்கண்ணும் நிகழும். என்னை? "நேர்ந்தார் அரணம் பலகடந்த அடுபோர்ச் செழியன்" (வி. மே.) எனவும், நேர்பொருள் நிறுத்தனன் எனவும், "நாற்சீர் கொண்டது நேரடி" (நற்றத்தம்) எனவும், "நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு" (தொல். செய்யுள். 163) எனவும், "நேரசை" (யா. 5) எனவும், நேரே நல்லன நேரே செல்வன எனவும், நேர்நூல், நேராடை எனவும், "நாற்சீர் கொண்டது நேரடி" (நற்றத்தம்) எனவும், "நெட்டெழுத்தான் நேரப்படும்" (வி. மே.) எனவும், நேர்போகி எனவும், நேர்பட்ட இரண்டு படையும் எனவும், நேர்ந்திருந்தன எனவும், "நேராமல் கற்பது கல்வியன்றே" (வி. மே.) எனவும், நேரா நோன்பு எனவும், "நேரா நெஞ்சத்தான் நட்டான் அல்லன்" (வி. மே.) எனவும், உப்பு நேர்ந்தார் எனவும், புளி நேர்ந்தார் எனவும், நேரிழை மகளிர் எனவும் வழங்குவர் ஆகலின்" என்று விரிவாக அமைந்துள்ளது. பேரகராதி ஒன்றில் இருக்கும் பதிவுபோல நேர் என்னும் சொல்லுக்கு உள்ள பதினொரு பொருள்களும் அவற்றுக்கு ஏற்ற இலக்கிய, இலக்கணச் சான்றுகளும் வழக்குச் சான்றுகளும் முறைப்படி அமைந்துள்ளன. இதன்கண் இல்லாதது வரிசை எண் மட்டுமே. இந்த முறையை வேறு இலக்கண உரைகளிலோ நிகண்டுகளிலோ காண்பது அரிது. இது

தொடர்பான தகவல் ஒன்றை இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் நேர் என்ற சொல்லுக்கு எழுதியுள்ள பதப்பொருள் விளக்கம்பற்றி மு. அருணாசலம் (1971, 1975) சில கருத்துகளை முன்வைத்துள்ளார். யாப்பருங்கல உரையாசிரியர் இச்சொல்லுக்குப் பொருள் கூறும் முறை பழைய நூல் ஒன்றைத் தழுவி அல்லது ஒன்றிலிருந்து எடுத்துச்சொல்வதுபோல் இருக்கிறது என்றும், விருத்தியுரைக்கு முன்பு தோன்றிய திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டு நிகண்டுநூல்களே இவ்வாறு சொற்பொருள் கூறுவன என்றும், ஆனால் அவ்விரு நிகண்டுகளிலும் இச்சொல்லோ இப்பொருள்களோ சொல்லப்படவில்லை என்றும் அவர் ஒரு பகுதியில் (1971. பக். 173) கூறியுள்ளார். மற்றொரு பகுதியில் (1975. பக். 117) நேர் என்னும் பெயர்ச்சொல்லுக்குப் பொருள் கூறும் நூற்பா திவாகரத்தில் இருந்தாலும் (நூ. 2281) விருத்தியுரைகாரர் இந்த நிகண்டிலிருந்து தமது கருத்துகளை எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அவருக்கு முன்பு இருந்த பழைய நிகண்டு ஒன்றின் கருத்தையே அவர் எடுத்துக் காட்டியுள்ளார் என்றும் மு. அருணாசலம் மனம் போன போக்கில் ஊகிக்கிறார். இந்த ஊகங்களின் அடிப்படையில் யாப்பருங்கல உரையாசிரியர் நேர் என்பதற்குக் கொடுத்துள்ள விளக்கம், இடுகுறியால் பெயர் பெற்ற நூலுக்கு உரையாசிரியர்கள் (இறை. 1 நக்கீரர்; நன். 48 மயிலைநாதர்) உதாரணமாகக் காட்டும் நிகண்டு என்னும் பழைய நூலில் இருக்கக் கூடும் என்று இறுதியாக அவர் முடிவு செய்கிறார். யாப்பருங்கல உரைப்பகுதியையும் திவாகரம், பிங்கலம் போன்ற நிகண்டுகளின் நூற்பாக்களையும் ஊன்றி நோக்கி ஒப்பிடுவோர்க்கு மு. அருணாசலத்தின் ஊகங்களும் முடிவும் ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல என்பது எளிதில் விளங்கிவிடும். காரணம் நிகண்டுகள் இலக்கியச் சான்றுகளோடு சொற்களுக்குப் பொருள்விளக்கம் கொடுப்பதில்லை என்பதே ஆகும். மேலும் இலக்கியச் சான்றுகளோடு சொல்லுக்குப் பொருள் தருவது அகராதி முறை; பிற்கால முறை. நிகண்டு நூலின் மனப்பாட மரபுமுறைக்கு இது முற்றிலும் மாறுபட்டது. ஆகவே யாப்பருங்கல உரையாசிரியர் நேர் என்னும் சொல்லுக்கு

வரைந்துள்ள விளக்கம் அவருடைய விளக்கத் திறன்; உரைநெறி. தமிழ் அகராதியியலுக்கு அவர் அளித்த பங்களிப்பு என்று அதனைக் கொள்வதே பொருந்தக் கூடியது. மீண்டும் நமது தலைப்புக்கு வருவோம்.

அருஞ்சொற்களுக்குப் பதப்பொருள் உரைப்பதில் மட்டுமன்றி அவற்றைத் தெரிவுசெய்வதிலும் அவற்றுக்குப் பொருள் கூறும் முறையிலும் பழைய உரையாசிரியர்கள் மாறுபடுகின்றனர். மயிலைநாதர் உரையில் மிகச் சில இடங்களில் மட்டுமே அரும்பத விளக்கம் காணப்படுகிறது. சங்கர நமச்சிவாயர் நாற்பதுக்கு மேற்பட்ட இடங்களில் அரும்பத விளக்கம் வரைந்துள்ளார். சொற்களுக்குப் பொருள் கூறும்போது இலக்கிய மேற்கோள், இலக்கணக் குறிப்பு, மறுப்புரை வழங்குதல் போன்ற பொதுவான உரைநெறிகள் பலவற்றை நமச்சிவாயர் கருத்தில் கொண்டுள்ளார். மயிலைநாதரிடம் இவை குறைந்து காணப்படுகின்றன. அரிய சொற்களைத் தெரிவுசெய்தல், அவற்றுக்குப் பதப்பொருள் வரைதல், அவற்றை முறைப்படி விளக்கிச் சொல்லுதல் ஆகியவற்றில் உரையாசிரியர்கள் மாறுபட்டாலும் அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதும் உரைநெறியை அவர்கள் அனைவரும் பேணி வளர்த்துள்ளனர். இந்தக் கூட்டுமுயற்சி தமிழ் அகராதியியலுக்கு எந்த அளவு பயன்பட்டுள்ளது என்பதைச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியைப் பயன்படுத்துவோர் அறிவர்.

நமச்சிவாயரின் முறைகள்

அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுவதில் சங்கர நமச்சிவாயர் பயனுள்ள பழைய முறைகள் பலவற்றைக் கடைப்பிடித்துள்ளார். சில சொற்களுக்கு அவர் அகராதிபோலச் சொல்லும் பொருளும் தருவார். சிலவற்றுக்கு என்பது, என்றது போன்ற சொற்களை வாய்பாடுபோலப் பயன்படுத்தி விளக்கம் எழுதுவார். சில சொற்களுக்கு இலக்கியச் சான்று, நிகண்டுநூல் மேற்கோள் ஆகியவற்றை எடுத்துக்காட்டிப் பொருள் கூறுவார். சில இடங்களில் அவர் ஒரு பொருட் பன்மொழி, பல பொருள் ஒரு சொல் என்பன போன்ற இலக்கணக் கலைச்சொற்களாலும் விளக்குவார்; மற்றும் சில இடங்களில் பதப்பொருளோடு இலக்கணக் குறிப்பும் வரைவார். சில சமயம் பொருள்

விளக்கத்துக்குப் பொருத்தமாக உவமைகளைக் கூறி அவர் தெளிவுபடுத்துவதும் உண்டு. வேறு சில சொற்களுக்கு மாற்றுப்பொருளும் மறுப்புரையும் எழுதித் தமது கருத்தை அவர் நிறுவிக்காட்டுவார். இவ்வாறு வெவ்வேறு முறைகளில் பதப்பொருள் உரைப்பது பழைய உரையாசிரியர்கள் பலரிடமும் காணப்படும் உரைநெறி என்றாலும் இந்த முறைகளுக்கு நமச்சிவாயர் தரும் சிறப்பிடம் அவர் உரைத்திறனை ஒரு படி உயர்த்திக் காட்டுகிறது. இதற்குப் பொருத்தமான உதாரணங்கள் அவர் உரையில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தொல்காப்பியத்தில் **"மாதர் காதல்"** (உரி. 30), **"கருவி தொகுதி"** (உரி. 56), **"அமர்தல் மேவல்"** (உரி. 82) என்றும், நிகண்டுகளில் **"வியங்கோள் ஏவல்"** (திவா. 1741), **"தேசிகம் திசைச்சொல்"** (திவா. 1779), **"கூடல் மதுரை"** (பிங். 464), **"கலைஞர் பாவலர்"** (பிங். 850) என்றும் விளக்கப்படுகின்றன. இந்த முறையில் புரம் - உடம்பு; உரம் - நெஞ்சு; நல்வளம் - அறிவு; தீமைவளம் - அறியாமை" (நன். 25) என்றும், "ஊ - இறைச்சி; ஒ - மதகுநீர் தாங்கும் பலகை; பே - நுரை; நே - அன்பு; சோ - அரண்" (நன். 129) என்றும் நமச்சிவாயர் உரையில் அகராதிபோலச் சொல்லும் பொருளுமாக அருஞ்சொற்கள் விளக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் "பாயிரம் என்பது வரலாறு" (நன். 1), "தந்திரம் என்பது நூல்" (நன். 15), "பனாட்டு என்பது தீங்கட்டி" (நன். 203), "செல் என்பது மேகம்" (நன். 232) என்று சொல்லுக்கும் பொருளுக்கும் இடையில் என்பது என்ற சொல்லை வாய்பாடுபோலப் பயன்படுத்தி அருஞ்சொற்கள் விளக்கப்பட்டுள்ளன. அவர் சொற்பொருளை விளக்குவதற்கு இச்சொல்லைப் பயன்படுத்துவது மிகப் பழைய வழக்காறு. தொல்காப்பியத்திலும் திவாகரத்திலும்,

> **"அகவல் என்பது ஆசிரி யம்மே"** (தொல். செய்யுள். 77),
>
> **"இடக்கர் என்பது மறைத்து மொழிகிளவி"** (திவா. 1787)

என்று சொற்பொருள் விளக்கத்துக்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது இதனை உறுதிப்படுத்தும்.

உரையாசிரியர்கள் இன்னொரு முறையிலும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டைக் களவியல் உரை வழங்குகிறது. "**வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே**" (இறை. 37) என்ற நூற்பாவுக்கு உரை எழுதிய நக்கீரர் "வேந்து என்பது அரசு, வினை என்பது செய்கை, இயற்கை என்பது தன்மை, பார்ப்பார்க்கும் உரித்தே என்பது பார்ப்பார்க்கும் கிழமை உடைத்து என்றவாறு." என்று மூலபாடச் சொல்லையும் தொடரையும் பிரித்துப் பொருள் உரைப்பதற்கு இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் (நூ. 21), இளம்பூரணர், (தொல். பொருள். 272; 452), பேராசிரியர் (தொல். பொருள். 261) போன்ற உரையாசிரியர்களிடத்தும் இந்த முறை காணப்படுகிறது. இது பதப்பொருள் உரைத்தல் என்றும் பதவுரை என்றும் வழங்கப்படும். உரைவகை நான்கனுள் (இறை. 1; நம்பி. 1) பதப்பொருள் உரைத்தல் '**கண்ணழித்தல்**' என்னும் கலைச்சொல்லால் குறிக்கப்படும். பொழிப்புரையின் ஒரு கூறாக இது '**கண்ணழிவு**' என்று குறிக்கப்படுவதும் (தொல். சிற. பாயி. இளம்பூரணர், நச்சினார்க்கினியர்) உண்டு. **என்பது** என்னும் சொல் மேற்கண்டவாறு சொல்லுக்கும் பொருளுக்கும் நடுவே நிற்பதன்றி "அகநிகழ்ச்சி உளது எனினும் மிகுதி வகையால் புறச்செய்கையால் நிகழ்தலின் குற்றப்பாடு இல்லா மறம் புறப்பொருள் என்பது." (தமிழ். விள. 1) என்று ஈற்றில் வைத்து எழுதப்படுவதும் உண்டு. ஆயினும் இது அருகிய வழக்காகத் தோன்றுகிறது. இவ்வாறு நூல்மரபிலும் உரைமரபிலும் என்பது என்னும் சொல் ஒரு வாய்பாடுபோலச் சொற்பொருள் விளக்கத்துக்கு நெடுங்காலமாகப் பயன்பட்டுவருகிறது.

நமச்சிவாயர் சில இடங்களில் என்பது என்னும் சொல்லுக்குப் பதிலாக "அணு என்றது ஒலியினது நுட்பத்தை" (நன். 58), "இலக்கியம் என்றது பெயர்ப் பகுபதத்தை" (நன். 141) என்று பதப்பொருள் விளக்கத்துக்கு '**என்றது**' என்னும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். பயிற்சிக் குறைவு என்றாலும் பழைய உரைகள் பலவற்றிலும் இச்சொல் இவ்வாறு செயல்படுவதுண்டு. இதுபோலவே **ஆவது** என்னும் இடைச் சொல்லும் சொற்பொருள் கூறுவதற்குப் பழைய உரைகளில் பயன்படுகிறது. இதற்கு "இறப்பாவது தொழிலது கழிவு" (தொல்.

வினை. 3, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர்), "தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி" (தொல். வினை. 3 சேனாவரையர், நச்சினார்க்கினியர்), "செயற்கைப்பொருளாவது காரியப்பொருள்" (தொல். கிளவி. 20 தெய்வச்சிலையார்) என்னும் உரைவிளக்கங்கள் ஏற்ற எடுத்துக்காட்டுகள். சங்கர நமச்சிவாயரும் "விசேடமாவது சூத்திரத்துட் பொருளன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்துரைத்தல்." (நன். 21) என்று இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஆயினும் என்பதுபோல ஆவது என்னும் இடைச்சொல் பதப்பொருள் விளக்கத்துக்கு உரைகளில் பயின்று வரவில்லை. சொற்பொருளைச் சிறிது விரிவாகக் கூறவும் இலக்கணக் கருத்துகளையும் கலைச்சொற்களையும் வரையறுப்பதற்கும் ஆவது என்னும் இடைச்சொல் பொழிப்புரை, அகலவுரைப் பகுதிகளில் மிகுதியாகப் பயன்படுவது இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். பழைய உரைகளிலும் இன்றைய உரைநடை நூல்களிலும் பலவாறு செயல்படும் இச்சொற்களைப் பற்றி இன்னும் விரிவாக இங்கு ஆராய்வது நமது தலைப்புக்கு அப்பாற்பட்டது.

அருஞ்சொற்களுக்கு இலக்கியச் சான்று காட்டிப் பொருள் கூறும் உரைநெறி பழமையானது. நமச்சிவாயர் இந்நெறியைப் பயன்படுத்தும் நேர்த்தி சுட்டத் தகுந்தது. காட்டாக, நாவல் என்ற சொல்லுக்கு மயிலைநாதரும் (நன். 100) வைத்தியநாத தேசிகரும் (இல. விள. 25) சங்கர நமச்சிவாயரும் (நன். 101) வெவ்வேறு பொருள் கூறுவது முன்பே சொல்லப்பட்டது. நாவல் என்பது "நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்" என்று தாம் கொண்ட பொருளுக்குச் சான்றாகக் "காவல் உழவர் கடுங்களத்துப் போரேறி" எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப் பாடலைச் சங்கர நமச்சிவாயர் எடுத்துக்காட்டுவார். இலக்கண விளக்கத்தில் (நூ. 25) இதே பாடல் மேற்கோள் காட்டப்பட்டிருந்தாலும் சொற்பொருள் விளக்கத்தில் உரையாசிரியர்கள் இருவரும் மாறுபடுவதை உணர வேண்டும். இந்த உரைநெறிக்கு நமச்சிவாயர் உரையிலிருந்து இன்னொரு உதாரணமும் காட்டலாம். "நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்" (நன். 232) என்று தொடங்கும் நூற்பாவின் உரையில் கொல் என்பது "சூருயிர் குடித்த" (வி. மே.) என்றாற்போலக் கொல்லன் என்னும் உயர்திணைப் பொருளை

உணர்த்தி நின்றதோர் அஃறிணைச் சொல்." என்று அவர் விளக்கம் தருவார். இந்த விளக்கம் மயிலைநாதர் உரையில் இல்லை. இந்நான்கு சொற்களுக்கும் புணர்ச்சிவிதி கூறும் தொல்காப்பிய நூற்பாவுக்கு (புள்ளி. 76) உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர் (இல. விள. 140) ஆகிய உரையாசிரியர்கள் யாரும் இச்சொல்லுக்குப் பதப்பொருள் வழங்கவில்லை. இந்நான்கு சொற்களில் செல், கொல் ஆகிய இருசொற்களுக்கு மட்டும் நமச்சிவாயர் பதப்பொருள் எழுதியதன் உள்ளார்ந்த கருத்து கருதுவதற்கு உரியது.

ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களை "ஆசிரிய வசனம் எனினும் மேற்கோள் எனினும் பழஞ்சூத்திரத்தின் கோள் எனினும் ஒக்கும்." (நன். 9), "இயல்பு எனினும் தன்மை எனினும் இயற்கை எனினும் ஒக்கும்; விகாரம் எனினும் செயல் எனினும் செயற்கை எனினும் ஒக்கும்." (நன். 151) என்றவாறு நமச்சிவாயர் விளக்குவார். இந்த முறை "துறவு எனினும் நீக்கம் எனினும் பிரிவு எனினும் ஒக்கும்." (இறை. 34) என்று களவியல் உரையில் நக்கீரரும் "சுரிதகம் எனினும் அடக்கியல் எனினும் வாரம் எனினும் வைப்பு எனினும் போக்கியல் எனினும் ஒக்கும்." (யா. வி. 82) என்று யாப்பருங்கல விருத்தியில் அதன் உரையாசிரியரும் கடைப்பிடித்த முறையைத் தழுவியது. ஆகவே ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை ஒரே இடத்தில் தொகுத்துக் கூறிச் சொற்பொருளை விளக்கும் உரைநெறி காலம் காலமாக உரையாசிரியர்கள் கடைப்பிடித்துவருவது என்ற உண்மை புலப்படாமல் போகாது. இந்தப் பயனுடைச் சொல்நடையை "இகத்தல் எனினும் இறத்தல் எனினும் ஒக்கும்." (இறை. 20) என்று உரைவிளக்கம் வரைந்து காட்டிய பெருமை களவியல் உரையாசிரியரையே சாரக் கூடும். தொல்காப்பியத்தின் உரிச்சொல்லியலிலும் திவாகரம், பிங்கலம் போன்ற பழைய நிகண்டுகளிலும் இச்சொல்லாட்சி காணப்படாமையால் இது நூல்நடை அல்ல; உரையாசிரியர்கள் கடைப்பிடித்த இச்சொல்நடை உரைகளில் உருவானது; உரைகளுக்கே உரிய தனிநடை ஆகலாம். இலக்கண உரைகளில் மனம் தோய்ந்து அனுபவித்தவர்கள் இதன் சுவை அறிவர்; பயன் உணர்வர்.

ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்களைச் சிற்சில இடங்களில் ஒரு பொருட்கிளவி என்னும் கலைச்சொல்லாலும் நமச்சிவாயர் சுட்டுவதுண்டு. "பேடு, அழிதூஉ, அலி, மகண்மா என்பன ஒரு பொருட்கிளவி" (நன். 264), "செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட்கிளவி" (நன். 296) என்பவை இதற்கு நல்ல உதாரணங்கள். களவியல் உரையில் "மரபு எனினும் இலக்கணம் எனினும் எல்லாம் ஒரு பொருட் பன்மொழி" (இறை. 3), "ஆறு எனினும் வழி எனினும் ஒரு பொருட்கிளவி" (இறை. 31) என்று நக்கீரர் 'எனினும்... எனினும் ஒக்கும்' என்னும் வாய்பாட்டோடு பொருந்துமாறு நல்ல கலைச்சொற்கள் இரண்டினை அறிமுகப்படுத்தியதைக் கருத்தில் கொள்ளலாம். தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ள, "ஒரு பொருள் குறித்த வேறு சொல்" (எச்ச. 3) என்ற பெரிய தொடரைக் காட்டிலும் நக்கீரர் வழங்கிய ஒரு பொருட் பன்மொழி, ஒரு பொருட்கிளவி என்ற தொகைமொழிகள் மரபிலக்கணத்திலும் மொழியியலிலும் கலைச்சொற்களாக இன்று வரை நிலைத்து நின்றுவிட்டன; இனியும் நிற்கும். இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் பல்வேறு சொற்களை நிகண்டுகளில் உள்ள ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதிபோல ஒரே இடத்தில் தொகுத்துக் கூறி விளங்க வைக்கும் உரைநெறி பயனுள்ளது. இதனால் ஒரு பொருளின் முழுப்பரப்பும் கற்பவர் நெஞ்சில் பதிந்துவிடும். அது அவரது அடிப்படைச் சொல் தொகுதியைப் பெருக்கும். அதே பொருள் மற்றொரு இடத்தில் அல்லது நூலில் வேறு ஒரு சொல்லால் குறிக்கப்படும்போது அச்சொல்லோடு அப்பொருளைக் குறிக்கும் பிற சொற்களும் சட்டெனப் பொறியில் தட்டும். மேலும் செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட்கிளவி என்று படிக்கும்போது ஒரே இலக்கணக் கருத்தைச் சுட்டுவதற்கு நான்கு கலைச்சொற்கள் வழக்கில் உள்ள தகவலும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இந்த முறையின் பெரும்பயனை உரையாசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இயல்பு, இயற்கை, தன்மை என்ற சொற்களை அகராதியில் உள்ளதுபோல உரையில் மூன்று இடங்களில் விளக்கி வரையாமல் ஒரே இடத்தில் தொகுத்து விளக்கும்

உரைப்பணி எளிது. அவற்றைத் தனித்தனியே வெவ்வேறு பகுதிகளில் விளக்குவதை விடவும் "இயல்பு எனினும் தன்மை எனினும் இயற்கை எனினும் ஒக்கும்." (நன். 151) என்று ஒரே இடத்தில் விளக்குவதால் உரை சுருங்கும்; விளங்கும். சுருங்கச் சொல்லலும் விளங்க வைத்தலும் (நன். 13) நூலுக்கு மட்டுமே அல்ல; உரைக்கும் அவை அழகு தரும். கண்ணுக்கு அளிப்பதுபோலவே அழகு கருத்துக்கும் விருந்து வழங்கும். சங்கர நமச்சிவாயரின் விருத்தியுரையில் இந்த அழகியல் பண்பு உண்டு என்பதை உரைவல்லார் உணர்வர்.

பதப்பொருளும் இலக்கணக் குறிப்பும்

அருஞ்சொற்களுக்குப் பொருள்விளக்கம் தரும்போது பதப்பொருளோடு இலக்கணக் குறிப்பையும் இணைத்து எழுதுவது நமச்சிவாயர் பின்பற்றிய மற்றொரு உரைநெறி. இதற்கு அவர் உரையில் பல உதாரணங்கள் (நன். 128, 178, 186, 200, 225, 231, 232, 261, 340, 411) காணப்படுகின்றன. ஒன்றிரண்டை ஊன்றிப் படித்துப் பதம்பார்க்கலாம். பூ என்பது எல்லோருக்கும் தெரிந்த எளிய சொல். ஆனால் அது பல பொருள் ஒரு சொல் என்பது பலருக்குப் புதிய தகவலாக இருக்கக் கூடும். எனவே நமச்சிவாயர் பூ என்பது பல பொருள் ஒரு சொல் என்று கருத்துரையிலும், வலியுறுத்தும் பொருட்டு, மீண்டும் ஒரு முறை பூ என்னும் பல பொருட் பெயர்ச்சொல் (நன். 200) என்று இதனைச் சற்றுத் தெளிவாகப் பொழிப்புரையிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த நூற்பாவின் உரைக்கு உதாரணங்களாகப் பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை என்ற தொகைமொழிகளை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். உதாரணங்களைத் தொடர்ந்து "இவற்றுள் பூ என்பது மலரேல் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும், பொலிவேல் பண்புத் தொகையாகவும், பூங்கணை என்பது மலர் என்னும் ஒரு பொருட்டாய் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும் பண்புத்தொகையாகவும், பூங்கரும்பு என்பது பொலிவு என்னும் ஒரு பொருட்டாய்ப் பண்புத்தொகையாகவும் வருவன காண்க." என்று அந்தத்

தொகைமொழிகளுக்கு அவர் வரைந்துள்ள விளக்கம் இலக்கண மாணவர்களுக்கு நல்விருந்து. இதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இன்னொரு உதாரணத்தையும் பார்க்கலாம்.

பொருள்கோள்களின் பெயரும் தொகையும் கூறும் நூற்பாவின் உரையில் "தாப்பிசை என்பதற்கு ஊசல்போல் இடை நின்று இருமருங்கும் செல்லும் சொல் என்பது பொருள். தாம்பு என்பது ஊசல்; அஃது அளைமறிபாப்பு என்பதில் பாம்பு என்பது பாப்பு என நின்றாற்போல வலிந்து நின்றது." (நன். 411) என்று நமச்சிவாயர் உரை கூறுவார். இந்த விளக்கத்தில் நாம் கவனிக்க வேண்டியவை பதப்பொருளும் இலக்கணக் குறிப்பும் மட்டும் அல்ல; இவற்றுக்கும் மேலாக நமது கவனத்துக்கு உரியது நமச்சிவாயரின் உரைநுட்பம். விளங்கச் சொன்னால் அளைமறிபாப்பு என்னும் தொகைமொழியில் (நன். 417) பாம்பு என்பது பாப்பு என வலிந்து நின்றாற்போலத் தாப்பிசை என்னும் தொகைமொழியில் (நன். 411) தாம்பு என்பது தாப்பு என வலிந்து நின்றது என்று பின் வரும் நூற்பாவில் உள்ள சொல்லையும் சேர்த்து அவர் இலக்கணக் குறிப்பு எழுதியுள்ளார். தாப்பு என்ற சொல்லை விளக்கும்போதே அச்சொல்லோடு ஒத்த இன்னொரு சொல்லையும் கருத்தில் கொண்டு, ஒன்றோடு ஒன்றை ஒப்புமை காட்டியதும் ஒரே இடத்தில் இரண்டு சொற்களுக்கும் இலக்கணக் குறிப்பு வழங்கியதும் அவரது உரைநுட்பம். இவ்வாறு உரை எழுதும் உரையாசிரியருக்கு மூலநூல் முழுவதும் கரதலப்பாடமாக இருந்தால் மட்டும் போதாது. அவருடைய அகக்கண்களுக்குப் புலப்படும் வகையில் மூலநூலுக்கு ஒரு சொல்லடைவும் நெஞ்சத்திரையில் பதிவாகியிருக்க வேண்டும். இலக்கண உரைகளை ஊன்றிப் படிக்கும்போது பழைய உரையாசிரியர்கள் பலருக்கு இந்தத் தகுதிகள் இருந்தன என்றே தோன்றுகிறது. இத்தகைய புலனறி பாரம்பரியத்தில் வந்து தோன்றிய சங்கர நமச்சிவாயருக்கு இத்தகுதிகள் இல்லாமல் போகுமா, என்ன! அதனால்தான் பாம்பு பாப்பு ஆனதுபோலத் தாம்பு தாப்பு ஆனதும் வலித்தல் விகாரம் (நன். 155) என்று அவரால் ஒப்பின் முடித்து உரை கூற முடிந்தது. இந்த உரைத்திறன் அவருக்குக் கைவந்த கலை.

பதப்பொருளும் உவமையும்

"உரம் - நெஞ்சு" (நன். 25), "இசை என்பது சொல்" (நன். 360), "கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும்" (நன். 460), "ஏவல், வியங்கோள் என்பன ஒரு பொருட்கிளவி" (நன். 338) என்று சங்கர நமச்சிவாயர் வெவ்வேறு வகையாகப் பதப்பொருள் கூறுவதைப் பார்த்தோம். இன்னும் "வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்கும் ஆயதொரு கோணம்" என விளக்கியதோடு அமையாமல் அது "உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை" (நன். 186) என்று அவர் இலக்கணக் குறிப்பும் தருவார். இவற்றுக்கும் மேலாகப் பதப்பொருளின் தெளிவுக்கு நல்ல உவமைகளையும் சங்கர நமச்சிவாயர் அவ்வப்போது பயன்படுத்திக்கொள்வார். உதாரணமாக **"மின்பின் பன்கன்"** (நன். 217) என்று தொடங்கும் நூற்பாவின் உரையில் "கன் என்பது சிறுதராசுத்தட்டு" என்று பொருள் கூறி "முன் என்னும் சொல்லை முன்னம் என்றாற்போல இதனைக் கன்னம் என்றும் கூறுப." என்று அவர் ஒரு சொல்லுக்கு வேறு ஒரு சொல்லின் வழக்காற்றை எடுத்துக்காட்டி உரை வரைவார். இந்த நல்ல உரைவிளக்கத்தை இவ்வாறு எழுதுவதற்குக் **"கன்னம் பொற்கொல்லன் சின்னத் தட்டே"** என்னும் திவாகர நிகண்டின் நூற்பா (1292) ஒருவேளை அவருக்குக் கைகொடுத்திருக்கலாம். இங்கே இன்னொரு கருத்தையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். பொற்கொல்லர் பயன்படுத்தும் சின்னஞ்சிறிய தராசுத்தட்டைச் சற்றுப் பூசி மெழுகினாற்போல உப்பிய கன்னத்துடன் ஒப்பிட்டு நோக்கி, அதற்குக் கன்னம் என்று கற்பனை நயத்தோடு பெயரிட்டு அழைத்த தமிழ்மகனின் சொல்லாக்கத் திறன் உணர்ந்து மகிழ்வதற்கு உரியது.

மற்றொரு எடுத்துக்காட்டில் இன்னும் பொருத்தமான உவமை ஒன்று அமைந்துள்ளது. **"தான முயற்சி அளவு பொருள்வடிவு"** (நன். 72) என்று தொடங்கும் நூற்பாவின் உரையில் பொருள் என்னும் சொல்லுக்குக் கீழே உள்ளவாறு அவர் பதப்பொருள் கூறியுள்ளார். "பொருள், பாலன் விருத்தன் ஆனாற்போலக் குறிலினது விகாரமே நெடில் ஆதலின் இரண்டற்கும் பொருள் ஒன்று என்று முதல்நூலால் நியமிக்கப்பட்ட பொருள்." என்பது நமச்சிவாயரின் விரிவான விளக்கம். பொருள் என்பது

முதல்நூலால் நியமிக்கப்பட்ட பொருள் என்றாலே போதுமானது. வேண்டுமாயின் குறில், நெடில் ஆகிய இரண்டற்கும் பொருள் ஒன்று என்று முதல்நூலால் நியமிக்கப்பட்ட பொருள் என்றால் விளங்கும். ஆனால் அவருக்கு அவை போதிய விளக்கங்களாகத் தோன்றவில்லை போலும்! எனவே பாலன் விருத்தன் ஆனாற்போல என்ற அழகான உவமை ஒன்றை எடுத்துக்காட்டி, நெடில் குறிலது விகாரம் என்னும் உண்மையை நினைவுபடுத்தி, அவை இரண்டற்கும் பொருள் ஒன்று என்று தெளிவுபடுத்தி, அப்பொருள் முதல்நூலால் நியமிக்கப்பட்டது என்று உணரக் கூறும் அவரது உரைமாட்சி விருத்தியுரையின் நுட்பம் கண்டார்க்கு விளங்கும்.

இவ்வாறு பதப்பொருளை உவமை கூறி விளக்கும் உரைநெறிக்குக் கடைக்கால் இட்டவர் களவியல் உரையாசிரியர் ஆகலாம். நக்கீரர் (இறை. 1) நூல் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுவதைப் படிப்பதே ஒரு இனிய அனுபவம். அதனால் அப்பகுதியை அவர் நடையில் பார்க்கலாம். "இனி நூல் என்ற சொற்கும் பொருள் உரைக்கப்படும். நூல் போறலின் நூல் என்ப, பாவை போல்வாளைப் பாவை என்றாற்போல. நூல்போறல் என்பது நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளால் கைவன்மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஓர் இழைப்படுத்தலாம், உலகத்து நூல் நூற்றல் என்பது. அவ்வாறே சுரந்து பரந்த சொற்பரவைகளால் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியின் பிண்டம், படலம், ஒத்து, சூத்திரம் என்னும் யாப்புநடை படக் கோத்தலாம், உலகத்து நூல் செய்தலாவது. அவ்வகை நூற்கப்படுதலின் நூல் எனப்பட்டது. இனி ஒரு சாரார் நூல்போலச் செப்பம் செய்தலின் நூல் என்ப. இனித் தந்திரம் என்னும் வடமொழிப் பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக்கு எனக் கொள்க. இது நூல் என்ற சொற்குப் பொருள்." என்பது நக்கீரர் விளக்கம். நூல் என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தை இவரைக் காட்டிலும் சிறப்பாக வேறு யாரும் விளக்கிச் சொல்லிவிட முடியாது. அதனால்தான் யாப்பருங்கல விருத்தியின் ஆசிரியரும் (யா. வி. பாயி.) பவணந்தி முனிவரும் (நன். 24, 25) நக்கீரர் விளங்கக் கூறிய பெயர்க்காரணங்களை நன்கு மதித்து எடுத்தாண்டுள்ளனர்.

பதப்பொருளும் மாற்றுரையும்

இறுதியாக இன்னொரு கருத்தையும் இத்தலைப்பில் தவறாமல் சொல்லிவிட வேண்டும். சங்கர நமச்சிவாயர் பதப்பொருளை விளக்கும்போது பிறர் உரைக்கு மாற்றுரையும் மேனிலை விளக்கமும் எழுதுவதுண்டு. இதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுகள் பெயரியல் உரைப்பகுதியில் (நன். 261, 297) கிடைக்கின்றன. மூன்றாம் வேற்றுமையின் இலக்கணம் கூறும் நூற்பாவின் உரையில் மயிலைநாதர் "கருவி எனினும் காரணம் எனினும் ஏது எனினும் நிமித்தம் எனினும் ஒக்கும்." (நன். 296) என்று விளக்குவார். இவை நான்கும் ஒரு பொருட்கிளவிகள் என்பது இதன் கருத்து. இவ்வுரைக்கு மாற்றுரையாகக் "கருவி, காரணம், ஏது, நிமித்தம் என்பன வேறு பொருட்கிளவியாயும் ஒரு பொருட்கிளவியாயும்" வரும் (நன். 297) என்று சங்கர நமச்சிவாயர் விளக்கி எழுதுவார். கருவி முதலிய நான்கும் ஒரு பொருட்கிளவி என்னும் மயிலைநாதர் உரையை ஏற்றுக்கொண்டு, அவருடைய உரைக்கு மேனிலை விளக்கமாக நமச்சிவாயர் வரைந்துள்ள மாற்றுரை நுட்பமானது. நமச்சிவாயரின் விளக்கத்தில் உள்ள கூடுதல் தகவலும் வேறு பொருட்கிளவி என்னும் கலைச்சொல்லும் கணிக்கத் தக்கன. இவ்வாறு பழைய உரையாசிரியர் எழுதிய உரைவிளக்கத்தை அலசி ஆராய்ந்து செம்மைப்படுத்தும் செவ்விய நோக்கத்தில் நுண்ணிய மேனிலை விளக்கம் தருவது சங்கர நமச்சிவாயர் போன்ற கூர்த்த மதியினர்க்கே வாய்க்கும்.

பதப்பொருளும் மறுப்புரையும்

பதப்பொருள் வரையும்போது நமச்சிவாயர் பிறர் உரையை மறுத்துவிட்டு வேறு பொருள் வழங்குவதும் உண்டு. திணை என்னும் சொற்பொருள் விளக்கத்தில் நாம் இந்த முறையைக் காணலாம். உயர்திணை என்னும் தொகைச்சொல்லில் உள்ள திணை என்னும் பல பொருள் ஒரு சொல் இந்த நூற்பாவில் (நன். 261) குலத்தைக் குறிக்கும் என்பது நமச்சிவாயர் கருத்து. இதற்குச் சான்றாகத் "திணைநிலம் குலன்ஒழுக்கம்" என்னும் சூடாமணி நிகண்டு நூற்பாவை (தொகுதி 11 ணகர எதுகை 5:1) ஆதாரமாக எடுத்துக்காட்டுவார். இவ்வாறே தொல்காப்பியக் கிளவியாக்க முதல்நூற்பாவில் உள்ள திணை என்ற சொல்லும்

இதே பொருளை உடையது என்பது இவர் கருத்து. ஆனால் நச்சினார்க்கினியர் கருத்து வேறு. அவர் இச்சூத்திர உரையில் (தொல். கிளவி. 1) "உயர்திணை என்பது உயர்ந்த ஒழுக்கம்" என்று பொருள் கூறி "அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்தி நின்றது." என்று விளக்கம் தருவார். இதனை ஏற்றுக்கொள்ளாத சங்கர நமச்சிவாயர் "சாதி வேற்றுமை கருதி உலகப் பொருள்களை எல்லாம் உயர்திணை, அஃறிணை என இரண்டு சாதியாக வகுத்து, அவ்வேற்றுமை கருதி அவற்றை ஐம்பாலாகப் பகுத்தலே எல்லா ஆசிரியர்க்கும் கருத்து ஆவதன்றி ஈண்டு ஒழுக்கம் கருத வேண்டுவது இன்மையானும் அவ்வொழுக்கமும் உயிர் இல்லனவற்றிற்குப் பொருந்தாமையானும் ஈண்டுத் திணை என்பதற்கு அது பொருள் அன்று." (நன். 261) என்று மறுத்துரைப்பார். திணை என்பதற்கு ஒழுக்கம் என்ற பொருளும் உண்டு என்பது நமச்சிவாயர் அறியாதது அல்ல; அதுவும் சூடாமணி நிகண்டு நூற்பாவைச் சான்று காட்டிய நமச்சிவாயர் அதனை நன்றாக அறிவார். என்றாலும் உலகில் உள்ள பொருள்களை எல்லாம் உயர்திணை, அஃறிணை என்று இரண்டு சாதியாக வகைப்படுத்தும் இந்நூற்பாவில் (தொல். கிளவி. 1) திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்காது; சாதியையே குறிக்கும் என்பது அவர் துணிபு. இதனை வலியுறுத்தவே இம்மறுப்புரைப் பகுதியில் ஈண்டு என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்து அதனை இருமுறை பயன்படுத்தியுள்ளார். இக்கருத்து மேலும் ஆராய்வதற்கு உரியது.

சங்கர நமச்சிவாயர் பழைய உரைமரபுகளைப் பொன்னெனப் போற்றி வெவ்வேறு நெறிமுறைகளில் அருஞ்சொற்களுக்குப் பதப்பொருள் எழுதியது அவரது உரைத்திறன்; அகராதி இயலுக்கு அவர் ஆற்றிய அருந்தொண்டு; அவர் இயற்றிய விருத்தியுரையின் பண்புநலன்களை அறுதியிடவும் மதிப்பிடவும் உதவும் அளவுகோல்.

வரையறை விளக்கம்

அரும்பத விளக்கம் போலவே வரையறை விளக்கமும் சங்கர நமச்சிவாயர் உரையில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. நூல்மரபைத் தழுவி வளர்ந்த இந்த உரைநெறி மனப்பாடக் கல்விக்கு உதவக் கூடியது. கோட்பாடும் விதியும் இலக்கண

உருவாக்கத்துக்கு இருகண்கள். எனவே நூலாசிரியர்கள் அவரவர் காலத்துக்கு ஏற்ற வகையில் பொருத்தமான கலைச்சொற்களால் அவற்றை வரையறுத்து விளக்கியுள்ளனர். காட்டாக,

"அவற்றுள்
நூலெனப் படுவது நுவலும் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின்று அகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

என்று தொல்காப்பியர் (செய்யுள். 159) நூலுக்கு விளக்கமான வரையறை கூறுவார். இதுபோலவே "வினையெனப் படுவது" (வினை. 1), ''கற்பெனப் படுவது'' (கற்பு. 1) என்று வினைச்சொல்லையும் கற்பொழுக்கத்தையும் அவர் வரையறை கூறி விளக்குவார். இங்கே நாம் கவனிக்க வேண்டிய சொல் 'எனப்படுவது' என்பது. இச்சொல்லுக்குப் பல பொருள்கள் கூறப்பட்டாலும் (இறை. 1; யா. வி. 1; தொல். இடை. 10; நன். 424) வரையறை நூற்பாக்களில் தொல்காப்பியர் இதனை ஒரு வாய்பாடுபோலப் பயன்படுத்தியுள்ளார். இதன் பன்மை வடிவமாக அவர் "இடையெனப் படுப" (இடை. 1) என்றும் வழங்குவார். ஆயினும் வரையறை நூற்பாக்களில் எல்லாம் இச்சொல் வந்தாக வேண்டும் என்ற நியதி இல்லை.

பவணந்தி முனிவரும் நல்ல வரையறைச் சூத்திரங்களைப் படைத்துள்ளார். காட்டாக,

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்து" (நூ. 58),
"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்" (நூ. 128),
"விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே" (நூ. 153),
"எழுவாய் உருபு திரிபில் பெயரே" (நூ. 295),
"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" (நூ. 364),
"ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி" (நூ. 369)

என்ற சூத்திரங்களைக் குறிப்பிடலாம். எழுத்து, பதம், இயல்பு, எழுவாய் உருபு, வினைத்தொகை, அன்மொழித்தொகை

ஆகியவற்றை இவற்றிலும் தெளிவாக வரையறுக்க முடியாது. ஓரிரு முறை படித்தாலே இவை நினைவில் நின்றுவிடும் தெளிவான நூற்பாக்கள். **"வினையின் தொகுதி காலத்து இயலும்"** (எச்ச. 19) என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் **"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை"** (நன். 364) என்னும் நன்னூல் நூற்பாவையும் ஒப்பிடுவோர்க்கு இந்த உண்மை விளங்கும். மேலே காட்டிய நூற்பாக்களே அன்றி இயற்சொல் (நூ. 271), பெயர்ச்சொல் (நூ. 275), ஆகுபெயர் (நூ. 290), வேற்றுமை (நூ. 291), வினைச்சொல் (நூ. 320), இடைச்சொல் (நூ. 420), உரிச்சொல் (நூ. 442) முதலியவற்றை விளக்கும் நன்னூல் நூற்பாக்கள் அனைத்தும் வரையறை நூற்பாக்களே. நன்னூலில் காணப்படும் எந்த வரையறைச் சூத்திரத்திலும் எனப்படுவது என்னும் சொல் பயன்படுத்தப்படவில்லை என்பது அறிய வேண்டியது. இந்த நூற்பாக்களுக்கு "எழுத்து இன்னது" (நூ. 58), "பதத்தினது இலக்கணம்" (நூ. 128) "இயற்சொல் ஆமாறு" (நூ. 271), (இடைச்சொற்கள்) "இவ்வியல்பின" (நூ. 420) என்று சங்கர நமச்சிவாயர் உரை எழுதி இவை எல்லாம் வரையறைச் சூத்திரங்கள் என்பதை உணர்த்திவிடுவார்.

நமச்சிவாயரின் வரையறைகள்

நூலாசிரியர்கள் வரையறை கூறும் மரபைத் தழுவி உரையாசிரியர்களும் வரையறை கூறுவதுண்டு. இந்த நெறியைப் பின்பற்றிச் சங்கர நமச்சிவாயரும் இலக்கணக் கலைச்சொற்கள் சிலவற்றுக்கு நல்ல வரையறை விளக்கங்களை எழுதியுள்ளார். காட்டாக முதல் வேற்றுமையைக் கூறும் நூற்பாவின் (295) உரையில் "பயனிலையாவது மேல் ஒன்றையும் வேண்டாது பொருள் முற்றி நிற்கும் நிலை." என்று அவர் பயனிலையை வரையறுப்பார். மூவிடம் பற்றிய நூற்பாவில் (266) "சொல்வானும் கேட்பானும் ஆகிய இருவர் கூட்டத்துப் பிறந்த சொல் அவ்விருவரிடத்து நில்லாது அயலானிடத்துப் படர்தலின் படர்க்கை எனப்பட்டது." என்று பெயருக்குக் காரணம் கூறுவதுபோலப் படர்க்கையைச் சங்கர நமச்சிவாயர் விளக்குவார். இதுபோலவே செயப்படுபொருளுக்கு அவர் (நூ. 296) "ஒருவன் ஒரு வினை செய்ய அதனால் தோன்றிய பொருள் யாது அது செயப்படுபொருள் என்பதாம். ஒருவன் ஒரு வினை

செய்ய அத்தொழிற்படு பொருள் யாது அது செயப்படுபொருள் எனினும் அமையும்." என்று இரண்டு வகையில் விளக்கம் தருவார். அதோடு செயப்படுபொருளைக் குறிப்பதற்கு வழங்கும் பிற சொற்களையும் "செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பன ஒருபொருட்கிளவி." என்று நமச்சிவாயர் கூறுவார். இவ்வாறு ஒரு கலைச்சொல்லை இரண்டு வகையில் விளக்குவதோடு அச்சொல்லுக்குரிய வேறு பெயர்களையும் நமச்சிவாயர் ஒருசேரக் குறிப்பிடுவது உரைமரபுக்கு உரமூட்டும்.

பகுதி, விகுதி முதலிய பகுபத உறுப்புகளை விளக்கி (நூ. 133) அவற்றுக்கு நமச்சிவாயர் வரைந்துள்ள வரையறைகள் மனனம் செய்தற்கு உரியன. அவர் கருத்துப்படி தன் இயல்பில் நிற்பது பகுதி; தன் இயல்பில் நிற்கும் பகுதிப் பொருளை இடைநிலை முதலியவற்றோடு முன் நின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்துவது விகுதி; முதனிலைப் பகுதிக்கும் இறுதிநிலை விகுதிக்கும் இடை நிற்பது இடைநிலை; விகுதி முதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்பது சாரியை; நால்வகைச் சொல்லும் ஒன்றோடு ஒன்று சந்தித்தலான் வரும் தோன்றல் திரிதல் கெடுதல்கள் சந்தி; செய்யுள் தொடை முதலியவற்றான் வலித்தல், மெலித்தல் முதலாக விகாரப்படுவது விகாரம் என்பார். இவ்வாறு அவர் வரையும் வரையறை விளக்கங்கள் பயில்வோர்க்கும் பயிற்றுவோர்க்கும் பயன்படுவன. இறுதியாக, இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

சூத்திர வகையை விளக்கும் நூற்பாவின் (நன். 20) உரையில் நமச்சிவாயர் குறிச்சூத்திரத்தை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். "குறியாவன இவை உயிர்; இவை ஒற்று; இவை பெயர்; இவை வினை என்றல் தொடக்கத்து அறிதல் மாத்திரையாய் வருவன." என்று அவர் வரையறுப்பார். தொடர்ந்து "குறி என்பது அறிதலை உணர்த்திய முதனிலைத் தொழிற்பெயர்" என்று இலக்கணக் குறிப்பும் தருவார். நமச்சிவாயர் சுருக்கமாக எழுதியுள்ள இந்த வரையறை விளக்கத்தை நாம் விரித்துப் பொருள்செய்துகொள்ள வேண்டும். இவை உயிர், இவை ஒற்று என்பவற்றை,

"அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"

(நன். 63) என்னும் நூற்பாவோடும், இவை பெயர் என்பதை,

"இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழிலல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே"

(நன். 275) என்னும் நூற்பாவோடும், இவை வினை என்பதை,

"செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே"

(நன். 320) என்னும் நூற்பாவோடும் நமச்சிவாயர் இயைபுபடுத்தியுள்ளதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த வரையறையில் இவை என்னும் பன்மைச் சுட்டுப்பெயரை அவர் பயன்படுத்தியதற்கும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவை உயிர், இவை ஒற்று என்பவை "அம்முதல் ஈராறு" (63) என்னும் நூற்பாவோடு குறில் (64), நெடில் (65), சுட்டு (66), வினா (67), வல்லினம் (68), மெல்லினம் (69), இடையினம் (70) பற்றிப் பேசும் நூற்பாக்களும் குறிச்சூத்திரங்கள் என்பதைக் குறிப்பாக உணர்த்தும். இதுபோலவே இவை பெயர் என்பது "இடுகுறி காரணம்" (275) என்னும் நூற்பாவோடு ஆண்பாற் பெயர் (276), பெண்பாற் பெயர் (277), பலர்பாற் பெயர் (278), ஒன்றன்பாற் பெயர் (279), பலவின்பாற் பெயர் (280), பொதுப்பெயர் (281) பற்றிக் கூறும் நூற்பாக்களையும் சுட்டும். இன்னும், இவை வினை என்பது, "செய்பவன் கருவி" (320) என்று தெரிநிலை வினையைச் சுட்டுவதோடு குறிப்புவினை (321) வினைச்சொற்களின் வகை (322) பற்றிக் கூறும் நூற்பாக்களையும் சுட்டும். இவ்வாறு குறி என்ற சொல்லுக்கு நுணுக்கமாக வரையறை கூறி அது தொடர்பாக நூலாசிரியர் கூறியுள்ள குறிச்சூத்திரங்களை எல்லாம் நமச்சிவாயர் நமக்கு அறிவுறுத்தும் உரைநெறி தனித்தன்மை வாய்ந்தது. இந்த உரைநெறியை நாம் இனம்கண்டால்தான் அவர் வரைந்த விருத்தியுரையின் சிறப்பைப் புரிந்துகொள்ள முடியும்.

வினாவிடை விளக்கம்

உரையாசிரியர்கள் உரையின் நடுநடுவே வினா எழுப்பி விடை கூறி விளக்குவது உரைநெறிகளுள் ஒன்று. இலக்கண உரையாசிரியர்கள் பலரிடத்தும் இந்த உரைநெறி பரவலாகக் காணப்படுகிறது. நக்கீரர் "இவள் இவை எல்லாம் தலைமகனைச் சொல்லுதற்குக் காரணம் என் எனின் தன் ஆற்றாமையால் யான் முடிக்கின்ற அதனை எளிதென உணரும்; அது படாமை அரிதென உணர்வானாக என்றற்கு." (இறை. 12) என்றும், இளம்பூரணர் "செய்யும் என்பதற்கு முடிபு ஈண்டுக் கூறியது என்னை எனின் செய்யும் என்பது மேல் முற்றுச்சொல்லாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறினார்; ஈண்டு எச்சமாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறுகின்றார் என்பது." (தொல். வினை. 35) என்றும் விளக்குவர். சேனாவரையர் "குடிமை, ஆண்மை என்பனவற்றோடு (காலம், உலகம் ஆகிய) இவற்றிடை வேற்றுமை என்னை எனின் அவை இருதிணைப் பொருட்கண்ணும் சேறல் மாலைய; இவை அன்ன அல்ல என்பது." (தொல். கிளவி. 57) என்றும், நச்சினார்க்கினியர், "குற்றெழுத்துக்களை முன்னாகக் கூறி அவற்றிற்கு இனம் ஒத்த நெட்டெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறினார் ஒரு மாத்திரை கூறியே இரண்டு மாத்திரை கூற வேண்டுதலின். அன்றி, இரண்டை முன் கூறினாலோ எனின் ஆகாது. ஒன்று நின்று அதனோடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டு ஆவதன்றி இரண்டு என்பது ஒன்று இன்று ஆதலின். இதனான் ஒன்றுதான் பல கூடியே எண் விரிந்தது என்று உணர்க." (தொல். நூன். 1) என்றும் பழம்பெரும் உரையாசிரியர்கள் எல்லோரும் இவ்வுரைநெறியைக் கடைப்பிடித்துள்ளனர். தொல்காப்பியர் "**மறுதலைக் கடாஅ மாற்றம்**" (தொல். மரபு. 106) என்பதும் பவணந்தி முனிவர் "**வினாவிடை ஆக்கல்**" (நன். 22) என்பதும் இந்த உரைநெறிக்குத் தோற்றுவாயாகக் கூறியவையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வினாவிடை நடையின் நோக்கம்

ஆசிரியரும் மாணவரும் அருகருகே இருந்து நேருக்கு நேர் உரையாடுவது போன்ற அணுக்க உணர்வை உருவாக்கும் இந்த உரைநெறியின் அடிப்படை நோக்கம் கருத்தைப் படிப்படியாகத்

தெளிவுபடுத்துவதே. என்றாலும் உரையாசிரியர்கள் எல்லோரும் மாணவர்களோடு கூடியிருந்து, கலந்துரையாடி, உரை எழுதினார்கள் என்று சொல்ல முடியாது. எதிர்வரும் நூற்றாண்டுகளிலும் தாம் எழுதிய உரைகளைக் கற்பவர்களுக்கு எத்தகைய ஐயப்பாடுகள் தோன்றக் கூடும் என்று 'தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண்'கொண்டு உரையாசிரியர்கள் பார்த்திருக்க வேண்டும். அதற்கு ஒரு தீர்வாகவே இந்த வினாவிடை நடையை அவர்கள் கடைப்பிடித்திருக்க வேண்டும். உரையைப் படிக்கும்போதும் கேட்கும்போதும் இடையிடையே இவ்வாறு எழுப்பப்படும் வினாக்கள் கற்போர் கவனத்தை ஈர்க்கும்; கேட்போர் மனத்தில் அவ்வப்போது தோன்றும் தொய்வுணர்வைப் போக்கும்; மீண்டும் பாடத்தில் கருத்தைப் பதியச் செய்யும். உரையாசிரியர் எழுப்பியுள்ள வினாவுக்குரிய விடை இதுவாக இருக்குமோ? அல்லது அதுவாக இருக்குமோ? என்று அடிமனத்திலும் அறிவிலும் ஒரு குறுகுறுப்பைத் தோற்றுவிக்கும். விடையை அறிந்துகொள்ளும் ஆர்வத்தைப் பெருக்கி எண்ணத்தை ஒருமுகப்படுத்தும். உரையாசிரியர் வழங்கியுள்ள விடை சரியானதா? பொருத்தமானதா? என்று நுணுகி நோக்கி மதிப்பிடும் ஆராய்ச்சித் திறனை அளிக்கும்; வளர்க்கும். இவ்வாறு எல்லாம் கற்போர் உளவியற்பண்பைக் கருத்தில் கொண்டு உருவாக்கிய இந்த வினாவிடை உத்தி தருக்கவியல், சமயத்துறை, அறவியல் ஆகிய துறைகளில் வேரூன்றி வளர்ந்துள்ளது. "அறவினை யாதெனின் கொல்லாமை" (குறள். 321), "அருளல்லது யாதெனின் கொல்லாமை" (குறள். 254) என்னும் வள்ளுவம் இதனை வலியுறுத்தும். தருக்கவியலுக்கும் இலக்கணத்துக்கும் உள்ள தொடர்பினால் வினாவிடை முறையின் பெரும்பயனை ஆசிரியர்கள் முற்ற உணர்ந்து பயிற்றுவித்தல் துறையிலும் இதனைக் கடைப்பிடித்திருக்கக் கூடும். எப்படி இருந்தாலும் இலக்கணம் கற்பவர்க்கும் கற்பிப்பவர்க்கும் இந்த நல்ல முறை தொடர்ந்து துணை நிற்கும்.

நமச்சிவாயர் வரைந்த வினாவிடைகள்

உரை வரலாற்றில் களவியல் உரையாசிரியர் காலம் முதல் பழைய உரையாசிரியர்கள் அனைவரும் இந்த

உரைநெறியைப் போற்றியுள்ளனர் என்பது முன்பே சுட்டப்பட்டது. இந்த நெடுமரபைப் பின்பற்றித் தமது உரையில் ஏறக்குறைய அறுபது இடங்களில் நமச்சிவாயர் இம்முறையைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில வினாவிடைகள் சுருக்கமாகவும் சில இடங்களில் அவை விரிவாகவும் அமைந்துள்ளன. உரையின் நடுநடுவே வரும் வினாவிடைகளைத் தவிர நூற்பாவின் உட்பொருளைக் கூறும் கருத்துரையின் தொடக்கம் "என்பது சூத்திரம். என் நுதலிற்றோ எனின் முதலெழுத்தின் விரி உணர்த்துதல் நுதலிற்று." (நன். 59) என்று வினாவோடு தொடங்கி விடையில் முடிவது இங்கு நினைவுகூரத் தக்கது. பொதுவாக "என்னை எனின்" (நன். 1), "யாது எனின்" (நன். 271), "வந்ததாலோ எனின்" (நன். 394), "வழுவாம் பிற எனின்" (நன். 387), "அமையாதோ எனின்" (நன். 178), "அணைந்தது இல்லையாலோ எனின்" (நன். 394) என்று தொடங்கி "என்க." (நன். 295), "ஆம்." (நன். 296) என்று முடிவது இந்த வினாவிடைகளின் அமைப்பு எனலாம். சில இடங்களில் "ஆயிற்று." (நன். 62), "என்று உணர்க." (நன். 109) என்று முடிவதும் உண்டு. இனி இந்த உரைப்போக்குக்கு ஒரு சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

வேற்றுமைகளின் வரிசைமுறையில் பெயர் வேற்றுமையை ஆசிரியர் முதலாவதாக வைத்ததை விளக்க வந்த நமச்சிவாயர் "இதனை முதல் வேற்றுமை என்றது என்னை எனின் பெயரேயாய் நிற்றலானும் வினைமுதலாய் நடத்தலானும் என்க." (நன். 295) என்று இரண்டு காரணங்களைக் காட்டுவார். மொழிமுதல் எழுத்துகளை எடுத்துரைக்கும் பகுதியில் ஙகரம் அகரத்தை ஒட்டி அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று எடுத்துக்காட்டுவார். தாம் காட்டிய இந்த உதாரணங்கள் ஒருமொழிகளா? தொடர்மொழிகளா? என்ற ஐயப்பாடு மாணவர்க்கு ஏற்படக் கூடும் என்று சங்கர நமச்சிவாயர் எண்ணிப் பார்க்கிறார். எனவே "இவற்றை அங்கு, எங்கு என்றாற்போல ஒருமொழிகள் என்றால் என்னை எனின் அஞ்ஞான்று, (எஞ்ஞான்று) என்பனபோலப் பிளவுபட்டு இடையே மெல்லொற்று மிக்கு வருதலின் தொடர்மொழிகளேயாம் என்க." (நன். 106) என்று அவர் வினாவிடை உரைப்பாங்கில்

அந்த ஐயத்தை அகற்றுவார். இனி, வினையெச்ச வாய்பாடுகளைக் கூறும் நூற்பாவின் (நன். 343) உரையில் "இன" என்னும் மிகைச் சொல்லால் கொள்ளப்படும் வாய்பாடுகள் சிலவற்றைச் சங்கர நமச்சிவாயர் குறிப்பிடுவார். அவற்றுள் **"ஒலித்தக்கால்"** (குறள். 763), **"ஈதல் இயையாக் கடை"** (குறள். 230) என்ற தொடர்களில் வரும் கால், கடை என்பன வினையெச்ச விகுதிகள் என்பது அவர் கருத்து. அவை இடப்பொருள் உருபுகள் என்பது மயிலைநாதர் (நன். 342) கருத்து. அதனால் "ஒலித்தக்கால் என்புழிக் ககரவொற்று இடையே மிக்கமையின் கால் என்பது பெயரெச்சம் கொண்ட பெயர் அன்று; வினையெச்ச விகுதி என்பது பொருந்தும். ஈதல் இயையாக் கடை என்புழிக் கடை என்பது எதிர்மறைப் பெயரெச்சம் கொண்ட இடப்பெயர் என்றால் என்னை எனின் அதனகத்து இடப்பொருளின்றி ஈதல் இயையாது ஆயின் என்னும் பொருள் தந்து நிற்றலின் வினையெச்ச விகுதியேயாம் என்க." (நன். 343) என்று நமச்சிவாயர் விருத்தியுரை எழுதினார். ஒலித்தக்கால் என்பதற்குக் கூறிய ஒற்று மிகுதலாகிய சந்திவிதி ஈதல் இயையாக் கடை என்ற தொடருக்குப் பொருந்தாதோ என்ற ஐயப்பாடு மாணவர்க்கு எழக் கூடும் என்று சங்கர நமச்சிவாயர் ஊகிக்கிறார். அதனால் ஈதல் இயையாக் கடை என்ற தொடரில் உள்ள இயையா என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் பொருள்படும் முறையை விளக்கிக் காட்டிக், கடை என்பது வினையெச்ச விகுதி என்று அவர் வினாவிடைகளால் திரிபறத் தெளிவுபடுத்துகிறார்.

தன்மை வினைமுற்றுக்குச் சிறப்புவிதி கூறும் நூற்பாவின் (நன். 333) உரையில் உள்ள வினாவிடை விளக்கத்தில் சங்கர நமச்சிவாயர் கையாளும் புதிய உத்தியையும் குறிப்பிட வேண்டும். செய்கு என்னும் தன்மைஒருமை வினைமுற்றும் செய்கும் என்னும் தன்மைப்பன்மை வினைமுற்றும் உண்கு வந்தேன், உண்கும் வந்தேம் என வினை கொண்டு முடியும். அவ்வாறு முடியினும் அவை வினைமுற்றுக்களே; எச்சங்கள் ஆகா என்பது நூற்பாவின் கருத்து. இவ்வாறே உண்பேன் வந்தேன், உண்பேம் வந்தேம் என்பனவும் வினை கொண்டு முடியும் எனலாமோ என்ற வினா யாருக்கேனும் எழக் கூடும் என்று

நமச்சிவாயர் நினைத்துப் பார்க்கிறார். எனவே "இங்ஙனமாயின் உண்பேன் வந்தேன், உண்பேம் வந்தேம் என இவ்வொருமை பன்மையும் வினையொடு முடியும் என்றால் என்னை எனின்" என்று அவரே அந்த வினாவை எழுப்பி,

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

(நன். 388) என்ப ஆகலின் செய்கென் ஒருமையும் செய்குமென் பன்மையும் பெயரொடும் வினையொடும் முடிதல் மரபு ஆயினாற்போல அவை பெயருடன் அன்றி வினையொடு முடிதல் மரபு அன்மையின் அஃது இயையாது என்க." (நன். 333) என்று விடை கூறுகிறார். நன்னூல் நூற்பாவையே சான்றாக எடுத்துக்காட்டி மரபும் ஒரு விதி என்பதை ஆசிரியர் வழி நின்று நமச்சிவாயர் சிறப்பாக விளக்கியுள்ளார்.

இறுதியாகப் பாயிரப் பகுதியில் சங்கர நமச்சிவாயர் அடுத்தடுத்து வரைந்துள்ள வினாவிடைகளையும் பார்க்கலாம். மதம், அழகு, உத்தி ஆகிய மூன்றுக்கும் பொருள்நிலையில் சில ஒற்றுமைகள் தோன்றும். உதாரணமாக இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு என்னும் மதமும் ஒருதலை துணிதல் என்னும் உத்தியும் தொடர்புடையன; முறையின் வைப்பு என்னும் அழகும் ஒத்துமுறை வைப்பு என்னும் உத்தியும் தொடர்புடையன. இப்படி ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையனவற்றை ஆசிரியர் மதம், அழகு, உத்தி என்று தனித்தனியே பிரித்துக் கூறுவதன் நோக்கம் என்ன? என்ற வினா எழுவது இயல்பு. இதனைக் கருத்தில் கொண்டு '"மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சிலவற்றை உத்தியுள்ளும் கூறியது என்னை எனின் கொள்கை வகையான் மதம் என்றும் சிறப்பு வகையான் அழகு என்றும் இம்மதம், அழகு முதலிய எல்லாம் புத்திநுட்பத்து அமையும் வகையான் உத்தி என்றும் கூறப்படும் என்க. அங்ஙனம் ஆயின் மதம், அழகு எல்லாவற்றையும் உத்தியின்பால் படுத்திக் கூறாது சிலவற்றைக் கூறியது என்னை எனின் வரம்பின்றி வரும் உத்தியுள் தலைமைபற்றிக் கூறும் முப்பத்திரண்டில் வந்தன கூறினார் என்க." (நன். 14) என்று நமச்சிவாயர் வினாவின்மேல் வினா எழுப்பி விடை கூறும் நேர்த்தி

உய்த்துணர வேண்டியது. இந்த உரைப்போக்கு சங்கர நமச்சிவாயர் உரையில் வேறு பல இடங்களிலும் (நன். 62, 156, 178, 270, 293, 320, 344, 394, 419, 420) அவர் உரைத்திறனைப் புலப்படுத்திக் காட்டுகிறது. இறையனார் அகப்பொருள் உரை அகலவுரைக்குச் ''சூத்திரத்து உட்பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரை எல்லாம் அகலவுரை எனக் கொள்க." (இறை. 1) என்று விளக்கம் தரும். இந்த உரைமரபை நினைவில் கொண்டு நமச்சிவாயர் எழுதியுள்ள வினாவிடைகள் நன்னூல் விருத்தியுரையின் சிறப்பியல்புக்குப் பொலிவூட்டுகின்றன.

நயவுரை

மூலபாடத்தில் உள்ள சொற்களின் வழியே நூலாசிரியரின் கருத்தோட்டத்தை உள்ளவாறு உணர்ந்து மாணவர்க்கு விளக்கிக் கூறுவதே உரையாசிரியர்களின் நோக்கம் என்று முன்பே கண்டோம். ஒரு நூற்பாவில் உள்ள சில சொற்களைத் தெரிவுசெய்து அவற்றின் பொருளமைதியை விளக்கி உரைப்பது பதசாரம் அல்லது நயவுரை கூறுவது என்று அழைக்கப்படுகிறது. மூலபாடத்தில் அமைந்துள்ள சொற்களுக்கு எழுதும் நயவுரைகளை உரையாசிரியர் பொழிப்புரையில் சேர்த்து எழுத முடியாது; கூடாது. அப்படி எழுதினால் அது மற்றொன்று விரித்தலாகக் கருதப்படும். அதே சமயம் நூற்பாவில் அமைந்துள்ள பொருள் பொதிந்த தொடர்களை விரித்துக் கூறி விளங்க வைத்தல் விருத்தியுரை ஆசிரியரின் கடமை. இதற்கு ஒரு தீர்வாக அமைவதே பதசாரம் எழுதுவது எனலாம். காட்டாக "மொழிமுதற் காரணம் ஆமணுத் திரளொலி எழுத்து" (நன். 58) என்ற தொடருக்கு "மொழிக்கு முதற் காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலியாவது எழுத்து." என்பது சங்கர நமச்சிவாயரின் பொழிப்புரை. மொழிக்கு முதற்காரணம் ஆகும் ஒலி எழுத்து என்பதோடு மொழிக்கு முதற்காரணம் ஆகாத ஒலி எழுத்து ஆகாது என்ற எதிர்மறைக் கருத்தையும் இந்த நூற்பாவின் சொல்லாற்றல் உள்ளடக்கியுள்ளது என்பது அவர் கருத்து. இதனை அவர் பொழிப்புரையில் வருவித்து

எழுதுவது உரைநெறி ஆகாது. அதனால் தம்முடைய கருத்தை "முற்கு, வீளை முதலியவற்றிற்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலி எழுத்து ஆகாமையின் 'மொழி முதற்காரணம் ஆம் ஒலி' என்றார்." என்று அவர் நயவுரையில் குறிப்பார். இதுபோன்ற நயவுரைப் பகுதிகள் அவர் உரையில் எங்கும் காணப்படுகின்றன. சில நூற்பாக்களில் ஒரு சொல்லுக்கும் வேறு சில நூற்பாக்களில் பல சொற்களுக்கும் அவர் நயவுரை வரைவார். இதற்குப் பொருத்தமான உதாரணங்கள் சிலவற்றைப் பார்க்கலாம்.

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நன். 204) என்னும் நூற்பாவில் ஒன்றுவது இயல்பே என்று ஆசிரியர் உரைத்ததன் உட்கருத்தைச் சங்கர நமச்சிவாயர் கீழ்வருமாறு விளக்குவார். "மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய்யாய், மெய்யினது புள்ளியும் உயிர்வடிவும் கெட்டு நிற்றலின் விகாரமாம் என்பாரை விலக்கிச் சிறந்த ஒலிவடிவின் யாக்கையும் உயிரும்போல் மெய்யினது மாத்திரை உள்ளடங்க ஒன்றுபட்டு இரட்டை இலைபோல் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாய் இணங்கி நிற்றலானும் ஒன்றாத தனிக்குறில்முன் ஒற்று முதலியன விகாரப்படுதலானும் 'ஒன்றுவது இயல்பே' என்றார்." என்று அவர் நயம் தோன்ற விரித்துரைப்பார். நயவுரைக்கு மற்றொரு உதாரணம் **"ஆக்க வினைக்குறிப்பு ஆக்கமின்று இயலா"** (நன். 347) என்னும் நூற்பாவில் உள்ள ஆக்கமின்று இயலா என்ற தொடருக்கு நமச்சிவாயர் ஒப்பியல் நோக்கில் நயவுரை கூறுவது. "வேற்றுமைப் புணர்ச்சிக்கு வேற்றுமை உருபுகள் விரிந்தும் தொக்கும் அதன் உடைமையாய் நின்றாற்போல ஆக்க வினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்தும் தொக்கும் அதன் உடைமையாய் நிற்றலின் 'ஆக்கமின்று இயலா' என்றார்." என்று அவர் வேற்றுமை உருபுகளின் செயற்பாட்டோடு ஆக்கச்சொல்லின் செயற்பாட்டை ஒப்பிட்டு விளக்குவார்.

சில நூற்பாக்களில் (நன். 94, 100, 177, 194, 258, 295, 319, 321, 401) பல சொற்களுக்கும் நமச்சிவாயர் நயவுரை வரைவதுண்டு. பதவியலின் முதல் நூற்பாவுக்கு "எழுத்தான் ஆய பதம் அரிசன முதலியவற்றால் சமைத்த சுண்ணம்

போலாது மலரால் சமைத்த மாலைபோல் நிற்றலின் 'எழுத்தே' என்றும், ஓர் எழுத்தேனும் பிற பொருள் தருதலின் பதமாம் என்பார் 'தனித்து' என்றும், ஒன்று, இரண்டு, பல என்பன வடநூல் வழக்கு; ஒன்று அல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடை ஆதலின் வடநூல் வழக்குப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர்,

"ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

(தொல். மொழி. 12) என்றார்க்கு இரண்டு எழுத்துத் தொடர்ந்தன அல்ல எனின் அது மொழியும் அன்று என்பார் தனிநிலை ஒழிந்தவற்றைத் 'தொடர்ந்து' என்றும், இறிஞி, மிறிஞி எனின் தொடருமேனும் தன்னை உணர்த்தும் அன்றிப் பிற பொருள் தாராமையின் பதம் ஆகாது என்பார் 'பொருள் தரின்' என்றும்,

"தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணேயாம் சொல்"

(அவி.) என்ப ஆகலின் பொருள் என்றது பிற பொருள் என்பார் உணர்த்தின் என்னாது 'தரின்' என்றும், அணு என்னும் ஒலிநுட்பத்தான் எழுத்து ஆனாற்போல எழுத்து என்னும் ஒலிநுட்பத்தான் மொழி ஆம் என்பார் 'பதமாம்' என்றும், இப்பதவியலுக்கு மேற்கோள் ஆரியமே என்பார் மொழி என்னாது 'பதம்' என்றும் கூறினார்." (நன். 128) என்று நூலாசிரியரின் கருத்துகளை அவர் ஒவ்வொன்றாக விளக்குவது தனித்தன்மை வாய்ந்தது. இந்த விளக்கத்தில் உள்ள உவமைகளும் மேற்கோள் நூற்பாக்களும் நயவுரையின் தரத்தை நன்கு புலப்படுத்தும்.

பெயரியலில் வேற்றுமை பற்றிய நூற்பாவின் (நன். 291) சொற்கள் அனைத்திற்கும் நமச்சிவாயர் வரைந்துள்ள நயவுரை வேற்றுமைகளுக்கு எழுதிய முன்னுரைபோல அமைந்துள்ளது. வேற்றுமையின் பொருளமைதிக்கு ஏற்ற சொற்களை ஆசிரியர் தெரிவுசெய்து நூற்பா யாத்துள்ளார் என்ற கருத்தை இந்நயவுரை

தோற்றுவிக்காமல் போகாது. விளக்கிச் சொல்ல வேண்டாத வகையில் தெள்ளத் தெளிந்த நடையில் அந்த நூற்பாவுக்கு நமச்சிவாயர் வரைந்துள்ள நயவுரை இதுதான். "எல்லாப் பெயரும் எல்லா வேற்றுமையும் ஏலா என்பார் 'ஏற்கும்' என்றும், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களுள் பெயர்ப்பட்டு நின்றனவும் தழீஇக்கோடற்கு 'எவ்வகை' என்றும், வினை முதலிய மூன்றும் வேற்றுமை கொள்ளா என்பார் 'பெயர்' என்றும், 'ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்' என எய்தியதனை விலக்கி 'எழுவாய் உருபு திரிபில் பெயரே' (நன். 295) எனப் பிறிதுவிதி வகுத்தலின் பெயர் முழுவதூஉம் ஆம் எழுவாயுருபினை ஒழித்து விளியுருபிற்குப் பெயர் இறுதியாகிய அகப்பாட்டெல்லையினையும் ஏனை ஆறு உருபிற்கும் அதன் இறுதியாகிய புறப்பாட்டெல்லையினையும் தழீஇக்கோடற்குப் பொதுமையின் 'ஈறாய்' என்றும், பொருளையே அன்றிச் சொல்லையும் ஒரோவழி வேறுபடுப்பது ஐ முதலிய ஏழு உருபிற்குமே அன்றி எழுவாய்க்கு ஒவ்வாமையானும் பொருள் ஒன்றனையும் வேறுபடுத்தல் எட்டு உருபிற்கும் ஒப்ப முடிந்தமையானும் சொல்லையும் உடன் கூறாது 'பொருள்' என்றும், வேற்றுமை என்னும் காரியத்தைச் செய்யும் கருத்தாவாகிய எட்டு வேற்றுமை உருபிற்கும் வேற்றுமை எனப் பெயர் போந்தது காரியவாகுபெயராகிய காரணக்குறி என்பார் 'வேற்றுமை செய்வன வேற்றுமை' என்றும்,

"ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளனொரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

என ஆசிரியர் அகத்தியனார் கூறுப ஆகலின் விளியுருபு படர்க்கைச் சொல்லையும் பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமை செய்தலின் அதனை எழுவாயுள் அடக்காது வேறு கோடலே தம் துணிபு என்பார் 'எட்டே' என்றும் கூறினார்." நயவுரைப் பகுதிகளில் என்றார், கூறினார் என்பனவற்றுக்கு எழுவாய் பவணந்தி முனிவர் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நயவுரை நூற்கருத்தின் எதிரொலி

பவணந்தி முனிவர் எந்தெந்தக் கருத்துகளை எல்லாம் சிந்தையில் இருத்தி அவற்றுக்கு ஏற்ற சொற்களையும் தொடர்களையும் தேர்ந்தெடுத்து இந்த நூற்பாவை வடிவமைத்தார் என்று தாம் உடனிருந்து கண்டும் கேட்டும் கலந்துரையாடியும் அறிந்தவர்போலப் பல்வேறு கருத்துகளைச் சங்கர நமச்சிவாயர் இந்நயவுரையில் விரிவாக எழுதியுள்ளார். நூலாசிரியரின் சிந்தனைத் தடத்தில் உரையாசிரியரின் சிந்தையும் பயணம் செய்தாலன்றி மூலநூல் கருத்தை எதிரொலிக்கும் நயவுரையை எழுத இயலாது. அவ்வாறு செய்யாமல் நயவுரை எழுதினாலும் காலத்தை எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றதாக அது அமைய முடியாது. சங்கர நமச்சிவாயர் பவணந்தி முனிவருடைய அடிச்சுவட்டின் தடயத்தைச் சரியாகக் கண்டறிந்தவர். அதனால் அவர் வரைந்த நயவுரைகள் காலத்தை வென்று பெருவாழ்வு பெற்றுவிட்டன. இத்தகைய பயன்மிகு நயவுரைகள் அவர் உரையில் இருநூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ளன. அவற்றை மனம் தோய்ந்து படித்துப் புரிந்துகொள்வது ஒரு அனுபவம்; உரை அனுபவம். இந்த அனுபவம் தமக்கு வாய்த்த காரணத்தால்தான் "பதசாரம் எழுதுவதில் இவருக்கு யாரும் இணை இல்லை." என்று தண்டபாணி தேசிகர் (1957. முகவுரை பக். 23) சங்கர நமச்சிவாயரை நெஞ்சாரப் புகழ்ந்துரைத்தார். இது பொய்யுரையே அல்ல; புகழுரை. நமச்சிவாயருக்கு இது முற்றிலும் பொருந்தும்.

உவமை நலன்

இலக்கணக் கருத்துகளைத் தெளிவுபடுத்துவதற்கும் கற்போரின் மனம் கவரும் நடையில் அவற்றை வழங்குவதற்கும் உரையாசிரியர்கள் அழகான உவமைகளை ஆங்காங்கே பயன்படுத்துவர். உவமையின் பயன்கள் "புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும். ஆப்போலும் ஆமா என உணர்த்திய வழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இஃது ஆமா என்று அறியும். தாமரைபோல் வாள்முகத்துத் தையலீர் என்ற வழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும்."

என்று உவமையியலின் தோற்றுவாயில் இளம்பூரணர் எழுதுவது அரியதொரு விளக்கம். இதன்கண் தெரிவுசெய்த இரண்டு எடுத்துக்காட்டுகளை அவர் காட்டியுள்ளதால் இந்த விளக்கம் எல்லோருக்கும் புரியக் கூடும். ஆகவே நல்ல உவமையால் கருத்துத்தெளிவு, இன்பச்சுவை ஆகிய இரண்டும் கிடைத்துவிடும். கல் ஒன்று; காய் இரண்டு. இலக்கண உரைகளில் இந்த உத்தி நன்றாகச் செயல்பட்டுள்ளது. உவமைகளை எடுத்தாளும் உரைநெறியைக் கடைப்பிடிப்பதில் உரையாசிரியர்களுக்குள் காணப்படும் ஒருமித்த கருத்தே இதற்கு அத்தாட்சி.

இலக்கியம்போல இலக்கணம் எல்லோருக்கும் எளிதில் புரிவதில்லை; சுவைப்பதும் இல்லை. நூற்பாக்கள் ஒரு வகையில் செய்யுள் என்றாலும் பொருளாலும் நடையாலும் அவை இரண்டும் வெவ்வேறு இயல்பின. தவிரவும் இலக்கியப் பாடல்களில் உள்ளதுபோலக் கதைநிகழ்ச்சி, கதைமாந்தர், இயற்கை வருணனை, அணிநயம் முதலிய காப்பியப் பண்புகளும் உவகை, அவலம், வியப்பு, வெகுளி போன்ற அகவுணர்வுகளும் மோனை, எதுகை, ஓசைநயம் முதலிய செய்யுள் பண்புகளும் பொதுவாக நூற்பாக்களில் இருப்பதில்லை. இலக்கண உரைகளிலும் கூடக் கருத்துரை, பொழிப்புரை, மாற்றுரை, விரித்துரை முதலியவற்றோடு இலக்கணக் குறியீடுகள், விதிமுறைகள், வரையறைகள், கொள்கைகள், மரபுகள் போன்றவை நீக்கமற நிறைந்துகிடக்கும். இவற்றோடு, இலக்கண உரைகளில் நடைச்செறிவும் இணைந்துவிடுவதால் பல சமயங்களில் எளிமைப்பண்பு அவற்றில் அரிதாகிவிடுகிறது. அதனால் இலக்கணம் கற்போருக்குக் களைப்பும் சலிப்பும் தோன்றிவிடுவது இயல்பு. இலக்கணம் எல்லோருக்கும் கசக்கும் என்பது இதற்குப் பொருள் அல்ல; அது இனிப்பதும் உண்டு; ஆனால் அது மிகச் சிலருக்கு - என்பதே உண்மை. உரையாசிரியர்கள் இந்தக் கசப்பான உண்மையை அறிந்திருந்தனர். எனவே நெஞ்சை அள்ளும் மேற்கோள் பாடல்கள், ஆர்வத்தைத் தூண்டும் வாதங்கள், உயிரோட்டமுள்ள சொல்நடை, நடைக்கு அழகூட்டும் உவமைகள் முதலியவற்றை மருந்தோடு தேனைக் கலப்பதுபோலக் கலந்து எழுதி, இலக்கண உரைகளுக்கு

இலக்கியச் சாயலைத் தரத் தம்மால் இயன்ற அளவு அவர்கள் முயன்றுள்ளார்கள். இலக்கணம் கற்பவருக்கு ஏற்படும் களைப்பும் சலிப்பும் இவற்றால் குறைந்துவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை என்பதே இலக்கண வரலாறு நமக்கு உணர்த்தும் பாலபாடம். ஒற்றை வரியில் சொன்னால் உரையாசிரியர்கள் இலக்கணத்துக்கு உவமை உப்பிட்டுச் சுவையூட்டியுள்ளனர். கருத்து விளக்கத்துக்கு அவர்கள் கையாண்ட கருவிகளுள் உதாரணத்துக்கு இணையாக எண்ணப்படுவது உவமையே. அடுத்துள்ள பகுதிகளில் எடுத்துக்காட்டப்படும் உவமைகள் இந்த முடிபை உறுதிப்படுத்தும்.

உரையாசிரியர்கள் கண்ட உவமைகள்

உவமைத்தேரை இலக்கண உரையில் திறம்படச் செலுத்திச் சாதனை புரிந்த சாரதி நக்கீரரே. அறுபது நூற்பாக்களே கொண்ட இறையனார் களவியலின் உரையில் நூற்றுக்கு மேற்பட்ட உவமைகளை மின்னும் பொன்மணிகளாக அவர் பதித்துள்ளார். ஒன்றிரண்டை உரைத்துப் பார்க்கலாம். "அவள் (தலைமகள்) தன்னைக் காணாமல், தான் (தலைமகன்) அவளைக் காண்பதோர் அணிமைக்கண் மழைக்கொண்டலின் மின்னுப் புக்கு ஒளித்தாற்போல ஒரு தழைப்பொதும்பரிடை மறைந்து நிற்கும். நிற்கத், தலைமகளும் தன் குழற்கற்றையும் கோதையும் துயல்வரக், கொடியிடை நடுவு தளரப், பரவை அல்குல் துகில் அசையப், பைம்பொன் தோடு மின்னுப் படைப்ப, வரிவண்டு அறையும் தாமரை அகவிதழ் புரையும் அஞ்செஞ் சீறடிமேல் பைம்பொன் சிலம்பு அரற்ற, அன்னம்போல மென்மெல ஒதுங்கிக், காமவல்லியும் கற்பகக் கொழுந்தும் நடை கற்பதென நடந்து சென்று, அணிவரைச் சாரல் அருகினதோர் மணியருவி மருங்கு ஒலுறுத்தப் பளிங்கு விளிம்பு அடுத்த நீலப் பைஞ்சுனை மருங்கினதோர் மரகதச் சிலாவட்டத்து அயல் மாணிக்கச் சதுரப்பாறைமேல், தாது தவிசு அடுத்த மாதவிப் பந்தர்ப் போது வேய்ந்த பூ நாறு கொழுநிழல் இருந்தாள்." (இறை. 2) என்று தலைவியின் அருமையை நக்கீரர் அறிவிக்கிறார். உயிரோட்டமுள்ள காவிய நடையில், உரிய இடங்களில் உவமைப்பூக்களைப் புனைந்து இவ்வாறு

நக்கீரர் உரை எழுதினால் உடல் சிலிர்த்துக் கண்ணீர் வார்க்காமல் உருத்திரசன்மனால் வாளா இருந்துவிட முடியுமா?

நெல்லரியின் அடுக்குப்போல ஒன்றன்மேல் ஒன்றாக உவமைகளை அடுக்கி உரை எழுதுவதிலும் உரையாசிரியர் பலருக்கு நக்கீரர் முன்னோடி ஆவார். இதற்கு ஒப்பற்றதோர் உதாரணம் பாயிரத்தின் விளக்கத்தில் கிடைக்கிறது. பாயிரம் என்பது புறவுரை; நூல் கேட்பான் நூலைக் கேளாமல் புறவுரை கேட்பதால் பயன் என்ன? என்னும் வினாவை எழுப்பிக்கொண்டு "கரு அமைந்த மாநகர்க்கு உரு அமைந்த வாயின் மாடம் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் தகை மாண்ட நெடுஞ்சுவர்க்கு வகை மாண்ட ஓவியம் போலவும்" (இறை. 1) நூலுக்குப் பாயிரம் இன்றியமையாதது என்று அதற்கு நக்கீரர் விடை கூறுவார். இதன்கண் அமைந்துள்ள உவமை அடுக்கின் நேர்த்தி கற்பவர் நெஞ்சைக் கவரும்; மனப்பாடம் செய்வோரின் நினைவில் என்றென்றும் நிலைக்கும். பாயிரப் பகுதிகளுக்கு விரிவாக உரை இயற்றிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர் முதலியோர் இந்த உவமைகளில் ஒன்றிரண்டைத் தமது உரைகளில் எடுத்தாண்டதற்குக் காரணம் இதுவாக இருக்கலாம்.

தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிற இலக்கண உரையாசிரியர்களும் தங்கள் உரைகளில் நல்ல உவமைகளை ஏற்ற இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளனர். தொல்காப்பிய உரையாசிரியர்கள் வழங்கியுள்ள உவமைகளிலிருந்து ஒரு சில உதாரணங்களைப் பார்க்கலாம். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அரை மாத்திரையாகக் குறுகி ஒலிப்பன. அவ்வாறு குறுகி ஒலித்தாலும் அவற்றின் உயிர்த்தன்மை மாறாது. அதாவது உயிரின் குறுக்கமும் உயிரே என்பது இதன் கருத்து. இக்கருத்தைத் தெளிவாக விளக்குவதற்கு இளம்பூரணர் "சந்தனக்கோல் குறுகின இடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகின இடத்தும் அவை உயிர் ஆகற்பாலன." (தொல். நூன். 2) என்று ஒரு அழகான உவமையை எடுத்தாளுவார். ஒரு கருத்தை எதிர்மறையில்

அழுத்தம் திருத்தமாக அறிவிப்பதற்கும் உவமை ஒரு பயனுள்ள கருவி என்பது இதனால் விளங்கும். இந்தப் பயன்பாட்டின் சிறப்பையும் உவமையின் அழகையும் உணர்ந்த நச்சினார்க்கினியர் இதனை ஏற்றிப் போற்றித் தமது உரையில் (தொல். நூன். 2) எடுத்து அமைத்துக்கொண்டார். இதனால் நச்சினார்க்கினியரின் தனித்தன்மையைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது; கூடாது. தமது உரைகளில் அவரும் நல்ல உவமைகள் பலவற்றைப் பயன்படுத்தியுள்ளார். சான்றுக்கு ஒன்று.

கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என அகத்திணை ஏழு; இதுபோலவே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்திணை எனப் புறத்திணை ஏழு. இது தொல்காப்பியத்தின் பாகுபாடு. பன்னிருபடலம், அதன் வழிநூலாகிய புறப்பொருள் வெண்பா மாலை ஆகியவற்றின் பாகுபாடு இதற்கு மாறுபட்டது. புறத்திணை பன்னிரண்டு என்பது அவற்றின் நிலைப்பாடு. நச்சினார்க்கினியருக்கு இது உடன்பாடு அல்ல. அகத்திணை ஏழுக்கு இணையாகப் புறத்திணை ஏழு என்று தொல்காப்பியர் வகுத்த பாகுபாடே அவருக்கு உடன்பாடு. தொல்காப்பியருக்கு மாறாக ஐயனாரிதனார் புறத்திணை பன்னிரண்டு என்று பாகுபாடு செய்தது பிழைக்கோட்பாடு என்பது அவர் துணிபு. எனவே எல்லோருக்கும் எளிதாகப் புரியக் கூடிய ஒரு உவமையோடு வினாவிடை முறையில் அவர் இக்கருத்தைப் பின் வருமாறு மறுத்துக் கூறுகிறார். "முற்படக் கிளந்த" (தொல். அகத். 1) என எடுத்தல் ஓசையான் (தொல்காப்பியர்) கூறவே பிற்படக் கிளந்த எழுதிணை உளவாயிற்று. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்திணை என வரும். ஒழிந்தோர் பன்னிரண்டு என்றார் ஆதலின் புறத்திணை ஏழு என்றது என்னை எனின் அகங்கை இரண்டு உடையார்க்குப் புறங்கை நான்கு ஆகாது இரண்டு ஆயவாறுபோல அகத்திணை ஏழற்கும் புறத்திணை ஏழு என்றலே பொருத்தம் உடைத்தாயிற்று." (தொல். அகத். 1) என்பது நச்சினார்க்கினியர் உரை. உள்ளங்கை இரண்டு என்றால் புறங்கையும் இரண்டாகத்தானே இருக்க இயலும்? நான்கு

ஆகாது அல்லவா? அதுபோல அகத்திணை ஏழு என்றால் புறத்திணையும் ஏழாக இருப்பதுதானே முறை என்று நகையுணர்வு தோன்ற அவர் சுட்டிக்காட்டுவது அழகான மறுப்புரை.

சேனாவரையரும் நல்ல சில உவமைகளைத் தமது உரையில் (தொல். சொல். 19, 40, 48, 52, 76, 101, 172, 174, 395, 455) எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் ஒன்றை மட்டும் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இருதிணைப் பொருளையும் காரணம் கருதி உணர்த்துவது விரவுப்பெயர். இயற்பெயராவது காரணமின்றிப் பொருள்பற்றிச் சாத்தன், கொற்றன் என வரும் இடுபெயர். அது விரவுப்பெயர் அனைத்துக்கும் பொதுவாக உள்ள பெயராகவும் விரவுப்பெயருள் ஒரு பகுதிக்குரிய பெயராகவும் வழங்கும். அங்ஙனம் ஆயின் இயற்பெயரும் விரவுப்பெயரும் ஒன்றெனப் பொருள்படுவதால் விரவுப்பெயருள் ஒரு பகுதி மட்டும் இயற்பெயர் ஆவது எவ்வாறு? என்ற வினா எழும். சேனாவரையரே இந்த வினாவை எழுப்பி, இசைத்துறை மரபு ஒன்றை ஒப்பியல் நோக்கில் உவமையாக எடுத்துக்காட்டி, அதற்கு ஏற்ற விடை கூறியுள்ளார். அப்பகுதி "இயற்பெயர் எனினும் விரவுப்பெயர் எனினும் ஒக்கும்; ஆயின் அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்தது என்னை எனின் அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார்; பாணியும் தாளமும் ஒரு பொருள ஆயினும் இசை நூலார் தாளத்துள் ஒரு சாரனவற்றிற்குப் பாணி என்னும் பெயர் கொடுத்தாற்போல என்பது." (தொல். பெயர். 20) என்று தெளிவாக அமைந்துள்ளது. இலக்கண இலக்கியத் துறைகளுக்குச் சிறிது அப்பாற்பட்ட இசைத்துறை வழக்காறு ஒன்றைக் குறியீட்டு விளக்கத்துக்குப் பயன்படுத்திய சேனாவரையரின் நுண்ணறிவு மதித்தற்கு உரியது. கருத்து விளக்கத்துக்காகவும் நடையழகுக்காகவும் இவ்வாறு உவமைகளை எடுத்தாண்ட இலக்கண உரையாசிரியர்களின் பாரம்பரியத்தில் ஊறித் திளைத்த சங்கர நமச்சிவாயரும் தமது உரையில் நல்ல நல்ல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

நமச்சிவாயர் கண்ட உவமைகள்

சங்கர நமச்சிவாயரின் விருத்தியுரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உவமைகள் காணப்படுகின்றன. ஆனால் இவருக்கு முன்னால் நன்னூலுக்கு உரை இயற்றிய மயிலைநாதர் வெறும் நான்கு உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். அவர் மட்டும் அல்ல. தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரும் தமது உரைகளில் நமச்சிவாயரைப் போல உவமைகளைப் பேரளவில் எடுத்தாளவில்லை. தொல்காப்பியம் முழுவதற்கும் உரை இயற்றிய இளம்பூரணர்கூட ஏறக்குறைய முப்பது உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். உவமைகளின் ஆட்சியும் புள்ளிவிவரமும் இவ்வாறு இருக்க, உரையாசிரியர் பரம்பரையின் கடைசி வழித்தோன்றலாகிய நமச்சிவாயர், தமக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுக்கு முன்பு களவியலுக்கு உரை வகுத்த நக்கீரரைப் போலத் தமது உரையில் உவமைகளைத் தாராளமாகப் பயன்படுத்தியதன் காரணம் என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பு. இது நடையியலைப் பொறுத்த விஷயம். நடையியல் ஆய்வு தமிழியலில் மழலைப் பருவத்தைத் தாண்டாமலே நின்றுவிட்டது. தமிழ் ஆய்வாளர்கள் இந்தச் சவலைக் குழந்தையைக் கண்டும் காணாமல் விட்டுவிட்டது நமது போதாத காலம். ஆகவே நடையியல் நோக்கில் பழைய உரைகளைத் தனித்தனியே ஆராய்ந்து உவமையின் பயன்பாடு தொடர்பான தரவுகளை முறையாக முதலில் திரட்டித் தொகுக்க வேண்டும். இப்பணி நிறைவேறும் முன்பு இந்தக் கேள்விக்கு நிறைவான பதிலை யாரும் சொல்லிவிட முடியாது. அதனால் உவமைகளின் வரவு, பயன்பாடு ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சியை இப்போதைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்; நன்னூல் விருத்தியுரையில் காணப்படும் உவமைகளின் பண்பியல்புகளைப் பார்க்கலாம்.

தெரிந்த ஒன்றை எடுத்துக்காட்டித் தெரியாத பொருளைத் தெரியப்படுத்துவதுதானே உவமையின் பயன்! உவமையை எடுத்தாள்வோரின் இலக்கும் இதுவே. சங்கர நமச்சிவாயர் இவற்றைத் திரிபறப் புரிந்துகொண்டவர். அதனால் அவர்

காட்டும் உவமைகளில் எளிமையும் தெளிவும் உயிர்நாடிகளாகத் திகழ்கின்றன. உதாரணத்துக்கு ஒன்றைப் பார்க்கலாம். நட, வா என்னும் தன்வினைப் பகுதிகள் வி, பி என்றும் இவை இரண்டும் இணைந்து விப்பி என்றும் பிறவினை விகுதிகளை ஏற்று நடப்பி, வருவி, வருவிப்பி என வேறுபட்டுப் பிறவினைப் பகுதிகளாக அமையும். பிறவினைப்படுத்த வரும் வி, பி, விப்பி ஆகிய விகுதிகளும் அவற்றை அடுத்து வரும் அன், ஆன் முதலிய பால்விகுதிகளைக் குறிக்கப் பகுதி ஆகும். **"விளம்பிய பகுதிவே றாதலும் விதியே"** (நன். 139) என்னும் நூற்பா நுதலிய பொருள் இதுவே என்று நமச்சிவாயர் கருதுகிறார். இந்தக் கருத்தை "வேறுபடாதது பிரகிருதி ஆமன்றி வேறுபட்டது பிரகிருதி ஆகாதேனும் தந்தையைக் குறிக்க மகன் எனப்பட்டான் ஒருவன் தன் மகனைக் குறிக்கத் தந்தை ஆனாற்போலப் பிறவினைப்படுத்த வரும் இவ்விகுதிகளும் மேல் வரும் அன், ஆன் முதலிய விகுதிகளைக் குறிக்கப் பகுதியாம்." (நன். 139) என்று பொருத்தமானதோர் உவமையைக் காட்டி விளக்குகிறார். உறவுத் தொடர்புள்ள இந்த உவமையை அவர் தெரிவுசெய்ததற்குக் காரணம் உண்டு. மனித இனத்தின் குடும்ப அமைப்புக்கும் பண்பாட்டுக்கும் உறவுமுறையே ஆணிவேர். அறியாக் குழந்தையும் உறவுபற்றி ஒரு சிறிது அறியும்; தாய், தந்தை, தம்பி, தங்கை போன்ற உறவுகள் அதற்கு நன்றாகத் தெரியும்; புரியும். அதனால்தான் நமச்சிவாயர் தன்வினை, பிறவினை, பகுதி, விகுதி போன்ற கனமான இலக்கணக் கருத்துகளைப் புரிய வைக்கத் தந்தை, மகன் என்னும் உறவு சார்ந்த எளிய உவமையைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய உறவுமுறை உவமைகளை வேறு நூற்பாக்களின் உரைகளிலும் (நன். 7, 8) அவர் பயன்படுத்தியுள்ளது இக்கருத்துக்கு வலிவூட்டும்.

எல்லோருக்கும் புரியத்தக்க உவமைகளை எடுத்தாள்வது நமச்சிவாயருக்கு ஆற்றுநீரைக் கைகளால் அள்ளிக் குடிப்பது போன்ற எளிய பணி என்று சொல்லலாம். தொடர்ந்து இப்பகுதியில் எடுத்துக்காட்டப்படும் உவமைகளைப் படித்தால் இது வெறும் புனைந்துரை அல்ல என்பது விளங்கும். "பாலன்

விருத்தன் ஆனாற்போலக் குறிலினது விகாரமே நெடில்" (நன். 72) என்றும், நுனம் என்பது பல பொருள் ஒரு சொல்லாக வரினும் "தனித்து வரும் தன்மையதன்றி முடவன் கோல் ஊன்றி வந்தாற்போலச் சுட்டு, வினாவாகிய இடைச்சொற்களை முன்னிட்டு" வரும் (நன். 106) என்றும், ஆய்தம் "உயிர்களோடும் மெய்களோடும் கூடியும் கூடாதும் அலிபோலத் தனி நிற்றலின் தனிநிலை எனப்படும்." (நன். 60) என்றும், வினைத்தொகை பண்புத்தொகை முதலிய தொகைநிலைத் தொடர்மொழிகளை ஒருமொழிகள் என்று கூறுவது "தாய் மலடி என்றாற் போன்ற" முரண்பாடு (நன். 152) என்றும், சொற்களில் "முதலெழுத்துக்கள் இருமருங்கும் நின்று எழுப்ப, இருசிறகு எழுப்ப எழும் உடலதுபோல்" ஆய்தம் இடைக்கண் எழுந்து ஒலிக்கும் (நன். 92) என்றும்; "மொழிமாற்று என்பது தனக்கு உள்ளதைக் கொடுத்துப் பிறர்க்கு உள்ளதை வாங்கும் பண்டமாற்றுப் போறல்" (நன். 413) என்றும், மெய்யும் உயிரும் கூடிய உயிர்மெய் ஒலிக்கும்போது "இரட்டை இலைபோல் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாய் இணங்கி" நிற்கும் (நன். 204) என்றும், எழுத்தால் ஆகிய பதம் மலரால் தொடுத்த மாலை போன்றது (நன். 128) என்றும், இதனைச் சிறிது மாற்றி, எழுத்து பதத்தின்கண் நிற்பது மாலையின்கண் மலர்போல (நன். 127) என்றும், "குடத்தின்கண் மண்போல் இவ்வினையாகிய காரியத்தின்கண் முதற்காரணமாகிய செயல் உண்டு." (நன். 321) என்றும், அடிமரத்திலிருந்து "கவடு, கொம்பு, வளார் எனப் பலவாய் ஒன்றோடு ஒன்று தொடர்பட்டு எழுந்து நிற்றல்போலத் தொகையினின்றும் ஒன்றோடு ஒன்று தொடர்படப் பகுக்கப்பட்டு" நூல் யாப்பு பலவாய் வரினும் தொகைவிரி யாப்பே ஆகும் (நன். சிற. பாயி.) என்றும் எல்லோருக்கும் புரியும் எளிய உவமைகளால் அரிய இலக்கணக் கருத்துகளை எல்லாம் சங்கர நமச்சிவாயர் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார். இவை போன்ற உவமைகள் அவர் உரையில் இன்னும் சில இடங்களிலும் (நன். 58, 93, 133, 141, 151, 158, 270, 274, 321, 414) காணப்படுகின்றன.

மறுப்புரையில் உவமைகள்

மூலநூலுக்குப் பொருந்தா உரைக்கோள் என்று தமக்குத் தோன்றும் வேற்றுரையை மறுக்கும்போதும் நமச்சிவாயர் ஏற்ற உவமைகளை எடுத்துக்காட்டி (நன். 152, 255, 272, 320, 399) அதனை முற்றாக மறுப்பதுண்டு. "இனைத்தென்று அறிபொருள்" (நன். 399) என்னும் பொதுவியல் நூற்பாவின் உரை இதற்குத் தகுந்த உதாரணம். உலகத்தில் எக்காலத்திலும் எவ்விடத்திலும் இல்லாத பவளக்கோட்டு நீலயானை, முயற்கோடு, ஆகாயப்பூப் போன்ற பொருள்களை வினைப்படுத்துக் (முடிக்கும் சொல்லோடு) கூறும்போது முற்றும்மை கொடுத்துப் பவளக்கோட்டு நீலயானை என்றும் இல்லை; முயற்கோடு, ஆகாயப்பூ என்றும் இல்லை என்று சொல்ல வேண்டும் என்பது நமச்சிவாயர் கருத்து. இவற்றுக்கு மயிலைநாதர் (நன். 398) எழுதியுள்ள விளக்கம் வேறு. அவர் பவளக்கோட்டு நீலயானை பண்டும் இல்லை; முயற்கோடு ஈண்டும் இல்லை என்பன போன்ற உதாரணங்களை எச்சவும்மை கொடுத்து விளக்குவார். நமச்சிவாயர் அந்த உரையைக் கேலிப்பொருள் தொனிக்கும் உவமை ஒன்றினால் மறுத்துள்ளார். அவர் நடையில் அந்த மறுப்புரையைப் படிப்பதே ஒரு சுவை. "உலகின் இலாப் பொருள் உள்பொருள்போல் காலத்தொடு பட்டது அன்று என்பது தோன்ற, என்றும் இல்லை என்னாது, காலத்தொடு பட்டதுபோல் வைத்துப் பவளக்கோட்டு நீலயானை பண்டும் இல்லை என எச்சவும்மை தந்து உதாரணம் காட்டுவர். அது யானை குடத்தினும் இல்லை; குழிசியினும் இல்லை என்றது போலும்." என்பது அவ்வுரைப் பகுதி. நகைச்சுவை ஊட்டும் இந்த உவமை மயிலைநாதர் உரையைத் தாக்குவதற்கு எய்யப்பட்ட சொல்லம்பு. மறுப்புரையின் கடுமையை நகைச்சுவை கொஞ்சம் குறைத்தாலும் அதன் இலக்கு பிழைக்கவில்லை. உதாரணத்திலும் உவமையிலும் அமைந்துள்ள யானை என்னும் சொல்லாட்சி தற்செயல் அல்ல; அது அவரது எண்ண இயைபின் நேரடி விளைவு. நமச்சிவாயரின் உவமை உருவாக்கத் திறனுக்கு இந்தச் சொல்லாட்சி ஒரு ஊற்றுக்கண்.

உவமை ஆராய்ச்சி

உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ள உவமைகளை ஆராயும்போது எந்த ஆய்வாளரும் சற்று விழிப்போடு இருப்பது நல்லது. அதாவது ஆய்வுக்கு நல்லது; அதை விடவும் நல்லது ஆய்வாளருக்கு; தமிழியல் வளர்ச்சிக்கு அது இன்னும் நல்லது. ஒரு உரையாசிரியர் எடுத்தாண்டுள்ள உவமைகள் அனைத்தும் அவருடைய சுயசிந்தனையில் உருவானவை என்று நாம் விரைந்து முடிவுகட்டிவிடக் கூடாது. காரணம் மிகவும் வெளிப்படை. அவருக்கு முன்பு அதே உவமையை மற்றொரு உரையாசிரியர் எடுத்தாண்டிருக்கக் கூடும். கருத்து விளக்கத்துக்கு உதாரணம் ஒரு கருவி; உவமை இன்னொரு கருவி. எனவே ஒரு உரையாசிரியர் எடுத்தாண்ட உவமையை இன்னொரு உரையாசிரியர் மாற்றம் எதுவும் இல்லாமல் அப்படியே எடுத்தாளலாம்; அல்லது சிறிது மாற்றி அமைத்துக்கொள்ளலாம்; அல்லது முன்னோர் காட்டிய உவமைக்கு ஒருவர் மாற்று வடிவம் கொடுக்கலாம். அன்றியும் ஒரு கருத்தை விளக்குவதற்கு ஒரு உரையாசிரியர் பயன்படுத்திய உவமையை இன்னொருவர் வேறு ஒரு கருத்தை விளக்குவதற்கும் பயன்படுத்தலாம். ஒரு உரையாசிரியர் எடுத்துக் காட்டிய உதாரணத்தை மற்றொருவர் உவமையாக மாற்றிப் பயன்படுத்திக்கொள்ளலாம். இலக்கண உரைகளில் இவை எல்லாம் வழக்கில் உள்ள நடைமுறைகளே. இவற்றுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

நூலுக்கு இன்றியமையாதது பாயிரம் என்ற கருத்தை விளக்குவதற்கு "அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போல" (இறை. 1) என்று நக்கீரர் எடுத்தாண்ட உவமையை நச்சினார்க்கினியரும் (தொல். சிற. பாயி.) வைத்தியநாத தேசிகரும் (இல. விள. பொ. பாயி.) அப்படியே எடுத்து அமைத்துக்கொண்டனர். பாயிரம் கேளாமல் நூல் கேட்டால் "குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படும்." என்று இளம்பூரணர் (தொல். சிற. பாயி.) எடுத்துக்காட்டிய உவமையை நச்சினார்க்கினியர் (தொல். சிற. பாயி.) அதே கருத்து விளக்கத்துக்கு எழுத்து மாறாமல்

எடுத்துக்காட்டி இளம்பூரணரைப் பாராட்டியுள்ளார். "பாயிரம் இல்லது பனுவல் அன்றே" (இறை. 1) என்னும் தொல்மரபை விளக்குவதற்கு நக்கீரர் எடுத்தாண்ட "கரு அமைந்த மாநகர்க்கு உரு அமைந்த வாயில்மாடம்போல" (இறை. 1) என்னும் உவமையை இளம்பூரணர் (தொல். சிற. பாயி.) "திரு அமைந்த மாநகரத்திற்கு உரு அமைந்த வாயில்மாடம்போல" என்று சிறிதே மாற்றி ஏற்றுக்கொண்டார். உயிர்மெய், "மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும் போல ஒன்றேயாய் நிற்றல்... பெற்றாம்." (தொல். நூன். 18) என்று நச்சினார்க்கினியர் பயன்படுத்திய உவமையை விருத்தியுரையில் "உயிரொடு புணர்த்திய மெய், தன் அளவு தோன்றாது ஒன்றாய் நிற்றலை" விளக்குவதற்குச் சங்கர நமச்சிவாயர் "அப்பொடு பெய்த உப்பே போல" (நன். 109) என்று மாற்றி எடுத்தாண்டுள்ளார்.

இனி "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" (முருகு. 1) என்னும் தொடரில் "வலனாக என்னும் எச்சத்துக்கண் ஆக என்பது செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தொக்கு நின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை என்று கொள்க. என்போல எனின் வாலும் செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலி என்றே வழங்கினாற்போல." என்று தெய்வச்சிலையார் (தொல். எச்ச. 16) ஒரு உவமையை எடுத்தாண்டுள்ளார். இதன் மாற்றுவடிவம் என்று எண்ணத் தகுந்த உவமை ஒன்று மயிலைநாதர் உரையில் காணப்படுகிறது. அது என்னும் ஆறன் உருபு சாத்தனதை, சாத்தனதால், சாத்தனதற்கு என்று பிற வேற்றுமை உருபுகளை ஏற்பதுபோல "விளி ஏலாது எனினும் உருபு ஏற்றலிற் குறைபட்டது ஆகாது; சில உறுப்பிற் குறைபட்டாரும் மக்கள் எனப்படுவர்; அதுபோல என்பது." என்று மயிலைநாதர் (நன். 292) விளக்கவுரை கூறியுள்ளார். இதன்கண் அவர் எடுத்தாண்டுள்ள உவமையும் தெய்வச்சிலையார் எடுத்தாண்டுள்ள உவமையும் சொல்லளவில் வேறுபட்டிருந்தாலும் பொருளமைதியில் அவை இரண்டிற்கும் ஒற்றுமை உண்டு.

இந்த உவமையின் சிறப்பு சங்கர நமச்சிவாயரின் கவனத்தை ஈர்த்துவிட்டது போலும்! எனவே அடிமறிமாற்றுப்

பொருள்கோளை உணர்த்தும் நூற்பாவின் உரையில் (நன். 419) அவர் இதனை எடுத்து இணைத்துக்கொண்டார். அடிமறிமாற்று இரண்டு வகைப்படும். பொருளுக்கு ஏற்ப அடிகளை மாற்றி எடுத்துக் கூட்டுதல் ஒரு வகை; ஏதாவது ஒரு அடியை எடுத்து ஏதேனும் ஒரு அடியின் நிலைக்களத்து முதல், இடை, ஈறாகக் கூட்டுதல் மற்றொரு வகை. மூலத்தில் **"ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்"** (நன். 419) என்று வரும் தொடருக்கு இவற்றுள் இயைபுடையது எது என்பதை விளக்குவதற்கு நமச்சிவாயர் பயன்படுத்திக்கொண்ட உவமை அவருக்கு முன்பே மயிலைநாதரால் (நன். 292) எடுத்தாளப்பட்டது. நமச்சிவாயர் நடையில் "அடி மறித்தலன்றி மாற்றுதல் 'ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்' என்றதற்கு இன்றாம். அங்ஙனமாக அதனையும் அடிமறிமாற்று என்றது என்னை எனின் மறித்தற்கு உரிய கொண்டுகூட்டோடும் மறித்தற்கும் மாற்றுதற்கும் உரிய அடிமறிமாற்றோடும் சார அதனை முதற்கண் கூறி, அடியாக மறித்தல் உடைமையின் அடிமறிமாற்றின்பால் படுத்துச் சில உறுப்புக் குறைந்தாரையும் மக்கள் என்றாற்போல அதற்கும் அடிமறிமாற்று எனப் பெயர் தந்து கூறினார்." (நன். 419) என்று அந்த உவமை அமைந்துள்ளது. உவமை ஒன்று; பயன்பாடு வேறு வேறு. அதாவது மயிலைநாதர் உரையில் அது என்னும் ஆறன் உருபு பிற வேற்றுமை உருபுகளை ஏற்பது பற்றியும் நமச்சிவாயர் உரையில் அடிமறிமாற்றுப் பொருள்கோள் பற்றியும் விளக்கிக் கூறுவதற்கு இந்த ஒரே உவமை கையாளப்பட்டுள்ளது.

உவமை உருவாதல்

உவமை உருவாக்கத்தில் வேறு ஒரு முறையும் நமச்சிவாயர் உரையில் காணப்படுகிறது. உயிரீற்றுப் புணரியல் என்னும் பெயர் அமைந்துள்ள பொருத்தத்தை அதன் தோற்றுவாயில் நமச்சிவாயர் (நன். 151) ஆராய்ந்துள்ளார். இவ்வியல் ஐம்பத்து மூன்று நூற்பாக்களைக் கொண்டது. அவற்றுள் முதல் ஏழு நூற்பாக்கள் (நன். 151-157) புணர்ச்சி இன்னது என்றும் அடுத்த நான்கு நூற்பாக்கள் (நன். 158-161) பொதுப்புணர்ச்சி இன்னது என்றும் உணர்த்துகின்றன. எஞ்சிய நூற்பாக்கள்

நாற்பத்திரண்டும் (நன். 162-204) உயிரீற்றுப் பதம் புணருமாறு உணர்த்துகின்றன. எனவே உயிரீற்றுப் புணரியல் என்னும் பெயர் மிகுதி (பன்மை) பற்றிய வழக்கு என்பது நமச்சிவாயர் கருத்து. இக்கருத்தினை ஒரு உவமையால் "புணர்ச்சி இன்னது என்பதூஉம் பொதுப்புணர்ச்சியும் முறையே தலைப்பெய்து, உயிரீற்றுப்பதம் புணரும் சிறப்புப்புணர்ச்சி கூறுவார் கமுகந்தோட்டம் என்றாற்போல மிகுதி பற்றிய குறியாய் இவ்வியற்கு உயிரீற்றுப் புணரியல் எனப் பெயர்" தந்தார் (நன். 151) என்று அவர் விளக்கியுள்ளார்.

பல பொருள் தொகுதிக்குப் பெயரிடும் மரபுக்கு இலக்கணமாக,

> **"ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்**
> **தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்"**

(தொல். கிளவி. 49) என்று தொல்காப்பியர் வகுத்துள்ள விதியையும் அந்நூற்பாவுக்கு இளம்பூரணர் வரைந்துள்ள விளக்கத்தையும் நமச்சிவாயர் அறிவார். அந்நூற்பாவின் உரையில் 'கமுகந்தோட்டம்' என்பது இளம்பூரணர் காட்டியுள்ள உதாரணங்களில் ஒன்று. கமுகந்தோட்டம் என்று அழைக்கப்படும் ஒரு தோட்டத்தில் உள்ள மரக்கூட்டத்துள் கமுகமரங்கள் சிறுபான்மையாக இருந்தால் அப்பெயர் அதற்குத் தலைமைபற்றி இட்டதாகும்; அத்தோட்டத்தில் கமுகமரங்கள் பெரும்பான்மையாக இருந்தால் அது அதற்குப் பன்மை (மிகுதி) பற்றி வழங்கும் பெயராகக் கொள்ளப்படும் என்பது அவர் கூறிய விளக்கம். இவ்வுரையில் இளம்பூரணர் எடுத்துக்காட்டியுள்ள உதாரணம் பிற உரையாசிரியர்களை (சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தொல். கிளவி. 49; நேமிநாத உரையாசிரியர் நேமி. மொழியாக்க மரபு 7; வைத்தியநாத தேசிகர் இல. விள. 323) ஈர்த்தது போலவே சங்கர நமச்சிவாயரையும் ஈர்த்துப் பிணித்திருக்க வேண்டும். எனவே கமுகந்தோட்டம் என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டிய உதாரணத்தைத் தமது உரையில் அவர் உவமையாக எடுத்து அமைத்துக்கொண்டார். அவருடைய சமகாலப் புலவராகிய வைத்தியநாத தேசிகர் உயிரீற்றுப்

புணரியல் என்னும் குறியீடு "தலைமை பற்றிய வழக்கு ஆ தீண்டு குற்றிபோல" (இல. விள. 53) என்று எழுதுவார். இது சேனாவரையர் (தொல். கிளவி. 49) காட்டிய உதாரணம். தேசிகர் இதனை உவமையாக மாற்றி இயல்விளக்கம் உரைத்துள்ளது இங்கு ஒப்பிட்டு உணரத் தகுந்தது.

உரையாசிரியர்கள் இருவர் ஒரே கருத்தை வேறுபட்ட இருஉவமைகளால் விளக்குவதும் அந்த உவமைகள் இரண்டும் பழைய உரையாசிரியர்கள் இருவர் காட்டிய உதாரணங்களிலிருந்து உருவானவை என்பதும் இந்த ஒப்பீட்டினால் விளங்கும். ஒரு தங்கநாணயத்தின் பக்கம் தலையாக இருந்தாலும் பூவாக இருந்தாலும் ஒன்றுதான்; நாணயத்தின் மாற்றும் மதிப்பும் குறைவதில்லை. அதுபோலக் கமுகந்தோட்டம், ஆ தீண்டு குற்றி என்பன உதாரணங்கள் ஆனாலும் உவமைகள் ஆனாலும் அவற்றின் பயனும் சுவையும் குறைவதே இல்லை. நல்ல உதாரணங்களை இவ்வாறு உவமைகளாக மாற்றிப் பயன்படுத்தும் உரைநெறியைப் பிற்கால உரையாசிரியர்கள் கடைப்பிடித்ததற்கு ஒருவேளை இது ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

உவமை உருவாக்கத்தில் உரையாசிரியர்கள் கைக்கொண்ட இன்னொரு முறையையும் இங்கே நாம் அறிந்துகொள்ள வேண்டும். பழமொழிகள், பழந்தமிழ்ப் பாடல்கள் போன்றவற்றிலிருந்தும் அவர்கள் உவமைகளை உருவாக்கியுள்ளார்கள். இதற்குப் பொருத்தமான சான்றுகளைப் பரிமேலழகர் உரையில் (குறள். 100, 360, 399, 404, 425, 755, 797) காணலாம்.

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்" (குறள். 404)

என்னும் குறட்பாவின் உரையில் கல்லாதானது ஒட்பம் "ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடு." என்று ஒரு நயமிகு உவமையைப் பரிமேலழகர் எடுத்தாண்டுள்ளார். கல்வியறிவு இல்லாதவனது அறிவுடைமை ஒரு சமயம் நன்றாகவே இருந்தாலும் (உம்மை எதிர்மறை ஆதலின் அது அவ்வாறு இருக்காது.) அறிஞர் அதனை மதியார். ஏனெனில் அந்த

அறிவுடைமை நத்தை நிலத்தில் ஊர்ந்து செல்வதனால் தற்செயலாகத் தோன்றிவிடும் எழுத்துப் போன்றது. அதாவது அது நத்தை ஊர்ந்து சென்ற சுவடு; எழுத்துப் போன்றதொரு தோற்றம்; எழுத்து அல்ல. இந்த உவமையின் உருவாக்கத்துக்கு **"ஆகுமோ, நந்துழுத எல்லாம் கணக்கு"** (பழ. 245) என்ற செய்யுளோ அல்லது,

> **"நந்து நாகுநீர் வண்டுசெல் நடைவழி எழுத்தாய்**
> **வந்து வீழினும் வீழும்"** (வி. மே.)

என்ற தனிச்செய்யுளோ பரிமேலழகருக்குத் தூண்டுகோலாக இருந்திருக்கலாம் என்று எண்ணுவது இயல்பு; பிழை ஆகாது. உண்மை எதுவாக இருந்தாலும் ஊர்வனவற்றுள், நத்தை இயல்பாகத் தரையில் இழைக்கும் புள்ளி இல்லாத கோலத்தை ஊன்றிப் பார்த்து ஒரு அபூர்வ உவமையை உருவாக்கிய புலமை உள்ளம் உணர்ந்து சுவைத்தற்கு உரியது.

திருக்குறள் உரையிலிருந்து இன்னொரு சான்றையும் எடுத்துக்காட்டலாம். அறிவு இல்லாத பேதையார்மாட்டுக் கொண்ட நட்பை ஒருவர் விட்டுவிட வேண்டும்; விடுதலோடு அவரிடமிருந்து விலகிவிடவும் வேண்டும் என்பது வள்ளுவம். இந்தக் குறட்பாவின் சிறப்புரையில் "நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோலத் தீங்கு வருதலின்" (குறள். 797) என்று ஒரு எளிய உவமையால் குறட்பாவின் உட்பொருளைப் பரிமேலழகர் விளக்கியுள்ளார். காட்டில் தீப் பிடித்தால் மணம் தரும் சந்தனமும் வேங்கையும் அருகே உள்ள மூங்கிலின் சேர்க்கையால் அழிவுறும். அதுபோலப் பேதையார் நட்பின் சேர்க்கையால் அவரோடு நட்புற்ற நல்லவரும் அழிவர் என்பது கருத்து. பரிமேலழகர் இக்கருத்தை விளக்குவதற்கு எடுத்தாண்டுள்ள சந்தனமும் வேங்கையும் வேமாறுபோல என்னும் உவமை,

> **"மனத்தான் மறுவிலர் ஏனும்தாம் சேர்ந்த**
> **இனத்தால் இகழப் படுவர் - புனத்து**
> **வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே**
> **எறிபுனம் தீப்பட்டக் கால்"** (நாலடி. 180)

என்னும் செய்யுளின் பிரதிபலிப்பு. எனவே உரையாசிரியர்கள் எடுத்தாளும் உவமைகளில் ஒரு சில பழம்பாடல்களிலிருந்து உருவானவை எனலாம். இதுபோலவே நாட்டுப்புறப் பாடல்களும் உரையாசிரியர்களுக்குச் சில உவமைகளை வழங்கியிருக்கும். சான்றோர் இலக்கியங்களோடும் நாட்டுப்புற இலக்கிய வகைகளோடும் உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ள உவமைகளை எல்லாம் ஒப்பிட்டு நோக்கினால் மட்டுமே இம்முடிபை உறுதிப்படுத்த முடியும். அதற்குத் தேவைப்படும் தரவுகள் போதிய அளவுக்கு இப்போது நம்மிடம் இல்லை. எதிர்காலத்தில் இத்தரவுகளைத் தமிழியல் ஆய்வுகள் ஒருவேளை வழங்கக் கூடும்.

நன்னூல் விருத்தியுரையில் காணப்படும் ஒரு உவமை பழம்பாடல் கருத்து ஒன்றின் எதிரொலியாக இருக்கும் என்று தோன்றுகிறது. பகுபத உறுப்புகள் ஆறும் காரணக்குறிகள் என்று விளக்கும் இடத்தில் பகுதி, விகுதி என்பவற்றை நமச்சிவாயர் "தன் இயல்பில் நிற்றலின் பகுதி என்றும் தன் இயல்பில் நிற்கும் ஒருவன் உள்ளத்தை ஆடை, அணி முதலியவற்றோடு ஒருத்தி முன் நின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல்போலத் தன் இயல்பில் நிற்கும் பகுதிப்பொருளை இடைநிலை முதலியவற்றோடு முன் நின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தலின் விகுதி என்றும்" (நன். 133) என விளக்கிக் கூறியுள்ளார். இப்பகுதியில் அமைந்துள்ள உவமை சங்கர நமச்சிவாயர் வாழ்ந்த காலத்தில் நிலவிய 'பழக்க வழக்க ஒழுக்கங்களின் சாயல்' என்பது (க. ப. அறவாணன் 1977. பக். 146-147) எளிது; ஆனால் பொருந்தாது. வரைவின் மகளிர் அதிகாரத்தில் வரும் **"ஆய்தொடியார்"** (குறள். 911), **"மாணிழையார்"** (குறள். 919) என்னும் தொடர்களையும், சிலப்பதிகாரத்தில் மாதவியின் அலங்கார முறையைச் சொல்லும் (சிலப். 6:76-108) நீண்ட பகுதியையும், **"நால்வேறு வகையின் நயத்தகு மரபின்"** (சிலப். 14:157) என்று கணிகையர் வகையைக் கூறும் அடியையும் ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் பொருந்தாமைக்குரிய காரணம் தானே விளங்கும். "ஒருவன் உள்ளத்தை ஆடை, அணி முதலியவற்றோடு ஒருத்தி முன்

நின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல்" தமிழ்ச் சமுதாயத்தில் - உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் கூட - நெடுங்காலமாக நிலைத்துள்ள வழக்கமே. அதனால் சங்கர நமச்சிவாயர் பயன்படுத்தியுள்ள உவமை தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிவரும் பழைய வழக்கத்தைக் காட்டுவதாகக் கொள்வதே ஏற்புடையது. பதினேழாம் நூற்றாண்டுக்கு மட்டும் உரியதாக அதனைப் பிரித்துக் காண்பது பொருந்தாது. இது ஒரு புறம் இருக்க, இந்த உவமை ஏதோ ஒரு பழம்பாடலின் கருத்தை எனக்கு நினைவு படுத்துகிறது. ஆயினும் அது எந்தப் பாடல் என்று உறுதியாகக் கூற முடியாமல் மறதி குறுக்கிட்டுவிட்டது.

உவமைகளைத் திறம்படக் கையாண்ட இருவர்

தொகுத்துச் சொன்னால் மூலநூல் கருத்தையும் அதற்கு விளக்கம் கூறும் உரையையும் தெளிவுபடுத்தவும் உரையின் நடையை அழகுபடுத்தவும் உரையாசிரியர்கள் உவமைகளை எடுத்தாண்டனர். இந்த உன்னத உரைநெறி உரையாசிரியர்கள் அனைவருக்கும் பொது என்றாலும் இதனைத் திறம்படக் கையாண்ட பெருமை இறையனார் களவியலுக்கு உரை இயற்றிய நக்கீரருக்கே உரியது. நூற்றுக்கு மேற்பட்ட உவமைகளை எடுத்தாண்ட நக்கீரருக்கு அடுத்த நிலையில் உரைவிளக்கத்துக்கு உவமைகளைப் பயன்படுத்திய இலக்கண உரையாசிரியர் சங்கர நமச்சிவாயராக இருக்கலாம். தண்டியாசிரியர் கூறிய '**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை**" (தண்டி. 31) என்னும் வரையறையோடு "போறல் (ஒப்புமை) என்பது சிறிது ஒத்துச் சிறிது ஒவ்வாது ஒழிவது" (இறை. 1) என்று நக்கீரர் எழுதியுள்ள எச்சரிக்கையையும் இணைத்து நோக்கினால் உவமைகளின் இயல்பு விளங்கும்; கருத்து விளக்கத்துக்கு உரையாசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொண்ட காரணமும் விளங்கும்.

நமச்சிவாயரின் வடமொழியறிவு - சிவஞான முனிவர் கருத்து

சங்கர நமச்சிவாயரின் வடமொழி அறிவைப் பற்றிப் பலருக்கு ஐயப்பாடு உண்டு. இந்த ஐயப்பாட்டுக்கு வித்திட்டவர் சிவஞான முனிவர். "**அம்முன் இகரம்**" என்ற நன்னூல் நூற்பாவுக்கு (125) நமச்சிவாயர் எழுதிய உரையை முற்றாக

நீக்கிவிட்டு அவர் புத்துரை எழுதினார். அதன் விசேட உரையில் சங்கர நமச்சிவாயருக்கு வடமொழிப் பயிற்சி இல்லை என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்துரை நடுநிலையானதா? நமச்சிவாயருக்கு வடமொழி அறிவு உண்டா? என்று ஆராய்வது அவசியம்.

"அம்முன் இகரம்" என்னும் எழுத்தியல் நூற்பா (125) எழுத்துப்போலியை உணர்த்துகிறது என்பது நமச்சிவாயரின் கருத்து. சிவஞான முனிவருக்கு இது உடன்பாடு அல்ல. பிரயோக விவேகத்தின் கருத்தைப் (நூ. 5) பின்பற்றி இந்நூற்பா "வடநூலார் சந்தியக்கரம் என்பவற்றுள் ஐ, ஔ என்னும் நெட்டெழுத்துக்களின் வடிவு புலப்படுத்தல்" நுதலிற்று என்பது சிவஞான முனிவர் கருத்து. இக்கருத்தின் அடிப்படையில் இந்நூற்பாவுக்குப் பொழிப்புரை, விசேட உரை, மறுப்புரை ஆகியவற்றை முனிவர் வரைந்துள்ளார். எழுத்திலக்கணம் 'பன்னிருபாற்று' (நன். 57) என்று தொகுத்துக் கூறும் நூற்பாவில் பவணந்தி முனிவர் 'போலி' என்றே குறித்துள்ளார். மேலும் கடைப்போலி, முதற்போலி, இடைப்போலிகளைப் பற்றிப் பேசும் நூற்பாக்களை அடுத்து "அம்முன் இகரம்" என்னும் நூற்பா அமைந்துள்ளது. நமச்சிவாயருக்கு முன் நன்னூலுக்கு உரை இயற்றிய மயிலைநாதரும் இந்நூற்பாவுக்கு இவ்வாறுதான் உரை எழுதியுள்ளார். பிரயோக விவேகமும் (நூ. 5) இலக்கணக் கொத்தும் (நூ. 91) கூறும் கருத்து நமச்சிவாயருக்குத் தெரியாது என்று கருதுவது பொருந்தாது. ஆயினும் சந்தியக்கரம் என்னும் வடநூல் கருத்தை இந்நூற்பாவின் உரையில் புகுத்த அவர் விரும்பவில்லை. வடநூலார் கூறும் சந்தியக்கரத்தை இந்நூற்பா குறித்துள்ளதாகக் கருதுவோரும் உண்டு என்று மாற்றுக் கருத்தாகக்கூட நமச்சிவாயர் அதனைக் குறிக்கவில்லை. இவற்றை எல்லாம் அறிந்திருந்தும் அவர் உரையை முற்றாக நீக்கிவிட்டு வடநூல் கருத்து ஒன்றை வலிந்து திணிப்பதற்கு என்றே அந்நூற்பாவுக்குச் சிவஞான முனிவர் ஒரு புத்துரை வரைந்தார். அதோடு சங்கர நமச்சிவாயர் உரைக்கு முனிவர் மறுப்புரையும் எழுதினார். அந்த மறுப்புரையை அவர் நடையில் பார்ப்பதே நல்லது. "இச்சூத்திரத்துக்கு இவ்வாறு பொருள் கொள்ளாது தமிழ்நூற் பயிற்சி ஒன்றுமே உடையார் எழுத்துப்போலி

உணர்த்திற்று என்று பொருள் கொண்டு... உதாரணம் காட்டுவர். அவ்வாறு பொருள் கொண்டு உதாரணம் காட்டுமாற்றால் பெரும்பயன் இன்மையானும் வடநூலோடு மாறுபடும் ஆதலானும் அது பொருந்தாது என்க." என்பது சிவஞான முனிவரின் மறுப்புரை. தமிழ்நூல் பயிற்சி ஒன்றுமே உடையார் என்று சங்கர நமச்சிவாயரைச் சிவஞான முனிவர் குறிப்பிட்டாலும் நமச்சிவாயருக்கு வடமொழிப் பயிற்சி இல்லை என்பதே அதன் உட்கருத்து.

நமச்சிவாயரும் வடமொழியும்

தமிழிலக்கணக் கல்வியில் வடமொழியின் செல்வாக்கு நிலவிய காலப்பகுதியில் வாழ்ந்தவர் சங்கர நமச்சிவாயர்; வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்றே என்னும் கருத்துடைய சாமிநாத தேசிகரின் மாணவர். எனவே தம்முடைய ஆசிரியரிடம் நமச்சிவாயர் தமிழோடு வடமொழியையும் கற்றிருப்பார். அதனால் அவருக்கு வடமொழிப் பயிற்சி உண்டு என்று துணிந்து கூறலாம். இந்த முடிபை உறுதிப்படுத்தும் சான்றுகள் பல அவர் உரையில் காணப்படுகின்றன.

அருத்தாபத்தி, அவிகாரம், அவிகாரி, அனுவதித்தல், சாதனசாத்திய முறை, பரியாயம், பராமுகம், பாரிசேடம், விகாரி போன்ற வடசொற்களைத் தமது உரையில் நமச்சிவாயர் பயன்படுத்தியுள்ளார். உரையளவை, காட்சியளவை, கருதல் அளவை, கருத்துவகை, எதிர்மறை முகம், காண்டல் விரோதம் போன்ற வடசொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களும் அவர் உரையில் காணப்படுகின்றன. "ஞாபகக்கருவி என்பது அறிதற்கருவி, காரகக்கருவி என்பது செய்தற்கருவி" (நன். 297) என்று வடசொற்களை அவர் நேரடியாக மொழிபெயர்த்துக் கூறுவதும் உண்டு. "வடநூலார் இடுகுறியை ரூடி என்றும் காரணத்தை யோகம் என்றும் காரண இடுகுறியை யோகரூடி என்றும் வழங்குப." (நன். 62) என்று அவர் தமிழோடு வடமொழியை ஒப்பிட்டு உரைப்பதும் உண்டு. "பிரகிருதி, விகிருதி என்னும் ஆரியமொழிகள் பகுதி, விகுதி எனத் திரிந்துநின்றன." (நன். 133) என்று அவர் சொல்லாராய்ச்சிக் குறிப்பு எழுதுவதும் உண்டு. "ஒன்று, இரண்டு, பல என்பன

வடநூல் வழக்கு; ஒன்று அல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடை" (நன். 128) என்று பால் அமைப்பில் இரண்டு மொழிகளுக்கும் உள்ள வேறுபாட்டையும் அவர் விளக்குவார். "வடநூல் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம், பகுபதம் எனக் காரணக்குறி தாமே தந்து" (நன். 137) என்ற விளக்கத்தின் மூலம் பதவியல் வடநூலின் தழுவல் என்பதை அவர் தெளிவுபடுத்துவார். இவ்வாறு நமச்சிவாயர் தமது உரையில் குறிப்பிட்டுள்ள வடமொழிக் கருத்துகள் எல்லாம் அவருடைய வடமொழிப் பயிற்சியைக் காட்டுவன. இவற்றை எல்லாம் கேள்வி அறிவைக் கொண்டே அவர் தமது உரையில் குறிப்பிட்டார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நமச்சிவாயரின் வடமொழிப் பயிற்சிக்கு இன்னொரு உதாரணமும் காட்டலாம். "வடநூலார் சொற்பொருளை வாச்சியம், வியங்கியம் (வெங்கியம்), இலக்கணை என மூன்று எனவும் இலக்கணையை வியங்கியத்துள் அடக்கி இரண்டு எனவும் கூறுப. இவற்றுள் வாச்சியம் என்பது வெளிப்படை; வியங்கியம் என்பது குறிப்பு; இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது. அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்." (நன். 269) என்று அவர் விளக்கிக் கூறி, நல்ல உதாரணங்களையும் வழங்கியுள்ளார். பிரயோக விவேக ஆசிரியரால் (நூ. 47) இலக்கணை குறிக்கப்பட்டிருந்தாலும் வாச்சியம், வியங்கியம் பற்றிய செய்திகள் குறிக்கப்படவில்லை. அது மட்டும் அல்ல. சொற்பொருளை வாச்சியம், வியங்கியம், இலக்கணை என மூன்றாகக் கொள்ளும் வழக்கும் இலக்கணையை வியங்கியத்துள் அடக்கி வாச்சியம், வியங்கியம் என இரண்டாகக் கொள்ளும் வழக்கும் வடமொழி நூல்களில் உண்டு என்று நமச்சிவாயர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் சொற்கள் பொருள் உணர்த்தும் வகை குறித்து இருவேறு கோட்பாடுகள் வடமொழியில் நிலவுகின்றன என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இந்தக் கருத்துகளை விளக்கிக் கூற வெவ்வேறு வடமொழி நூல்களை அவர் பார்த்திருக்க வேண்டும்; படித்திருக்க வேண்டும். இன்னொரு உதாரணத்தினால் இக்கருத்து உறுதிப்படுகிறது. "இன்னது

இன்னுழி" என்னும் உரியியல் புறனடை நூற்பாவின் (460) உரையில் "இலக்கணம் கூறும் நூலுள் நிகண்டினையும் உடன் கூறாது அதனை வேறு ஒரு நூலாகக் கூறுதல் தமிழுள்ளே அன்றி ஆரியம் முதலியவற்றுள்ளும் காண்க." என்று வடமொழியில் தாம் கண்டதைப் பிற்காலச் சந்ததியினர்க்கும் அறிவுறுத்துவார். மயிலைநாதரும் (நன். 459) இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் நமச்சிவாயரின் மொழிநடையை ஊன்றி நோக்குவோர்க்கு அவர் கூறிய கருத்து மரபுவழிக் கேள்வி அறிவின் அடிப்படையில் கூறப்பட்டது அல்ல; அவரே கற்றுணர்ந்த கருத்து என்பது விளங்கும்.

புலமையும் பயிற்சியும்

சேனாவரையர், சுப்பிரமணிய தீக்கிதர், சாமிநாத தேசிகர் முதலியோர்க்கு இருந்த வடமொழிப் புலமை ஒருவேளை சங்கர நமச்சிவாயருக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். வடமொழிப் புலமை வேறு; வடமொழி நூல்களைப் படித்துப் புரிந்துகொள்ளும் பயிற்சி வேறு. நமச்சிவாயருக்கு வடமொழிப் பயிற்சி இருந்தது என்பது உண்மை. அதனால் தமது உரையில் எடுத்துச் சொல்லிய வடநூல் கருத்துகளை அவர் பிறழ உணர்ந்துகொள்ளவில்லை; பிழைபட விளக்கிக் காட்டவும் இல்லை; மேலும் அவர் வடமொழி நூல் எதையும் மொழிபெயர்க்கவும் இல்லை. தமிழ் இலக்கணமாகிய நன்னூலுக்கே அவர் உரை வரைந்தார். நன்னூல் மூலமும் உரையும் தமிழ் அறிந்தோர்க்கே முதற்கண் விளங்க வேண்டும். அவர்களுக்கு அவற்றை விளக்கத் தமிழ்ப் புலமை போதும். அது நமச்சிவாயருக்கு இருந்தது. ஆகவே வடமொழிப் புலமை அவருக்கு இல்லை என்பது ஒரு குறை ஆகாது. வடநூல் உணர்ந்தோர்க்கே தமிழியல்பு விளங்கும் என்பது சிவஞான முனிவரின் (தொல். விரு. பக். 47) பிழைக்கொள்கை. அதனால் "தமிழ்நூல் பயிற்சி ஒன்றுமே உடையார்" என்று அவர் சங்கர நமச்சிவாயரைக் குறைத்து மதிப்பிடுகிறார். அவரது மதிப்பீடு ஒருதலையானது; நடுநிலையானது அல்ல.

முடிவுரை

தமிழ்மொழியின் இலக்கண வரலாற்றைப் போலவே அதன் உரை வரலாறும் தொன்மையானது. பலரும் நினைப்பதுபோல இறையனார் அகப்பொருள் உரையிலிருந்து நமது உரை வரலாறு தொடங்கவில்லை. இறையனார் அகப்பொருள் உரையின் கட்டமைப்பு, பாயிரம் உரைத்து நூலைத் தொடங்கும் மரபு, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை என்னும் உரைப் பாகுபாடு, மூலபாடத்தைத் தெளிவுபடுத்தும் ஒழுங்குமுறை, உரையில் பதிவாகியுள்ள உரைமரபுத் தொடர்கள், இலக்கணக் கலைச்சொற்கள், உரையின் பண்பட்ட மொழிநடை, இலக்கண இலக்கிய மேற்கோள்களையும் உதாரணப் பாடல்களையும் எடுத்துக்காட்டும் திறன் முதலிய உரைநெறிகள் இறையனார் அகப்பொருள் உரையில் சிறப்பாக அமைந்துள்ளன. இவற்றை உற்று நோக்கினால் அது தமிழில் தோன்றிய முதல் உரையாக இருக்க முடியாது. உரை என்னும் இலக்கியவகை நன்றாக வளர்ந்து செழித்திருந்த காலத்தில்தான் இத்தகையதோர் இலக்கணப் பேருரை தோன்றியிருக்க முடியும் என்பது விளங்கும்.

அவிநயம், அணிநூல் போன்ற மறைந்துபோன இலக்கண நூல்களுக்கு உரைகள் இருந்தன என்பதும் இளம்பூரணர் உரைக்கு முன்னரே தொல்காப்பியத்துக்கு ஒரு விருத்தியுரை இருந்தது என்பதும் யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிய வருகின்றன. இவை அனைத்துக்கும் மேலாக, உரைகளைப் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்கள் (மரபியல் 103-106) உரை வரலாற்றுக்கு நல்ல சான்றுகளாக அமைகின்றன. உரையின் வகைகளும் அவற்றின் உள்ளுறுப்புகளும் அந்த நூற்பாக்களில் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு உரைகளை வகைப்படுத்தி இலக்கணம் கூறுவதற்குத் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் வழங்கிய இலக்கண

நூல்களும் உரைகளும் அவருக்குப் போதிய தரவுகளை வழங்கியிருக்க வேண்டும். உரைக்கு இலக்கணம் கூறும் நூற்பாக்களின் மொழிநடையைக் கூர்ந்து நோக்குவோர்க்கு இந்த உண்மை எளிதில் விளங்கிவிடும். எனவே தமிழ்மொழியின் உரை வரலாறு தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே உருவாகிவிட்டது என்று உறுதியாகக் கூற முடியும்.

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூல் விருத்தியுரை இந்த நெடிய உரை வரலாற்றுக்கு மேலும் வளம் சேர்த்தது. இந்த நல்லுரையின் ஆசிரியர் சங்கர நமச்சிவாயர். அவர் திருநெல்வேலியில் வாழ்ந்த பெரும் புலவர்; பதினேழாம் நூற்றாண்டினர்; இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகரின் தலைமாணாக்கர்; இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் போன்ற புலவர்களின் தொடர்பைப் பெற்றவர். ஆசிரியரின் வழிகாட்டலும் புலமைச்சூழலும் உரைப்பணி ஒன்றை மேற்கொள்ள அவருக்கு ஊக்கம் அளித்தன. உரை இயற்றும் பணியில் அவர் ஈடுபட்டிருந்த காலத்தில் ஊற்றுமலை ஜமீன்தாரின் அன்பும் நல்லாதரவும் அவருக்குக் கிடைத்தன. அதனால் நன்னூலுக்கு ஒரு விருத்தியுரை எழுந்தது; உரை வரலாற்றில் அவருக்கு ஒரு சிறப்பிடம் வாய்த்தது.

நமச்சிவாயரின் விருத்தியுரையே நன்னூல் உரைகளில் தலைசிறந்தது. கருத்துரை, பொழிப்புரை, உதாரணம், அகலவுரை என்று நான்கு பகுதிகளாக அவ்வுரையைப் பாகுபாடு செய்யலாம். நூற்பா நுதலும் பொருளைக் குறிப்பாகச் சுட்டுவது கருத்துரை. நூற்பாக்களின் உட்கருத்து, அவற்றின் வைப்புமுறை, பொதுவிதி, சிறப்புவிதி, புறனடைவிதி முதலிய விதிவகைகள் எல்லாம் கருத்துரையில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. நிறுத்த முறை என்னும் உரைமரபுத் தொடரைப் பயன்படுத்திப் பவணந்தி முனிவரின் நூலாக்கத் திறனை நமச்சிவாயர் விளக்குவது கருத்துரையின் உள்ளடக்கத்தில் இன்றியமையாத பகுதி எனலாம்.

கருத்துரையை அடுத்து அமைவது பொழிப்புரை. செய்யுள் நடையில் அமைந்துள்ள நூற்பாவை உரைநடையாக மாற்றி உரைப்பது பொழிப்புரை. நூற்பாவின் கிடக்கை முறை, சொல்லமைதி, பொருள்நோக்கம், தொகைக்குறிப்பு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு நன்னூல் நூற்பாக்கள் அனைத்துக்கும் நமச்சிவாயர்

பொழிப்புரை வரைந்துள்ளார். நூற்பாவின் பொருள் விளக்கத்துக்கு ஏற்ற வகையில் சொற்களைத் தெரிவுசெய்து, அளவாகச் சொல் வருவித்துத் தெளிவான நடையில் அவருடைய பொழிப்புரை அமைந்துள்ளது. ஔகான் ஒன்றே (நூ. 61), ஆய்தம் இரண்டு (நூ. 61), விகாரம் மூன்று (நு. 154), நான்கு அளவை (நூ. 368), குறில் ஐந்து (நூ. 64), தொகை ஆறு (நூ. 362), பகாப்பதம் ஏழு (நூ. 130), பொருள்கோள் எட்டு (நூ. 411), சொல்லொழிபு ஒன்பது (நூ. 360), ஐயிரு குற்றம் (நூ. 4) என்று பவணந்தி முனிவர் இலக்கணக் கருத்தோடு ஒன்று, இரண்டு, மூன்று என்னும் தொகைக்குறிப்புச் சொற்களையும் இணைத்துக் கூறுவது நூல்நடை. இந்த நடையைப் பின்பற்றி மூலபாடத்தில் தொகைக்குறிப்பு இல்லாத நூற்பாக்களுக்கும் தொகைக்குறிப்பை எடுத்துக்கூறிப் பொழிப்புரை வரையும் உரைநெறி சங்கர நமச்சிவாயரின் சிறப்பியல்பு. இலக்கணம் கற்போரின் நினைவாற்றலை வளர்க்கும் நோக்கோடு கருத்துரையில் நூற்பாவின் நிறுத்த முறைக்கும் பொழிப்புரையில் தொகைக்குறிப்புக்கும் நமச்சிவாயர் கொடுத்துள்ள அழுத்தம் அறிய வேண்டிய ஒன்று.

பொழிப்புரையைத் தொடர்ந்து அமைவது உதாரணப் பகுதி. உதாரணம் காட்டாமல் இலக்கணக் கருத்துகளைத் தெளிவாக விளக்க முடியாது. இலக்கண உரைகளில் உதாரணப் பகுதி முக்கிய இடம் வகிப்பதற்கு இதுவே காரணம். உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலிருந்தும் உரையாசிரியர்கள் உதாரணம் காட்டுவது பொதுநெறி. ஆயினும் அவர்கள் கடைப்பிடித்த முறைகள் பொதுவானவை அல்ல. இளம்பூரணர் போன்ற ஒரு சில உரையாசிரியர்கள் தாம் எடுத்துக்காட்டிய உதாரணப் பாடல்கள் எந்த நூலைச் சார்ந்தன என்று குறிப்பிடுவார்கள். நச்சினார்க்கினியர் நூற்பெயர்களோடு நித்திலக்கோவை, முல்லைக்கலி என்று நூலின் உட்பிரிவுகளையும் குறிப்பிடுவார். சங்கர நமச்சிவாயர் இந்த முறைகளில் கவனம் செலுத்தவில்லை. உதாரணப் பாடல்களுக்கு இடவிளக்கம் தரும் வழக்கம் அவரிடம் இல்லை.

உரைவிளக்கத்துக்காக ஒரு உரையாசிரியர் எடுத்தாளும் உதாரணப் பாக்கள் எல்லாம் அவரே முயன்று தேடி எடுத்தவை என்று கருதிவிடக் கூடாது. பழைய உரையாசிரியர் ஒரிருவரைத் தவிரப் பிற்கால உரையாசிரியர்கள் அனைவரும் தமக்கு வேண்டிய

உதாரணங்களைப் பழைய உரைகளிலிருந்து உரிமையோடு எடுத்துக்கொண்டனர். மூலநூலுக்கு உரைபோல உரைக்கு உதாரணம் முக்கியம். உரைக்குத் தெளிவும் சுவையும் தரும் உதாரணப் பாக்களை மாற்றுவது மனப்பாடக் கல்விக்கு உதவாது. அதனால் ஒரு உரையாசிரியர் காட்டிய பொருத்தமான உதாரணங்களை மற்றொருவர் தழுவிக்கொள்வது நடைமுறை ஆயிற்று. இந்த நடைமுறையைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டவர் சங்கர நமச்சிவாயர். அவர் எடுத்துக்காட்டிய உதாரணப் பாடல்களில் பெரும்பகுதி மயிலைநாதர் உரையில் காணப்படுவது இதனை உறுதிப்படுத்தும். எனவே நமச்சிவாயர் எடுத்துக்காட்டிய உதாரணப் பாடல்களை ஆராயும்போது மயிலைநாதரின் பங்களிப்பை ஆய்வாளர்கள் கருத்தில் கொள்வது நல்லது.

உதாரணப் பகுதியை அடுத்து அமைவது அகலவுரை. இதுவே விருத்தியுரையின் கருவறை. சங்கர நமச்சிவாயரின் உரைத்திறனைப் புலப்படுத்துவது இப்பகுதியே ஆகும். மூலபாடத்திலும் உரையிலும் உள்ள அருஞ்சொற்களுக்குப் பதப்பொருள், முக்கிய இலக்கணக் கருத்துகளுக்கு வரையறை, இலக்கணக் குறிப்புகள், பொருள் பொதிந்த சொற்களுக்கு நயவுரை, மிகைச்சொற்களுக்குப் புதுவிளக்கம், வினாவிடை முறையில் கருத்துரை, மறுப்புரை, நூற்பாக்களில் அமைந்துள்ள கருத்துகளின் வைப்புமுறைச் சிறப்பு முதலிய உரைப்பண்புகள் இப்பகுதியில் நிறைந்துள்ளன. இவற்றோடு நூற்பாவின் தொடரியல் அமைப்பை விளக்குவது, தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒப்பிட்டு ஆராய்வது, இலக்கண விதிகளைத் தொடர்புபடுத்துவது, மதம், அழகு, உத்தி ஆகியவற்றைப் பொருத்திக் காட்டுவது, அழகான உவமைகளை எடுத்தாளுவது, ஒப்பீட்டு நோக்கில் வடநூல் கருத்துகளைக் குறிப்பிடுவது போன்ற உரைமாண்புகளும் அகலவுரையில் சிறப்பாக அமைந்துள்ளன.

நன்னூல் விருத்தியுரையைக் கருத்தூன்றிக் கற்பது ஒரு நல்ல அனுபவம்; கற்றவர்கள் இதனை உணர்ந்திருப்பார்கள். இதுவரையில் இந்தப் பேருரையைக் கற்றுச் சுவைக்கும் வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு அந்த நற்பேறு விரைவில் வாய்க்கட்டும்.

"தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள். 399)

சங்கர நமச்சிவாயர் உரை
மேற்கோள் இடவிளக்கம்

இலக்கண வரலாறு தொல்காப்பியம் இல்லாமல் அமையாது என்பதுபோல மேற்கோள் இல்லாமல் இலக்கண உரை அமையாது; நிறைவுறாது. கருத்துத் தெளிவுக்காகவும் முந்துநூல் சான்றுக்காகவும் (பிரமாணம்) உரையாசிரியர்கள் அனைவரும் இலக்கிய இலக்கண மேற்கோள்களைத் தமது உரைகளில் பேரளவில் எடுத்தாண்டுள்ளனர். மேற்கோள்களை அவர்கள் எடுத்தாண்டுள்ள முறை, அவற்றின் வகை, பயன்பாடு, மேற்கோளுக்கும் உதாரணத்துக்கும் உள்ள வேறுபாடு முதலிய கருத்துகள் உதாரணப் பகுதி என்னும் தலைப்பில் (பக். 90–112) விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இளம்பூரணர் போன்ற ஒரு சில உரையாசிரியர்களே தாம் எடுத்தாண்ட மேற்கோள்கள் எந்தெந்த நூல்களைச் சார்ந்தன என்று இடவிளக்கக் குறிப்புகளைத் தருவார்கள்; பெரும்பாலோர் இந்த உரைநெறியைக் கடைப்பிடிப்பதில்லை. ஆனால் எந்த ஒரு உரையாசிரியரும் தாம் எடுத்தாண்ட மேற்கோள்கள் அனைத்துக்கும் முற்ற முடிய மூலநூல் இடவிளக்கம் கொடுக்கவில்லை என்பது உண்மை. ஒவ்வொரு மேற்கோளுக்கும் அவ்வாறு இடவிளக்கம் கொடுக்க ஒருவர் நினைத்திருந்தாலும் அது முடியக் கூடிய செயலும் அல்ல. இந்த நிலைமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் மனப்பாடக் கல்விமுறை, ஓலைச்சுவடிகளின் நிலை, உரைநெறிகளைக் கடைப்பிடிக்கும் முறை ஆகிய மூன்றே அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நூல்களை அச்சிட்ட பெருமக்களும் இந்த நிலைமையை எதிர்கொள்ள நேர்ந்தது. விசாகப் பெருமாளையர் (நன்னூல் காண்டிகையுரை, 1834), இராமாநுசக் கவிராயர் (நன்னூல் விருத்தியுரை, 1847), மழவை மகாலிங்கையர் (தொல்காப்பியம் எழுத்ததிகாரம் –

நச்சினார்க்கினியம், 1847), ஆறுமுக நாவலர் (நன்னூல்... விருத்தியுரை, 1851), சந்திரசேகர கவிராஜ பண்டிதர் (நன்னூல்... விருத்தியுரையும்... காண்டிகையுரையும், 1855) போன்ற பதிப்பாசிரியர்களுக்கு மேற்கோள் இடவிளக்கம் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை போலும்! அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்த குறட்பாக்களுக்கும் கூட இடவிளக்கம் கொடுக்க அவர்கள் எண்ணவில்லை. ஏட்டுச்சுவடிகளில் முடங்கிக்கிடந்த தமிழ் நூல்களை இயன்ற வரையில் சுத்தபாடமாக அச்சிட்டு வெளியிடுவதே அவர்களுடைய தலைநோக்கம். ஆகவே நிறுத்தக்குறிகளுக்கு அவர்கள் அதிக அக்கறை காட்டவில்லை என்றும் பதிப்புக்கலையின் நெறிமுறைகளை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை என்றும் அவர்களைக் குற்றம்கூறுவது நமது அறியாமையையே புலப்படுத்தும். அன்றைய நிலைமையில் பழந்தமிழ் நூல்களை அவர்கள் அச்சிட்டதே மாபெரும் சாதனை; அவர்களது அருந்தொண்டு; அருட்கொடை என்று நாம் கருதிக் கொள்ள வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓரிரு நல்ல பதிப்புகள் (சி. வை. தாமோதரம் பிள்ளை, தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையம், 1868; திருமயிலை தெய்வசிகாமணி முதலியார் & திருமயிலை சண்முகம் பிள்ளை, நன்னூல்.... காண்டிகையுரையும்... விருத்தியுரையும், 1889) வெளிவந்தன. ஆயினும் தமிழ்ப்பணிக்கே பிறவி எடுத்த உ. வே. சாமிநாதையர் பதிப்புத்துறையில் காலூன்றிய பின்னரே தமிழ்நூல்களின் பதிப்புத்தரம் செங்குத்தாக ஓங்கி உயர்ந்தது. சுவடிகளைத் தேடுவது, சேகரிப்பது, பரிசோதிப்பது, ஒரு நூலுக்குப் பல சுவடிகள் இருந்தால் அவற்றை ஒப்பிட்டு ஆராய்வது, பாடநிர்ணயம் செய்வது, பாடபேதங்களைக் குறிப்பது, ஒப்புமைப் பகுதிகளை அடிக்குறிப்பில் கொடுப்பது, மேற்கோள்களுக்கு இடவிளக்கம் தருவது, இடம் விளங்காத மேற்கோள்களுக்கும் அரும்பதங்களுக்கும் அகராதிகளை உருவாக்குவது முதலியனவும் நூல்முகப்பில் முன்னுரை, நூலாசிரியர் உரையாசிரியர்கள் வரலாறுகள், நூல், உரை ஆகியவற்றின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறும் அறிவார்ந்த ஆராய்ச்சி முதலியனவும் ஐயர் பதிப்புகளில் ஒருசேர அமைந்திருந்தன. இந்தச் சிறப்பம்சங்களே அவற்றின் தரத்துக்கும் உயர்ச்சிக்கும் உத்தரவாதம் அளித்தன.

சாமிநாதையர் பதிப்பித்த நூல்களில் புறப்பொருள் வெண்பா மாலை (1895), நன்னூல் மயிலைநாதர் உரை (1918), நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை (1925), தமிழ்நெறி விளக்கம் (1936) என்னும் நான்கு மட்டுமே இலக்கணப் பதிப்புகள். அவற்றுள்ளும் நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையின் இரண்டாம் பதிப்பே (1935) ஈடும் இணையும் அற்ற செம்பதிப்பு. அதன் ஒவ்வொரு பகுதியிலும் சாமிநாதையரின் ஈடுபாடும் உழைப்பும் புலப்படும். அந்தப் பதிப்புக்குப் பின்னர்த் தமிழில் வெளிவந்த இலக்கணப் பதிப்புகளுக்கு எல்லாம் அதுவே முன்மாதிரி; மூலாதாரம். இது தமிழியல் அறிந்த உண்மை; சான்று காட்டி மெய்ப்பிக்க வேண்டாத உண்மை.

இந்த நல்ல பதிப்பிலும் குறை உண்டு. அது மதிக்கண் மறுப் போன்றது. சங்கர நமச்சிவாயர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து மேற்கோள்களைத் தமது உரையில் எடுத்தாண்டுள்ளார். அவற்றுக்கு எல்லாம் (ஏறக்குறைய 95% விழுக்காடு) சாமிநாதையர் அரிதின் முயன்று இடவிளக்கம் தந்துள்ளார். என்றாலும் அவருடைய கூரிய பார்வையிலிருந்து சில மேற்கோள்கள் நழுவிவிட்டன; அவருடைய சீரிய நினைவாற்றலுக்கும் ஒன்றிரண்டு தப்பிவிட்டன. சீவக சிந்தாமணிச் செய்யுள் ஒன்று அதற்குத் தகுந்த உதாரணம். மயிலைநாதரைத் தழுவிச் சங்கர நமச்சிவாயர் **“யாகா பிறபிறக்கு”** (நன். 441) என்னும் நூற்பாவின் உரையில் **“யான்பிறன் அளியன் வாழ்வான் ஆசைப்பட்டி ருக்கின் றேன்”** என்னும் செய்யுட்பகுதியை எடுத்தாண்டுள்ளார். இது இடம் விளங்கா மேற்கோள் (1935. பக். 449) என்பது சாமிநாதையர் முடிபு. மயிலைநாதர் உரையைப் பதிப்பித்தது (1918) முதல் நமச்சிவாயர் உரைக்கு இரண்டாவது பதிப்பை வெளியிட்டது (1935) வரையில் அவர் இந்த முடிபை மாற்றிக்கொள்ளவில்லை. இந்த மேற்கோள் உண்மையில் சீவக சிந்தாமணிப் பாடல் ஒன்றின் (1487) ஈற்றடியாகும். சீவக சிந்தாமணிக்கு 1935க்கு முன்பு மூன்று பதிப்புகளை (1889, 1907, 1922) உ. வே. சாமிநாதையர் வெளியிட்டுவிட்டார். இருந்தும்கூட அவரால் இந்த மேற்கோளுக்கு இடவிளக்கம் கொடுக்க முடியாமல் போய்விட்டது.

அடுத்து வரும் உதாரணங்கள் திவாகர நிகண்டு தொடர்பானவை. சங்கர நமச்சிவாயர் உரையில் நான்கு இடங்களில் (நன். 1, 267, 272, 308) திவாகர நூற்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு இடங்களில் (நன். 272, 308) காட்டப்பட்டுள்ள திவாகர நூற்பாக்களை மட்டும் சாமிநாதையர் மேலோட்டமாகக் குறித்துள்ளார். நன்னூல் முதல் நூற்பாவின் உரையில்,

"பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் தானே"

என்று ஒரு மேற்கோளை நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ளார். சாமிநாதையர் இதனை இடம் விளங்கா மேற்கோளாகக் (1935. பக். 448) குறித்துள்ளார். இது உண்மையில் திவாகர நூற்பா (1844) ஆகும். அடுத்ததாக, **"இலக்கணம் உடையது"** (நன். 267) என்னும் நூற்பாவின் உரையில்,

"இடக்கர் என்பது மறைத்து மொழிகிளவி"

என்று ஒரு மேற்கோளை நமச்சிவாயர் எடுத்துக்காட்டியுள்ளார். சாமிநாதையர் இதனை ஒரு மேற்கோளாகக் கருதவில்லை; அதனால் அவர் இதற்கு மேற்கோள்குறி இட்டும் காட்டவில்லை. இதுவும் ஒரு திவாகர நூற்பா (1787) ஆகும். இவ்வாறு ஒரு சில மேற்கோள்களை உ. வே. சாமிநாதையர் இனங்கண்டு இடவிளக்கம் குறிக்காதது ஒரு பெருங்குறை அல்ல; அது ஒரு சின்ன சறுக்கல்; பட்டத்து யானையின் சறுக்கல் போன்றது.

இலக்கிய இலக்கண உரைகளைக் கருத்தூன்றிப் படித்தால் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் தொடர்பாகச் செய்ய வேண்டிய பணிகள் மிகுதியாக உண்டு என்பது விளங்கும். உதாரணமாகப் பாடபேத ஆராய்ச்சியைக் குறிப்பிடலாம். அத்தகைய ஆய்வுகளுக்கு அடுத்து வரும் பின்னிணைப்புகள் உதவக் கூடும்.

சங்கர நமச்சிவாயர் உரையில் எடுத்தாளப்பட்டுள்ள இலக்கிய இலக்கணங்கள் எவையெவை என்று நொடிப்பொழுதில் அறியத் துடிப்பவர்களுக்கு முதல் பின்னிணைப்பே போதுமானது. இலக்கணங்களும் நிகண்டுகளும் எளிதில் புலப்படும் வகையில் தடித்த எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

சங்கர நமச்சிவாயர் எந்தெந்த நூற்பாக்களின் உரைகளில் இலக்கிய இலக்கண மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார் என்பதை இரண்டாவது பின்னிணைப்பில் காணலாம். ஒரு நூற்பாவின் உரையில் ஒரு நூலைச் சேர்ந்த செய்யுள்கள் அல்லது நூற்பாக்கள் ஒரு முறைக்கு மேற்பட்டு எடுத்தாளப்பட்டிருந்தால் அந்த நூற்பாவின் எண்ணின்மேல் சிற்றெண் இட்டுக் காட்டப்பட்டுள்ளது. காட்டாகத் **"திணைபால் பொருள்பல"** (நன். 378) என்னும் நூற்பாவின் அகலவுரையில் ஆசாரக்கோவைப் பாடல்கள் இரண்டினை நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ளார். ஆசாரக்கோவை என்னும் தலைப்பின்கீழ் 378^2 என்றவாறு அவை காட்டப்பட்டுள்ளன.

மூன்றாவது பின்னிணைப்பில் மேற்கோள் குறிப்பும் நன்னூல் நூற்பாவின் எண்ணும் ஒருங்கிணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஆசாரக்கோவையின் செய்யுள்கள் இரண்டினை (64, 5) நன்னூல் 378ஆவது நூற்பாவின் உரையில் நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ளார். உரையில் அந்தச் செய்யுள்களை நமச்சிவாயர் எடுத்தாண்டுள்ள வரிசைமுறையிலேயே 64, 5 (378) என்று அவை குறிக்கப்பட்டுள்ளன. நன்னூல் நூற்பாக்களின் எண்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

நூலின் உட்பிரிவுகள், செய்யுளின் அடியெண்கள் போன்றவை வழக்கமான முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தின் பத்தொன்பதாவது காதையாகிய ஊர்சூழ்வரியிலிருந்து மூன்று அடிகளை (51-53) நமச்சிவாயர் தமது உரையில் (நன். 339) எடுத்தாண்டுள்ளார். அந்த மேற்கோள் குறிப்பு இங்கு 19:51-53 (339) என்று தரப்பட்டுள்ளது. இதுபோலவே **"வேற்றுமை ஐம்முதல்"** (நன். 152) என்னும் நூற்பாவின் உரையில் அவர் எடுத்தாண்டுள்ள அகநானூற்றுப் பாடலின் அடிகள் 4:3-4 (152) என்று காட்டப்பட்டுள்ளன. தொடரெண் கொடுக்க முடியாத அகத்தியம், அவிநயம், முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களின் மேற்கோள்களுக்குப் **பலவின் இயைந்தவும்** (260) என்று அகத்திய நூற்பாவுக்குக் கொடுத்துள்ளதுபோல முதற்குறிப்பு தரப்பட்டுள்ளது.

தொல்காப்பிய மேற்கோள்களுக்கு அதிகாரம், இயல், நூற்பாவின் எண் ஆகிய மூன்றும் தரப்பட்டுள்ளன. அதிகாரங்களைக் குறிப்பதற்கு 'எ.' 'சொ.' 'பொ.' என்னும் குறுக்கங்களும் இயல்களைக் குறிப்பதற்கு 'I, II' போன்ற ரோமன் எண்களும் நூற்பாக்களுக்கு வழக்கமான அரபு எண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்கர நமச்சிவாயர் **"மெய்யுயிர் முதலீறு"** (நன். 151) என்னும் நூற்பாவின் உரையில், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் ஐந்தாவது இயலாகிய தொகைமரபு இரண்டாவது நூற்பாவிலிருந்து ஒரு அடியை எடுத்தாண்டுள்ளார். அந்த மேற்கோள் இங்கு எ. V 2 (151) என்று காட்டப்பட்டுள்ளது. இந்தப் பின்னிணைப்பில் பயன்படுத்தியுள்ள மற்ற குறியீடுகள் எல்லாம் வழக்கில் உள்ளவை; எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை.

பின்னிணைப்பு - 1

சங்கர நமச்சிவாயர் உரையில் எடுத்தாளப்பட்டுள்ள நூல்கள்

1. அகத்தியம்
2. அகநானூறு
3. அரிச்சந்திர புராணம்
4. அவிநயம்
5. ஆசாரக்கோவை
6. இருபா இருபஃது
7. இறையனார் அகப்பொருள்
8. இனியவை நாற்பது
9. உரிச்சொல் நிகண்டு
10. ஐங்குறுநூறு
11. ஐந்திணை எழுபது
12. ஐந்திணை ஐம்பது
13. கம்பராமாயணம்
14. கலித்தொகை
15. களவழி நாற்பது
16. கார் நாற்பது
17. குறுந்தொகை
18. சிலப்பதிகாரம்
19. சிவஞான சித்தியார்
20. சிறுபாணாற்றுப்படை
21. சீவக சிந்தாமணி
22. சூடாமணி நிகண்டு
23. சூளாமணி
24. தமிழ்நாவலர் சரிதை
25. திணைமாலை நூற்றைம்பது
26. திரிகடுகம்
27. திருக்குறள்
28. திருக்கோவையார்
29. திருநூற்றந்தாதி
30. திருமுருகாற்றுப்படை
31. திருவாசகம்
32. திவாகரம்
33. தேவாரம்
34. தொல்காப்பியம்
35. நற்றிணை
36. நன்னூல்
37. நாலடியார்
38. நான்மணிக்கடிகை
39. பதிற்றுப்பத்து
40. பரிபாடல்
41. புறநானூறு
42. புறப்பொருள் வெண்பாமாலை
43. பெரிய புராணம்
44. பெரும்பாணாற்றுப்படை
45. பொருநராற்றுப்படை
46. மணிமேகலை
47. மலைபடுகடாம்
48. முத்தொள்ளாயிரம்
49. யசோதர காவியம்
50. யாப்பருங்கலக் காரிகை
51. வளையாபதி

பின்னிணைப்பு - 2

சங்கர நமச்சிவாயர் உரையில் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் நூல்களும் இடவிளக்கமும்

(எண்கள் : நன்னூல் நூற்பா எண்கள்)

அகத்தியம் 260, 265, 291, 295, 297, 300, 323, 327, 340, 342.

அகநானூறு 152, 202[2], 244, 317, 327, 336, 344, 346, 351[3], 353[3], 360, 380, 422, 430, 431, 437, 440, 457, 459.

அரிச்சந்திர புராணம் - மயான காண்டம் 425.

அவிநயம் 128, 320.

ஆசாரக்கோவை 378[2].

இருபா இருபஃது 255.

இறையனார் அகப்பொருள் 302.

இனியவை நாற்பது 401.

உரிச்சொல் நிகண்டு 321.

ஐங்குறுநூறு 351, 355, 441.

ஐந்திணை எழுபது 306.

ஐந்திணை ஐம்பது 459.

கம்பராமாயணம் - முதற்போர்ப் படலம் 398.

கலித்தொகை 269, 302[2], 308, 343, 344[2], 351[2], 432, 435, 437, 440[2], 441[4], 456[2].

களவழி நாற்பது 347, 420.

கார் நாற்பது 344.

குறுந்தொகை 156, 222, 290[2], 307, 338, 339, 341, 344[3], 346, 351[6], 353, 363, 374, 401, 420, 431[2], 436, 437, 440, 457, 458.

சிலப்பதிகாரம் 202[2], 254, 302, 339, 459.

சிவஞான சித்தியார் 320, 321.

சிறுபாணாற்றுப்படை 299.

சீவக சிந்தாமணி 162, 297, 302, 341, 344, 351[4], 355, 378[2], 379, 380, 392, 396, 401[3], 409[2], 410[7], 412, 421[2], 422, 433, 441[3], 457[2], 458[3], 459[3].

சூடாமணி நிகண்டு 261.

சூளாமணி 298, 459[3].

தமிழ்நாவலர் சரிதை 275.

திணைமாலை நூற்றைம்பது 269, 306, 409.

திரிகடுகம் 302[2], 344, 360, 373.

திருக்குறள் 3, 56, 60[2], 91[7], 122, 125, 152, 155, 162[2], 168, 172, 226, 255[2], 269[2], 290, 297[2], 298[2], 299, 302, 309, 319, 338, 339[2], 340, 343[6], 344[4], 360[4], 365, 379[3], 380, 401, 409[3], 410, 416, 421, 424[2], 429[3], 433, 441[2], 458.

திருக்கோவையார் 268, 290, 365, 392[2].

திருநூற்றந்தாதி 308.

திருமுருகாற்றுப்படை 165, 275, 340, 351, 353, 437, 458.

திருவாசகம் 229, 299, 302[2], 338[2], 341, 342, 349, 378, 379.

திவாகரம் 1, 267, 272, 308.

தேவாரம் 124, 290, 344.

தொல்காப்பியம் 91, 94, 121, 124, 128, 135, 136, 151, 158, 163[3], 164[4], 233, 254, 255[3], 265[2], 270[2], 274[2], 284, 295, 299, 300[2], 302, 316, 318, 320, 340, 360, 361, 365, 401[2], 414[2], 428, 458.

நற்றிணை 172[2], 302, 307, 336, 344, 438, 441[2], 456.

நன்னூல் சிற. பாயி.[2], 2, 5, 7[3], 8, 10, 11, 20[2], 47[2], 55[2], 58, 67, 92[2], 94, 97, 104, 109[2], 124[2], 132, 136[2], 137, 145[15], 146, 147[2], 152[3], 153, 157, 160, 162, 163[2], 164[4], 165, 170, 177, 178[2], 179[2], 182, 189, 193[2], 204, 206, 211, 214, 217, 218, 223, 229, 230, 231, 234, 242[11], 244, 245, 246, 250, 252, 253, 254[12], 255[2], 256[2], 257[6], 258, 262, 265[3], 267[2], 269[2], 270[3], 272[3], 273, 274[2], 275, 276[3], 278, 280, 281, 283[2], 285[3], 286[2], 287, 290, 291[2], 292[2], 294, 295, 296, 302, 303, 304, 308, 314, 315[2], 319[3], 320[4], 325, 327[2], 328[2], 332, 333, 336[2], 337, 338[2], 340[2], 341, 343, 344[5], 345[4], 346, 347, 349, 350, 351, 354, 356, 360[3], 361, 362, 365, 369, 371, 372, 377, 378[3], 379, 380[2], 383, 390[2], 394, 399, 402, 403, 407[2], 408, 414[2], 418, 420[2], 421[2], 422, 426, 443, 447, 449[2], 456[2], 458[2], 460[2].

நாலடியார் 151, 155, 183, 264, 289, 295, 302[3], 344[2], 360[2], 373, 378, 396[2], 398, 419, 421[2], 433, 457, 459.

நான்மணிக்கடிகை 302, 344, 412, 419.

பதிற்றுப்பத்து 344[2], 456.

பரிபாடல் 96, 120.

புறநானூறு 108, 152, 155, 163, 167, 173, 183, 224, 229[2], 244, 269[3], 297, 302[2], 307, 309, 327, 338, 341[2], 344[4], 351[3], 353[2], 355, 360, 374, 378[2], 380, 390, 396, 401[3], 403, 410, 420, 424, 432, 440, 441, 456, 457, 458[2], 459[7].

புறப்பொருள் வெண்பாமாலை 222, 269, 302, 344, 410[2], 441, 458, 459[3].

பெரிய புராணம் 365, 398.

பெரும்பாணாற்றுப்படை 269, 351.

பொருநராற்றுப்படை 183, 299, 398, 458.

மணிமேகலை 162, 341[2], 373.

மலைபடுகடாம் 380, 398, 425.

முத்தொள்ளாயிரம் 101, 415, 441.

யசோதர காவியம் 351.

யாப்பருங்கலக் காரிகை 269, 302, 331, 354, 360.

வளையாபதி 456.

பின்னிணைப்பு - 3

சங்கர நமச்சிவாயர் உரை
மேற்கோட்குறிப்பும் இடவிளக்கமும்

(நன்னூல் நூற்பா எண்கள் அடைப்புக்குறிக்குள்)

அகத்தியம்

பலவின் இயைந்தவும் (260), வயிர ஊசியும் (265), ஏழியல் முறையது (291), வினைநிலை உரைத்தலும் (295), ஆலும் ஆனும் (297), ஆறன் உருபே (300), மற்றுச்சொல் நோக்கா (323), காலமொடு கருத (327), காலமும் வினையும்... பெயர் (340), காலமும் வினையும்... வினை (342).

அகநானூறு 4:3-4 (152), 80:13, 384:5 (202), 8:6(244), 212:4-5 (317), 12:8-9 (327), 46:16 (336), 16:15-16 (344), 21:18-20 (346), 5:24, 48:12, 5:1-2 (351), 248:16, 331:9, 80:3 (353), 276:7 (360), 96:12-13 (380), 1:19 (422), 260:1-3 (430), 276:7 (431), 76:6-7 (437), 46:16 (440), 7:8 (457), 122:1 (459).

அரிச்சந்திர புராணம் - மயான காண்டம் 128:1 (425).

அவிநயம்

தன்னை உணர்த்தின் (128), காலம் அறிதல் (320).

ஆசாரக்கோவை 64, 5 (378).

இருபா இருபஃது 18:11 (255).

இறையனார் அகப்பொருள் 14 (302).

இனியவை நாற்பது 5:3 (401).

உரிச்சொல் நிகண்டு

விநாயக வணக்கம் (321).

ஐங்குறுநூறு

தனியன் 5:3 (351), தனியன் 5:4-5 (355), 121:1 (441).

ஐந்திணை எழுபது 68:1 (306).

ஐந்திணை ஐம்பது 28:1 (459).

கம்பராமாயணம் - முதற்போர்ப் படலம் 255:3 (398).

கலித்தொகை 56:30-34 (269), 56:1, 148:7 (302), 35:8 (308), கட. வாழ். 3 (343), 103:23, 42:10 (344), 37:10, 4:7-8 (351), 54:20 (432), 11:4-5 (435), 86:25-26 (437), 40:10, 7:5 (440), 99:8-9, 108:11-12, 33:24-25, 101:19 (441), 84:1, 3:4 (456).

களவழி நாற்பது 5:2-3 (347), 36:1 (420).

கார் நாற்பது 11:1 (344).

குறுந்தொகை 140:1 (156), 2:1 (222), கட. வாழ்.: 1, 300:2 (290), 129:1-2 (307), 14:3 (338), 25 (339), 51:6 (341), 100:3-4, 27:4, 100:3-4 (344), 232:18-20 (346), 46:4, 84:1, 253:2, 22:1, 78:1, 260:8

(351), 7:1-3 (353), 153:1 (363), 5:1 (374), 18:4 (401), 138:1 (420), 14:2-3, 14:3-4 (431), 155:1-2 (436), 293: 7-8 (437), 2:2 (440), 105:2 (457), 2:2 (458).

சிலப்பதிகாரம் 17. 21:1, 17. 19:3 (202), 23:133 (254), 10:3 (302), 19:51-53 (339), 17. 1-6 (459).

சிவஞான சித்தியார் - சுபக்கம் (அளவை இலக்கணம்) 10:2-3 (320), 10:4 (321).

சிறுபாணாற்றுப்படை 172 (299).

சீவக சிந்தாமணி 652:4 (162), 30:1-2 (297), 1232:4 (302), 848:1 (341), 320:4 (344), 894:2, 421:3-4, 452, 2322:2 (351), 53 (355), 443, 2360 (378), 1036:1-2 (379), 1760 (380), 2122 (392), 82:1 (396), 1558:1, 1007:1, 74:3 (401), 2932:1-2, 1623 (409), 775, 1144, 1661, 2789:1, 53:4, 160, 1253:3 (410), 53 (412), 312:1, 129:4 (421), 652:4 (422), 1873:1 (433), 1021:1-2, 1:4, 1487:4 (441), 1574:1, 2327:1 (457), 432:1-2, 6:4, 432:4 (458), 1617:3, 39:4, 20:1 (459).

சூடாமணி நிகண்டு - ணகர எதுகை 11-5:1 (261).

சூளாமணி 1051:1 (298), 877:1, 680:1, 475:1 (459).

தமிழ்நாவலர் சரிதை 60:3-4 (275).

திணைமாலை நூற்றைம்பது 5:3-4 (269), 81:1 (306), 10 (409).

திரிகடுகம் 33:2-3, கட. வாழ்.:1 (302), 44:1 (344), 44:1 (360), 7:1 (373).

திருக்குறள் 836 (3), 3 (56), 943, 246 (60), 1200, 1115, 1200, 15, 1263, 1194[2] (91), 84 (122), 774, 169 (125), 1081 (152), 396 (155), 835, 890 (162), 1210 (168), 1169 (172), 973 (226), 51[2] (255), 647, 37 (269), 84 (290), 1083, 295 (297), 232, 1102 (298), 964 (299), 194 (302), 771 (309), 1102 (319), 196 (338), 143, 44 (339), 500 (340), 943, 763, 701[2], 230[2] (343), 467, 90, 1150, 13 (344), 55, 308, 37, 475 (360), 1 (365), 144, 63, 848 (379), 1091 (380), 913 (401), 1111, 709, 293 (409), 1040 (410), 255 (416), 1110 (421), 168, 487 (424), 674, 146, 675 (429), 380 (433), 366, 978 (441), 232 (458).

திருக்கோவையார் 15 (268), 1:1-3 (290), 352:3 (365), 30, 143 (392).

திருநூற்றந்தாதி 63:3-4 (308).

திருமுருகாற்றுப்படை 317 (165), 257 (275), 199 (340), 185 (351), 317 (353), 250 (437), 182 (458).

திருவாசகம் 2:135 (229), 277:1 (299), 144:1, 511:1 (302), 174:1, 173:34 (338), 327:6 (341), 392:2 (342), 216:1 (349), 229:1-2 (378), 444:1 (379).

திவாகரம் 1844 (1), 1787 (267), 1928 (272), 330 (308).

தேவாரம்

கோயில் திருவிருத்தம் 5 (124),

திருவெழு கூற்றிருக்கை 25 (290),

மேகராகக் குறிஞ்சி 1:3-4 (344).

தொல்காப்பியம் எ. II 8 (91), எ. II 3 (94), எ. I 24 (121), எ. V 4 (124), எ. II 12 (128), எ. II 13 (135), எ. II 13 (136), எ. V 2 (151), எ. V 3 (158), சிற. பாயி.: 2-3, சொ. IX 7, எ. VIII 1 (163), எ. IV 2. 3². 36 (164), எ. VIII 77 (233), எ. IV 29 (254), பொ. VIII 106, சொ. I 2, பொ. VIII 106 (255), சொ I 10² (265), சொ. V 4, 5 (270), சொ. IX 5, 6 (274), சொ. V 28 (284), சொ. II 5 (295), சொ. II 16 (299), சொ. III 11, II 16 (300), பொ. I 44:3 (302), சொ. III 6 (316), எ. VIII 94 (318), சொ. VI 1 (320), சொ. III 29 (340), சொ. IX 45 (360), சொ. III 22 (361), எ. II 29 (365), சிற. பாயி.: 1, சொ. I 18 (401), எ. IV 5² (414), சொ. IX 7 (428), சிற. பாயி.: 10 (458).

நற்றிணை 19:1, 19:2 (172), 3:6 (302), 34:11 (307), 300:12 (336), 10:6-8 (344), 158:1 (438), 178:10, 55:12 (441), 115:8 (456).

நன்னூல் 4, 10 (சிற. பாயி.), 1 (2), 4 (5), 462, 14, 6 (7), 4 (8), 4 (10), 4 (11), 57, 56 (20), 2, சிற. பாயி. (47), 54² (55), 57 (58), 66 (67), 358, 91 (92), 130 (94), 228 (97), 103 (104), 111, 165 (109), 122, 123 (124), 276 (132), 135² (136), 128 (137), 144², 426, 144, 163, 204, 247, 156, 227, 155, 239, 165, 156, 329, 133 (145), 147 (146), 146² (147), 151, 292, 291 (152), 151 (153), 151 (157), 201 (160), 239 (162), 162, 158 (163), 162², 303, 300 (164), 161 (165), 167 (170), 178 (177), 159² (178), 255² (179), 253 (182), 164 (189), 188² (193), 205 (204), 158 (206), 159 (211), 210 (214), 207 (217), 159 (218), 207 (223), 159 (229), 207 (230), 207 (231), 207 (234), 159, 209, 165, 209, 165, 164, 159², 240, 179, 247 (242), 300 (244), 243 (245), 380 (246), 205 (250), 165 (252), 238 (253), 145, 176, 243, 242³, 133, 136², 151, 238, 242 (254), 254, 56 (255), 297, 254 (256), 58, 140, 165, 209, 221, 250 (257), 56

(258), 263 (262), 259^{2}, 269 (265), 177, 178 (267), 409, 259 (269), 442, 271, 442 (270), 435, 456, 457 (272), 275 (273), 146, 149 (274), 62 (275), 275^{2}, 279 (276), 398 (278), 279 (280), 275 (281), 282, 399 (283), 282, 275, 409 (285), 285^{2} (286), 284 (287), சிற. பாயி.: 15 (290), 275, 295 (291), 291^{2} (292), 291 (294), 319 (295), 291 (296), 301 (302), 358 (303), 107 (304), 285 (308), 304 (314), 358, 317 (315), 299, 293, 295 (319), 270, 358, 426^{2} (320), 324 (325), 145, 333 (327), 321, 358 (328), 380 (332), 388 (333), 140, 137 (336), 462 (337), 257, 462 (339), 320, 364 (340), 461 (341), 342 (343), 343^{3}, 360^{2} (344), 344^{3}, 377 (345), 344 (346), 405 (347), 330 (349), 349 (350), 346 (351), 461 (354), 358 (356), 347, 269^{2} (360) 362 (361), 361 (362), 136 (365), 361 (369), 165 (371), 159 (372), 461 (377), 461, 389, 376 (378), 461 (379), 289, 358 (380), 404 (383), 399, 461 (390), 461 (394), 394 (399), 401 (402), 377 (403), 399, 462 (407), 269 (408), 413, 461 (414), 410 (418), 270, 462 (420), 420^{2} (421), 462 (422), 320 (426), 442 (443), 446 (447), 443, 445 (449), 442^{2} (456), 456, 63 (458), 456, 459 (460).

நாலடியார் 111:1-2 (151), 351:3-4 (155), 210:2 (183), 251:2 (264), 119:1 (289), 248 (295), 314:3, 395:1-2, 366:1 (302), 220:3, 366:1 (344), 56:3-4, 111:1-2 (360), 93:1 (373), 151 (378), 140:2-3, 256:3 (396), 49:2 (398), 93 (419), 9:3-4, 396:1-2 (421), 19:1 (433), 156:1 (457), 138:1 (459).

நான்மணிக்கடிகை 8:1 (302), 100:1 (344), 100 (412), 100 (419).

பதிற்றுப்பத்து

திரட்டு 2:2, 81:31-32 (344), 22:1 (456).

பரிபாடல் 10:55 (96), 10:55 (120).

புறநானூறு 278:8 (108), 227:1 (152), 109:4 (155), 93:10 (163), 14:1 (167), 124 (173), 1:5 (183), 184:4 (224), 246: 4, 93:10 (229), 300:2 (244), 2:13-14, 195:1-3, 12:3-5 (269), 22:1-2 (297), 290:7, 132:8 (302), 206:1 (307), 195:1 (309), 375:19-21, 375:21 (327), 6:29 (338), 24:1-3, 395:11 (341), 2:13-14, 33:12, 278:8-9, 70:7 (344), 33:6, 44:4, 113:6 (351), 2:16, 194:5 (353), 124:1-3 (355), 2:13 (360), 227:1 (374), 15:15-22,

335:7-8 (378), 346: 3-4 (380), 7:5 (390), 188:3 (396), 2:24, 321:4, 38:7-8 (401), 238: 1-3 (403), 31:17 (410), 147:9 (420), 243:9 (424), 235:1 (432), 196:14-15 (440), 5:8 (441), 227:1 (456), 9:5 (457), 155:3, 34:5-7 (458), 18:1, 52:12, 126:8, 4:5, 137:1, 19:1, 36:12 (459).

புறப்பொருள் வெண்பாமாலை 34:1 (222), 225 (269), 11:2-3 (302), 99:2 (344), 189, 224 (410), 42:1-2 (441), 335:1 (458), 48, 37:4, 83:1 (459).

பெரிய புராணம்

ஏனாதி நாயனார் புராணம் 2 (365),

திருவாரூர்த் திருநகரச் சிறப்பு 24:4 (398).

பெரும்பாணாற்றுப்படை 1-2 (269), 392 (351).

பொருநராற்றுப்படை 248 (183), 163 (299), 61 (398), 66-67 (458).

மணிமேகலை 14:32 (162), 13:93, 13:56 (341), 7:58 (373).

மலைபடுகடாம் 218 (380), 41 (398), 275 (425).

முத்தொள்ளாயிரம்

காவல் உழவர் (101),

திறந்திடுமின் தீயவை (415),

ஓராற்றால் என்கண் (441).

யசோதர காவியம் 303 (351).

யாப்பருங்கலக்காரிகை 15 (269), சிற. பாயி.:1-2 (302), சிற. பாயி.:2-3 (331), 2:4 (354), 15:1 (360).

வளையாபதி 45:1 (456).

துணைநூல் பட்டியல்

அண்ணாமலை, மு.
நச்சினார்க்கினியர்
புதுக்கோட்டை: பழனி பிரசுரம், 1956.

அரவிந்தன், மு. வை.
உரையாசிரியர்கள்
சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1968.
3ஆம் பதிப்பு
சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1995.

அருணாசலம், மு.
தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு
திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1975.

அருணாசலம், மு.
தமிழ் இலக்கிய வரலாறு - பத்தாம் நூற்றாண்டு
திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1972.

அருணாசலம், மு.
தமிழ் இலக்கிய வரலாறு - பதினொராம் நூற்றாண்டு
திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1971.

அருணாசலம், மு.
அடியார்க்கு நல்லார்
திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம், 1973.

அருணாசலம், மு.
இளம்பூரணர்
சொர்ணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்
அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1981.

அறவாணன், க. ப.
எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்
சென்னை: பாரி நிலையம், 1977.

ஆறுமுக நாவலர் (ப-ர்)
ஸ்ரீ சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த தொல்காப்பியச் சூத்திர விருத்தி இலக்கண விளக்கச் சூறாவளி
6ஆம் பதிப்பு
சென்னை: வித்தியாநுபாலன அச்சகம், 1956.

இளங்குமரன், இரா.
இலக்கண வரலாறு
சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1988.

இளவரசு, சோம.
இலக்கண வரலாறு
சிதம்பரம்: தொல்காப்பியர் நூலகம், 1963.

இளவரசு, சோம. (ப-ர்)
நன்னூல் விருத்தியுரை
அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1981.

கிருட்டினமூர்த்தி, சா.
இளம்பூரணர் உரை
தஞ்சாவூர்: பாண்டியன் பதிப்பகம், 2002.

கோபாலையர், தி. வே. (ப-ர்)
வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம்
தஞ்சாவூர்: தஞ்சை சரசுவதி மகால், 1971.

கோபாலையர், தி. வே. (ப-ர்)
வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் - சொல்லதிகாரம்
தஞ்சாவூர்: தஞ்சை சரசுவதி மகால், 1971.

கோபாலையர், தி. வே. (ப-ர்)
சாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்து மூலமும் உரையும்
தஞ்சாவூர்: தஞ்சை சரசுவதி மகால், 1973.

கோபாலையர், தி. வே. (ப-ர்)
சுப்பிரமணிய தீக்கிதர் இயற்றிய பிரயோகவிவேகம் மூலமும் உரையும்
தஞ்சாவூர்: தஞ்சை சரசுவதி மகால், 1973.

சண்முகம், செ. வை.
இலக்கண உருவாக்கம்
சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1994.

சாமிநாதையர், உ. வே. (ப-ர்)
பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்
சென்னை: வைஜயந்தி அச்சுக்கூடம், 1918.
2ஆம் பதிப்பு
சென்னை: கபீர் அச்சுக்கூடம், 1946.

சாமிநாதையர், உ. வே. (ப-ர்)
பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்
சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம், 1925.
2ஆம் பதிப்பு
சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம், 1935.
5ஆம் பதிப்பு
சென்னை: மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1991.

சாமிநாதையர். உ. வே. (ப-ர்)
தமிழ்நெறி விளக்கம் பொருளியல் (பழைய உரையுடன்)
சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம், 1937.

சுந்தரம், இராம.
சொல் புதிது சுவை புதிது
சென்னை: தமிழ் நூலகம், 1978.

தண்டபாணி தேசிகர், ச. (ப-ர்)
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றிய புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை
திருவாவடுதுறை: திருவாவடுதுறை ஆதீனம், 1957.
3ஆம் பதிப்பு
சென்னை: பாரி நிலையம், 1998.

தண்டபாணி தேசிகர், ச. (ப-ர்)
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த தொல்காப்பியச் சூத்திர விருத்தி
திருவாவடுதுறை: திருவாவடுதுறை ஆதீனம், 1968.

தாமோதரன், அ. (ப-ர்)
பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும்
சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1999.

நமச்சிவாய முதலியார், கா. (ப-ர்)
இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள்
சென்னை: சி. ஆர். என். & சன்ஸ், 1943.

நாச்சிமுத்து, கி.
டாக்டர் உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள்
சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1986.

பதிப்பு ஆசிரியக் குழுவினர் (ப-ர்)
தொல்காப்பியம்
சென்னை: எஸ். ராஜம், 1960.

பவானந்தம் பிள்ளை, ச. (ப-ர்)
இறையனார் அகப்பொருள் மூலம் (நக்கீரர் உரையுடன்)
சென்னை: 1916.

பவானந்தம் பிள்ளை, ச. (ப-ர்)
அமிர்தசாகரனார் இயற்றிய யாப்பருங்கலம் மூலம் (பழைய விருத்தியுரையுடன்)
இரண்டு பகுதிகள்
சென்னை: 1916-17.

மோகன், இரா. & சொக்கலிங்கம், நெல்லை ந.
உரை மரபுகள்
சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம், 1985.

விநாயகம், க.
சிவஞான முனிவர் உரைத்திறன்
மயிலம்: ஸ்ரீ அன்னை நூலகம், 1991.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

Agreement in Dravidian Languages	100.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
தமிழ்ப் பண்பாடு	25.00
பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள்	30.00
தமிழக நாட்டுப்புறக் கலைகள்	55.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
சங்ககாலக் காசு இயல்	30.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	50.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
Social Heritage of Tamils	75.00

Pub.No. 471 **சங்கரநமச்சிவாயர்** 60.00